

eelamhouse.com




eelamhouse.com





eelamhouse.com





எமது மாவீரர்களின் வீரம் செறிந்த
போராட்ட வாழ்வையும், எமது
மண்ணின் விடுதலைக்காக அவர்கள் புரிந்த
மகத்தான தியாகங்களையும் நினைவுகூரும்
இப்புனித நாளில், எத்தகைய இடர்களையும்
எத்தகைய துன்பங்களையும் எத்தகைய
சவால்களையும் எதிர்கொண்டு எமது
தாயகத்தின் சுதந்திரத்தை
வென்றெடுப்போமென
உறுதிபூணுவோமாக.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

eelamhouse.com


சூரியப்புதல்வர்க






eelamhouse.com




eelamhouse.com

எமது தாயக தேசத்தின் விடுதலைக்காக
ஆயிரமாயிரம் புலிவீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள்.
எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம்.
உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை.
விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில்
அவர்களைப் புதைத்தோம்.
வரலாற்றுத்தாய் அவர்களை அரவணைத்துக் கொண்டாள்.
ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரத்தின் கருவூலத்தில் சங்கமித்தன.
அவ்வுயிர்கள் கருவாகி, காலத்தால் உருவம்பெற்று,
தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற்று வருகிறது.
தமிழீழம் என்ற அந்த சுதந்திர தேசம் வரலாற்றின்
குழந்தையாக விரைவில் பிறப்பெடுக்கும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்**





eelamhouse.com

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்
மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்



eelamhouse.com







eelamhouse.com





eelamhouse.com



# வழிகாட்டி விழிமூடிய மாவீரர்கள்

உலகில் வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர்கள் சாவடைந்து கொண்டே இருக்கின்றார்கள். சாவோடு அவர்கள் சரித்திரம் முடிந்துவிடுகிறது. ஆனால் எங்கள் தேசம் காக்க எழுந்து நின்ற மனிதர்கள் சாவின் பின்னும் வாழ்கின்றார்கள். மகத்தான சாதனை படைத்த மாவீரர்களாக துயில்கின்றார்கள்.

தரையிலும் கடலிலும் வீரமாய் விளையாடி, பகை வீழ்த்தி, விதையானவர்கள். கரிய புலிகளாகவும், மதிமுகம் மறைந்தவர்களாகவும் வெடி சுமந்தவர்கள். நேற்று இருந்தவர்கள் நிலையான வாழ்விற்காய் நிமிர்ந்து நடந்தவர்கள். நேர்த்தியாய் நிலைத்திருப்பவர்கள். எங்கள் நெஞ்சோடும் நினைவோடும் கனவோடும் நிறைந்து விட்ட உன்னதமான மாவீரர்களின் நினைவு சுமந்து நிற்கின்றோம்.

பின்னவர்க்கு வழிகாட்டி முன் நகர்ந்த மூத்தபுலிகள். கரடு முரடான கடின பாதைகளைக் கடந்தவர்கள். ஓயாது உழைத்தவர்கள். ஒருபோதும் ஓய்ந்து இருக்காத உத்தமர்கள். இனம் வாழ இரத்தம் சிந்தியவர்கள். எம்தேச வீரர்களின் ஈகத்தில் தியாகத்தில் விடிவை நோக்கி விரைகிறது தமிழீழம்.

உலகின் மிகப்பலம் வாய்ந்த பெண் இராணுவம் என்ற வரலாற்றுச் சிறப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் போராளிகளுக்கே உண்டு. பிறநாட்டுப் பெண் இராணுவ அமைப்புக்களுக்கு முக்கிய முன்னுதாரணமாகத் திகழும் பெண் புலிகளின் இராணுவக் கட்டமைப்பு தனித்தியங்கும் வல்லமை கொண்டது.

eelamhouse.com

“

வீரத்திலும் - தியாகத்திலும் - விடுதலை உணர்விலும்
ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது
பெண் போராளிகள் தமது வீர சாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

”

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



இங்கே வரிகளில் விரிந்துள்ள மூத்த பெண் புலிகளின் உறுதியிலும், வீரத்திலும், வீச்சிலும், தியாகத்திலும் தான் இன்று பல படையணிகளாகி எதிரிப்படைகளுடன் எதிர்த்து நின்று எம் மண்ணை மீட்க பகைக்கு மரணஅடி கொடுக்கின்றார்கள்.

அன்று அவர்களின் உறுதி மிக்க தடம் பதிப்புத்தான் இன்று உலகை மிஞ்சும் அளவிற்கு தமிழீழப் பெண்களின் ஆளுமை விரிவாக்கம் கண்டு வருகிறது.


1984ம் ஆண்டு முதற் பகுதியில் இருந்து சுதந்திரப்பறவைகள் என்ற பெயருடன் இயங்கி வந்தனர். முதல் 18.08.1985 இல் இந்தியா திண்டுக்கல்லிலுள்ள சிறுமலை எனும் இடத்தில் பெண்களுக்கான முதலாவது அணிக்கு இராணுவப்பயிற்சிகள் அனைத்தும் ஆரம்பமாகின. அங்கு அவர்கள் மிகக் கடினமான பயிற்சிகளையும், சவால்களையும் சந்தித்தார்கள். தேசியத் தலைவரின் வழி எம்மக்களின் விடிவிற்காய் பாதிச் சுமையை தூக்கத் துணிந்தார்கள். பயிற்சிகளை சீராக நிறைவு செய்த முதலாவது பெண்கள் அணி தேசியத்தலைவரிடத்தில் பாராட்டையும் பரிசையும் பெற்றுக்கொண்டது.



eelamhouse.com



eelamhouse.com



1986 ம் ஆண்டு மன்னாரை வந்தடைந்த பெண் போராளிகள் அணிக்கு லெப்.கேணல் விக்ரர் அவர் களின் வழிகாட்டலில் 12.10.1986 அன்று மன்னார் அடம் பனில் சிறீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலே முதற்களமாக அமைந்தாலும், அதற்கு முன் னான மாதங்களிலே மன்னார்க் கோட்டைப்பகுதியில் எதிரியை வலிந்த தாக்குதலுக்கு இழுத்த சமரிலும் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு ஆரம்பமான அவர்களின் சண்டைக் களம் இந்திய வல்லரசு இராணுவத்துடனும் தொடர்ந் தது. 1987 ஒக்ரோபர் 10ம் நாள் 2ம் லெப்.மாலதி வீர காவியம் ஆனார். அவரே முதற்பெண் மாவீரரும் ஆவார். அன்றைய நாளே தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகவும் அனுட்டிக்கப்படுகின்றது. 2ம் லெப்.மாலதி யின் பெயரில் உருவாக்கப்பட்ட மாலதி படையணி சண்டைக்களங்களில் இன்று உயர்ந்து விளங்குகின் றது.


எம் இனத்தில் நிலையாக வேரூன்றியிருந்த சமூக மூடநம்பிக்கைகள், பாகுபாடுகளை உடைத்தெறிந்து நம்பிக்கையுடனும், நேர்மையுடனும் உழைக்கும் பெண் போராளிகள் உலகிற்கே ஓர் எடுத்துக்காட்டு. இனவிடுதலையுடன் பெண் விடுதலையையும் வென் றெடுப்பதையே இலக்காகக்கொண்டவர்கள்.

தமிழீழ விடுதலையே பேச்சாகி மூச்சாகி விதை யாகிப் போன வீரர்களின் விதைகுழிகளில் உறுதி எடுத்து தலைவன் இலக்கிற்கிணங்க தமிழீழ மீட்பிற் காய் வித்தான மாவீரர்களின் நினைவாக இந்த மலரை வெளியிடுகின்றோம்.

“ புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் ”



eelamhouse.com





eelamhouse.com



# விதையாகி வீழ்ந்த தங்கையர்... 3991

கை கொண்டு நிலவு முகம் நாணிமறைத்தும்
கால்கொண்டு நோகாமல் நிலம் அளந்தும்
கோவில் குளம் கொண்டாட்ட குதுாகலத்தில்
சோடித்து அழகான திருத்தேர் போலே
ஊரின் கண்பட உலவுகின்ற தங்கையரோ
இன்று...
நாடிப்பகைவிரட்ட
களமதிரப் பாய்கின்றார்
வேல்விழிகள் சிவக்க
நாணும் முகம் தகிக்க
அச்சம் என்ற அந்நியத்தை காலில் மிதித்தபடி
வெம்புலியாய் களமாட சிரித்தபடி போகின்றார்

ஒருபாதி அங்கம் முடங்கிக்கிடந்தால்
மறுபாதி முடியாது!
தாயின் விலங்குடைக்க ஆண்மட்டும் முடியாது!
பொதுவான நீதியை புரிந்த பெண் அவள்
புலியாகிப் போகின்றாள்
காலத்தின் தீர்ப்பினை கடமையாய் ஏற்று
களமாடப்போகின்றாள்

அகஇருள் விரட்டி
புறஇருள் போக்கும்
சூரியப்புதல்விகள்
தம்மாலும் முடியும் பகைவெல்லமுடியும்
என்று பறைசாற்றும் எரிமலைக்குன்றுகள்
சத்திய வாழ்க்கையில் இயல்பாய் இணைந்தும்
உயர்வாய் எழுந்தும்
ஆற்றியபணிகள் அளவிடமுடியா
அருமைத் தங்கையர் புரிகின்ற தியாகம் சொல்லிட
முடியா!

கனவு வாழ்வின்
கவிதைக் கருவாய்
பொய்மை உலகின்
புகழ்ச்சிப் பொருளாய்
தன்னைச் சுருக்கி வாழ்ந்த பெண்ணவள்
புதுமைப்பெண்ணாய், புரட்சிப்பெண்ணாய்
விடுதலை வாழ்வை மீட்கும் பெண்ணாய்
மாறிய புதுமை
மானிடப்புலர்வு!

ஜெயா

eelamhouse.com



## முதற் பெண் மாவீரர்

2ம் லெப்.மாலதி
பேதுறு சகாயசீலி
மன்னார்
பிறப்பு - 04.01.1967
வீரச்சாவு - 10.10.1987

10.10.1987 அன்று கோப்பாயில் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில்....

# துடிப்பான தோழியின் பசுமையான நினைவுகள்

**1985ம் ஆண்டு முற்பகுதி**

மலைப்பிரதேசத்தில் அமைந்திருந்த ஒரு பயிற்சிப் பாசறையில் எமது பாசறைக்கு முன்பாக, ஒருபாறாங்கல்லில் இருந்து 'போர்க்குரல் 1', படித்துக்கொண்டிருந்தேன். எனக்கு முன்பாகச் சிறிய தூரத்தில் அருவி ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. திடீரென அந்த அருவி ஓடுகின்ற ஓசையோடு சேர்ந்து கலகல என்ற சிரிப்பொலியும், கதைக்கின்ற சத்தமும் கேட்டன. அத்திசையை நோக்கினேன். ஏறத் தாள பதினைந்து, இருபது பெண்கள் வண்ண வண்ணச் சட்டைகளுடன் வந்துகொண்டிருந்தார்கள்.

eelamhouse.com

முன்னுக்கு வந்தவர் நீலக்கலரில் புள்ளிகள் போட்டிருந்த சட்டையுடன், இரட்டைப் பின்னலுடன், எட்டி எட்டிக் கால்களை வைத்து, வேகமாகவும் மிடுக்காகவும் நடந்து வந்து கொண்டிருந்தார். என்னருகில்வந்ததும் என்னை ஒருமாதிரி மிடுக்காகப் பார்த்தார். பின் எல்லோரும் பாசறைக்குள் நடந்து சென்றார்கள். நான் நினைத்துக்கொண்டேன். எங்களைப்போல பயிற்சி எடுக்கத்தானே வந்தார்கள். பயிற்சியின் போது உந்த மிடுக்கு எங்கே போகுதோ தெரியாது என்று.

இரண்டு நாள் கழித்து நான் என்னுடைய அறையில் நின்றிருந்தேன். நீலநிறச்சட்டை அணிந்தவர் வந்து என்னைப் பார்த்துக் கேட்டார்.

"அக்கா, விளக்குமாறா வைத்திருக்கிறியள்" என்று. நான் உடனே பெரிதாகச் சிரித்துவிட்டு "இல்லை இல்லை எங்களிடம் விளக்குமாறுதான் இருக்கிறது"

என்றேன். பின் இவரிடம் இடம், பெயர், ஊர் எல்லாவற்றையும் கேட்டேன். முழுப்பெயர் சகாயசீலி என்றார். வீட்டுப்பெயர் சகாயம் என்றார். பின் நான் சொன்னேன். "எங்கள் சொந்தப் பெயரை இனிமேல் யாருக்கும் நீ சொல்லவேண்டாம். ஏதாவது பொய்ப்பெயரைச் சொல்லுங்கள்"
என்றேன்.

இவர் கதைக்கும் தமிழுக்கும் நான்கதைக்கும் தமிழுக்கும் நிறையவே வித்தியாசம் இருந்தது. இதனால் தான் "விளக்குமாறு வைத்திக்கின்றீர்களா? எனக் கேட்பதற்குப் பதிலாக விளக்குமாறா வைத்திருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

பின்னும் இவரைக் காணும்போதெல்லாம் "விளக்குமாறா வைத்திருக்கிறியள்" "பேனையா வைத்திருக்கிறியள்" என்று மற்றவர்களுக்குச் சொல்லுவதுமாதிரிப் பகிடிவிட்டுச் சிரிப்பேன்.

நாங்கள் முதன் முதலில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளாகப் பயிற்சிக்குச் சென்றிருந்தோம். வெவ் வேறுபட்ட சமூகத்திலிருந்து எல்லாரும் வந்திருந்ததால், எங்களுக்குள், மொழி உச்சரிப்பில் வேறுபாடு, ஊர்வேறுபாடு, மாவட்ட வேறுபாடு இருந்தன. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பார்கள். ஆனால் எங்களுக்கு இந்தப் பழமொழி மாறிவிட்டது. எங்களுடைய பழக்கங்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வரும்வரை மட்டும் தான் இருந்தது. விடுதலைப்புலிகள் அமைப்பில் பயிற்சி எடுத்து முடிந்த பின்னர் எங்களுடைய பண்பாட்டுக் கோலங்கள், பழமை வாதங்கள், வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள் எல்லாமே ஆணிவேறாக அக்கு வேறாகச் சிதைந்துவிட்டன.

அவரின் தமிழைப் பகிடிபண்ணியதால் இவர் ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளரிடம் என்னைப்பற்றி முறையிட்டார். என்னையும் இவரையும் விசாரித்த பொறுப்பாளர், அவர் முன்னிலையில் அவரை எண்ணும்படி கூறி, என்னைத் தோப்படிக்கவிட்டார். அவர் சென்றபின் நான் தோப்படிக்க, இவர் எண்ணிக்கொண்டு நின்றார். தோப்படித்துக் கொண்டிருக்கும் போது இடையில் எண்ணுவதை நிறுத்திவிட்டு, "இனி நீங்கள் அடிக்க வேண்டாம். நான் அடிக்கிறேன்" என்றார். "இல்லை எனக்குத் தந்த தண்டனையை நானே செய்து முடிக்கின்றேன்" என்றேன். அவர் என்னைப் பிடித்து நிற்பாட்டும்படி கெஞ்சிக்கேட்டும். நான் கோபமாக ஏசிவிட்டு தண்டனையைச் செய்துமுடித்தேன்.

ஒரு ஞாயிறு காலை, எமது காலை உணவைப் பெறுவதற்காக நான் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது இவர் என் பின்னால் நின்று கொண்டிருந்தார். நான் சாப்பாட்டைப் பெற்றுக்கொண்டு, எங்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையான மரக்குற்றியில் அமர்ந்தபோது,



eelamhouse.com



இவரும் என்னருகில் வந்து இருந்தார். பின் என்னுடன் சரளமாக கதைத்தார். தான் எனக்குத் தண்டனை வாங்கித்தந்ததையிட்டு கவலைப்படுவதாகக் கூறிவார். இவரின் இரக்கமான உணர்வு களைப் புரிந்துகொண்ட நான், "பிரச்சினையில்லை. நாங்கள் நல்லவர்களாக வளர்வதற்காகத்தானே இந்தத் தண்டனைகள்" என்றேன்.

மன்னாரில் பரந்த வயல்வெளிகளைக் கொண்ட ஆட்காட்டிவெளியில், பேதுரு சகாயசீலி என்னும் பெயரோடு, துடிப்பாக விளையாட்டுக்களிலும், படிப்பிலும் திறமையாக திகழ்ந்தவர். எமது பயிற்சிப் பாசறையில் மாலதி என்னும் பெயரோடு துடிதுடிப்பான சுறுசுறுப்பான போராளியாக வீறு நடை போட்டுக்கொண்டிருந்தார்.

மாலதியிடம் சரியான முரட்டுத்தனமும், சரியான இரக்கக் குணமும் ஒருங்கே அமைந்திருந்தன. தன்னிடம் இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுப்பதிலும், தானாகச்சென்று உதவிகள் செய்வ திலும் மாலதி என்றுமே பின் நின்றது இல்லை.

பயிற்சி முடிந்ததும் நாங்கள் மன்னாருக்கு வந்தோம். மன்னாருக்கு வந்ததும் இவர் கொலரை இழுத்து விட்டு, "எப்படி நீங்கள் முதல் முதல் தமிழீழத்தில் என்ரை மாவட்டத்திலைதான் பெண் போராளிகளாகக் காலடி எடுத்து வைத்திருக்கின்றீர்கள்" என்றார்.

பின்னர் நாங்கள் மோட்டார் சைக்கிள் பழகினோம். அங்கே இங்கே என்றெல்லாம் விழுந்தெழும் பிப் பழகினோம். இவர் முதலில் பழகிவிட்டார். "பின்னால் ஏறு. நான் ஓடுகிறேன்" என்பார். எங்காவது மோதப்போவது தெரிந்தால், தான் பாய்ந்து ஓடிவிடுவார். நாங்கள் தான் விழுந்து மூக்குடைவோம். விழுந்து கிடப்பதைப் பார்த்து சிரித்துக் கொண்டு நிற்பார்.

1987இல் மன்னாரை விட்டு யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் கோட்டையைச் சுற்றிக் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இக்காலப்பகுதியில் கடற்கரை வீதிப்பக்கமாகக் காவற்கடமை யில் நின்றோம். ஒரு நாள் நாங்கள் வேறுபகுதியில் கண்ணிகள் வைக்கும்வேலைகளில் ஈடுபட்டி ருந்தோம். மாலதி மட்டுமே காவற் கடமையில் நின்றார். அப்போது எதிர்பாரத விதமாகக் கோட்டை யிலிருந்து இராணுவத்தினர் முன்னேறி மாலதியின் காவல் நிலைக்கு முன்னால் வந்துவிட்டனர். மாலதி சிறிது நேரம் தனித்து நின்றே இராணுவத்தினருக்கு எதிராக ரவைகளைப் பொழிந்து தள்ளினார். சிறிது நேரத்தில் மேஜர் சோதியாவும், எமது பொறுப்பாளர்களும் சென்று சண்டை செய்தனர். மூன்று, நான்கு பேர் மட்டுமே சண்டை செய்வதைக் கண்ட இராணுவத்தினர் மேலும் முன்னேற முயற்சி செய்தனர். இவ்வேளையில் மேஜர் சோதியாவின் குப்பி உடைந்து, அவர் மயக்கம் அடைந்ததால் அவரை இருவர் தூக்கிச் சென்றனர். மாலதி தனித்து நின்றே சுட்டுக்கொண்டு நின்றார். மேஜர் சோதியாக்காவைப் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றதும், மாலதி ஓடிச்சென்று, நாம் ஏற்கனவே வைத்திருந்த பன்றிக்குட்டிக்கண்ணியை வெடிக்கச் செய்துவிட்டார்.

பெரியதொரு வெடி ஓசையினால் அதிர்ச்சி அடைந்த இராணுவத்தினர் பயத்தின் பீதியால் பின் வாங்கி, கோட்டைக்குள் சென்றுவிட்டனர். பின்னர் "மாலதி ஏன் பன்றிக்குட்டியை அமத்தினாய்" எனக் கேட்டபோது, "ஆமியை எதிர்த்துத்தாக்குவதற்கு எமது ஆட்கள் நிறையப் பேர் இல்லை என்ப தை அவன் தெரிந்துவிட்டான். இதனால் விரைவாக முன்னேறினான். எங்கடையாட்கள் வருவதற் கிடையில் ஆமி எங்களுடைய நிலைகளுக்கு முன்னேறி விடுவான் என்றதினால், அவனை பின் வாங்கச் செய்யவே எங்கயோ கிடந்த மைன்ஸை அமர்த்திவிட்டேன்" என்றார்.

eelamhouse.com

மாலதி திடீர் என இப்படி ஓர் மாற்று நடவடிக்கையை செய்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம். எவ்வளவுதான் விளையாட்டுத்தனம் செய்தாலும் அவருக்குள் வீரமும் அஞ்சாமையும் நிறைந்து காணப்பட்டது.

1987ன் முற்பகுதியில் கோட்டைப் பக்கத்திலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் மாலதி பங்குகொண்டார். சண்டை என்றால் மாலதி துடிப்புடன் நிற்பார். உலங்கு வானூர்தி வருவதையோ, குண்டு வீச்சு விமானம் வருவதையோ, எறிகணை வருவதையோ பார்க்கமாட்டார். முன்னுக்குச் சென்று ஆமியைச் சுடுவதிலேயே குறியாக நிற்பார். இதே மாதிரித்தான் தொலைத் தொடர்பு நிலையத்தாக்குதலிலும் ஈடுபட்டார். ஒரு பெண் போராளி இந்நடவடிக்கையில் காயமடைந்தார். காயப்பட்டவரைத் தூக்கிச்செல்லும்படி மாலதியிடம் பொறுப்பாளரால் பணிக்கப் பட்டபோது (இந்நேரம் சண்டை முடிந்து, ஆயுதங்கள், கைப்பற்றப்பட்டுக் கொண்டிருந்தன). மாலதி செல்ல மறுத்து, "வேறு ஒருவரை அனுப்புங்கள்" என்று கெஞ்சினார்.

"வேறு யாருமில்லை. சண்டை முடிந்தது தானே. நீங்கள் கொண்டு போங்கோ" என்ற போது அவ் விடத்தைவிட்டுப் போக விருப்பமின்றி, மதிலுக்கு அங்கால் வேறு ஒரு போராளியைக் கூப்பிட்டு, "இவரைக்கொண்டு போகட்டாம் என்று பொறுப்பாளர் சொன்னவர்" எனக்கூறி, காயப்பட்ட போரா ளியை அவசரமாகக் ஒப்படைத்து விட்டு தான் நின்ற இடத்திற்கு விரைந்து ஓடிவந்து விட்டார்.

1987இன் நடுப்பகுதியில் நாங்கள் கோப்பாய்க்கு வந்தோம். கோப்பாயிலிருந்து ஒவ்வொரு இரவும் நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றிலும் காவல் நிலைகள் இருந்தன. இதில் நாம் கோப்பாய்ப் பாலத்தில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இரவில் இரண்டு பிரிவாக பிரிந்து படுப்போம். எங்களுக்கு கிடைத்த இடம் சுடலை. சுடலைக்குள் படுத்திருப்போம். சத்தங்கள் எதுவும் கேட்டால் காவற் கடமையில் நிற்பவர் இன்னும் இரண்டொருவரை எழுப்பிக் கொண்டு மண்மேட்டால் சென்று, ஆமியின் நடமாட்டத்தை அவதானித்து வருவோம்.

மாலதி காவற்கடமையில் நிற்கும்போது ஏதாவது சத்தம் கேட்டால், தானே தனியாகச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து வருவார். எங்கள் நிலைக்கு முன்னால் தண்ணீர் இருந்தது. தண்ணீர்ச் சத்தம் கேட்கும். நாவற்குழி இராணுவத்தினர் அடிக்கடி விளக்குகளை அணைப்பர். அவ்வேளையில் நாங்கள் தயார் நிலைக்கு வருவோம். காவற் கடமையில் நிற்கும் மாலதி அடிக்கடி எல்லோரையும் எழுப்புவார். திடுக்கிட்டு நித்திரையால் எழும்பி "என்ன" என்றால், "பேய், பேய்" என்று பயமுறுத்துவார். "உண்மையாய் நான் கறுப்பாய், வெள்ளையாய் ஆவியைக் கண்டனான்" என்று கூறுவார். "நேற்று எரிச்ச பொடியின்ர ஆவி. இண்டைக்குத்தான் வெளியே போகுதாக்கும்" என்று மேலும் மேலும் எங்களைப் பயமுறுத்துவார்.

ஒருநாள் நான் ஒரு சீமேந்து மேடைமேல் படுத்திருந்தபோது மாலதி வந்து எழுப்பிச் சொன்னார். "ஏய் கெதியாய் எழும்பு, எழும்பு" என்றார். அவசரமாக எனது ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு "ஆமியோ வந்திட்டான்" என்று கேட்டபோது "நீ படுத்திருந்த இடம் சமாதி" என்றார். எனக்கு சரியான கோபம். ஏசிவிட்டுப் போய்ப்படுத்துவிட்டேன். மாலதியின் இந்தத் தொல்லைகளால் மாலதிக்கு காவற்கடமை நேரம் போடாமல் விடுவோம். இரண்டு நாளால் சண்டை பிடித்து காவற்கடமை நேரம் போடச் செய்துவிடுவார்.

கோப்பாய்ப் பாலத்தடியில் அடிக்கடி உலங்கு வானூர்தி தாழப் பறக்கும். அந்நேரங்களில் நாம்



eelamhouse.com



கிறேசரடிக்கு விரைந்து செல்வோம். இவ் வேளைகளில் மதில்களைப்பாய்ந்து, பாய்ந்து முதலில் கிறேசரடிக்கு செல்பவர் மாலதிதான். மாலதி மதில் பாய்வதில் சரியான கெட்டிக்காரி. "இந்தா பார் போறன்" என்றால், அடுத்தநிமிடம் மதிலுக்கு அங்கால் நிற்பார்.

1987.10.10இல் காலையிலே எமக்கெல்லாம் புதிய ஆயுதங்கள் கொண்டு வந்து தரப்பட்டன. மாலதிக்கு எம் - 16 ஆயுதம் கொடுக்கப்பட்டது. மாலையில் எங்களை ஏற்ற வாகனம் வந்தது. அதில் எங்களுடைய குழுவை உடைப்பை களுடன் ஏறச்சொன்னார்கள். நாங்கள் தயாரான போது ஒரு சின்னப்பிரச்சனை வந்தது. எமது குழுவில் நான்கு எம் -16 இருந்தது. எம் - 16 உடன் உள்ள ஒருவரை வேறுகுழுவுக்கு போகும்படி பணிக்கப்பட்டது. இதில் இரண்டு பேர் குழுத்தலைவிகள். ஒருவர் மருத்துவம் செய்பவர். ஆகவே மாலதிக்கே அடுத்த குழுவுக்கு செல்ல வேண்டிய நிலையேற்பட்டது. "போகமாட்டேன்" என்ற மாலதி, பின் பொறுப் பாளரின் கட்டளைக்குப் பணிந்து, அடுத்த குழுவுடன் நிற்கச் சம்மதித்தார்.

வாசலில் கண்ணீர் மல்க மாலதி நின்று கொண்டிருந்தார். நாங்கள் எமது உடைப்பை களுடன் ஊர்தியில் ஏறிக்கொண்டிருந்தோம். "கவனமாக நல்லா அடிபடு மணி. இருவரும் உயிருடன் இருந்தால் மீண்டும் சந்திப்போம்" என்றார். இதுதான் மாலதி பிரிவின் துயரத்தோடு இறுதியாக எனக்குச் சொன்ன வார்த்தைகள். இறுதியாக நான் கண்ட மாலதியில் குழந்தைத் தனம் தெரியவில்லை. மாறாக போருக்குத் தயாரான கம்பீரமான படைவீரனின் சாயல் அவர் முகத்தில் படிந்திருந்தது. நாங்கள் மால திக்கு கையசைக்கவும், எங்களை ஏற்றிய ஊர்தி அவர் கை அசைத்தபடி நிற்க, பறந்து சென்றது.

மாலதியைப் பிரிந்த கவலை எனக்குமட்டும் இருக்கவில்லை. எங்கள் குழுவுக்கே இருந்தது. ஏன் என்றால் அவர்தான் எங்கள் குழுவில் கலகலப்பானவர். பயிற்சிப் பாசறையிலிருந்து ஒரே குழுவில் இருந்த எங்களுக்கு, பிரிவு என்று



eelamhouse.com





eelamhouse.com

வந்ததும் மிகவும் கடினமாக இருந்தது. ஊர்தி போய்க்கொண்டிருந்தது. என் மனம் ஊர்தியை விட வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.



2ம் லெப்.மாலதி

கோப்பாயில் எம்மவருக்கும், இந்திய இராணுவத்துக்குமிடையே சண்டை தொடங்கிய செய்தி கிடைத்தது. தொலைத் தொடர்பில், சண்டையின் செய்திகளையும் பணிப்புரைகளையும் கட்டளைகளையும் பொறுப்பாளருடன் இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரெனத்தொலைத் தொடர்பில், ஒரு குழு, இன்னொரு குழுவுக்கு பெண்போராளிகளில் ஒருவர் வீரச்சாவு என்ற செய்தியைத் தெரிவித்தது. திடீரெனத் தொலைத் தொடர்பு, வீரச்சாவடைந்தது மாலதி என்ற செய்தியைத் தாங்கி வந்தது.

மாலதி அடிக்கடி சொல்லுவார் பெண்புலிகளில் நான் தான் முதல் வீரச்சாவு அடைவேன் என்று. அவர் சொன்னதைப் போலவே, மாலதியே விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண்புலியாக, புரட்சிப் பெண்ணாக சரித்திர நாயகி ஆகிவிட்டார்.

அன்றிரவு கோப்பாய் கைதடி வீதியால் வரும் ஊர்திகள் அனைத்தையும் மறித்துப் பரிசோதனை செய்யும்படி மாலதியின் குழுவினரிடம் பணிக்கப்பட்டிருந்தது. எல்லோருமே காவற்கடமையில் நிற்கும்போது வருகின்ற ஊர்தி ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்து அனுப்பினார்கள்.

கோப்பாய் கிறேசரடியில் மாலதி காவற்கடமையில் நின்றபோது, ஊர்திகள் வந்திருக்கின்றன. ஓடிச்சென்று மறித்திருக்கிறார் மாலதி மறித்தது இந்திய இராணுவத்தின் கவச ஊர்திகளை, திடும் திடுமென குதித்த இந்திய இராணுவத்தினர் ரவைகளை கண்டபாட்டில் அடிக்கத் தொடங்கினர். மாலதியும் எதிர் தாக்குதலைத் தொடுத்தார்.

பின் எமது எல்லா குழுவினரும் மாலதியின் பக்கம் சென்று சண்டையில் இறங்கினர். எதிர்பாராத விதமாக ஏராளமான இராணுவத்தினர் எம்மவரது குழுவைச் சுற்றி வளைத்தனர். தாக்குதலைத் தொடுத்தனர். இவ் வேளையில் மாலதி படுகாயமடைந்துவிட்டார். காயமடைந்தவரைத் தோழிகள் தூக்கி வரும்போது மாலதி "எல்லோரும் வீணாகச் சாகவேண்டாம். என்னை விட்டுவிட்டு என்ர எம் - 16ஐ (ஆயுதம்) கொண்டு நீங்கள் ஓடுங்கோ" என்றிருக்கின்றார். தோழிகள் "இல்லை. நாங்க உன்னைக் கொண்டு போகின்றோம்" என்று கூறிய அடுத்த நிமிடமே மாலதி சயனைட்டைக் கடித்துவிட்டார் ஏனென்றால் இராணுவத்தினர் சுற்றி வளைத்து விட்டனர். கோப்பாய் கிறேசரடியில் மாலதி தன்னைத் தற்கொடை செய்தார். இராணுவச் சுற்றிவளைப்பால், மாலதியின் ஆயுதத்தைத்தான் முதலில் கொண்டு வந்தார்கள். மாலதி சொன்னதுபோல், அடுத்த நாள்தான் மாலதியின் புகழுடலை மீட்டெடுத்தார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு போராளிகளும் எங்களின் சொந்த மண்ணின் விடிவுக்காகத் தங்களை ஈகம் செய்கின்றார்கள். எல்லாப் போராளிகளும் தங்கள் உயிருக்கும் மேலாகத் தங்களின் ஆயுதங்களைத்தான் நேசிக்கின்றார்கள். இந்தவரிசையில் மாலதியும்....

■ ரதி

1993

eelamhouse.com



மேஜர் சோதியா
அமலோற்பவ வசந்தி மைக்கல்
கரவெட்டி, யாழ்ப்பாணம்
பிறப்பு - 26.09.1963
வீரச்சாவு - 11.01.1990
சுகயீனமாக இருந்து வல்வெட்டித்துறை
ஊறணி வைத்தியசாலையில்
தங்கியிருந்த வேளை

# விடியலின் சோதி

1985 இல் இந்தியாவில் ஒரு பயிற்சிப் பாசறையில்... அம்மாவைப் பிரிந்து வந்த சில நாட்கள். கடல் பயணத்தால் உண்டான பதற்றம். பயிற்சி எடுப்பதற்காக நாம் அனுப்பப்பட்ட மலைப்பிரதேசம். இந்த மூன்றையுமே நான் இதற்கு முன்னர் சந்தித்திருக்கவில்லை. இந்தத் தாக்கத்தின் விளைவாக எனக்கு காய்ச்சல் வந்துவிட்டது.

எமது பயிற்சிப் பாசறையில் அமைக்கப்பட்டிருந்த கொட்டிலினுள் கம்பளிப் போர்வையால் போர்த்தபடி "அம்மா, அம்மா" என முனகியவாறு படுத்திருந்தேன். மெதுவாக ஒரு கை என் போர் வையை விலக்கி, உடல் வெப்பநிலையைப் பரிசோதிப்பதற்காக என் கழுத்தில் பதித்தது. கண்களை திறந்து பார்த்தேன். ஒரு அக்கா என் முன் நின்றார்.

"என்னம்மா செய்யுது என்ன, சாப்பிட்டீங்களம்மா காய்ச்சல் தானே. இப்ப மருந்து தாறன். காய்ச்சல் உடனே பறந்து போடும்"என்றார்.



eelamhouse.com



eelamhouse.com



அன்பான அம்மாவாகவும், கனிவான வைத்தியராகவும், நான் அன்று (மகளிர் படையணியின் முதலாவது தளபதியான) மேஜர் சோதியாக்காவைச் சந்தித்தேன்.

பயிற்சிப் பாசறையில் இருந்தோரில், நான் உட்பட பெரும்பாலானோர் வயதில் சிறியவர்களாக இருந்தோம். அந்தச் சிறியவர்களுக்கு சோதியாக்கா அம்மாவாக விளங்கினார். நாம் எப்போதும் சோதியாக்காவைச் சுற்றி நின்று அவருக்கு கரைச்சல் கொடுத்துக்கொண்டு நிற்போம். அவரின் மடியில் கூட படுத்திருப்போம். ஒரு நாள்கூட சோதியாக்கா எங்கள் மேல் சினந்து விழுந்தது கிடையாது.

பயிற்சிப் பாசறையில் எமக்கு நீண்ட நேரம் பயிற்சிகள் நடக்கும். ஓடுவதில் இருந்து கயிறு ஏறுதல், மலை ஏறுதல் என்றெல்லாம் பயிற்சி நடக்கும். பயிற்சிகள் முடிந்ததும் எங்களது கொட்டில்கள் நோக்கி ஓடிவருவோம். கடுமையான பயிற்சி காரணமாக உடம்பெல்லாம் நோகும். வந்ததும் வராததுமாக கொட்டில்களுக்கு முன்னால் உள்ள மரங்களின் கீழ் வீழ்ந்து படுத்துவிடுவோம். சிலர் கிடைக்கின்ற கொஞ்ச நேரத்தில் நித்திரையாகி விடுவார்கள். இவ்வளவு பயிற்சிகளையும் எங்களுடன் சேர்ந்து எடுத்த சோதியாக்கா படுப்பாரா? இல்லை. அவருக்கு படுப்பதற்கோ, களைப்பாறுவதற்கோ நேரமே கிடையாது. எங்கள் பயிற்சியாளர்களில் காய்ச்சல், கால்நோ, கைநோ, வயிற்றுக்குத்து என்றும், கழுத்து, கால், கை உளுக்கி விட்டது என்றும் படுத்திருப்பவர்களுக்கு ஓடி ஓடி வைத்தியம் செய்வார். நோ உளுக்கு என்றவர்களுக்கு நோ எண்ணெய் போட்டுத் தேய்ப்பார். அதே நேரம் அவரின் நெற்றியால் வியர்வை சிந்தும். தனது கையால் அந்த வியர்வையை வீசி எறிந்துவிட்டு தனது கடமையைத் தொடருவார். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு கொட்டில் கொட்டிலாகச் சென்று, முதல் வருத்தமென்று படுத்திருக்கின்ற தோழிகளுக்கு உணவு கொடுத்து, மருந்து கொடுத்து விட்டு விரைந்து வருவார். சோதியாக்காவின் நடை மிகவும் வேகமானது. ஆள் நல்ல உயரம் கால்களும் நீளமானவை. கால்களை எப்போதும் எட்டி எட்டி வைத்து வேகமாகத்தான் நடப்பார்.



eelamhouse.com



நான் சோதியாக்காவின் வேகத்தையும் அவர் வியர்வை சிந்திச்சிந்தி தோளில் பயிற்சிக்குரிய மரத் துப்பாக்கியுடன் சக தோழிகளுக்கு செய்யும் சேவையையும் பார்த்துவிட்டு எனது தோழி கப்டன் ரஜனியிடம் கூறுவேன். "பாவமடி சோதியாக்கா..." அவளும் "ஓமடி" என்பார்.

உடனடியாக செய்யவேண்டிய முதலுதவிச் சிகிச்சைகள் முடிந்ததும் சோதியாக்கா மருத்துவத்துக்காக ஒதுக்கப்பட்ட கொட்டிலுக்குள் போவார். அங்கே மருந்து எடுப்பதற்கு வரிசையில் நிற்பார்கள். நாங்கள் எல்லோரும் போய் சாப்பிட்டுவிட்டு வருவோம். மருத்துவக் கொட்டிலுக்குள் போய் எட்டிப் பார்ப்போம். சோதியாக்கா மருந்து கொடுத்துக் கொண்டிருப்பார். "அக்கா வகுப்பு தொடங்கப் போகுது. நீங்கள் சாப்பிடவில்லையா? போய் சாப்பிடுங்கோ அக்கா" என்போம். "இஞ்சை நிக்கிற இவ்வளவு பேருக்கும் மருந்து குடுத்து விட்டு போறேன்" என்பார். "அப்ப நாங்கள் சாப்பாடு எடுத்து வரவா அக்கா" என்றால், "அடி வாங்காமல் போங்க பார்ப்பம்" என்பார். எப்போதுமே சோதியாக்கா தனக்குரிய பணிகளை மற்றவர்களைக் கொண்டு ஒருபோதும் செய்விக்கமாட்டார். நாங்கள் சோதியாக்கா சொன்னதையும் மீறி சாப்பாடு எடுத்து வந்து கொடுப்போம். அந்தச் சாப்பாட்டை சாப்பிட நேரமில்லாது வைத்து மூடிவிட்டு வருவார். சில வேளை நின்றநிலையில் சாப்பிட்டுவிட்டு, வகுப்புக்கு வருவார். எப்போதும் சோதியாக்கா கடைசியாக வகுப்புக்கு வந்து ஆசிரியரிடம் மன்னிப்பு கேட்டு, வகுப்பறையில் இருப்பார். வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது கூட ஆசிரியரிடம் சொல்லி விட்டு கொட்டில்களில் வருத்தமாக படுத்திருப்பவர்களைச் சென்று பார்த்துவிட்டு வருவார்.

சோதியாக்கா எங்களுடன் தான் பயிற்சி எடுத்தார். எங்கள் அனைவருக்கும் இருந்த அதேகளை, உடல் அலுப்பு அனைத்தும் அவருக்கும் இருந்ததுதான்.

அப்போதெல்லாம் நாங்கள் சோதியாக்காவைப் பார்த்து "பாவமடி சோதியாக்கா" என்று கதைப்போம். அவ்வளவு தான். அதற்கு மேல் யோசித்துப் பார்க்க எங்களுக்கு அப்போது தெரிந் திருக்கவில்லை. சிந்தித்துப்பார்க்கவும் முடியவில்லை. இப்போது அந்த சோதி வடிவமான சோதி யாக்காவையும் ஓய்வு உறக்கமின்றி அவர் செய்த வேலைகளையும் சேவைகளையும் நினைக்கின்ற போது உண்மையிலேயே என் கண்கள் தானாகவே நீரைச் சொரிகின்றன. எப்படி சோதியாக்காவால் தன்னை வருத்தி இப்படியெல்லாம் செய்ய முடிந்தது. ஒரு உண்மையான விடுதலை வீராங்கனை தன்னலமற்றவள் என்பதை எங்கள் சோதியாக்கா தன் வாழ்க்கை மூலம் மெய்ப்பித்துக்காட்டிவிட்டார்.

நாங்கள் தமிழீழத்திற்கு வந்த பின்னர் வன்னிப் பிராந்தியத்தில் ஒரு அடர்ந்த காட்டின் நடுவிலே தளம் அமைத்திருந்தோம். அங்கே எமக்கு ஒரு கிணறு தேவைப்பட்டது. நாங்களே கிணற்றை வெட்டினோம். அந்த நேரம் எமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. கஞ்சியையும், ரொட்டியை யும் சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கிணறு வெட்டினோம். தண்ணீரோ வருவதாகத் தெரியவில்லை. இதனால் மிகவும் சோர்வடைந்து போன நாங்கள் அந்த கடினமான சூழலில் தொடர்ந்து நின்று பிடிக்கும் வலுவை இழக்கத் தொடங்கினோம். அதன் விளைவாக தெளிவில்லாத கதைகளை கதைத்தோம். இதை அவதானித்த சோதியாக்கா, கதைத்த எங்கள் அனைவரையும் கூப்பிட்டு, எங்களின் மனம் தெளிகின்ற அளவுக்கு போராட்டத்தைப் பற்றிய விளக்கம் தந்தார். நாங்கள் சோதியாக்காவின் விளக்கத்தினால் புது வேகம் பெற்று புத்துணர்ச்சியோடு மீண்டும் சோதியாக்காவோடு சேர்ந்து நின்று கிணற்றைத் தோண்டி தண்ணீரையும் கண்டோம். துள்ளி எழுந்து சோதியாக்காவின் தோளில் தொங்கிக்கொண்டு நின்று கூக்குரலிட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து குதூகலித்தோம்.

காட்டில் இருக்கும் காலத்தில் எங்களுக்குரிய உணவுகளை நீண்ட தூரத்தில் இருந்து

eelamhouse.com

மூட்டைகளாக தலையிலும், தோளிலும் சுமந்து கொண்டு வந்து தளத்தில் சேர்த்தோம். மூட்டைகளை சுமந்து வர எல்லோருமே செல்வோம். சோதியாக்காவும் எங்களுடன் வருவார். அரிசி, மா, சீனி என்றும் உப்பு, புளி, பருப்பு என்று மூட்டை மூட்டையாகச் சுமந்து வந்தோம். சோதியாக்கா எல்லோருடைய தலைகளிலும் பாரங் குறைந்த மூடைகளைத் தூக்கி வைத்துவிடுவார். சோதியாக்கா மிகவும் உயரம் என்றதால் எல்லோரும் பொதிகளைத் தூக்கி தலையில் வைக்கச் சோதியாக்காவையே அழைப் போம். மிகவும் களைத்தால் வரும் வழியில் மூடைகளை கீழே போட்டுவிட்டு இளைப்பாறுவோம். சோதியாக்கா வந்து மீண்டும் தூக்கி விடுவார். தளத்துக்கு வந்ததும் மூட்டைகளை போட்டு விட்டு "கழுத்துக்கை பிடிக்குது, தோள் நோகுது" என்றபடி மரங்களின் கீழ் அமர்ந்து இரண்டு மூன்று பேராக கதைப்போம். சோதியாக்கா ஒரு கூழா மரத்தின் கீழ் இருப்பார். சோதியாக்காவுக்கு அந்த மரத்தின் அமைதி சரியான விருப்பம். அதனால் அந்த மரத்தின் கீழேதான் வழமையாக இருப்பார்.

ஒருநாள் நானும் கப்டன் ரஜனியும் உப்பு மூடைகள் தூக்கி வந்தோம். இரண்டு பேருக்கும் கழுத்துக்குள் உளுக்கிவிட்டது. விக்கி விக்கி அழத்தொடங்கினோம். எங்களுக்கு எப்போதாவது ஏதாவது துன்பம் என்றால் சோதியாக்காவுக்கு அருகில்தான் இருப்போம். அன்றும் அதே மாதிரித்தான் கப்டன் ரஜனி சொன்னார் "நாங்கள் துவக்கு எடுத்து ஆமியோடை சண்டை பிடிக்க மட்டும் தான் வந்தனாங்கள், இப்படி மூட்டை தூக்க வேணும், கிணறு வெட்டவேணும் எண்டு தெரிந்திருந்தா வந்திருக்கமாட்டோம்" என்றார். அதற்கு நானும் "ஓமடி நானும் அப்படி நினைச் சுத்தான் வந்தனான்" என்றேன். எங்களின் இந்த உரையாடலை மேலே தொடரவிடாமல் இடை நிறுத்தினார் சோதியாக்கா. "இஞ்ச, நீங்க இரண்டு பேரும் ஆகச் சின்னப் பிள்ளைகள் மாதிரிக் கதைக்காதையுங்கோ. போராட்டம் எண்டா கஸ்ரம்தான். முள்ளும், கல்லும் நிறைஞ்ச பாதையில போய்த்தான் நாங்க தமிழீழம் பிடிக்க வேணும்" என்றார். நான் உடனே சொன்னேன் "ஓமக்கா நீங்க சொல்லுறது சரிதான். நாங்க மூடை தூக்கப் போற ஒற்றையடிப் பாதையில காலில குத்துற முள்ளும் கல்லும் எங்களோடையே சேர்ந்து வருது. அதோட பெரிய முள்ளெல்லாம் எங்களை பாவம் பார்த்து போக வேண்டாமென்டு பிடிச்சு பிடிச்சு இழுக்குதுகள்" என்றேன். உடனே சோதியாக்காவுக்கு கோபத்தில் முகம் சிவந்தது. "நான் சீரியசாக கதைக்கிறன். நீ பகிடி விடுகிறாய் போ. எனக்கு முன்னால் நிற்காதே" என்றார். "இல்லையக்கா இனிமேல் நான் இப்படிப் பகிடிவிடமாட்டேன்" எனக் கெஞ்சிய போது தொடர்ந்து எங்களுக்கு போராட்டத்தைப் பற்றி விளக்கமளித்தார்.

"உதாரணமாக நாங்கள் வீட்டில் இருக்கிற நேரம் பள்ளிக்கூடத்தில முதலாம் வகுப்பு படிச்சுப் போட்டு திடீரென்று பத்தாம் வகுப்புக்கு போறதில்லை. படிப்படியாக ஒவ்வொரு வகுப்பாப் படிச்சு முன்னேறிப் போவம். அதேமாதிரித் தான் எங்கட போராட்டமும். இப்ப நடந்து போய் தலையில மூடை தூக்கிறம். கொஞ்சக் காலத்தில டிராக்டரில கொண்டு வருவம். இப்படியே நாங்கள் வளர்ச்சி அடைஞ்சு எங்கடை தமிழீழத்தை அடைவம். அதற்கிடையில நீங்க குழப்பமான கதைகளை கதைச்சு உங்கள் நீங்களே குழப்பாதேங்கோ என்று தொடங்கி ஒரு நீண்ட விளக்கத்தை எனக்கும் ரஜனிக்கும் சோதியாக்கா கூறினார். சோதியாக்காவின் விளக்கத்தால் நாங்கள் மிகவும் தெளிவடைந்தோம். பின் நானும் ரஜனியும் உணவு மூடைகளை சுமப்பதிலும் கிணறு வெட்டுவதிலும் முன்னுக்கு நின்றோம். இதற்கு முழுக் காரணமாக இருந்தவர் சோதியாக்காதான்.



முகாமில் இருக்கும்போது, காடுகளில் பாசறை அமைத்து வாழ்ந்தபோது நாங்கள் எங்களுக்குள் ஒருவருடன் ஒருவர் நன்றாகச் சண்டை பிடிப்போம். சண்டை பிடித்தபின் மூன்று நான்கு நாட்களுக்கு கதைக்காமல் ஒருவரை ஒருவர் கண்டால் முகத்தைத் திருப்பிக்கொண்டு நிற்போம். இயக்கத்தில் இணைந்து அப்போது கொஞ்சக் காலந்தான். வீட்டுப் பழக்கங்கள் பெரும்பாலும் அப்படியேதான் இருந்தன. வீட்டில் தம்பி, தங்கையுடன் குத்துப்பட்டு, கூத்தாடி, சண்டை பிடித்துச் சண்டை பிடித்துப்



eelamhouse.com

பழகிப் போனது தானே. இயக்கத்தில் வந்தும் ஒரு கூட்டு வாழ்க்கையைச் சந்திப்போம். இந்த வாழ்க்கையை இதற்கு முன் எப்போதுமே சந்தித்திருக்கவில்லைதானே. வீட்டில் ஐந்து ஆறு பேருடன் இருக்கும்போதே குத்துப்பட்டு சண்டைபிடித்த நாங்கள், நூற்றுக்கணக்கானவர்களுடன் ஒன்றாக இருந்தால் எப்படி இருப்போம்?

சண்டை பிடிப்பவர்களையும், ஒருவரோடொருவர் கதைக்காமல் இருப்பவர்களையும் சோதி யாக்கா கூப்பிட்டு அறிவுரைகள் கூறிக் கண்டிப்பார். “இஞ்ச வாங்கோ இரண்டு பேரும். ஏன் ஒருத்த ரோட ஒருத்தர் கதைக்காமல் இருக்கிறியள் இந்தப் பழக்கம் எல்லாத்தையும் வீட்டில விட்டுட்டு வந்திட்டம். ஒரு இலட்சியத்துக்காகத் தான் எல்லாரும் சேர்ந்திருக்கிறம். இஞ்ச அம்மா, அப்பா பந்த பாசங்கள் எல்லாமே ஒருத்தருக்கு ஒருத்தர் நாங்க தான். ஒருத்தரை ஒருத்தர்தெரியாத நாங்க ஏன் ஒண்டாயிருக்கிறம். எங்கட மண்ணில் இருந்து அன்னியனை துரத்தியடிச்சு எங்கட மண்ணை மீட் டெடுக்கத்தானே” இப்படியான தெளிவான விளக்கம் மணிக்கணக்கில் சோதியாக்கா தருவார்.

சோதியாக்காவின் விளக்கத்தால் தெளிவடையும் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அர்த்தமான சிரிப்பொன்றை சிரித்துவிட்டு, “இனிச் சண்டை பிடிக்கமாட்டோம்” எனச் சோதியாக்காவிடம் சொல்லி விட்டு தெளிந்த மனத்துடன் எழுந்து செல்வோம். அந்த மூன்று வருட காலத்தில் நான் சோதி யாக்காவிடம் நிறையப் படித்துக் கொண்டேன். எங்களுக்கு நிறைய அறிவுரைகள் கூறுவார். ‘குழப் படிகள்’ என்று கொஞ்சப்பேர் இருந்தோம். இவர்களில் கப்டன் ரஜனி, கப்டன் தமயந்தி, கப்டன் ஆசா, மேஜர் தாரணி, 2ம் லெப் மாலதி என்று பலர் அடங்குவர். இந்தக்குழப்படிகளைத் தனது அன்பான கண்டிப்புகளாலும் அறிவுரைகளாலும் மேஜராக, கப்டனாக, லெப்டினன்டாக வளர்த்து விட்டவரும் வளர்வதற்குக் காரணமாக இருந்தவரும் மேஜர் சோதியாக்காதான்.

எங்களின் தாயாக, தாதியாக, ஆசிரியையாக இவ்வளவுக்கும் அப்போது சோதியாக்கா சாதாரண ஒரு போராளியாகத்தான் இருந்தார். வழமையாக எங்களுக்கென பொறுப்பாக விடப்படும் போராளிதான் எல்லாவற்றிலும் பொறுப்பாகச் செயல்படுவார். ஆனால்.... எங்களின் சோதியாக்கா வித்தியாசமானவர்...

■ ரதி



மேஜர் சோதியா

eelamhouse.com





# கவிதை எழுதிய மாவீரர்

அம்மா,
தொலைதூரத்தில் நீ
தேடாதே.
ஊரே உறங்கும் நேரத்தில்
உன் உயிரை நினைத்து
தன் ஓரத்தை நனைத்து
சாளரத்தைச் சந்தித்து
என்னை யாசிக்கும் உன் விழிகள்.

இருந்துவிட்டு எங்கோ கேட்கும்
வாகனச் சத்தமும்,
உன்னை ஏமாற்றுவதற்காய்
ஓங்கி எம் வீட்டுப் படலையில்
படபடக்கும் காற்றும்
என் வருகைபோல்
பாசாங்கு காட்ட,
நீ
பாசத்துடன் படலைவரை வந்து,
ஏமாந்து,
விழி கலங்குவது
நான் விரும்பாத ஒன்று.

அம்மா,
எனக்காக ஏங்காதே.
என்றோ ஒருநாள்

| |
|---|
| மேஜர் யாழிசை |
| மனோ செல்வராணி திருலோகசிங்கம் |
| காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் |
| பிறப்பு - 12.07.1972 |
| வீரச்சாவு - 29.09.1993 |
| யாழ் புலோப்பளையில் 'யாழ்தேவி' எதிர் நடவடிக்கையில் |



eelamhouse.com



அந்த வாகனச்சத்தமும்
படபடக்கும் காற்றும்
நான்
என் உன்னதமான உன்னிடமும்
என் மண்ணிடமும் இருந்து
விடுதலைக்காய் விடைபெற்றதை
பகரப்போகின்றது.
ஆதலால் அம்மா
உன்னை நீ
ஆசுவாசப்படுத்திக்கொள்.
எதற்கும்
ஆயத்தமாய் இரு.
சோகத்தை நீ
சொந்தமாக்கிக்கொள்.

தாயில் பாசம் தான் - என்ன செய்வது
எங்கள் மண்ணை விடுவதா

அம்மா,
நீஅழாதே.
ஆயிரம்தான் இருந்தாலும்
உன்னை, உன் உறவை விட்டு நான்
விலகி வந்தவள்தான்
ஆதலால் நீ
விம்மாதே
உன்னை
உன்அன்பை
உண்மையின் இருப்பை
உறவின் அர்த்தத்தை
வெறுப்பின் காரணத்தால் நான்
விட்டு விலகவில்லை.
ஆழப்பதிந்த உன் கண்கள் - அதில்
சோகமாய் எங்கோ வெறிக்கும்
உன்பார்வை
ஆதலால்,

வரும் கண்ணீரை மறைக்க - நீ
மன்றாடும் மறைவிடம்.
உன்னை விட்டுப் பிரிந்தது
எனக்கு வேதனைதான்.
நான் வேறென்னம்மா செய்வது?
எங்களது வேகத்தை விடுவதா?
எங்கள் வீட்டுச் சுவர்களை நீ
சுற்றிச் சுற்றிப் பார்த்து
உன் விழிகளில்
உன் உயிரான ஒன்றைத்
தொலைத்துவிட்டுத்
தேடுவதுபோல் - அம்மா
உனது உயிர் நானே
என்பதை நானறிவேன் - ஆனால்
என்னை நீ
தொலைக்கவில்லையே.
நான்தானே தொலைந்தேன்.
ஏனென்றால்
எங்கள் அடுத்த சந்ததிகள் தானும்
தங்கள் உயிர்ச்செல்வங்களின்
உல்லாசமான வாழ்வை எண்ணி
உறவுகளுடன் வாழட்டும்.
நீயும் நானும்
வாழவில்லைத்தான்.
வருந்தாதே.
வாழப்பழகிக்கொள்.
விழி நீர்த் துளிகளால்
வாழ்க்கையைக்
கரைக்காதே அம்மா.
என் அன்பு என்றும்
உனக்குத்தான்.

மகள்

மேஜர் யாழிசை - மனோ

eelamhouse.com

## தென் தமிழீழத்தின் முதற் பெண் மாவீரர்

| |
|---|
| லெப். அனித்தா |
| சித்திராதேவி தம்பிராசா |
| ஆரையம்பதி, மட்டக்களப்பு |
| பிறப்பு - 19.09.1970 |
| வீரச்சாவு - 29.11.1988 |
| களுவாஞ்சிக்குடியில் இந்தியப் படையினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஒட்டுக் குழுவினரும் சிறைப்பிடிக்க முனைந்தபோது சயனைட் அருந்தி |



# தென்திசை முத்து

எமது தேசத்தின் விடுதலை, ஆயுதமேந்திய போராட்டத்தினால்தான் உருவாகும் என்ற உறுதியுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

கிழக்கு மாகாணம் தமிழர் தாயக பூமியின் ஒரு பகுதி. இலங்கைத்தீவு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே சிங்களவரினால் படிப்படியாகப் பறிக்கப்படும் நிலம். ஆரம்பத்தில் கல்லோயா குடியேற்றத்திட்டத்தின் மூலமும் பின்னர் அம்பாறைக் குடியேற்றத்திட்டத்தின் மூலமும் தமிழீழத்தின் தென் பகுதி துண்டாடப்பட்டு படிப்படியாகச் சிங்களவர்களால் விழுங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

பெரும்பான்மையினராக வாழ்ந்த தமிழ்மக்களும், முஸ்லீம் மக்களும் சிறீலங்கா இனவெறி அரசினதும், அதன் ஆயுதப்படைகளினதும் துணையுடன் குடியேற்றப்பட்ட சிங்கள குடியேற்ற வாசிகளாலும், சிங்களக் காடையர்களாலும் சிறுபான்மையினராக்கப்பட்டு அடித்து விரட்டப்படுவது கிழக்கில் இன்னும் தொடரும் நிகழ்ச்சி. 8000 சதுரமைல் பரப்பளவைக் கொண்டிருந்த எமது தாயக பூமியான தமிழீழத்தில் இன்று அத்துமீறிய குடியேற்றங்கள் மூலம் கிட்டத்தட்ட 3000 சதுரமைல் நிலப்பரப்பு சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது. இதனால் தமிழ், முஸ்லீம் மக்களில் பெரும்பாலானோர் அகதிகளாக, இருக்க இடமின்றி அலைவது மட்டுமல்லாமல் விளைநிலங்களும் பறிக்கப்பட்டதால், பொருளாதார வாய்ப்புக்களும் மறுக்கப்பட்டு அவல வாழ்க்கையைத் தொடர்கின்றனர்.



eelamhouse.com

தமிழர் தாயகம் மீதான ஆயுதத்தாக்குதலும், இனஅழிப்பு நடவடிக்கைகளும், குறுகிய காலத்திற்கு மட்டுமே வெற்றியைத் தரும். ஆனால் திட்டமிட்ட குடியேற்றங்கள்மூலம் தமிழர்களுக்கு என்று ஒரு தாயகத்தை இல்லாமல் செய்துவிட முடியும் என்பதை உணர்ந்த சிங்கள அரசு, குடியேற்றங்களை ஊக்குவித்தது. தமிழர் மீதான இராணுவ அடக்குமுறைகள் தொடர்ந்தன. காலத்திற்கு காலம் திட்டமிட்ட இனக்கலவரங்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான தமிழ், முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான பெறுமதியுள்ள உடமைகள் அழிக்கப்பட்டன. சிறிலங்கா இனவெறி அரசினால் இன அழிப்பு துரிதமாக்கப்பட்டது.

இவ்இராணுவ ஒடுக்கு முறைகள் அனித்தாவை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொள்ளத் தூண்டின. ஒரு இனத்தின் விடுதலைக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு முக்கியம் என்பதையும், சமூகத்தின் ஓர் அங்கமாகிய பெண்கள் பங்குபற்றாமல் தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பெற முடியாது என்பதையும், ஒடுக்கப்பட்டுள்ள பெண்ணினத்தின் விடுதலையை ஒரு புரட்சிகரத்தலைமையால் வழி நடத்தப்படுகின்ற இயக்கமொன்றின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்தின் மூலமே வென்றெடுக்க முடியும் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்ட அனித்தா ஆயுதந் தாங்கிய தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார். சொந்த ஊரான ஆரையம்பதியிலேயே தன்னுடைய வேலையை ஆரம்பித்தார்.

எமது விடுதலையை வென்றெடுக்க பெண்களும் ஆயுதமேந்தி களத்தில் குதிக்க வேண்டும் என்பதை சமூகத்திலுள்ள பெண்கள் பெருமளவில் புரிந்து கொள்ளாத நேரம் அது. இந்நேரத்தில் மகளிர் படைப்பிரிவு இயங்குவது வெளியானால், எதிரி பெண்கள் மீதான தனது வன்முறையை முடுக்கிவிடுவான். இதனால் சமூகத்தில் பெண்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்த விடுதலைப் புலிகள் மகளிர் அணி, தென்தமிழீழத்தில் தம்மை இனங்காட்டிக் கொள்ளாது இயங்க வேண்டிய சூழ்நிலை நிலவியது.

பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சில திட்டமிட்ட விதிகளைக் கொண்டுள்ள பிற்போக்குப் பண்பாட்டில் ஊறிப்போயிருந்த எமது சமூதாயத்தில், ஒரு பெண் இரகசிய ஆயுத நடவடிக்கையை மேற்கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியம். இந்நிலையில் அனித்தாவும் தன்னை யார் என்று இனங்காட்டிக் கொள்ளாது இயக்க வேலையில் ஈடுபட்டார்.

படிப்படியாக இவருடைய வேலைகள் மட்டக்களப்பு மாவட்டமெங்கும் விரிவாக்கப்பட்டன. இரு வேறானா பண்பாடுகளைக் கொண்ட தமிழ், முஸ்லீம் சமூகத்தவரிடையே ஒரு பொதுவான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலை என்பது அப்படியொன்றும் இலகுவான காரியம் அல்ல. இரு சமூகத்தவரினதும் அடிப்படைச் சிக்கல்களைச் சரிவரப்புரிந்து, அதற்கு தக்கவாறே எமது விடுதலைப் பாதையை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இங்கு வாழ்ந்த விவசாயிகள், தொழிலாளிகள், சிறு வணிகர்களின் எளிமையான வாழ்க்கை முறையை புரிந்துகொண்டு, அவர்களுள் தானும் ஒருத்தியாக மாறி மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் செயலாற்றத் தொடங்கினார் அனித்தா.

தென் தமிழீழத்துக்குப் பெருமளவில் உல்லாசப் பயணிகள் வருவார்கள். ஆனால் உல்லாசப்பயணத்துறை மூலம் பெறப்படும் அந்நியச் செலாவணியை கிழக்குப் பகுதி மக்களின் நலன்களைப் பேணுவதற்காக சிறீலங்கா அரசு பயன்படுத்துவதில்லை. அதே வேளை உல்லாசப் பயணத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடங்களில் பொருளாதாரத்தை ஈட்டித்தரும் ஏனைய வேலைகளுக்கு அரசு தடை விதித்திருப்பதால், அப்பகுதி மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

தமிழீழ மக்களின் பொருளாதாரத்தில் விவசாயமும், கடற்றொழிலுமே முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆனால் தமிழீழத்தின் தெற்கில் கட்டுமீறிய சிங்கள குடியேற்றங்கள் மூலமும், சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ்மக்களின் விவசாயத்திற்கு தடை ஏற்படுத்

eelamhouse.com

தப்பட்டுள்ளது. அதே நேரம் கரையோர தமிழ்ப் பிரதேசங்களில் சிறீலங்கா இனவெறி அரசு சிங்கள மீனவர்களை குடியேற்றி வருகின்றது. இதனால் தமிழ், முஸ்லீம் மீனவர்கள் இப்பகுதிகளில் கடற்தொழில் செய்ய முடியாதவாறு சிங்கள மீனவர்களாலும், சிறீலங்கா கடற்படையினராலும் அச்சுறுத்தப்படுகின்றனர். இப்படியான திட்டமிட்ட நடவடிக்கைகளும் கிழக்கு மாகாண மக்கள் பொருளாதாரக்கஸ்டத்தை எதிர்நோக்குவதில் பெரும் பங்கினை வகிக்கின்றன.

இத்தகைய நடவடிக்கைகளை முறியடித்து எமது விடுதலையை வென்றெடுக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முழுமூச்சாக அனித்தா தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். துரோகக் கும்பல்களை இனங்காண்பதிலும், அவர்களின் தேச விரோத செயல்களை ஒழிக்கும் நடவடிக்கைகளிலும் தீவிரமாக ஈடுபட்டனர்.

சிறீலங்கா அரசுக்கெதிரான எமது தாக்குதல்கள் விரிவடைய, எதிரியின் இழப்புக்களும் அதிகரித்தன. எமது தாக்குதல்களிற்கு ஈடு கொடுக்க முடியாத சிறீலங்கா அரசு தனது துணைக்கு இந்தியப் படைகளையும் அழைத்துக் கொண்டது. அமைதிப்படை என்ற போர்வையில் இங்கு வந்த இந்திய ஆக்கிரமிப்பு படை ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லீம் மக்களைக் கொன்று குவித்து, வீடுகள், கடைகளை எரித்து நாசமாக்கியது. பெண்கள் மீதும் பாலியல் வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டது. எமக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையேயான தமிழீழ - இந்தியப் போரின்போது வெடி மருந்துகளும், துப்பாக்கி ரவைகளும் களத்தில் நிற்கும் போராளிகளை வந்தடையும் பாதைகளைத் தடைசெய்வதன்மூலம் எம்மை பலவீனமாக்கலாம் என்று கருதிய இந்திய இராணுவம் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் தடையரண்களை அமைத்தது.

இக்காலகட்டத்தில், அனித்தாவின் செயற்றிறனைக் கணக்கில் கொண்டு முக்கியமான சில வேலைகளைச் செய்ய இவர் நியமிக்கப்பட்டார். இவரின் வேலைகள் அம்பாறை மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டன. எடுத்த காரி





eelamhouse.com

யத்தை நிறைவேற்றுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் அம்பாறை மாவட்டத்திற்கும் இடையில் மாறி மாறி அலைந்து திரிய வேண்டி ஏற்பட்டது. பல இராணுவத் தளங்களைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. தான் மேற்கொண்ட வேலைகளைச் செவ்வனே முடிப்பதற்காக துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் எதிரியின் காவலரண்களைக் கடந்து சென்று செயலாற்றினார் அனித்தா.

28.11.1989 அன்றும் இயக்க வேலையைக் கவனிப்பதற்காக எமது போராளி ஒருவரின் சகோதரியுடன் சென்றுகொண்டிருந்தபோது துரோகக் கும்பல் ஒன்றினால் இனங்காணப்பட்டுச் சிறைபிடிக்கப்பட்டார் அனித்தா. விசாரணை என்ற பெயரில் சித்திரவதையை அரங்கேற்றுவதற்காக அவரைத் தமது இடத்துக்கு இழுத்துச் செல்ல முயன்றனர் ஒட்டுக் குழுவினர்.

எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற இயக்க மரபிற்கிணங்க இராணுவத் தளத்திற்கு கொண்டுசெல்லப்படும் வழியிலேயே சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத தழுவிக் கொண்டார் லெப். அனித்தா. பின்னர் இவருடன் சென்ற அந்தச் சகோதரியும் அவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியில் தெற்கில் உதிர்ந்த முதல் வித்து இவர். இவரின் கால் தடங்கள் பதிந்த நிலம் எங்கணும் புதிய புதிய பெண் புலிகள் உருவாகுகின்றனர். இவர் வழி களத்தினை நோக்கி ஆயிரமாயிரமாய் அனித்தாக்கள் அணி வகுக்கின்றனர்.

மாலினி



eelamhouse.com



# குறித்து வை

வைஸ் அட்மிரல் மோகன் சமரசேகர,
இதையும் உன் நாளேட்டில்
குறித்து வை.
உன் லாண்டிங் கிராப்ற்
லாண்டின் கரையில்
கை கொடுப்பார் யாருமின்றி
தனியாகக் கிடக்கிறது.

ரஷ்ய நாட்டோடு
நாலு கப்பலுக்காய் ஒப்பந்தம் செய்தாய்.
உண்மையில் நீ பாவம்!
ஏன் தெரியுமா?
நீ ஒப்பந்தம் செய்து
அழைத்து வரும் கப்பலை

| |
|---|
| மேஜர் கண்ணகி |
| சிவகௌரி சிவசுப்பிரமணியம் |
| வேலணை |
| பிறப்பு - 08.04.1974 |
| வீரச்சாவு - 18.07.1996 |
| ஓயாத அலைகள் - 01 நடவடிக்கையின்போது |

கவிதை
எழுதிய
மாவீரர்

**மேஜர் கண்ணகி:**
1992 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்த இவர் 1974.04.08 இல் பிறந்தவர். அரசியல் பணிகளில் ஈடுபட்டு, பின் 2ம்லெப் மாலதி படையணியின் கனரக ஆயுதப் பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றினார். 1996.07.18 அன்று முல்லைப்போர் என வரலாற்றில் சிறப்பிக்கப்பட்ட ஓயாத அலைகள் - 01 நடவடிக்கையின்போது வீரச்சாவைத்தழுவினார்.



eelamhouse.com

கவர்ந்து செல்ல இங்கு பல
நித்திகள் தயாராய் நிற்கின்றனர்

இந்து சமுத்திரமே,
நீ இரும்புக் கடை போட
திட்டமிட்டிக்கிறாய் போல.
அதுதான்
புலிகள் உனக்கு
எதிரியின் கப்பல்களைத்
தானம் செய்கிறார்களாக்கும்.

# விடுதலை தேடிய வீரப்பெண்

அன்று அந்த அதிகாலைப் பொழுது
இரவுக்கு முடிவு காண
விரைகின்றாள் பெண் ஒருத்தி.
கடலுக்கு அடியிலே சுழியோடிச் செல்கின்றாள்.
கரையினில் கப்பலின் அடிகாண விரைகின்றாள்.

இன்பமான வாழ்வுக்கு
கரை சேரும் வயதிலிவள்
உயிரெனும் ஆயுதத்தால்
அரக்கரை அழிப்பதற்கு
கடலோடிச் செல்கின்றாள்.

இளமையின் உணர்வுக்குக்
கட்டுக்கள் பல போட்டு
இளஞ் சந்ததியின் வாழ்வுக்காய்
கட்டளைக் கப்பலையே இவள்
நாடிச் செல்கின்றாள்.

காங்கேசன்துறை அன்று
கதி கலங்கி நின்றவேளை
நாம் மட்டும் பெருமையோடு
உன் வரவைப் பார்த்திருந்தோம்.
நீ திரும்பி வரவில்லை.
உன் இலட்சியத்தின் எதிரொலிதான்
எமை வந்து சேர்ந்ததுவே.

இரவொன்றின் முடிவுகாண விரைந்தவளே
அங்கயற்கண்ணி - பெண்
கரும்புலிகள் வரிசையிலே
முதலிடம் பிடித்தவளே.
உன் வழியில் செல்வதற்கு
காத்து நிற்போம் உறுதியுடன்
உன் பாதையில் பயணம் செய்வோம்
விடியலைத்தான் தேடிடுவோம்

மேஜர் கண்ணகி



eelamhouse.com



முதற் பெண்
கரும்புலி

| கடற்கரும்புலி<br>கப்டன் அங்கயற்கண்ணி |
|---|
| புஸ்பகலா துரைசிங்கம் |
| வேலணை, யாழ்ப்பாணம் |
| பிறப்பு - 10.05.1973 |
| வீரச்சாவு - 16.08.1994 |
| காங்கேசன்துறை துறைமுகத்தில் |
| தரித்து நின்ற கட்டளைக்கப்பல் மீதான |
| கரும்புலித் தாக்குதலில் |

# கடலன்னையின் குழந்தை

உயர உயர அலைகள் வீசியெறியும் கடலுடன் நெருங்கிய நேசமான உறவை வைத்திருக்கும் அந்தக் கடற்கரை ஒரு வெண்மணல் பிரதேசம்.

சாதாரணமாக புதைய வைக்கும் அந்தக் கடற்கரை மண்ணிலே உறுதியாகக் காலடிகளைப் பதித்தவாறு கடற்பரப்பிலிருந்து கரையை நோக்கி வீசும் வேகமான காற்றை ஊடறுத்தவாறு நீச்சற் பயிற்சியில் ஈடுபடுவதற்காக கடற்கரும்புலிகள் மகளிர் படையணி கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தது. பெரும் மலையையே புரட்டி விடுவது போன்ற வேகத்துடன் உயரக் கிளம்பி, "வாருங்கள் வீராங்கனைகளே வணக்கம்" என்று இவர்களை நோக்கி கூறிப் பணிவது போன்று அலைகள் கீழேவிழும். எத்தனை தரமும் மேலே மேலே எழுந்து விழுவதில் அந்த அலைகளுக்கு சலிப்பதில்லை. அந்த அலை நடுவே நீந்திச் செல்வதில் பெண்புலிகளும் சலிப்பதில்லை.



eelamhouse.com

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தன் தோழியிடம் "நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும். அப்பத்தான் திருவிழாவில அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தால்தான், என்ரை நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சக பெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும்". என்று அடிக்கடி சொல்லுவாராம். அவரின் தோழிகள் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கயற்கண்ணியின் இந்த வசனம், கல்லிலே செதுக்கியது போலத் தெளிவாகப் பதிவாகியிருக் கின்றது.

திடீரென கடலின் மேற்பரப்பில் ஏதோ பரபரப்பு. மீனவர்களின் படகுகள் வேகவேகமாகத் கரையை நோக்கித் திருப்பப்பட்டன. சிலர் படகுகளை, வலைகளை விட்டுவிட்டு நீரில் குதித்து நீந்த முயல்வது தெரிந்தது. மேற் கடலிலே எதிரியின் டோரா படகுகள் துரத்துகின்றன போலும், அப்படித்தான் இருக்க வேண்டும். கடற்புலிகளை எதிர்நோக்குவதைத் தவிர்த்துக்கொள்வதற்காக இப்போது எல்லாம் எதிரியின் கடற் படகுகள் மேற்கடலிலே நின்று தாக்கிவிட்டு ஓடுவதுதான் வழமையாகிவிட்டிருந்தது.

படகுகளுடன் திரும்பியவர்களும் எல்லாவற்றையும் கடலிலே விட்டு விட்டு உயிரை மட்டும் காப்பாற்றி நீந்தி வந்தவர்களும் போக ஏனையோர்...

அலை அடித்து ஒவ்வொரு உடல்களையும் கரையில் கொண்டு வந்து தள்ளியது. மீனவக் குடும்பங்களின் கண்ணீர் அலை, கடலுடன் சேர்ந்து கொண்டிருந்தது.

நீச்சல் பயிற்சியில் ஈடுபடவென கரைக்கு வந்த பெண் புலிகளின் மனம், ஏழைகளின் கண்ணீரில் இளகியது. அனுதாபத்துடன், அந்த மக்களின் நிலையைப்பற்றித் தமக்குள் பேசிக் கொண்டார்கள்.

அங்கயற்கண்ணியின் மனம் இறுகிப் பாறையானது.

"இவங்களுக்கு இதுக்கு ஒரு சரியான பதிலடி குடுக்கவேணும்"

அந்த நிமிடத்திலேயே மனதளவில் அவர் ஒரு கரும்புலியானார். சிறீலங்காக் கடற்படையின் கப்பல் ஒன்றைக் கரும்புலித்தாக்குதல் மூலம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் அப்போதுதான் அவளுள் ஆழ வேரோடியிருக்க வேண்டும்.

தொடர்ந்தும் எமது மக்கள் சிறீலங்காக் கடற்படையின் தாக்குதலுக்கு அஞ்சி, எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடி வருவதும், அன்று முழுவதும் வருமானம் இல்லாததால் ஒருவேளை கஞ்சிகூடக் குடிக்க வழியில்லாமல், பசியுடன் அழும் தம் குழந்தைகளை சமாதானம் பண்ணமுடியாமல் தமக்குள்ளேயே கண்ணீர்விடும் ஏழைத்தாய்களையும் ஏழைத் தந்தைகளையும் அடிக்கடி காண நேர்ந்தபோதெல்லாம், தான் எடுத்த முடிவில் மேலும் உறுதிபெற்றார் அவர்.

தான் ஒரு கரும்புலியாகிப் போகவிரும்புவதைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினார்.

சரியாக எட்டு மணித்தியாலமும் இருபத்தேழு நிமிடங்களும் அங்கயற்கண்ணி பதினேழு கடல் மைல்களை (ஏறத்தாழ முப்பத்தைந்து கிலோ மீற்றர்கள்) நீத்திக் கடந்து விட்டார். பொறுப்பாளர் களுக்கு அவர்மேல் என்னவென்று சொல்லமுடியாத ஒரு நேசம். கடற்கரும்புலிகளுக்குரிய பயிற்சி யில் ஈடுபடத் தொடங்கிய நாளிலிருந்து அவர் அந்தக் கடுமையான பயிற்சிகளில் மிகத் திறமையாக ஈடுபட்டது எல்லோருக்குமே நிறைவைத் தந்தது. கொடுக்கப்படும் இலக்கை அவரால் சரியாகத் தாக்கமுடியும் என்பதில் யாருக்குமே ஐயமும் இருக்கவில்லை.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நாற்பத்தைந்து அடி ஆழங்கொண்ட நீர்ப் பரப்பில் நிலைகொண்டிருந்த வடபகுதி தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்க முடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

ஆறாயிரத்து முந்நூறு தொன் எடையைக் கொள்ளக்கூடியதும், 326.04 அடி நீளமும் 51.02 அடி அகலமும் கொண்டதும், அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும், நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனிமனிதனால் அழிக்கமுடியும் என்று அவர்கள்

eelamhouse.com

கனவில் கூட நினைத்திருக்கவில்லை என்பது உண்மை.

கடற்கரும்புலிகள் மகளிர் படையணியின் மூன்றாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்த அங்கயற்கண்ணியிடம் இயல்பாகவே ஆளுமைத்தன்மை இருந்தது. ஆரம்பத்திலிருந்து அவர் குழுத் தலைவியாகவே இருந்து வந்தார். கடற்கரும்புலிகள் பெண்-ஆண் போராளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டி ஒன்றில் முதலாவதாக வந்தார். விளையாட்டிலே கெட்டிக் காரியாக இருந்தார்.

ஆனால் வீட்டில் இருக்கும்வரை இதற்கு நேர்மாறான இயல்பைக் கொண்டிருந்தார். இரவிலே தனியாக வெளியே போகமாட்டார். எதற்கும் அம்மாவின் துணை வேண்டும் அவருக்கு. என்று, தான் ஒரு புலியாக வேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டாரோ, அன்று அவருள் மறைந்திருந்த ஆளுமை வெளிவந்தது.

லெப். கேணல் பாமாவுக்கும், மேஜர் சுகன்யாவுக்கும் இவரை முழுமையாகத் தெரியும். அவர்கள் இருவருடனும்தான் இவர் நீண்ட காலம் நின்றிருக்கின்றார். வரலாற்று புகழ் மிக்க தவளை நடவடிக்கையின் போது இவர் லெப். கேணல் பாமாவின் குழுவில் ஒருவராக கடற் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தார். அவரது நடவடிக்கைகள், பண்புகள், எந்தப் பொறுப்பையுமே அவரிடம் நம்பிக் கொடுக்கலாம் என்ற நம்பிக்கையை எல்லோரிடமும் ஏற்படுத்திவிட்டிருந்தன.

இயக்கத்தோடு இணைந்த பின்னர் ஒரு முறை இவர் விடுமுறையில் வீடு சென்றிருந்தார்.

தாயும் தந்தையும் சகோதரர்களும் காட்டிய பாசத்தில் நனைந்தவர்.

"நீங்களெல்லாரும் நல்லாப் படிக்கவேணும். படிச்சு முன்னுக்கு வரவேணும்"
என்றே தன் சகோதரர்களிடம் சொன்னாராம்.
"நான் காத்தோடை காத்தாப் போயிடுவன், அம்மா"
என்று தாயிடம் சொன்னாராம்.
எதற்காக தன் மகள் அப்படிச் சொன்னாள் என்பதை, தன் மகளை இழந்த பின்னர் தான் அந்த அன்பான அம்மாவால் புரிந்துகொள்ளமுடிந்தது.

"பருந்திட்ட இருந்து தன்ர குஞ்சுகளைத் தாய்க்கோழி காக்கிற மாதிரி வேலணையிலிருந்து நான் பத்திரமாகக் கூட்டி வந்த பிள்ளை"

என்று சொல்லிச் சொல்லி அழுது களைத்து விட்டா அம்மா. எப்படித் தன் மகளால் இப்படியொரு சாதனையைச் செய்யமுடிந்தது என்று தன்னிடமே கேட்டுக் கொள்கின்றா. அவர், சொந்த வீடு, வாசல் காணிகளை வேலணையில் இராணுவத்திடம் இழந்து ஏதிலியாக நிற்கும் அவா, இரவிலே வெளியே போகும்போது மகளுக்கு துணைபோன அவா தன் மகளின் வீரத்தை ஆச்சரியத்துடன்தான் பார்க்க முடிந்தது.

கரும்புலித் தாக்குதலுக்கான பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தன் தோழியிடம்
"நான் நல்லூரில திருவிழா நடக்கிற நேரந்தான் சாகவேணும். அப்பத்தான் திருவிழாவில அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தால்தான், என்ரை நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளைகளுக்கு (சக பெண் போராளிகளுக்கு) அம்மாவாலை சாப்பாடு குடுக்க ஏலும்".


என்று அடிக்கடி சொல்லுவாராம். அவரின் தோழிகள் ஒவ்வொருவரின் மனதிலும் அங்கயற் கண்ணியின் இந்த வசனம், கல்லிலே செதுக்கியதுபோலத் தெளிவாகப் பதிவாகியிருக்கின்றது.


eelamhouse.com

எத்தனை தரம் கேட்டாலும், அவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லுகின்றார்கள்.

எல்லாம் தயார்.
கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல் நளாயினி அவர்கள். அங்கயற்கண்ணியிடம்,

"என்னம்மா, ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?" என்று கேட்டார்.
தயக்கமில்லாமல் மிகத் தெளிவாக அங்கயற்கண்ணிடமிருந்து பதில் வந்தது.
"உங்கட அன்பும் அண்ணையின்ர (தலைவரின்) அன்பும் எப்பவும் எனக்கு இருக்கவேணும்"



தாயை நேசிப்பதைவிட, அதற்கும் மேலாக தலைவரையும், தன்னை வளர்த்துவிட்ட பொறுப்பாளர்களையும் தாயகத்தையும் நேசிப்பவர்கள் தான் கரும்புலிகள்.

அங்கயற்கண்ணியை கடற்கரை வரை சிலர் வழியனுப்ப, அதன் பின்னரும் விடாது சில போராளிகள் அவருடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வழியனுப்ப, அதன் பின்னரும் இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவுவரை வந்து பிரியாவிடை கொடுத்தனர் சக போராளிகள்.

"இலக்கை அடிக்காம நான் திரும்பமாட்டேன்"

என்று சொல்லிவிட்டு அங்கயற்கண்ணி விடைபெற்றார். தூரத்தே அவரது அசைவுகள் தெரியும் தூரம் வரை, அதன் பின்னரும் கண்கள் வலிக்க வலிக்க வெறும் அலைகளை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்து விட்டு ஏனையவர்கள் திரும்பினார்கள்.

1994.08.16 அதிகாலை 12.35 மணியளவில், காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவியில் பெரும் அதிர்வு. எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உறங்கிக் கொண்டிருந்த இராணுவத் தினரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்.

எல்லோருக்குமே பரபரப்பு.

தமது கனவுக் கோட்டைகளில் ஒன்று தகர்ந்ததால் இலங்கை இராணுவத் தலைமை பரபரப் படைந்தது.

"எங்கடை பிள்ளையள்தான் எங்கையோ ஆமியை அடிச்சிட்டாங்கள் போல, இன்னும் எவ்வளவு நேரம் கிடக்குது விடியுறதுக்கு"

என்று, பத்திரிகையைப் பார்த்துச் செய்தி அறிய வேண்டும் என்ற ஆவலில் மள மளவென படுக்கையைச் சுருட்டி வைத்தவர்களும்,

"ஆர் பெத்த பிள்ளையோ? எப்படித்தான் எங்களுக்கும் பிள்ளையளுக்கும் விடியப்போகுதோ?
என்ற ஆதங்கங்களுடன் கண்கள் கலங்கியவாறு சுவரோடு சாய்ந்து அமர்ந்து விடியும் வரை விழித்திருந்தவர்களுமாய் மக்கள் பரபரப்படைந்தனர்.

"ரைட், கட்டளைக் கப்பல் அவுட்"
என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டாலும், அங்கயற்கண்ணியின் நினைவு எல்லோர் மனங் களிலும் மோதியது. போராளிகள் பரபரப்படைந்தனர்.

eelamhouse.com

சீறியெழுந்த அலையை அந்த இருட்டிலேயே மீண்டும் மீண்டும் உற்றுப்பார்த்தார்கள். "என்னோடு கலந்துவிட்ட என் மகளை எதற்காக நீங்கள் வீணாகத் தேடுகின்றீர்கள்"

என்று தம்மைப் பார்த்துக் கேட்பது போன்று ஆர்ப்பரித்த கடலைப் பார்த்து, "ஏன் நாங்களெல்லாம் உனக்குப் பிள்ளைகள் இல்லையோ ஏன் எங்களை மட்டும் விட்டிருக்கிறாய்"

என்று, மனதுக்குள் கோபப்பட்டுக்கொண்டார்கள். ஆனால் அடுத்த நிமிடமே கோபம் மாறி, "எங்கள் தோழிகள், தோழர்களையெல்லாம் சுமக்கின்றவள் இவள் தானே" என்ற எண்ணமே மேலோங்கியது. அங்கயற்கண்ணியின் நினைவு பாரமாய் அழுத்த, கனத்த இதயங்களோடு திரும்பினார்கள். காங்கேசன்துறைக் கடற்பரப்பில் காற்றோடு கலந்த அங்கயற்கண்ணி, ஒவ்வொரு போராளியினது குருதிச் சுற்றோட்டத்துடனும் கலந்து கொண்டார். ஆழ் மனதிலே அழுத்தமாகப் பதிந்து கொண்டார். இன்னும் இன்னும் கோடிக்கணக்கான நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் பேசப்படப் போகும் வரலாறு ஆனார்.

தீவுப் பகுதியைக் கைப்பற்றும் நோக்கில் இலங்கை இராணுவம் எடுத்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக வேலணையை ஆக்கிரமிக்க முயன்ற போது, தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பருந்திடமிருந்து பாதுகாக்க வேண்டித் தன் சிறகுகளை விரித்து குஞ்சுகளை மூடிக்கொண்டது. இன்று அந்தக் குஞ்சு, பருந்தின் காலொன்றையே முறித்துப் போட்டுவிட்டது.

இந்திய வல்லாதிக்கத்தால் கேணல் கிட்டுஅவர்களும், அவரின் தோழர்களும் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட நாளில் தன்னைப் புலியாக்கியவள். தன்னையும் சரித்திரமாக்கினார்.

## மாலினி





eelamhouse.com

கப்டன் சுந்தரி

உதயலட்சுமி உருத்திராபதி

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

பிறப்பு - 30.03.1964

வீரச்சாவு - 19.12.1990

குப்பிளான், கட்டுவன் பகுதியில்

சிறீலங்கா இராணுவத்தினருடனான

நேரடி மோதலின் போது

சயனைட் அருந்தி



# நிலவாய் இருந்து நெருப்பாய் எழுந்து

தனது கைகளில் ஆயுதத்தை தூக்குவதற்கு முன்பிருந்தே ஒரு சமூகப் பெண்ணாக இருந்து கொண்டு சுந்தரி சுதந்திரப்பறவைகளுக்குத் தோள் கொடுக்கத் தொடங்கினார். வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் கொண்ட இவர் "சுதந்திரப் பறவைகள்" சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எழுதுவதில் ஈடுபட்டார். ஆயுதம் ஏந்திய பெண்ணாக ஒவ்வொரு பெண்ணும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில், ஆயுதம் தரித்து பயிற்சிப் பாசறைக்குப் புறப்படும் பொழுதுதான் மன உணர்வுகளை ஒரு கடித வடிவில் எழுதியிருந்தார். இக்கடிதம் 1987 வைகாசி - ஆனி 'சுதந்திரப் பறவைகளில்' இடம்பெற்றது. இக்கடிதம் இளம் பெண்கள் மத்தியில், வேண்டிய காலத்தில், பொருத்தமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

1987இல் ஆயுதப் பயிற்சி பெற்றுவிட்டு, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான போர்க்களத்தில் நின்ற வேளை, 1989.01.17 இல் மாமடு என்றும் தமிழ்க்கிராமத்தில் நடாத்தப்பட்ட சிறீலங்கா இராணுவத்துக்கெதிரான தாக்குதல் சம்பவம் ஒன்றை 'தாயக மீட்புக்காக' என்ற தலைப்பில் கவிதை வடிவில் எழுதினார். 1989இன் தொடக்கத்திலிருந்து முடிவுவரை 'சுதந்திரப் பறவைகள்' ஆக்கக் குழுவில் இவர் அங்கம் வகித்தார். 1989 இல் நாடு முழுதும் இந்திய இராணுவம் சூழ்ந்திருக்க கல்லச்சுப் பதிப்பில் வெளியான 'சுதந்திரப் பறவைகள்' சஞ்சிகைகள் அனைத்தையும் வெளிக் கொண்டு வருவதற்காக ஆக்கங்கள் பலவற்றை எழுதுவதிலிருந்து, கல்லச்சு வேலைகளைச் செய்து சஞ்சிகைகளை வெளியிடுவது வரை காட்டுக்குள்ளிருந்து கடும் பணியாற்றினார்.

1989.06.01இல் வெளிவந்த 'சுதந்திரப் பறவைகளில்' இவர் எழுதிய 'களத்திலிருந்து ஒரு கடிதம்' இலகு நடையில் தெளிந்த கருத்துடன் சுவை குன்றாமல் அமைந்திருந்தது. அக்கடிதத்தில் தன் தோழியை நோக்கி அவர் கேட்டுள்ள,

"வீட்டின் சுவர்களுடன் உன் உணர்வுகளை முட்டி மோதவிட்டு, வெளியேற முடியாமல் தவிக் கின்றாய். எவ்வளவு காலந்தான் உன் உணர்வுகளை திரை போட்டு மறைக்கப் போகின்றாய்"

eelamhouse.com

"விடியலுக்காக சிறையை உடைக்கும் வலிமை உனக்கு ஏன் இன்னமும் வரவில்லை" போன்ற கேள்விகள் உண்மையில் இளம் பெண்கள் சமுதாயத்தின் மீது அவர் தொடுத்த கேள்விக் கணைகளாகும். ஆனால் அக் கேள்விக் கணைகளைக்கூட எழுத்தாற்றலூடாக பசுமரத்தில் ஆணி ஏற்றுவது போல் பதிய வைத்துள்ளார்.

எந்த இலட்சியக் கனவோடு தனது உயிரை அர்ப்பணித்துக்கொண்டாரோ, அந்தக் கனவு அவரின் எழுத்துக்கள் யாவற்றிலும் ஆழவேரோடி நிற்பதைக் காணமுடியும்.

"பெண் பிள்ளை எனும் பாதிப்பு உங்களைத் தாக்காது என்றே நம்புகிறேன். நாமும் ஆண் போராளிகளுடன் சரி நிகர் நின்றே போராடி வருகின்றோம். இதற்கு எம் சகோதரிகளின் ஆயுதம் ஏந்திய போராட்டம் எடுத்துக்காட்டாக அமைகின்றது. நாங்கள் உங்கள் மகள் மட்டுமல்ல, இந்த இனத்தின் மகள். அதனால் கவலைகளுக்கு இடம் கொடுக்காது நீங்கள் இருக்கவேண்டும்"

என்பது போன்ற கருத்துக்களை தனது எழுத்தின்மூலம் வெளிப்படுத்தினார். இவ்வாறு தனது எழுத்தாற்றல் மூலம் இளம் சமுதாயத்துடன் நெருங்கி நின்ற சுந்தரி விதையாகி வீழ்ந்த போது, தமிழ் கவிஞன் ஒருவனால் பின்வருமாறு பாடப்பெறுகிறார்.

தமிழினத்தின் தாகம் சுமந்து
தாவணி போடும் கனவுகள் துறந்து
போர்க்களம் ஆடிய
பெண்புலி ஒன்று
களத்திலே மடிந்து
காவியமானாள்.
வேலிகள் சுற்றிய எல்லைகள் மீறி
வேங்கைகள் அணியில்
ஏறிய நிலவு.
நிலவாய் இருந்தவள் நெருப்பாய் எழுந்தாள்
நெருப்பாய் நின்று
நெருப்பிலே எரிந்தாள்.
கப்டன் சுந்தரி
கண்ணுக்குள் நிற்கிறாள்.
மேடையில் நின்று
முழங்கிய கோலம்,
ஆயுதம் ஏந்திய அக்கினிக் கோலம்
எல்லாம் எல்லாம்
எதிரே தெரிகிறது.

மாலினி





eelamhouse.com



மேஜர் பாரதி
சத்தியபாமா விசுவலிங்கம்
கரவெட்டி, யாழ்ப்பாணம்
பிறப்பு - 20.12.1965
வீரச்சாவு - 07.06.1992
மன்னார் - சிறுநாவற்குளம் சிறீலங்காப் படைத்தள எல்லைக்குள் பாதைமாறிச் சென்றபோது ஏற்பட்ட நேரடிமோதலில்

# ஒற்றை முத்து

இவர் தன் குடும்பத்துக்கு ஒரேயொரு செல்லப்பிள்ளை. தங்கள் உயிரிலும் மேலாக பெற்றோரால் நேசிக்கப்பட்டார். வறுமையின் கோரப்பிடி இவரது குடும்பத்தைப் பாதித்ததாலும் அது அவர்களது இதயத்தை பாதிக்கவில்லை.

1986ம் ஆண்டு காலப் பகுதியிலே தனது பல்கலைக்கழகப் படிப்பை நிறுத்திப் புலிகளின் போராட்டப் பாதையில் பாரதி தன்னை இணைத்துக் கொண்டார். 1987ம் ஆண்டு மகளிர் படையணியின் இரண்டாவது பயிற்சி முகாமுக்காக பெண் போராளிகள் தெரிவு செய்யப்பட்டபோது தானும் அதில் பயிற்சி பெற முடியவில்லையே என்று பாரதி மிகவும் மன வேதனைப்பட்டார். “எல்லோரும் பயிற்சிக்கு போனால் தளத்திலே நின்று வேலைகளைக் கவனிப்பதற்கும் ஆட்கள் தேவை. நீங்கள் அப்பொறுப்பை ஏற்றுச் செய்யவேண்டும்” என்று லெப். கேணல் திலீபன் கூறியதற்கிணங்க, பாரதி தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டார். மகளிர் அமைப்பின் பொறுப்பாளராக வாழ்வை மேம்படுத்தும் வேலைகளிலும் பாரதி ஈடுபட்டார். சுதந்திரப் பறவைகளின் ஒன்பதாவது இதழை பாரதி வெளியிட்டார்.

இந்திய இராணுவத்தை இம் மண்ணிலிருந்து விரட்டியடித்த துப்பாக்கி வேட்டொலிகளில் எல்லாப் போராளிகளையும் போல பாரதியின் துப்பாக்கியோடும் சேர்ந்து அவரது பேனாவுக்கும் கணிசமான பங்கு இருந்தது.

eelamhouse.com



1990ம் ஆண்டில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பாளராக இருந்த காலத்தில் பாரதி ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. இந்நேரத்தில் தான் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்தது. பாரதி களம் சென்றார். இராணுவக் காவலரண்களை அவதானிப்பதற்காக சென்று கொண்டிருந்த வேளையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்தார்.

மீண்டும் பெண்களின் சமூக மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட பாரதி விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் துணைப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். எந்த வேலைகள் வந்தாலும் எழுதுவதை மட்டும் பாரதி நிறுத்தவேயில்லை. பாரதியின் எழுத்துக்களில் சூரியக்குழந்தை, பூபதிக் கோள், சிதறிப்போன சிவப்பு வல்லரசு ஐ.நா.சபையே, அன்பான அம்மா போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கது.

1992இல் மேஜர் பாரதி சீதன ஆய்வு செய்வதற்காக வன்னிக்கு போயிருந்த நேரத்தில், தவறுதலாக சிறுநாவற்குளத்திலுள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் எல்லைக்குள் பிரவேசித்தபோது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

## மாலினி



eelamhouse.com



eelamhouse.com





# கவிதை எழுதிய மாவீரர்

| |
|---|
| மேஜர் அமுதா |
| வாசுகி பொன்னம்பலம் |
| தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் |
| பிறப்பு - 26.02.1979 |
| வீரச்சாவு - 01.04.2000 |
| ஓயாத அலைகள் - 03 |
| நடவடிக்கையில் இயக்கச்சியில் |

ஒவ்வொரு காலையும்
கற்பனையாய் விரிகிறது.
காலைச் சூரியனாய்
ஈழம்
கண்முன்னே விரிகிறது.
பொன்னான தமிழீழம்
போய் முடிந்த வீரர்களின்
உதிரத்தில் சிவக்கிறது.
வாருங்கள் தமிழீழம்
விரைவில் வென்றெடுப்போம்.

செல்களின் தாலாட்டில்
கண்ணயரும் புலிவீரர்
கற்பனையில் கவிதை வரும் -
கண்ணயர முடியாமல்
கள வீரர் நினைவு வரும்
விழியோரம் கசிவு வரும்.

மேஜர் அமுதா
[வாசுகி பொன்னம்பலம்
தெல்லிப்பளை]

1995 இல் தமிழீழ விடுதலைப் புலிளோடு இணைந்த இவர் 1979-02-26 இல் பிறந்தவர். படையத் தொடக்கப் பயிற்சியாசிறயராகவும், எறிகணை செலுத்தி அணியொன்றின் பொறுப்பாளராகவும் பணியாற்றிய இவர் மேஜர் தர கல்லூரியில் பயின்று கொண்டிருந்தார். ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையில் 2000-04-01 அன்று இயக்கச்சி பகுதியில் எமது முன்னேற்ற நடவடிக்கையின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.



eelamhouse.com

# நாம் சூரியக் குழந்தைகள்



சூரியனே,
உன் கதிர்கள் நாம்,
அதனால்தான்
எம்மை ஒருவராலும்
சுட்டெரிக்க முடியவில்லை.
நீ
வெப்பத்தின் தந்தை.
நாம்
வெப்பக் குழந்தைகள்.
அதனால்தான்
எதிர்ப்பவர்களை - எம்மால்
எரிக்க முடிகின்றது.
நீ
மறைந்தாலும்
மீண்டும் மீண்டும்
உதித்துக்கொண்டிருக்கிறாய்,
அதனால்தான்
நாமும் விழுந்தாலும்
விதையாகி
முளைத்துக்கொண்டிருக்கிறோம்.
மாவீரரான
மகத்துவமான ஓவியர்கள்
தீட்டிய
சிவப்புச் சித்திரங்களாய்
உன் பெயரால்
ஒளிர்ந்துகொண்டிருக்கிறோம்.
சூரியன்
தன் கதிர்களை
ஒருபோதும்
சுட்டெரிக்கப்போவதில்லை.
அதுபோல்
சூரியனைச் சுட்டெரிக்க
ஒரு சூரியன்
உதிக்கப்போவதில்லை.

நிலவொளியில்
வயல் வெளிகள் மின்னும்.
பனை இலையில்
அதன்
தங்க ஒளி தங்கும்
வெட்டை வெளி
பசுமை தனை வெல்லும்
இத்தனையும்
எம்மனதை அள்ளும்.

மலர்கின்ற தமிழீழம்
எங்களது பெயர் சொல்லும்
மாவீரர் நினைவாலே
உணர்வு வெள்ளம் பெருக் கெடுக்கும்
போர் தொடுத்த களங்களெல்லாம்
போய் முடிந்த கதை சொல்லும்
வேரறுந்த மரங்களாக - மக்கள்
ஊர்பிரிந்த கதை சொல்லும்
ஒன்றாகப் பத்தாக மக்களெல்லாம்
புலிகளுடன்
ஒன்றிணைந்த கதை சொல்லும்

# மாற்றம்

பள்ளிக்கு
பக்குவமாய் கதை பேசி
பக்கத்தில் என்று சொல்லி,
அழுத கண்ணீர்
ஆறாது ஆறாக
அனுப்பி வைப்பார்.
பார்த்திருந்து
பாதியிலே ஓடிவர
எத்தனை தடி முறியும் -

eelamhouse.com

என்ன கொடுமையென
என் மனது கதறியழும்.
எத்தனை அறிவுரைகள்
எள்ளவும் விளங்காது.
என்னதான் சொன்னாலும்
எப்போதும் விடியாது.
எந்நாளும் பல தடிகள்
முறிவதுதான் தொடரும்.

கால நதியினிலே
காலம் கரைந்து மெல்ல
தூரத்துப் பள்ளிக்கு
துடிப்புடனே நான் சென்றேன்.
பள்ளிப் படிப்பு மெல்ல
பசும் பாலாய் சுவைத்து விட
முந்திய நினைவு வர முன்னே
முகம் சிவக்கும்.
கற்பனைகள் பல விரியும்
எதிர்காலக் கட்டிடங்கள்
என் மனதில் குடிகொள்ளும்.
பட்டம் பதவியென
பல பரிசுப் பத்திரங்கள்
பற்றியெல்லாம் நினைவு வரும்.
பக்கத்தில் நடப்பவைகள்
பல தூக்கிப் பார்க்குமெண்ணம்
எள்ளவும் இருக்காது.
எண்ணங்கள் சுயநலமாய்
இலக்கின்றிச் சிறகடிக்கும்.
எதையுமே
கருத்தின்றிக் கண் பார்க்கும்
எல்லாமே இனி இந்த
ஏட்டுப் படிப்பென்று
ஏற்று முழக்கமிடும்.
பின்
சிற்றூரைப் பிரிந்தபோது
சிறிது மனக்கலக்கம்.
பின்னாளில் பலகுண்டு
பக்கத்தில் வெடிக்கப்
பயந்ததுண்டு.
செலி வந்து வட்டமிட
கேவி அழுததுண்டு.
எங்கோ குண்டு விழ
இங்கே விழுந்து படுத்ததுண்டு.

தொடர்ந்து கெடிபிடிகள்...
சுதந்திரங்கள் இல்லாத
சூனியத்தை மனமுணர,
நடக்கின்ற அவலங்கள்
உணர்வு தொட....
கேட்கின்ற வேட்டொலிகள்
கேள்விக் கணை தொடுக்க,
உரிமைப் போர் தொடுக்க
எழுந்தவர்கள்
உதிர்ந்து விட்ட செய்தி வரும்.
கட்டுகின்ற மாலைகளே
மனதிலுரங் கொடுக்கும்.
மெல்ல என் வாழ்வின்
அர்த்தங்கள் புரிந்துவிட
என்காலில் வலுச் சேரும்....

எல்லாம் நினைவில் வர - மனம்
எங்கோ சிறகடிக்கும்.
தோளோடு தோள் நின்ற
சோதரர்கள் நினைவு வர,
சோகம் நிரம்பிவிடும்.
பச்சை வயல் வெளிகள்
பல கடந்து நாமின்று
பற்றைக் காட்டிடையே
பகைவனையே பார்த்திருப்போம்.
நிலவதனின் கீற்று ஒளி
கவிதை தர,
பல களங்கள் வந்து போகும்
பக்கத்திலே சருகொலிக்கும்.
துப்பாக்கி சடசடக்கும்
பகை விழுந்த
நிலை விளங்க,
தமிழீழ விடிவு வெகு
விரைவிலென்ற
விடை புரியும்.

புறப்பட்டு விட்டோம்
பூகம்பங்களாய்.
விதைக்கப்பட்டவர்களும்,
கிரிசாந்திகளாய்
புதைக்கப்பட்டவர்களும்,
ஊமைப் பெண்களாய்
வதைக்கப்பட்டவர்களும்
இங்கே ஏராளம்.
இவர்களின் இறுதி
உயிர் மூச்சாய்,
ஆவேசப் பெருமூச்சால்
முளைவிட்டவர்கள்
நாங்கள்
இனவெறியின் சுவாலையில்
கருகிப் போனவரின்
கண்ணீரில் பிறந்தவர்கள்.
பசியால் வாடுகின்ற
பாலகரின் அழுகையிலே
துடித்தவர்கள்.
காணாமல் போனோரின்
காரணங்கள் தெரியாமல்
விழித்தவர்கள்
துடித்தவர்கள்.
அதனால்
துப்பாக்கி பிடித்தவர்கள்
வெடிப்பதற்காய்
புறப்பட்டு விட்டோம்
பூகம்பங்களாய்.
விரைவில்
இடியாய்
அடிகொடுப்போம்.
பகை துடிக்க வெடியமைப்போம்.
விலங்கொடித்துப்
புது வழியமைப்போம்.



eelamhouse.com



லெப். துர்க்கா
கமலாதேவி சச்சிதானந்தம்
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
பிறப்பு - 07.04.1965
வீரச்சாவு - 25.03.1988
பாடைக்கல், உடையார்கட்டில்
இந்திய இராணுவச்
சுற்றிவளைப்பின் போது

# களத்தின் வரிகள் புலத்திற்கு...

அன்புள்ள இந்து!

இங்கே நாளாந்தம் குறைந்தது பத்துத் தமிழ் மக்கள் இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும், எறிகணைகளுக்கும் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். எமது தாயகத்தின் தெற்கெல்லையில் குறிப்பிட்ட சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு நாளாந்தம் சிங்களக் குடியேற்றத்தால் விழுங்கப்படுகிறது. நாள்தோறும் ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்றார். இவற்றை எதிர்த்து நாள் ஒன்றுக்கு ஒரு போராளி தமிழீழத்தின் எங்கோ ஓர் மூலையில் வீரச்சாவடைந்து கொண்டிருக்கிறார்.

இவ்விதம் தமிழ் பேசும் மக்கள், உரிமைகள் ஒடுக்கப்பட்ட நிலையில், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, பெரும் துன்பத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கையில் அவற்றுக்கெதிராகப் போராடி எமது உரிமைகளைக் காத்து, தாயகத்தை மீட்டெடுப்பதே எமது இன்னல்களுக்கான ஒரே தீர்வு.

05.03.1989 இல் நீ அனுப்பிய கடிதம் 01.05.1989 அன்று கிடைத்தது. நான் அடிக்கடி கடிதம் போட முடியாத நிலையில் உள்ளதை நீ புரிந்து கொள்வாய் என நினைக்கிறேன்.

இந்திய இராணுவத்தின் கொடுமைகளையே தொடர்ந்து எழுதிக் கொண்டிராமல் இம்முறை வித்தியசமாக என் நெஞ்சத்தில் என்றென்றும் பசுமையாய் ஊன்றிவிட்ட பக்கங்களில் ஒன்றைமட்டும்

eelamhouse.com

புரட்டிப் பாத்து எழுதுகிறேன்.

இதில் இழையோடுகின்ற விடுதலைத் தாகத்தை நீ புரிந்து கொள்வாய் என நினைக்கிறேன் இந்து. அவர் தான் துர்க்கா. பள்ளிப் பருவத்திலேயே விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட பெண்புலி.

வரும் பகையினை எதிர்க்க நாம் படையெனப் புறப்படுகையில் எம் உள்ளங்களில் புத்துணர்வு பொங்கும். அவர் எம்முடன் இருக்கையில் அது மேலும் கரைபுரண்டோடும். எத்தனை நகைச்சுவை நிறைந்தது அவர் பேச்சு. இந்து! நானும் நீயும் பழகிய அந்தப் பள்ளி வாழ்க்கை மறக்க முடியாதது தான். ஆனால் இன்று நாம் வாழுகின்ற இந்தக் கெரில்லா வாழ்க்கை உன்னால் புரிந்து கொள்ள முடியாதது. மிகவும் மகிழ்வாக நிறைவாக, அனுபவிப்பதற்கு அரிதான, எல்லோருக்கும் கிட்டாத உன்னதமான வாழ்க்கை. இந்தக் கூட்டு வாழ்க்கையில் எம்மோடு நின்று குலாவி, பின் சுதந்திரத்தை தேடிச் சென்று விட்ட பறவைகளில் ஒன்று தான் இவர். தன் பள்ளி வாழ்க்கையிலேயே பகைக்கெதிராகப் பணிபுரியத் தொடங்கிவிட்டார். தனது பிறப்பிடமான புதுக்குடியிருப்பிலேயே கல்விபயின்ற இவர், தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்பந்தமான பத்திரிகைகளையும், நூல்களையும் இரகசியமான முறையில் மாணவர் மத்தியில் பரிமாறிக்கொண்டார். இதன் காரணமாக இவரின் பள்ளித் தோழர்களில் அதிகம் பேர் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர்களாக காணப்பட்டார்கள்.

ஒரு நாள் காலைப் பொழுது மாணவி கமலாதேவி(துர்க்கா) பள்ளிச் சீருடையுடன் புத்தகமும், கையுமாக பாடசாலை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார். அவர் போகும் திசையில் சிறிலங்கா இராணுவ 'ஜீப்' வண்டிகளும் விரைந்துகொண்டிருந்தன.

துர்க்கா பாடசாலையை அண்மித்தபோது, பாடசாலைக்கு வெளியில் இராணுவம் காவலில் நின்று கொண்டிருந்தது. உள்ளே நுழைந்த போது மண்டபங்களைச் சுற்றிலும் இராணுவ வீரர்கள் நின்று கொண்டிருந்தனர். பாடசாலை இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டுவிட்டது என்று தெரிந்து கொண்டும் அவர் வகுப்பினுள் நுழைந்துவிட்டார். ஆனால் தனது புத்தகம் ஒன்றினுள் விடுதலை இயக்கமொன்றின் பத்திரிகை இருப்பது அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. பதட்டப்படாமல் சில நிமிடங்களில் சிந்தித்தார்.

அவர்கள் அதைத் தேடி கண்டுபிடிப்பதற்கு முன்னும் அவர்களின் கண்ணில் படாமலும் அதைப் அப்புறப்படுத்தவேண்டும். ஆனால் பாடசாலை மண்டபத்தைச் சுற்றி அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வது. பளீரென மனதில் ஒரு உத்தி. எல்லா மாணவர்களின் உதவிகளையும் கோரினார். உடனே அந்தப் பத்திரிகை அங்குள்ள மாணவர்கள் பதினைந்து பேர்களுக்கும் இரகசியமாக பங்கிடப்பட்டது. மறு கணம் மாணவர்கள் அனைவருக்கும் அது உணவாகியது.

விரைவிலேயே பள்ளிக்கு முழுக்குப் போட்டுவிட்டு துர்க்கா ஆயுதப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அவரை முதன்முதலில் சந்தித்த நாளில் மறக்க முடியாத ஒரு சம்பவம். அதை உன்னோடு பகிர்ந்து கொள்கிறேன் இந்து.

பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்படுவதற்காக துர்க்கா உட்பட பதினாங்கு பெண் பிள்ளைகள் ஒன்று சேர்த்து விடப்பட்டிருந்த ஒரு வீட்டில் அன்று நான் விடப்பட்டேன். நாமெல்லாம் ஒன்றாக இருக்கும் போது அந்த நேரத்தில் மிக அண்மையில் வெடி குண்டு வெடிக்கும் சத்தம் ஒன்று கேட்டது.


eelamhouse.com



பதற்றம் அடைந்த நாம் ஆளுக்கொரு திக்கில் ஓடினோம். துர்க்காவும் சிலரும் மிளகாய் தோட்டத்தினுள் பதுங்கிப் பதுங்கி ஓடினர். இன்னும் சிலர் அருகிலுள்ள புதருக்குள் மறைந்து கொண்டனர். நானும் இன்னும் சிலரும் ஓடிச் சென்று வாழைக்குட்டி நடுவதற்கு வெட்டப்பட்டிருந்த குழிகளுள் பதுங்கினோம்.

இன்னும் சிலரோ வயல்வெளியில் வரம்புகளின் மேலே ஓடிக் கொண்டேயிருந்தனர். இவர்கள் நோக்கம் என்னவாய் இருக்கும் என்றே தெரியவில்லை.

வேறு சிக்கல்கள் ஏதும் தொடர்ந்து ஏற்படவில்லை. இதனால் சில மணிநேரம் கழித்து நடந்தது என்னவென்று அறிந்து விடுவதற்காக மிளகாய் பாத்தியூடாக பதுங்கிச் பதுங்கிச் சென்றார் துர்க்கா.

சகபோராளிகள் வெடிகுண்டு ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்ததன் விளைவே அந்தச் சத்தம் என்பதை அறிந்து வந்தார். அவரே ஏனைய பதின்மூன்று பேர்களையும் தேடிச் சென்று அழைத்து வந்து மீண்டும் அதே இடத்தில் சேர்த்தார்.

அவர் ஒரு போராளியாக பயிற்றுவிக்கப்படுவதற்கு முன்பே கடமையைத் தானாக உணர்ந்து பொறுப்பாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டார் என்பதை புரிந்து கொண்டாயா இந்து?

பயிற்சியின் பின் பெண்கள் குழுவொன்றிற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட துர்க்கா தனது கடமைகளை நன்றாகச் செய்தார்.

பயிற்சிப் பாசறையில் இவரை எல்லோரும் 'அம்மாக்கிழவி' என்றே செல்லமாக அழைத்தனர். சுகயீனமான போராளிகளுடன் மிகவும் அன்பாகவும் நேசமாகவும் பழகுவதாலும், தனக்குத் தெரிந்த பழைய நாட்டு வைத்தியமுறைகளை ஒரு பாட்டியைப் போல் இருந்து கவனித்து செய்து வருவதாலும் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

சிறிலங்கா இராணுவத்துடனான பல மோதல்களில் நானும் அவரும் அருகருகே நின்று எதிரிகளின் நிலைகளை குறி வைத்திருக்கிறோம். இப்போது அவரின் நினைவுகளும், நிழற்படங்களும் மட்டும் என்னோடு.

எல்லா மக்களும் வறுமை நீங்கி சுதந்திரமாக வாழவேண்டும் என்பது பற்றித் தினமும் சிந்திப்பார். குறிப்பாக அந்நியனாலும், சமூகத்தினாலும் உரிமைகள் ஒடுக்கப்பட்ட நிலையில் குடும்ப வட்டத்திற்குள் நின்று இயந்திரமாகச் சுழலும் பெண்களை எண்ணி மிகவும் வேதனைப்படுவார்.

"இவர்களை எப்படியாவது வெளியில் கொண்டு வரவேண்டும். இவர்கள் சுதந்திரம் என்றால் என்னவென்று அறியாமல் இருக்கிறார்கள். அதனால்தான் சுதந்திரத்தின் அருமை புரியாதவர்களாக இன்னும் இந்த அடிமைத்தளையில் நின்று சுழல்கிறார்கள். இவர்களை வெளியில் கொண்டு வருவதற்கும் நாட்டைப் பற்றிச் சிந்திக்க வைப்பதற்கும் நாம் தான் பாடுபடவேண்டும்" என்று கூறுவார்.

எமது பாசறையில் நிகழ்ந்த கருத்தரங்கின் பொழுது பெண்களின் நிலைப்பாடு பற்றிப் பேசுகையில் பெண்களின் நிலையை இட்டு மிகவும் வேதனைப்பட்டுக் கொண்ட அவரின் உள்ளத்தின் வெளிப்பாடு அவரின் கவிதை வரிகளில் தெரிந்தன.

eelamhouse.com

பெண்ணே!
நீஅழுத கண்ணீர்தான்
இங்கு கடலாக....
நீ விடும் பெருமூச்சோ
இங்கு புயலாக...
என்று உன் சீற்றம்
துப்பாக்கி வேட்டாகத் தீருமோ,
புரட்சிக் களத்தில்
உன் குருதி சிந்துமோ.
அன்று தான் உனக்கு விடுதலை.

எதிரியுடன் போரிடுகையில் புலியென உறுமும் இவர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்திய இராணுவத்துடனான மோதல்களிலும், வேறு பல தாக்குதல்களிலும் பங்கு கொண்டவர் சண்டையின்போது சிறந்த தந்திரோபாய உத்திகளைப் பயன்படுத்துவார்.

அவளின் குடுகுடு என்ற நடையும், குறுகுறுத்த பார்வையும், எந்நேரமும் புன்னகை பூத்த முகமும் இன்னும் என் கண்முன். நிழற்படமாக என்னுடனே.

23.03.1988 அன்றுதான் துர்க்கா கடைசியாக எங்களுடன் இருந்து தேநீர் அருந்தினார். எங்களுடைய சயனைட் வில்லைகளை எங்கள் கழுத்தில் அணிந்திருக்கிறோமா, அல்லது தவற விட்டுவிட்டோமா என்று வழமைபோல் சரிபார்த்தார். காவல் கடமையில் நாம் சரியாக ஈடுபட்டிருக்கிறோமா என்றெல்லாம் அன்றுதான் கடைசியாகக் கவனித்தார்.

முல்லை மாவட்டத்தின் உடையார்கட்டு என்ற இடத்தில் எமது தளம் இந்திய இராணுவத்தின் திடீர்த் தாக்குதலுக்குள்ளான போது முடிவில் துர்க்காமண்ணை ஆரத்தழுவியபடி இரத்த வெள்ளத்தில் கிடந்தார். இப்படித்தான் எமது வீரர்கள் 1142 பேர்களின் உடல்களும் தமது இலட்சியத்துக்காக மண்ணோடு மண்ணாகிவிட்டன, இதில் இதுவரை துர்க்காவுடன் சேர்ந்து 22 பெண் போராளிகள் வீரச்சாவடைந்தார்கள் என்பது நீ அறிய வேண்டியதே.

இந்த 1142 வீரர்களினதும் 20,000 இற்கும் மேற்பட்ட தமிழ்பேசும் மக்களினதும், உடல்களை எரித்து, புதைத்த சாம்பல் மேட்டிலும் புதைகுழியிலும் தான் சுதந்திர தமிழீழம் வேர்விடப் போகிறது என்பதைப் புரிந்துகொண்டாயா?

தமிழீழ சுதந்திரப் போருக்கு அங்கிருந்து கொண்டே உன்னாலான உதவிகளைச் செய்வதாக கூறியிருந்தாய். மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். உலகின் எந்தப் பகுதியிலும் இருக்கும் தமிழ்பேசும் மக்கள் ஒவ்வொருவரினதும் இலட்சியத் தாகம் தமிழீழத் தாயகமாகவே இருக்கவேண்டும் என்பதே எனது விருப்பம். நீ விரைவில் தாயகம் திரும்ப வேண்டும் உனது கடமையைத் தொடங்கவேண்டும் என்பதே மேலான விருப்பம். மிகுதி இனிவரும் கடிதத்தில்.



இப்படிக்கு

உன் அன்பிற்குரிய கோகிலா

ரதி



eelamhouse.com



# எளிமை, பொறுமை, தன்னம்பிக்மை

ஆகாயத்தைத் தனது பச்சைக் குழைகளால் மூடி அடைக்க முனைந்துகொண்டிருக்கும் அடர்ந்த காட்டின் நடுவே எமது பாசறை. காலை நேரம் வழமைபோல போராளிகள் யாவரும் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

எனக்குத் தரப்பட்ட வேலையைச் செய்து முடித்துவிட்டு அதைச் சரிபார்ப்பதற்காக எனது பொறுப்பாளரைச் சென்றடைகின்றேன். அப்பொழுதுதான் அந்தச் செய்தி என்னிடம் சொல்லப்படுகின்றது. அதிர்ச்சியை தாங்கிக்கொண்டு எங்களின் கூடாரத்தை நோக்கி நடக்கிறேன் என்மூலம் தோழிகள் யாவரும் செய்தியை அறிந்து கொண்டனர். வெகுதூரம் மிக நீண்ட தூரம் நீயுமா எம்மைவிட்டு பிரிந்துவிட்டாய் நித்திலா? இந்தச் செய்தி பிழையாக இருக்கக் கூடாதா? நீ உயிர் பிழைத்துவிட்டாய், உன் இனிய தோழர்களைச் சந்திக்க ஓடோடிவந்து கொண்டிருக்கிறாய் என்று ஒரு புதிய செய்தி கிடைக்காதா? பதில் கிடைக்க முடியாத கேள்வியோடு வானத்தைப் பார்க்கிறோம் பச்சை முகடுகளுக்கு பின்னாலிருந்த சூரியன் தன் பற்கள் பளிச்சிட ஏளனமாக சிரிக்கின்றான்.தார் வீதியில் குப்புறக் கிடந்த நித்திலாவின் உடலைக் காலையில் உனது தோழர்களுக்கு இனம் காட்டியது நான்தானே, பொய்யாகுமா, என்பது போல்.

பழகும் இனிமைக்கு இணையற்றவளே, உன்னிடமிருந்து படித்துக் கொள்ள எமக்கு நிறையவே இருந்தது. நீல நிறமாய் இருந்த உனது பழைய ஜீன்ஸ் நொய்ந்து நரைத்துப் போய் வெள்ளையாய் கிடக்கும். கிடைக்கின்ற புதியதை எம்மிடம் தந்துவிட்டு நீ பழையதையே தோய்த்து அணிவாய். எதிலுமே எமது தேவையை முதலில் நிறைவேற்றி, பின்புதான் உன்னைப்பற்றிச் சிந்திக்கின்ற உனக்கே உரிய உனது எளிமைக் கோலத்தால் எமது இதயங்களில் ஏறி அமர்ந்து கொண்டாய். உலவித் திரிந்த விடுதலை நெருப்பு நீ. உன்னுடல் மண்ணுக்குள் புதைக்கப்பட்டுவிட்டது. ஆனால் தமிழீழத்தவர் நெஞ்சங்களுள் நீ மூட்டிய தீ இன்றும் பற்றி எரியத் தொடங்கிவிட்டது.

"வியட்னாம் போராளிகளின் தன்னம்பிக்கை" இது நித்தம் உன் வாய்க்குள் இருந்து வரும் வார்த்தை. எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை மிக நீண்ட தூரத்திலிருந்து கொண்டு வந்து சேர்ப்பது எமது அன்றாடக் கடமை. இந்நேரங்களில் களைப்படைந்த, சோர்வடைந்த தோழிகள் மத்தியில்ஷவியட்னாம் போராளிகள் வெற்றிக்குக் காரணம் அவர்களின் தன்னம்பிக்கை. நாம் அவர்களையும் விட தன்னம்பிக்கை அதிகம் கொண்டவர்கள். இலட்சியத் தாகமும் உறுதியும் உடையவர்கள். புறப்படுவோம் என எம்மை உற்சாகப்படுத்துவாய். துன்பத்தை மறந்தோம். விரைவில் பாசறை சேர்ந்தோம்.

மெல்லிய உயர்ந்த உன் தோற்றத்தைப் பார்த்து நாங்கள் கேலி செய்வோம். காற்று சிறிது பலமாக அடித்தால் சுற்றியுள்ள மரக் கொப்புகளில்தான் தேட வேண்டும் உன்னை என்போம். எதிரியை நோக்கி என் ஆயுதத்தை உயர்த்துவதற்கு எனது கைகளிற்கு பலம் இருக்கிறது என கைகளை நீ உறுதியாகப் பிடித்துக்காட்டி, ஷஷஉள்ளத்தில்தளராத உறுதி இருக்கிறது. இதனால் நான் விடுதலைப் புலிகிகளில் இருப்பதற்கு தகுதியுடையவள்?? என்று எமது கேலியை ரசித்தபடி புன்சிரிப்போடு கூறுவார்.

03.07.1988 அன்று விசுவமடுச் சந்திக்கு மிக அண்மையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மீது பதுங்கித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்ட போது எதிர்பாராத விதமாக நாலாபக்கமும் எதிரி இராணுவத்தால் சூழப்பட்டீர்கள். எதிரியிடமிருந்து எஸ். எல். ஆர் துப்பாக்கியைக் கைப்பற்ற முடிந்தது. ஆனால் எமது பக்கத்தில் 2ம் லெப். மரியாவை இழக்க நேர்ந்தது. நெற்றிப்பொட்டில் சூடு பிடித்து சாவின் மடியில் படுத்துவிட்டார் மரியா. உன் தோழியின் உடலை எதிரி கைப்பற்றிவிடக் கூடாது என்ற ஆவேசத்தில் நீயும் உன் தோழிகளும் எவ்வளவோ முயன்றீர்கள். முடியாமற் போன போது நீ அடைந்த வேதனை....

eelamhouse.com

வீழ்ந்துவிட்ட எம் வீரர்களின் ஈகங்களை நினைவுகூரும் வணக்க நாட்களை ஒழுங்கு செய்து, அதன் மூலம் எம்எண்ணங்களைப் புனிதப்படுத்துவதிலும் இலட்சிய உறுதியை வளர்ப்பதிலும் முன்னின்று செயற்பட்டவள் நீ.



பாரதி சொன்னான் "ஒரு குழந்தையை வையாதே பாப்பா" என்று. உன்னைப் போன்றவர்களிடம் பாரதி இதைப்படித்தானோ? ஒரு போராளியைக்கூட விட்டு வைக்க மாட்டாய். நாம் குதூகலமாய் கூடுகின்ற நிகழ்ச்சிகளில் ஒவ்வொருவரும் பங்காற்ற வேண்டும் என வற்புறுத்துவாய். நாம் ஒவ்வொருவரும் உலக நடப்பை அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை கொண்டாய். பத்திரிகைச் செய்திகளைப் படித்து, வானொலிச் செய்திகளைக் கேட்டு, எம்மோடு கலந்துரையாடி அவற்றினை அறிவதில் எமக்கு ஆர்வமூட்டினாய். இன்று எம்மிற்பலர் அதை எண்ணிப்பார்க்கின்றோம். எமது வளர்ச்சியில் எவ்வளவு அக்கறைப்பட்டாய். உயர்தர வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது இயக்கத்துடனான தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட நீ, பாடசாலைக்கல்வியில் கவனம் செலுத்தவில்லை. தேச விடுதலை இயக்கம் பற்றி அறிந்து கொள்வதற்கும், விவாதிப்பதற்கும் தலைமறைவாக இயங்கி வரும் போராளிகளுடன் தொடர்பு கொள்வதற்குமே படிப்பதற்குரிய நேரத்தையும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டாய். தேச விடுதலையில் உனக்கிருந்த ஈடுபாடு காரணமாகவும் உனது செயற்றிறன், கடின உழைப்புக் காரணமாகவும் 1985 ஜனவரியில் நெல்லியடிப் பிரதேசத்தில் தேசவிடுதலைக்காக பெண்களை அணி திரட்டுவதிலும், அவர்களின் சமூகச் சிக்கல்களை ஆராய்வதற்கும் பொறுப்பாக விடப்பட்டாய். 1984ம் ஆண்டின் இறுதியில் மார்கழியில் ஆரம்பிக்கப்பட்ட 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருத்தியானாய்.

லெப். நித்திலா

பவானி நல்லையா

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

பிறப்பு - 06.02.1966

வீரச்சாவு - 26.06.1989

பாரவூர்தியில் வந்தவேளை

பன்றிக்கெய்தகுளம், ஓமந்தையில்

இந்திய இராணுவம் பதுங்கியிருந்து

தாக்கியதில்

பாடசாலை மாணவிகள் மத்தியிலும் கிராமப் பெண்கள் மத்தியிலும் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி, குறைந்த எண்ணிக்கையானாலும், உறுதியான பெண்கள் அமைப்பொன்றை நெல்லியடிப் பிரதேசத்தில் கட்டியெழுப்பினாய். முதலில் பதினைந்து பெண் அளவில் உன்னுடன் சேர்ந்து இரகசியமாகப் பங்காற்றினாலும், நாளடைவில் இது அதிகரித்தது.

இவ்வாறு தேச விடுதலைக்குப் பெண்களை அணி சேர்ப்பதிலும் இப்பெண்களுக்குரிய சமூகச்சிக்கல்களை அணுகுவதிலும் நீ முனைப்போடு செயற்பட்டதால் உன் பொறுப்பு அதிகரித்தது. மேற்கண்ட வேலைகளைத் திட்டமிடுவதற்கு வடமராட்சிப் பிரதேசம் முழுவதற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டாய். வெயில் என்றும் மழை என்றும் பாராமல் உணவையும் உறக்கத்தையும் பொருட்படுத்தாமல், உனது கடமை நிறைவேற்ற கடுமையாக உழைத்தாய். இச்சமயத்திலேயே (1986) பௌதீக விஞ்ஞானப் பட்டப்படிப்பிற்காக பல்கலைக்கழக ஒப்புதல் கிடைத்தது.

தேச விடுதலைக்கான உனது கடமையோடு படிப்பையும் நீ தொடர்ந்தாய். விடுமுறை நாட்களைத் தவிர மேலும் அடிக்கடி விடுமுறை எடுத்து உனது பிரதேசங்களுக்குச் சென்றுவிடுவாய். பல பின் தங்கிய கிராமங்களுக்குள் புகுந்து அங்குள்ள மக்களோடு



eelamhouse.com



பழகி, அங்குள்ள குறைபாடுகளைக் கண்டு அவற்றை சீர்செய்யவேண்டும் என்று கடுமையாக உழைத்தாய். குறிப்பாக மழலைகளின் எதிர்காலத்தைக் குறித்து மிகவும் அக்கறை கொண்டிருந்தாய். இயக்கத்தின் வேலைத் திட்டங்களான இலவச பாலர் பாடசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பன்னவேலை, தையல் கைத்தொழில் நிலையங்கள் நிறுவுவதில் எவ்வளவு விரைவாகவும் துடிப்பாகவும் செயற்பட்டாய். இவற்றோடிணைந்த மாதர்சங்கங்கள், மகளிர் நூல் நிலையங்களை நிறுவி மக்களுக்குள்ள குறைபாடுகளை சீர் செய்யத் துணிந்ததோடு, இவ்வமைப்புகளுக்கூடாக தேசவிடுதலை இயக்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் மிக நெருக்கத்தை ஏற்படுத்தினாய்.

நாட்டில் நமக்கென்ன நெருக்கடி என்பதைப் புரிந்துகொள்ளாத பெண்கள் எத்தனை பேர்? அந்நியனின் அடிவருடிகளான ஆயுதக்குழுக்களினது துரோகத்தனத்தைப் புரிந்து கொள்ளதவர்கள் எத்தனை பேர்? சமூகம் பெண்களை எவ்வளவு ஒடுக்குகின்றன என்பதைக்கூட விளங்கிக்கொள்ளா மல் எத்தனை பேர்? பெண்கள் விழிப்படைந்தால் நாடு விடுதலை அடைய முடியும் என்ற உண்மைக் கருத்தை உணர்ந்து கொண்ட நீ, இப்பெண்கள் மத்தியில் கலந்துகொண்ட உரையாடல் கூட்டங்கள் தான் எத்தனை? ஏன் எமது பாசறையில் "பெண்கள் உரிமைப் போராட்டமானது ஆண்களுக்கு எதிரானது அல்ல. ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற சமூக அமைப்பிற்கு எதிரானது" என்ற கருப் பொருளில் நீ ஆற்றிய உரை, உனது உரிமைக்குரல், சகல போராளிகளின் மனதிலும் இன்றுகூட ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கிராமங்களில் ஒளிந்திருக்கும் ஆண்கள், பெண்கள், கலைஞர்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்கள் மூலம் சிறந்த கலைப் படைப்புக்களை நவீன பாரம்பரிய கலையம்சங்களோடும், புரட்சிகரக் கண்ணோட்டத்தோடும் தயாரித்து, மக்கள் முன் கொண்டு வருவதில் முயன்றாய். குறிப்பாக "பாப் பாக்களின் பிரகடனம்" என்ற சிறுவர் கவிதா நிகழ்வு மக்களை வெகுவாக கவர்ந்ததல்லவா?

1987ம் ஆண்டு மே 26ல் "ஒப்பறேசன் லிபறேசன்" நடவடிக்கையின் போது சிறீலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிக்குள் வடமராட்சியில் குண்டு வீச்சு விமானங்களால் தொடர்ச்சியான குண்டுகள் வீசப்பட்டன. ஆட்லறி எறிகணைகள் ஏவப்பட்டன. மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். நாம் அவசர அவசரமாக உணவு சமைத்துக் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உணவுப் பொதிகளை அனுப்பிக்கொண்டிருந்தோம். எமது பக்கம் இழப்புக்கள் அதிகரித்தன. ஈற்றில் எதிரி தீவிரமாக முன்னேறுகிறான். அப்போது நாம் சாதாரண பெண்கள் என்பதால் பாதுகாப்பு அற்ற நிலையில் தலைமறைவாகிவிட்டோம். மேலும் இரண்டு நாட்கள் இராணுவத்தின் கைகளிற்கு நடுவில் எவ்வாறோ தப்பித்துக்கொள்கிறோம். ஆனால் ஒருவரை ஒருவர் பிரிந்துவிட்டோம். இச்சூழ்நிலையில் நீ துணிந்து ஒரு காரியத்தை செய்தாய். நீயும் உன் தோழிகள் இருவரும் சாதாரண குடும்பப் பெண்கள் போல் வேடம் தரித்து, இரண்டு பெரிய சிங்களப் படையினரின் தடையரண்களைக் கடக் கிறீர்கள். கால் நடையாகவே தென்மராட்சியை அடைகின்றீர்கள்.

இச்சம்பவங்களின் பின் 1987 'யூலை'யில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் இரண்டா வது பாசறையில் நூறு பெண்கள் ஆயுதப்பற்சி பெற்றோம். இதில் பவானியாகவல்ல, நித்திலாவாக நீயும் இணைந்து கொண்டாய். பயிற்சியை முடித்துக்கொண்டு புதிய வேகத்துடன் புதிய தெம்புடன் உன் கடமையைத் தொடர ஆரம்பித்தாய். பெற்றோரின் வேண்டுதலுக்காக தொடர்ந்தும் படித்துக் கொண்ருந்த நீ, இப்போது படிப்பை முற்றாக நிறுத்தி விடப்போவதாக இயக்கத்திடம் சொன்னாய். ஆனால் எதுவரை படிப்பைத் தொடராலாமோ, அதுவரை படிப்பைத் தொடரும்படி இயக்கம் முடிவு சொன்னது. எனவே படித்துக்கெண்டே யாழ் நகரப் பகுதியில் சமூக அரசியல் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டாய். அத்தோடு இயக்கத்தில் இருந்துகொண்டு படிப்பைத் தொடரும் ஏனைய பெண் போராளி

eelamhouse.com

களுக்கு வேண்டியவற்றைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாய்.

இலங்கை-இந்திய கூட்டுச் சதியை எதிர்த்து இந்தியாவின் துரோகத்தனத்தை மக்களுக்கு தோலுரித்துக் காட்ட லெப். கேணல் திலீபன் உண்ணவிரதம் மேற்கொண்ட சமயம் மகளிர் படைப்பிரிவு ஒழுங்கு செய்த மாதயாத்திரையில் முக்கிய பங்கு வகித்தாய். இதன் மூலம் தமிழ் மக்கள்மீது அந்நிய சக்திகள்விரித்துள்ள சூழ்ச்சிவலையை மக்களுக்குப் புரியவைத்தோம். இதில் உனது பங்கு முக்கியமானது.

அந்நியனை வருடிக் கொண்டிருந்த துரோகக் கும்பல்கள் அவர்களின் தயவில் இருந்துகொண்டு, வெறுங் கையோடு இருந்த எமது போராளிகளைப் படுகொலை செய்து கொண்டிருந்த நேரம் துரோகிகளை எதிர்த்து யாழ். நகரில் நடாத்தப்பட்ட மிகவும் எழுச்சி கொண்ட மக்கள் போராட்டங்கள் உனது கடமைகளைத் திறம்பட ஆற்றியிருப்பதை எமக்கு உணர்த்தின. தொடர்ந்து 10ம் மாதம் தமிழீழ-இந்திய போர் வெடித்தது. துப்பாக்கி ஏந்திக்களம் புகுந்த தோழியரில் நீயும் ஒருத்தியானாய். பெண்களின் குழுவொன்றிற்கு தலைவியானாய்.

ஓர் ஆண்டும் எட்டு மாதங்களும் ஓடி மறைந்தன. பச்சை முகடுகளின் கீழ் நாங்கள் மண்வெட்டியினாலும் சவளினாலும் மண்ணை அகற்றி காவல் அரண்களை அமைத்தபோது, கோடரியாலும் வாளினாலும் மரங்களைத் தறித்து கூடாரங்களை அமைத்த பொழுது, கப்பியில் இருவர், மண் இழுக்கும் கயிற்றில் மூவர், கிணற்றுக்குள் இருவர் நின்று கிணறு தோண்டிய பொழுது, மண்ணில் குளித்திருந்தாலும் மகிழ்ந்திருப்போமே அந்தப் பொழுது. நடையாய் நடந்து முதுகொடியச் சுமந்தாலும் அதை விரும்பினோமே அந்தப் பொழுது. எள்ளானாலும் ஏழாய் பிரித்தோமல்லவா, அந்தப் பொழுதில் உன் தோழிகளோடு நீ சுதந்திரமாய் மிகக் குதூகலமாய் இருந்ததெல்லாம் இப்போது கோவைகளில் நிழற்படங்களாய், நெஞ்சங்களின் நினைவுப் படங்களாய்.

நித்திலா நீ வரமாட்டாயா? எத்தனை கனவுகளைச் சுமந்து கொண்டிருந்திருப்பாய்? எங்கள் பாசறைக்கு வந்து எங்களைக் காணப்போவதை எண்ணி எவ்வளவு களிப்படைந்திருப்பாய். சமூக அரசியல் வேலைகளில் உனக்கேற்பட்ட சிக்கல் எத்தனையை எம்மோடு விவாதிக்க எண்ணியிருப்பாய். அத்தனை கனவுகளும் தவிடுபொடியாக உன்னோடு கூடவே மேஜர் மாறன், மகேந்தி, கேசவன், சுமன், ரூபன், பொபி, சபா, அச்சுதன், அகிலன், விஜயன், தவம், லெப், அருள், முரளி எல்லோரும் பன்றிகெய்தகுளத்தில் வஞ்சகரோடு நடத்திய போரில் உடல்கள் சன்னங்களால் சல்லடையாக்கப்பட்டதை எண்ணும்போது இதயம் வெடித்துவிடாதா?

தாய்க்கு தலைமகளாய் பின் மூன்று தம்பியரைக் கொண்டிருந்தாய். அதில் இருவரை உன் பாதையில் தந்துவிட்டிருந்தாய். ஒவ்வொரு தமிழனும் தன் கடமையை உணரவேண்டும். வீட்டுக்கு ஒரு மகனை, மகளை விடுதலைக்காகத் தரவேண்டும் என்பாய். இறுதி மூச்சுவரை இலட்சிய தாகத்திற்காகவே உழைத்துக் களத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட இருபத்தி மூன்றாவது பெண்புலியான உன் வரலாற்றை யார் மறப்பார்கள்.


**மாலினி**





eelamhouse.com





## தம்பிக்கு நித்திலாவின் கடிதம்

25.02.1989

அன்பின் நவீனன் அறிவது.
நலம். உனது கடிதம் கிடைத்தது. உனக்குப் பயிற்சி முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இந்த வாழ்க்கை உனக்குப் புதிது. பல கஸ்டங்களைச் சந்தித்திருப்பாய். ஆனால் இவற்றைத் தாங்குகின்ற மனசக்தி இருந்தால்தான் உன்னால் உறுதியாகப் போராட முடியும். உனக்குப் பொறுப்பாகவுள்ளவர்கள் சொல்வதைக் கேட்டுநட. எல்லோரிடமும் அன்பாய்ப் பழகு. உனது எழுத்தை விளங்கக்கூடியதாய் எழுதினால் மட்டும் காணாது. வடிவாய் எழுதப்பழகு.

நான் பாமாவைச் சந்திக்கிறனான். மற்றவர்களைச் சந்திக்கவில்லை. உன்னைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது எனது காட்டு வாழ்க்கையின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். எனக்குக் கடிதம் எழுதிறதைத் தவிர்த்துக்கொள்.

நான் உன்னிடம் எதிர்பார்ப்பது நீ இயக்கம் விரும்புகிறமாதிரி உன்னை வளர்த்துக்கொள்வதையே.
நீ வீட்டைப்பற்றி ஒன்றுக்கும் யோசிக்காதே. மிகுதி சந்திக்கும் போது கதைப்போம்.

இப்படிக்கு
அன்புடன் நித்திலா.

eelamhouse.com

# எல்லையின் காவலர்கள்

எல்லையின் காவலர்கள்
எண்ணுவதெல்லாம்
தமிழீழமொன்றைத்தான்.
ஏங்கி அவர்கள்
கண் விழித்திருப்பதும்
பகைவன் கதை முடிக்க
குறி பார்த்திருப்பதும்
தலைவனவன் நினைவால்
உறுதி பெறுவதும்
காவலரண் சுவர்களுக்கும்
துவாரங்களுக்கும் நன்றாய்
புரிந்திருக்கும்.

எங்களோடிருந்து
எத்தனை உணர்வுகளை
இன்பமாய் சுமந்து.
நட[illegible] நடந்து தினம்
க[illegible]த்தபோதும்
இனி[illegible] கன[illegible]களைக்
கண்களிலே சுமந்து
காத்திருந்தவர்களும்,
விசைவில்லை இழுத்தபடி
உயிர் பிரிந்து போனவரும்,
எங்களுறுதிக்கு
உரமிட்டு நின்றவரும்
எல்லையின் காவலர்கள்.

பால் வடியும் முகங்களுடன்
பகைமுடிக்கக் காத்தவர்கள்.
வேர் நிறைந்த பாதைகளில்
விழுந்தடித்து நடப்பவர்கள்.
கால் வலித்த போதுமவர்
களைத்து நின்றதில்லை.
கட்டைகளால் காயங்கள்
காலில் வந்த போதுமவர்
தோளிலுள்ள பாரமென்றும்
இறங்கியதே இல்லை.
அவர்
எல்லையின் காவலர்கள்.

நீர் நிறைந்த நிலைகளிலே
சேறும் சகதியும்
சூழ்திருக்க நின்று அவர்
போர் புரிந்த நாட்களும்,
பார் புகழப் படை நடத்தி
வெற்றி கொண்டவேளைகளும்,
எல்லை நின்ற வீரர்களின்
எண்ணிறைந்த சாதனைகளே.

மேஜர் அமுதா





eelamhouse.com





| கப்டன் தமயந்தி |
| --- |
| கமலலோஜினி வைத்தியநாதன் |
| ஆத்திமோட்டை, மன்னார் |
| பிறப்பு - 15.02.1969 |
| வீரச்சாவு - 13.07.1991 |
| ஆ.க.வெ நடவடிக்கையின் |
| போது ஆனையிறவில் |

சட......சட...... என்ற துப்பாக்கி வேட்டொலிகளாலும் டும்....டுமாம்... என்ற குண்டுச் சத்தங்களாலும் மன்னார், அடம்பன் பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது.

அடம்பன் காட்டுப்பகுதியில் எமது அணியினருக்கும் சிறீலங்காப் படையினருக்கும் கடும் மோதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. லெப். கேணல் ராதா மன்னாரைப் பொறுபேற்ற இரண்டாம் நாளே இம்மோதல் நடந்தது. பெரிய மரமொன்றின் கீழ் நிலையெடுத்திருந்த தமயந்தியும் அவள்தோழியும் மெல்லிய குரலில் கதைக்கின்றனர்.



eelamhouse.com

# ஆதிமோட்டையிலிருந்து ஆனையிறவு வரை கடல் முத்தொன்றின் பயணம்

"தமயா, எத்தினை ரவுண்சடி வைச்சிருக்கிறாய்"

"பத்து ரவுண்ஸ்தான் வைச்சிருக்கிறன். சத்தம் போடாதை"

தமயந்தியின் முதற்களம் இது தான். முன்பின் போரனுபவமில்லாததால் எதை எடுப்பது எதை விடுவது என்று தெரியாமல் தன்னுடைய 303 துப்பாக்கிக்கான பத்து ரவைகளை மாத்திரமே வைத்துக் கொண்டு உற்சாகமாக சண்டையிட்டார். இம் மோதலில் புலிகள் சளைக்காது நின்று போரிட்டதால் இராணுவம் பாரிய இழப்புக்களுடன் பின்வாங்கியது.

எம் மண்ணில் சிறிலங்கா இராணுவத்தினர் அட்டூழியங்கள், ஆக்கிரமிப்புக்கள் செய்ய முன் செல்வம் கொழித்த இடமும் காலம்காலமாக பாரிய நெல் விளைச்சல் கண்டதும் பச்சைப்பசேல் என காட்சியளித்த இடமுமாகிய மன்னாரின் ஆத்திமோட்டையில் பிறந்தவர் தமயா. க.பொ.த(சா-த) வரை மன்னாரிலேயே படித்தவர்.

கமலலோஜி என்ற இயற்பெயரைக் கொண்ட தமயாவுக்கு ஒரு அக்காவும், மூன்று தங்கைகளும், மூன்று தம்பிகளும் இருக்கின்றனர். இவரது குடும்பம் இவர் போராட்டத்தில் இணைந்த காலத்தில் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து கொண்டிருந்தது. பயிற்சியில் மிகவும் கெட்டிக்காரியான இவருக்கு கயிறு ஏறுவதில் தனியான ஆர்வமும் திறமையும் உண்டு. "அண்டைக்கு நான் தான் முதலில் கயிறு ஏறுவது" என்று சொல்லிக் கொண்டு உற்சாகமாக ஏறுவார்.

1987 -இல் நாவற்குழியில் இந்திய இராணுவத்தளத்துக்கு வெளியே காவலில் நிற்கும் போது மக்கள் இவரைப் பார்த்து வியப்படைவர். ஏனென்றால் அவ்வளவு சிறியவராகத்தான் தமயா இருந்தார்.

கோட்டையில் காவல் நின்ற போது ஒருநாள் இராணுவத்தினரின் ரவையொன்று தமயாவின் தலையைத் தாக்கியது. சிகிச்சைக்காக இவர் இந்தியாவுக்குப் போனார். தலைக்காயம் ஆறியும் தலையிலுள்ள ரவையை எடுக்க முடியாதென வைத்தியர்கள் கூறியதால், இந்தியாவிலேயே நின்று காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் வேலையில் ஈடுபட்டார். 1989 வரை இந்தியாவிலேயே நின்று, அதன்பின் மணலாறுக்கு வந்தார்.

சிறிது காலம் காட்டிலே இருந்துவிட்டு மீண்டும் நாட்டுக்கு தமயாவின் அணி உட்பட மகளிர் படையணி வந்தன. இதன் பின் பாலாலியில் இராணுவ நடவடிக்கை தொடரப்பட்டபோது இவரது அணி கட்டுவன் பகுதியில் காவலில் நின்றது.



eelamhouse.com



ஒருநாள் அதிகாலையில் கட்டுவன் காவலரணை நோக்கி இராணுவத்தினர் ஆட்லறி தாக்குதலைத் தொடர்ச்சியாக மேற்கொண்டனர். தனது அணியினரைக் கவனமாக இருக்குமாறு எச்சரித்து விட்டு முன் சென்றி நிற்குமிடம் நோக்கி விரைந்தார். தமயாவின் துப்பாக்கி இராணுவத்தினர் நின்ற திசை நோக்கி இயங்கியது. தமயாவின் அணியினரும் தாக்கத் தொடங்கினர். கட்டுவனை நோக்கி முன்னேறிய இராணுவம் இழப்புகளுடன் பின்வாங்கியது. தமயாவின் அணியில் இரண்டு புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வவுனியாவின் பூவரசங்குளத் தாக்குதலில் தமயாவும் அவரின் அணியினரும் பங்கேற்கின்றனர். தமயாவின் உயிர்த் தோழிகளான கப்டன் அஞ்சனா, கப்டன் உசா ஆகிய இருவரின் இழப்புக்களும் அவரைப் பாதித்திருந்தாலும், அதை வெளிக்காட்டாமல் எல்லாப் போராளிகளோடும் அன்பாகப் பழகுவார். எல்லாப் போராளிகளுக்குமே தமயா என்றால் உயிர். "தமயாக்கா, தமயாக்கா", என்று உயிரை விடுவார்கள்.

ஆனையிறவைத் தாக்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடந்து கொண்டிருந்தன. தமயாவின் அணி தாக்குதல் அணியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பயிற்சிகள் நடந்து கொண்டிருந்தது. "வெற்றியோட திரும்பி வரவேணும் தமயா" தமயாவின் உயிர்த் தோழி சொல்லுகிறார்.

"நான் சாக மாட்டன். ஆனையிறவைப் பிடிச்சு இயக்கச்சி ரோட்டாலை என்ரை குறுாப்பைக் கூட்டிக் கொண்டு நடந்து வருவன். அப்ப பார்" என்று தோழிக்கு உறுதி கூறுகிறார் தமயா.

தனது துப்பாக்கியைத் துடைக்கும் போது "இந்த முறை மாத்திரம் தானே பழைய ரைபிள். ஆனையிறவில் பொயின்றை அடிச்சு நாலைஞ்சு ரைபிள் எடுப்பன். பிறகு ஒவ்வொரு சண்டைக்கும் ஒவ்வொரு ரைபிளை கொண்டு போவன்" என்று சொல்லிச் சொல்லித் துடைத்தார். பரந்தன் பக்கமாக நடைபெற்ற முதல் நாள் தாக்குதலில் கையில் காயமடைந்தார். மீண்டும் மூன்றாம் நாள் பரந்தன் பக்கம் புலிகள் தாக்கினார்கள். தாக்குதலுக்குப் போக முன்னர் புதுச்சீருடையை அணிந்து வோக்கி, ரோச் லைட் எல்லாவற்றையும் கொழுவிக் கொண்டு "சாகிற நேரம் நீற்றாகச் சாகவேணும்" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

தாக்குதலை ஆரம்பிக்குமாறு வோக்கியில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து எமது பகுதியினர் தாக்குதலை ஆரம்பித்தனர். தமயாவுக்குக் காட்டப்பட்ட எதிரியின் காவலரணிலிருந்து 50 கலிபர் துப்பாக்கியால் இராணுவத்தினர் சுட்டுக் கொண்டிருந்தனர். தமயா தாக்க வேண்டிய காவலரணுக்கு முன்னால் இராணுவத்தினர் பாதுகாப்புக்காக மண்மேடு அமைத்திருந்தனர்.

"மண்மேட்டை நெருங்க வேண்டாம்" என்று தமயாவுக்கு தொடர்ந்து வோக்கியில் சொல்லப் பட்டுக் கொண்டிருந்தாலும், காவலரணை அழிக்க வேண்டும் என்ற வேகத்தில் மண்மேட்டை நோக்கி முன்னேறினார். அவருடன் அவரின் அணியில் உள்ள மேலும் இரு போராளிகளும் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

தமயா மண்மேட்டின் மேலேறி காவலரணுள் புக முயற்சிக்கையில், இராணுவத்தினரின் சரமாரியான ரவைத் தாக்குதலால் மண்மேட்டிலேயே குப்புற விழுந்தார். அவருடன் சென்ற இருவரும் தமயா மாதிரியே மண்மேட்டிலேயே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

எங்களால் தமயாவையோ அவளுடன் சென்ற போராளிகளையோ தூக்கிவர முடியவில்லை. காரணம் தமயாவின் உடலுக்கும் காவலரணுக்குமிடையே 10 யார் தான் இடைவெளி சாவில்கூட தமயா தன் ரி81 ஐப் பிரியவில்லை. அதை அணைத்தபடி குப்புறக்கிடந்தார்.

eelamhouse.com

எந்நேரமும் சிரித்தபடியே இருக்கும் தமயாவின் முகத்தையும்...... ஆனையிறவு மோதலுக்கான பயிற்சி நடந்து கொண்டிருந்தபோது எல்லோரும் மேடையில் ஏறி நிகழ்ச்சிகள் செய்ய வேண்டும் என்று மகளிர் படையணியின் சிறப்புத்தளபதி சொல்லிவிட்டார். மின்சார வசதி இல்லாததால் சிறப்புத்தளபதியின் ஊர்தி வெளிச்சத்தில் நிகழ்ச்சிகள் நடந்தன. தமயாவுக்கு மேடையில் ஏறுவது என்றால் கூச்சம். நிகழ்ச்சிகள் செய்து முடிந்து விட்டது என்று நினைத்து யாரோ வெளிச்சத்தை அணைக்க, அந்த நேரம் கப்டன் லக்சியும், தமயாவும் மேடையில் "சின்னப்பாப்பா, எங்கள் செல்லப் பாப்பா" என்று பாடிப்பாடி ஜின்ஸை தூக்கிப்பிடித்தவாறு சிறு குழந்தைகள் போல் ஆடியதையும்.... யார் கமராவுடன் வந்தாலும் தன்னையும் படம் பிடிக்குமாறு கேட்டு ஓடி ஓடி விதம் விதமாக நிறையப் படங்கள் எடுத்து வைத்ததையும்.... ஆனையிறவு சண்டைக்கெனப் புறப்படும் போது மீரா, ரதி ராதா மூன்று பேரும் தன்னை விட்டு விட்டுத் தாங்கள் மட்டும் சேர்ந்து சாப்பிட்டு விட்டார் என்று சிறு பிள்ளை போல் கோவித்ததையும்.... உயிருள்ளவரையில் மறக்க முடியாது.

சித்திரா





eelamhouse.com

## இனியென்ன தமிழீழம் இன்றே எமதாகும்

ஏருழுது மண்ணெல்லாம்
போருழுது
வேரறுந்து போச்சு.
நீரூற்ற இழுத்த வரம்பெல்லாம்
குருதிப் பேராறு பாய்கிறது.
நெல் விளைந்த பூமியெல்லாம்
இன்று இரும்புக் கல் விளையும்
காடாச்சு.
பொன் சிதறும்
பூமி இதில் இப்போ
மனித
மெய் சிதறிப் போகிறது.
கல்விப் பயிர் விதைத்து
அறிவுக் கதிரறுக்கும்
காலம் போய்,
குப்பி விளக்கடியில்
குனிந்திருக்கும் நிலையாச்சு.
மெய் மறந்து
திரிந்த காலம் போய்
என்ன கொடுமையென
எழும்புகின்ற நேரமாச்சு -
போர்க் கொடிகள் தானுயர
போர்க் களங்கள் காணுகின்றார்
பொதுமக்கள் எல்லோரும்.
இனியென்ன தமிழீழம்
இன்றே எமதாகும்.

மேஜர் அமுதா

## வெற்றி உமக்கல்ல எமக்கே

வந்துபார் - பகையே
வந்து பார் - வந்து
வென்று பார் - பகையே வென்று பார்
அடிக்க நினைத்தாய் - எம்மை
பிடிக்க நினைத்தாய் -
பிடித்தொடுக்க நினைத்தாய் -
கொன்று குவிக்க நினைத்தாய்-
பிடித்தாய்-
எம்மையா பிடித்தாய்- எம்
மக்களைப் பிடித்தாய்-
புலியென்று அடித்தாய்-
குருதியைக் குடித்தாய்-
கொன்று குவித்தாய்-
எம்மினத்தையே அழிக்கப்
படை கொண்டு வந்தாய்
ஜெயசிக்குறுவென்றாய் - அது
உனக்கல்ல எமக்கென்று
இப்போ உணர்ந்திருப்பாய் -
தாண்டிக்குளத்தைப் போல்
எம் அடிகள் பல உனக்கு
இடியாய் விழுந்திருக்கும்.
மறக்க முடியாத
யாத்திரையின் முத்திரையாய்
ஏட்டில் குறித்திருப்பாய்.
உன் தொலை யாத்திரையின்
ஓராண்டு பூர்த்திக்கு
நாங்கள் விழா எடுத்தோம்.
பட்டாசும் கொழுத்தினோம்.
உன் வரவிற்காய்
காத்திருந்தோம்.
வரவில்லை.
வந்திருந்தால்
நல்லவிருந்து தந்திருப்போம்.
இதையும் ஏட்டில் நீ
குறித்திருப்பாய்.



eelamhouse.com





eelamhouse.com

| |
|---|
| கப்டன் தேனுயா/பூங்கொடி |
| மதனிகா சிவலிங்கம் |
| உடுப்பிட்டி, யாழ்ப்பாணம் |
| பிறப்பு - 12.03.1971 |
| வீரச்சாவு - 14.07.1992 |
| கறுக்காய், ஆனையிறவில் வேவு |
| நடவடிக்கைக்காகப் போனபோது |
| ஏற்பட்ட நேரடி மோதலில் |



# வேகப்புயல்

**14.07.1992** பௌர்ணமி முழுநிலவு. கறுக்காய்வெட்டையில் நிலை கொண்டிருந்த எமது போராளிகளின் இதயங்களிலோ வேதனைப் பெருநெருப்பு பற்றியிருந்தது.

"தேனுஜா வருவாள்" என்று நம்பிக்கையைச் சுமந்தபடி இன்னும் அவர்கள் விழிகளை வழியிற் பதிந்தபடி காத்திருந்தனர்.

காலை 10.00 மணிபோல் இராணுவத்தின் நிலைகளை வேவு பார்க்கச் சென்றிருந்தார் தேனுஜா. போய் ஒரு மணித்தியாலந்தான் கழிந்திருக்கும். அண்மையில் திடீரென கேட்ட குண்டு வெடிப்புச் சத்தம் எல்லோரையும் ஒரு கணம் உலுக்கி விடுகிறது.

"தேனுஜாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ" எல்லார் மனங்களிலும் ஏக்கம். தேனுஜாவைத்தவிர வேறு யாரும் அத்திசையில் செல்லவில்லையே. இப்படித்தானே பலநாட்கள் கடந்தன.

இது இன்னொரு பக்க மனம்.

எதிரியின் பதுங்குகுழிகளுக்குள் நின்றுகொண்டே எதிரியைத் தேடுகின்ற துணிவும் பொறி வைத்துக் காத்துக் கிடக்கிற எதிரியின் கண்களை ஏமாற்றி விட்டு தப்பி வருகின்ற திடசித்தமும் தேனுஜாவுடன் கூடப்பிறந்த திறமைகளாயிற்றே. எப்படியும் தேனுஜா வருவார். விழிகள் பாதையை இறுகக் கவ்வியிருந்தன. இப்படித்தான் அன்றும் ஒரு நாள் தான் அவதானித்த எதிரியின் நிலைகளைக் காட்டுவதற்காக தளபதிகளைக் கூட்டிச் சென்றார். பாதையில் ஓரிடத்தில் அவர்களை நிறுத்தி விட்டு முன்னே சென்று மீண்டும் நிலைமையைப் பார்த்துவர எண்ணினார். அங்கே எதிரி ஒருவன் தன்னை உருமறைத்தபடி நிழல் ஒன்றில் நின்றிருந்தான். இவரை எமது தோழர்கள் என நினைத்தவர் "யார் அண்ணாவா" என வினாவுகிறார்.

ஒரு கணம் தான் நிலைமையை புரிந்து கொண்டார். எதிரியின் துப்பாக்கி இயங்குகின்றது. வேவு

eelamhouse.com

பார்ப்பதற்காக துப்பாக்கியை வைத்துவிட்டுக் கைக் குண்டுடன் சென்ற தேனுஜா சிறிதும் பதறவில்லை. சிரித்தபடியே எம்மிடம் ஓடி வந்தார்.

"ஆமியை நான் எங்கடை அண்ணாக்கள் எண்டெல்லே நினைச்சுப்போட்டன்" என்று கூறிச் சிரித்த தேனுஜா மீண்டும் வருவார். "நேரம் நடுநிசியையும் தாண்டிக் கொண்டிருக்கிறது. தேனுஜாவை இன்னும் காணோமே.

சருகுகள் மிதிபடும் ஓசை... எல்லார் இதயங்களிலும் நம்பிக்கையின் துளிர்ப்பு.

"தேனுஜா.... தேனுஜா...."

வோக்கியில் எங்கள் நம்பிக்கைகளை எல்லாம் ஒன்றாக்கிக் கூப்பிடுகிறோம்.

"தேனுஜா, நாங்கள் கிட்டத்தான் நிக்கிறம். வாங்கோ"

சருகுகளின் ஓசையில் ஒரு கணம் துளிர்த்த நம்பிக்கை மீண்டும் தவிடு பொடியாகின்றது. தேனுஜாவை நாங்கள் இழந்து விட்டோம். கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல் எல்லோருடைய முகங்களும் ஒரு கணம் மண் நோக்கி கவிழ்ந்தன. எப்பொழுதும் அன்பு குழைந்த முகத்துடன் எல்லோருடனும் எந்தவிதப்பேதமுமின்றி பழகுகின்ற மதனி சாகவில்லை? என்று அவரை நேசித்த அவரின் கிராம மக்கள் இன்னும் உறுதியாகக் கூறிக்கொள்கிறார்கள்.

இதுதான் எங்களுடைய விடுதலைப் போராட்டம். ஒவ்வொரு போராளியும் தனது வாழ்விலும் சாவிலும் இந்தத் தேசத்தின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து போயிருக்கிறார்கள்.

அழ மறந்து போய் மதனியின் போராட்ட வாழ்வை நினைவு கூருகின்றனர் அவரின் பெற்றோர், சகோதரிகள்.

இவருக்கு யாரையும் கோபிக்கத் தெரியாது. அதே நேரம் சிக்கல்களைக் கண்டு ஒதுங்கிப் போகின்ற இயல்பும் இல்லை.

இந்திய இராணுவம் எம் மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்திலே மாணவியாக இருந்து கொண்டே துணிந்து தன்னுடைய பங்களிப்பைச் செய்தார். அக்காலத்தில் இந்திய இராணுவ வெறித் தனத்திற்கெதிராக நடைபெற்ற ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், மறியற்போராட்டங்கள் எதிலும் மதனியைக் காணலாம். வடமராட்சி மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இவர், மாணவர்கள் இந்திய இராணுவத்தால் வெறித்தனமாக தாக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் எதிரியின் பாசறை தேடிச் சென்று நியாயம் கேட்டவர். எந்த நேரத்திலும் தன் உயிருக்கு இதனால் அழிவு ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும்பொழுது தேனுஜா தெளிவான முற்போக்கான கருத்துக்களை கொண்டிருந் தார். பெண்களால் எதையும் சாதிக்கமுடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவர். தனது பாடசாலைப் பராயத்திலே வாழ்க்கைத் துணைவனாக அவரால் நேசிக்கப்பட்டவன் இவரின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக்கொள்ளமுடியாது தோற்றுப்போனான். தேனுஜாவோ ஒவ் வொரு முறையும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர்கொண்டு புதிதாய்ப் பிறந்தார்.

உண்மையில் அன்பு என்பதன் உன்னத அகராதியாக இவர் திகழ்ந்தார். துள்ளித்திரிகின்ற



eelamhouse.com

நடையும் எதையும் கலகலப்பாக மட்டுமே பேசத் தெரிந்த தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாச பிணைப்பையல்லவா ஏற்படுத்தியது.

இவர் காயப்பட்டிருந்த நேரம் "ஏன் மதனி இனியாவது வீட்டில் நிற்கலாம்தானே" என் பழகியவர்கள் கேட்ட நேரம்மட்டும்தான், இவரது முகத்திலே கோபத்தை கண்டதாகக் கூறுகிறார்கள்



தேனுஜா மகளிர் படையணியின் வரலாற்றில் ஓர் புதிய திருப்புமுனை. 1989ம் ஆண்டு ஆறாவ பயிற்சி பாசறையிலே தனது பயிற்சியை முடித்துக் கொண்ட இவர் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலு புதிய முத்திரை பொறிப்பார். அருள் 89 எனப்படும் துப்பாக்கி எறிகணையைச் செலுத்துவதி சிறந்தவர்.

தனது பயிற்சியை முடித்துக் கொண்ட காலத்திலிருந்து, இவர் இல்லாமல் எந்தச் சண்டையு நடந்தது இல்லை. இவரைச் சண்டைக்குச் செல்லவிடாது யாராலும் தடுக்கவும் முடியாதிருந்தது.

தேனுஜாவின் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே ஒரு தனி வரலாறு. எந்தக் களத்திலு இவர் தனது தனியான முத்திரையை பதிக்காது வரவில்லை.

பலாலி சிறீலங்கா படைத்தளத்தைச் சுற்றி மகளிர் படையணி எல்லையிட்டு நின்ற போ தேனுஜாவின் கால்கள் எப்போதும் எதிரியின் தளத்தைச் சுற்றிச் சுற்றி நடந்த அனைத்தையும் ஒன்று விடாது அவர் விழிகள் அவதானித்தன. அப்பொழுது இராணுவப் பகுதியில் இருந்து கைக்குண் 40மி.மீ எறிகணை போன்றவற்றை எடுத்து வந்தார். இதைத் தொடர்ந்து கட்டுவனில் ஏற்பட்ட மோதலி தேனுஜா காயமடைந்தார். ஆனால் எந்தக் காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கிவி வில்லை. வீறுகொண்டெழவே வைத்தன.

சிலாவத்துறை சிங்களப்படைத்தளத்தின் மீதான தாக்குதலில் இவரது போர்த்திறனைப் பற் எப்பொழுதும் எமது தோழிகள் பெருமையுடன் நினைவு கூருவார்கள். சிலாவத்துறை படைத்தள தாக்குதலின் முதல் கட்டமாக சிலாவத்துறை சிறுதளம் கடுமையான மோதலின் பின் எம்மால் வெற் கொள்ளப்பட்டது. அடுத்த கட்டமாக பெருந்தளத்தை கைப்பற்றும் முயற்சி நடைபெற்றது. தேனுஜ குழுவினர் வானிலிருந்து வரும் குண்டு மழையையோ, எறிகணை வீச்சையோ பொருட்படுத்தா பாய்ந்தோடி தளத்தின் ஒரு பகுதிக்குள் நுழைந்து விட்டனர். எவரின் உதவியையுமே பெற்றுக்கொள் முடியாத நிலையில் நீண்ட நேரமாகத் தேனுஜாவின் குழுவினர் அந்த இடத்தில் நின்றவாற இராணுவத்தினருக்குத் தரை மார்க்கமாகவோ, கடல் மார்கமாகவோ உதவி கிடைக்காதவாறு தன செய்து கொண்டிருந்தனர். தேனுஜா தனது அருள் 89 எறிகணைகளை ஒவ்வொன்றாகச் செலுத் எதிரியின் வேகத்தை அடக்கிக்கொண்டிருந்தார்.

இந்நேரம் இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் வானிலிருந்து விமான மூலம் ரவை பொதிகள் போடப்பட்டுக் கொண்டிருந்தன. இராணுவ நிலைக்கு அண்மையில் விழுந்த ரவை பொதிகள் இரண்டை தனியாக ஊர்ந்து சென்று இழுத்து வந்தார் தேனுஜா. சாதாரணமாக குழ தையாய்க் குதூகலித்து நிற்கும் தேனுஜாவைக் களத்திலே கண்டால், யாரும் நம்பமாட்டார்கள் அந்தளவு தூரத்திற்கு சினங்கொண்ட வேங்கையாய் கிளர்ந்தெழுந்து நிற்பார்.

சிலாபத்துறை தளத்தைத் தகர்க்காது பின் வாங்கமாட்டேன் என்ற அவரது வேகம் வீரச்சாவை தழுவும் வரை சிறிதும் தணியவில்லை. சிலாவத்துறை தாக்குதல் தேனுஜாவை ஒரு சிறந்த போர ளியாக, வீராங்கனையாக இந்த உலகிற்கு வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் இவர் கையிே

eelamhouse.com

காயமடைந்தார்.

1991இல் ஆனையிறவு ஆ.க.வெ சமரின் போதும் இவர் தன்னுடைய முழுத்திறமைகளையும் வெளிக்காட்டியிருந்தார். எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதுவதிலிருந்து, களத்தில் காயப்பட்ட வீரர்களை விரைவாக இடம் மாற்றுவது, களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்கு தேவையான வெடிபொருட்களை, உணவு, நீர் போன்றவற்றை வழங்குவது என்று எல்லா முனைகளிலும் வேகமுடன் செயற்பட்டார். தொடர்ந்து மணலாற்றில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போதும் தேனுஜாவின் பங்களிப்பு மறக்க முடியாதது. அடர்ந்த காட்டுக்குள் தளம்பாத உறுதியுடனும் வீரத்துடனும் நின்று போராடினார். இந்தச் சண்டையின்போது அவரது வயிற்றில் பெரிய காயமேற்பட்டது.

இவரது ஆற்றலும் வீரமும் துணிவும் மகளிர் படையணிக்கென்றொரு தனித்த சிறப்பு வேவுப் பிரிவை உருவாக்குகின்ற அளவுக்கு வளர்த்துச் சென்றன. வேவுப் பிரிவின் பொறுப்பை ஏற்ற தேனுஜா இரவு, பகல் பாராது உழைத்தார்.

எப்படியேனும் மகளிர் படையணி தானே முழுமையான போர்த்திட்டங்களையும் சிங்களப் படைக் களமொன்றைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற இலட்சியக் கனவை இதயத்துட் தேக்கி வைத்தவர்,





eelamhouse.com

அதனைச் செயலுருவில் கொண்டுவர வேண்டும் என்று துடித்தார். இயக்கச்சியைப் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பலவேகய-02 நடவடிக்கையின்போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவரின் திறமையை வியந்தனர்.

"நாங்கள் எந்த இடத்திற்கு போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா. எப்படி இவவால இப்படி நடக்க முடிகிறது? இதுவரை இங்கேயே நிண்ட எங்களுக்குக்கூட தெரியாத இடமெல்லாம் இந்தப் பிள்ளைக் குத் தெரிந்திருக்குது" என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில் வல்லவராகிய இவர், இந்தச் சண்டையின் போது எல்லோருக்கும் வழிகாட்டியா நின்றார். நாம் எல்லோரும் எதிரி எங்கே எங்கே என்று அவன் வரவைத் தேடி நிற்க, இவரோ எதிரியின் பக்கத்தில் நின்றுகொண்டே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஒரு முறை வேவு பார்க்கப் போனவர் திடீரென்று நடைபேசியில் அறிவிக்கிறார் "ஆர்.பி.ஜியோடை உடனே வாங்கோ" என்று. மறுகணம் "வேண்டாம் நானே நேரில் வருகின்றேன்" என்று அறிவித்தார். எங்களுக்கு விளங்கவில்லை. நேரில் வந்தபோது தேனுஜா சொன்னார்.

ஜெயா

"அக்கா, எங்கடை இடத்திலை எதிரி வந்து குசாலாகத் திரியிறதைப் பார்த்தவுடன் எனக்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது. கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். பிறகுதான் நான் போன வேலையை யோசிச்சன். எனது தவறு விளங்கிச்சு. அது தான் அப்படி அறிவிச்சனான்" என்றார்.

எங்கள் மண்ணில் எதிரியின் பாதப் பதிவு கூட இருக்கக் கூடாது என்பதற்காக நிதானத்துடன் திட்டங்களை வரைந்து கொண்டிருந்தவர் இந்த வேங்கை. இதனால்தான் தனது ஆத்திரத்தை அடக் கிக்கொண்டார்.

இன்னொரு நாள் வேவு பார்க்கப் போனவர் வந்து சொன்னார்
"அக்கா அந்தப் பொயின்ரில இரண்டு டொங்கான் இருக்கு. எப்படியும் நான்தான் அதை அடித்து எடுப்பன். இரண்டு டொங்கான்களையும் எடுத்து அண்ணாட்டை கொடுத்து, எங்களுக்கு எம் 203 ஒன்று வாங்குவன்" என்றாள்.

ஆயிரம் கற்பனைகளைத் தனது இதயத்திற் தேக்கி தேனுஜா செயற்பட்டார். சண்டை தொடங்கிய நாளிலிருந்து தன்னை அவர் பொருட்படுத்தியது கிடையாது. பதினைந்து நாளாக குளிக்கக்கூட இல்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவரது முழுக்கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது.
"எப்படியும் இவங்களை அடிச்சுத் துரத்திப் போட்டுத் தான் நான் குளிப்பன்" என்று கூறிக்கொண்டே வேகங்கொண்டெழுந்தார்.

தமிழீழத் தாயகத்தை மட்டுமே தன் நெஞ்சில் தேக்கி வளர்த்த தேனுஜா தன் இலக்கை நோக்கிய பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். எல்லோர் இதயங்களிலும் இலட்சியக் கனவை வளர்த்து, எமக்கு வழிகாட்டிச் சென்று விட்டார்.

ஈழக்கனவைச் சுமந்தவர் நினைவுகள் இன்றும் எங்கள் இதயங்களில் ஈரமாக உள்ளது. அவர் பாதச் சுவடுகளில் எங்கள் பாதச் சுவடுகளை இன்னும் ஆழமாகப் பதிக்கிறோம்.

விடியலைக் காணும் வரை இந்த வேங்கைகளின் பயணம் ஓயாது.

eelamhouse.com



# என் அம்மா



## கவிதை எழுதிய மாவீரர்

| லெப்.சூரியா |
| --- |
| வத்சலா பெரியசாமி |
| கிளிநொச்சி |
| பிறப்பு - 06.03.1979 |
| வீரச்சாவு - 07.06.1998 |
| ஜெயசிக்குறு எதிர் |
| நடவடிக்கையின் போது |
| அம்பகாமத்தில் |

என் உயிர் உருவாக
உறைவிடம் கொடுத்தவளே.
நின் சுகம் மறந்து - என்னை
உறங்க வைத்தவளே - என்னை
இவ்வுலகில் உயர்த்தி வைக்க
ஓடாய்த் தேய்ந்தவளே.

அம்மா,
உறவினை மறந்து,
உதயம் காணவென
உணர்வினை மதித்து
உன்னத தலைவன் வழியில்
உன் மகள் நான்
உவப்புடன் செல்கிறேன்.

தாயே,
மறக்குல வழிவந்த
வீரத் தாயே, உன் முகம் காண
ஒருநாள் வருவேன்.
அந் நாள்
வரும் வரை
தாயே நீ
பொறுமையாக இரு.

அன்புருவே,
அண்ணன் உருவாக்கிய
அற்புத வரலாற்றில்
அன்னையே உன் மகள்
நானும் ஒருத்தி
என்று பெருமை கொள்.

நாளை
நிச்சயம்
அன்று நீ
விதியால்
தலைநிமிர்ந்து
நடந்து வா.



eelamhouse.com



# புதுவீரம்

கொட்டும் மழையிலும்
கொடிய காற்றுப் புயலிலும்
சொட்ட நனைந்த உடல்
சோர்வடைந்து போகாது.
நட்ட நடு நிசியில்
நாயகர்கள் இன்று - எல்லைக்
காவலரணில் கண்விழித்து
காவல் இருக்கின்றனர்
கயவனை எதிர்நோக்கி.

அடர்ந்த காட்டினுள்ளும்
அனல் வீசும் கண்களில்
கூர்மையைத் தேக்கி
குனிந்து தேடுவார்.

கூடிக் குதூகலித்து
கொஞ்சி மகிழ்ந்த
அன்னையை மறந்து,
அன்புத் தலைவனை - தம்
நெஞ்சத்தில் நினைப்பார்.

ஆம் - இன்று
எதிரியின் கூவிவரும்
எறிகணை கூட
எம்மவருக்குச்
சங்கீதமாக ஒலிக்க,
சகஜமாகி விட்டது.

நட்டநடு வெட்டையில்
எரிக்கும் மே மாத வெய்யிலில்
மூளை உருக
நிலைகளை அமைக்க,
நிம்மதி தேட,
எதிரியை அழித்து
எம்மினத்தைக் காக்க
மகிழ்வுடன் வேலைகளை
மனமுவந்து செய்வர்.

அன்றாடம் எதிரியின்
எறிகணைகள்
கூவிவந்து - எம் நிலைகளை
குறிவைத்து தாக்கினாலும்
வாழையடி வாழையாக
விழ விழ எழுவார்கள்
வெற்றி வாகை சூடிடுவீர்.

அழகொளிரும் ஈழமண்ணில்
அருவியாக இரத்தம் ஓடினாலும்
குளமாக
குருதி தேங்கினாலும்
எம் புலிகள்
மயங்கி விழமாட்டார்கள்.
மாறாக - குருதிக் குளத்தில்
மூழ்கி எழுவார்கள்
புத்தெழுச்சி பெறுவார்கள்
புது வீரம் பெற்று விடுவர்.
போர் முரசு
பேரோசையுடன்
முழங்கும்.

வீர ஓசை ஊரெங்கும்
எதிரொலிக்கும்.
புலிவீரம் பேச
புலிக் கொடி
பட்டொளி வீசி
வானளாவப் பறக்கும்.

சூரியா

eelamhouse.com



2ம்லெப்.விழி

நிமலேஸ்வரி சங்கரப்பிள்ளை

ஏழாலை, யாழ்ப்பாணம்

பிறப்பு - 20.09.1965

வீரச்சாவு - 03.09.1992

கைதடியில் ஏற்பட்ட

விபத்தில்

# ஓயாத புலி ஒன்று

“இன்றைக்கு என்னை அக்கா வரச்சொன்னவ. எனக்கு தந்த வேலையை முடிக்காமல் எப்படி அவவுக்கு முன்னால போறது இன்றைக்கு எப்படியும் இந்த வேலையை முடிச்சிட்டுத்தான் அவவின்ர முகத்தில முழிக்கிறது”

இப்படிச் சொன்ன, சொன்னதைச் செய்து காட்டிக்கொண்டிருந்த விழிதான். அந்த வேலை நேரத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் இன்று நிரந்தரமாக விழி மூடிக்கிடக்கிறார். விழி சாவடைந்து விட்டார் என்பதைக் கேட்ட நவபுரம் கிராமத்தில்தான் எத்தனை சோகம் தம்முடைய உடன் பிறந்த வளையே இழந்ததுபோல் கதறித் துடித்தனர். எல்லோரும். “நீ இரவு கூடநித்திரை கொள்ள வில்லையே” என்று தலையில் அடித்துப் புலம்பி அழுதார் ஒரு தாய்.

உண்மைதான். விழியிடம் ஒரு வேலையைக் கொடுத்துவிட்டால் அவர் தன் பசி, தாகம் உறக்கம் அனைத்தையும் மறந்து பம்பரமாக வேலை செய்வார். தன்னுடைய வேலையில் அதீத கவனமும், விசுவாசமும் உடையவர்.

இவர் எமது அமைப்பின் முழு நேர உறுப்பினராக இணைந்துகொள்வதற்காக எனது பாசறைக்கு வந்த அன்றைய பொழுதை நினைத்துப் பார்க்கிறேன். புதிய உறுப்பினராக வந்தவர் என்றதும், இவரிடம் எமது போராளிகள் படுகின்ற துன்ப துயரங்களை சிரமங்களை விளக்கினேன். பந்த பாசங்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கூறினேன். காயமுறும் வேளையில் மருத்துவ வசதியில்லாமலே பலமணி நேரம் இருக்கவேண்டி வரும் என்றபோதும் மெல்லிய புன்னகை உதட்டிலே ஓடக் கேட்டுக்கொண்டிருந்தவர், “இவற்றை ஆழமாக யோசித்துத்தான் நீர் இயக்கத்தில் இணைய வேண்டும்” என்று நான் முடிப்பதற்கு இடையில், “என்னால் முடியும்” என அழுத்தமான


eelamhouse.com

குரலில் இடைவெட்டினார்.

அவருடைய பெயர், விபரங்களை எடுக்கும்போது "நான்.... நிமலேஸ்" என்றார். அந்தத் தொனி எதனையோ தொக்கி நிற்க, ஆச்சரியமாக நிமிர்ந்து பார்த்தேன். "ஏழாலை நிமலேஸ்வரியா நீர்" எனது ஐயம் கேள்வியாகின்றது.

1984-1985ம் ஆண்டு காலப்பகுதியிலே தமிழீழ விடுதலைப் புலிகளின் சுதந்திரப் பறவைகள் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் பொறுப்பாளராக இருந்தவர். காலப்போக்கில் இவரின் விடாமுயற்சியினால் அந்நிலைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிக மாகியது. விமானக் குண்டு வீச்சுக்களும், எறிகணை வீச்சுக்களுக்கும் இடையில் புகுந்து சென்று காவலரணில் எமது போராளிகளின் காயங்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பவர். எந்த நேரத்திலும், எந்தக் கட்டத்திலும் எமது போராளிகளுக்கு உணவு கிடைக்கவேண்டும் என்பதில் அக்கறையாகச் செயற்பட்டவர்.

இறுதியில் 1987இல் இராணுவப் பயிற்சி பெறுவதற்காகப் பாசறை வந்தவர். அவ்வேளையில் புதிதாகப் பயிற்சிக்கென வந்த எழுபத்தைந்து பேருக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். அக்காலகட்டத்திலும், தனது பாசறையில் இருந்து போராளிகளின் நிலைக்கு உணவுசமைத்துக் கொடுப்பார்.

1987ல் தமிழீழப் பகுதியில் இந்திய ஆக்கிரமிப்பின் போது பயிற்சி பெறமுடியாத சூழ்நிலையில் வீடுதிரும்பியவர். தனது உயிராபத்தையும் பொருட்படுத்தாது. தலைமறைவாக இருந்து கரந்தடி யுத்தத்தை நிகழ்த்திய எமது போராளிகளுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்தார். இன்று இவர் மீண்டும் பயிற்சிக்கென பாசறை தேடி வந்துள்ளார்.

இவரின் உற்சாகமான வேலைத்திறன் பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்ததும் இன்று தான் நேரில் பார்க்கிறேன். 'விழி' என்ற பெயர் வைக்கப்பட்டதும் 'நல்ல தமிழ்ப் பெயர்' என்றுகூறி, அன்று முழுவதுமே தனக்குள் அந்தப் பெயரை அடிக்கடி சொல்லிப் பார்த்தார். எங்கள் எல்லோருக்குமே இது சிரிப்பாக இருந்தது. ஏனோ அந்தப் பெயர் அவருக்கு மிகவும் பிடித்துப்போயிற்று.

கைதடியில் முன்னர் 'எருதிடல்' என்றும் பின்னர் 'நவபுரம்' என்றும் பெயர்மாற்றம் பெற்ற ஒரு கிராமம். இக்கிராமத்தின் பெயர்தான் மாறியதே தவிர, இங்கிருந்த மக்களின் வாழ்க்கை நிலை மாறவில்லை. இங்கு தான் இவர் கிராமவேலை செய்வதற்காக நியமிக்கப்பட்டார்.

நடக்கவே முடியாமல் கற்பாறையாக இருந்த அந்தக்கிராமத்து வீதியை செப்பனிட்டு, தார் ஊற்றிச் சிறந்த போக்குவரத்துப் பாதையாக்கினார். ஆரம்ப சுகாதார நிலையம். தையற் பயிற்சி நிலையம், பாலர் பாடசாலை என்பவற்றை உருவாக்கினார். முதலுதவிப் பயிற்சி நெறியை நடத்தி முடித்தார். பன்னவேலைப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார். மாதர் சங்கத்தினை ஒழுங்கமைத்தார். சில நோய்கள் ஏற்படும்போது மூட நம்பிக்கைக்கு ஆட்படாமல் எவ்வாறு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக, சுகாதார அதிகாரிகளின் துணையுடன் பல கருத்தரங்குகளை நடத்தினார். கோழிப் பண்ணைக்கு அத்திவாரமிட்டார். சிறுவர் பூங்கா, சிறுவர் நூலகம் என்பவற்றை அமைத்துக்கொண்டிருக்கும் வேலையின்போது தான் வாகன விபத்தில் சாவினைத் தழுவிக்கொண்டார்.

இதனைவிடப் பல புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கி இம்மக்களுக்கு வேலை வாய்ப்புக்

eelamhouse.com



கொடுக்க வேண்டும், விளையாட்டுக் கழகமொன்றை நல்ல நிலையில் உருவாக்கித்தேசிய மட்டத்தில் விளையாடக் கூடிய தகுதிக்கு இம்மக்களை வளர்க்க வேண்டும், கல்வி வளர்ச்சிக்கழகம், முதியோர் கல்வி நிலையம் - இதை உருவாக்கி எல்லோருமே கல்வியைப்பெறும் வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற வெறியோடு செயற்பட்டவர் இன்று எம்மோடு இல்லை.

மொத்தத்தில் விழி அக்கிராம மக்களோடு இரண்டறக் கலந்திருந்தார். நவபுரம் என்ற பெயருடன் உள்ள இக்கிராமம் 'மாலதிபுரம்' என்ற எழுச்சிக் கிராமமாகப் பரிணமிக்க வேண்டும் என்றும், இங்குள்ள மக்கள் ஏனைய மக்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்றும் கனவு கண்டவர் இவர்.

பல தடவைகள் எதையோ கேட்க நினைத்தும் கேட்காமலே இருக்கின்ற இவரது தோற்றத்தைக் கண்டு, "என்ன விழி" என்றபோது இவர் கூறிய பதில் இன்னும் என் காதில் ஒலிக்கின்றது.

"பயிற்சிக்கு எப்ப போறது என்று கேட்க நினைத்தன் அக்கா. இந்த மக்களுக்கு ஒரு நல்ல வழியைக்காட்டி, அவர்களை முன்னேற்றிவிட்டுத்தான் பயிற்சிக்குப் போக வேணும் என்று விளங்குது". ஆனா பயிற்சி எடுத்து சில இராணுவத்தினரை என்றாலும் அழித்துவிட்டுத்தான் வீரச்சாவடைய வேணும் என்ற விழி தன்னுடைய கனவு நிறைவேறுதற்கு முன் சாவைச் சந்தித்துக் கொண்டார். ஆனால் இவர் எமது மனதிலே மட்டுமல்ல, தான் வேலை செய்த மக்கள் மனதிலும் நிரந்தரமாக நிறைந்து போனார். இவரின் ஏக்கங்களை, ஆசைகளை எம்முன் வாங்கிக் கனத்த இதயத்தோடு, தொடர்ந்தும் போராட்டப் பாதையில் எமது கால்களை நாம் அழுத்தப் பதிக்கிறோம்.

ஆர்த்தி



eelamhouse.com

| |
|---|
| கப்டன் அஜித்தா |
| சுகுணராணி கந்தையா |
| சாவகச்சேரி, யாழ்ப்பாணம் |
| பிறப்பு - 22.05.1968 |
| வீரச்சாவு - 22.12.1990 |
| கட்டுவனில் ஏற்பட்ட நேரடி |
| மோதலில் |



# விரிவுரைகளின் விளக்கக் குறியீடு

அடர்ந்த காடு, பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர். புதிய போராளிகள். பயிற்சிக்காக வழங்கப்படும் துப்பாக்கிகளை வைத்துவிட்டு அசட்டையாக ஒரு நிமிடம் நின்று விட்டால் திரும்பி பார்க்க துப்பாக்கி இருக்காது. அநேகமாக எல்லோருக்கும் தெரியும் "அஜித்தாக்கா தான் எடுத்திருப்பா" என்பார்கள். "இன்று இந்த துப்பாக்கியில் இருக்கும் கவனயீனம்தான் நாளை எமது போராளிகள் உயிரைக் கொடுத்தெடுத்த துப்பாக்கிகளிலும் இருக்கும். அவர்களின்ர உயிர்தான் இந்தத் துப்பாக்கிகள். ஆனபடியா அவற்றை எங்கடை உயிரைவிட மேலாக நினைக்கவேண்டும். கவனமாக அவற்றை நேசித்தபடி வைத்திருக்கவேண்டும்" என்று கூறி திரும்பவும் தருவார்.

இந்தக்காலத்திலே தான் எங்களுடைய பாசறை அமைந்திருக்கும் பகுதி ஒரு சிறு அழகான குடியேற்றமாக அற்புதமான பூங்காவாக மாறிக் கொண்டிருக்கிறது. ஒரு பாதையைச் சுற்றி எமது மாளிகைகளாக சாக்குக் கொட்டில்கள். அத்தனை கொட்டில்களுக்கும் இடையில் ஒன்று வித்தியாசமாக பளிச்சென்று ஒழுங்காக துப்பரவாக அடுக்கப்பட்டிருக்கும். அந்தக் குழுவுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகள் யாவும் நேர்த்தியாக செய்து முடிக்கப்பட்டிருக்கும், அல்லது சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கும். பார்த்தவுடனேயே பட்டென்று சொல்லிவிடலாம் அது அஜித்தாவின் குழு என்று.

அந்த அளவிற்கு வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்றும் எந்தளவு விரைவாக வேலைகளைச் செய்கிறோமோ அந்தளவுக்கு இயக்கத்தின் வளர்ச்சி, போராட்ட வளர்ச்சி விரைவு பெறும் என்பதும், தரப்படுகின்ற வேலைகளை மகிழ்வுடன் ஏற்றுச்செய்ய வேண்டும் என்பதும் அஜித்தாவினுடைய விரிவுரைகளாயிருக்கும். விரிவுரைகளுக்கு மட்டுமல்ல அஜித்தா அந்த விரிவுரைகளுக்கு விளக்கக் குறியீடாகவும் இருந்தார்.

eelamhouse.com

அஜித்தா இந்தப் போராட்டத்திற்கு காலடி எடுத்து வைத்த காலகட்டம் வித்தியாசமானது. தாமும் தமது குடும்பமும் வீட்டுவேலைகளும்தான் உலகம் என்று பெண்கள் எண்ணியிருந்த சமூக அமைப்புக்குள்ளிருந்து, அந்தத் தடைகளை உடைத்து வெளியேற வேண்டிய காலம். யாழ்மாவட்டத்தில் இருந்து நேரடியாக ஆயுதப்பயிற்சிக்கு பெண்கள் அனுப்பப்படவில்லை. ஆனாலும் இந்த சமூகத்தின் மாறுபட்ட பார்வைகளுக்கு மத்தியில் இந்தத் தேசத்திற்காக ஏதோ ஒரு வகையில் தன்னுடைய செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதனால் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினூடு தனது வேலைகளைச் செய்தார்.

தொடர்ந்து கால ஓட்டத்தினால் பெண்களுக்கான பயிற்சிப்பாசறை ஆரம்பிக்கப்பட்டபோது அதில் அஜித்தாவும் ஒருவர். இயக்கத்தில் ஏற்கனவே ஒரு அண்ணா. மூடக்கொள்கையில் ஊறிப்போன சமூதாய அமைப்பு. இத்தகைய சூழலில் இருந்து அஜித்தா இயக்கத்திற்கு வந்தமை அவர் விடுதலையை எந்தளவிற்கு நேசித்தார் என்பதனைப் புலப்படுத்தும்.

ஒழுங்கான பயிற்சி, அப்போது எந்த ஓட்டத்திலும் அஜித்தா தான் முதல். பயிற்சி முடிய முன்னரே இந்திய-இலங்கை உடன்படிக்கை அந்தந்த நாட்டுத் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டது எம் மக்களுக்கு சினத்தையே மூட்டியது. உடன்படிக்கையைத் தொடர்ந்து எம் மண்ணுக்கு வந்த இந்திய இராணுவம் எம் மக்களையே கொன்றொழிக்க முனைந்ததால், எமக்கும் இந்தியப் படைகளுக்கிடையே சண்டை ஆரம்பித்து விட்டது. யாழ். மருத்துவபீடத்தில் இறக்கப்பட்ட இந்திய இராணுவம் அனைத்தும் சடலங்களாக சமைந்து போயின. இதில் பெண்போராளிக்குழுக்கள் பெரும் பங்கினை வகித்தன. அங்கே சடசடத்த துப்பாக்கிகளில் அஜித்தாவின் துப்பாக்கியும் ஒன்று. வீழ்த்தப்பட்ட எதிரிகளின் எண்ணிகையில் அவருக்கும் பங்குண்டு. பலத்த எதிர்ப்புக்களுக்கும் இழப்புக்களுக்கும் மத்தியில் எமது மக்களின் உடல்களை ஏறி மிதித்தபடி அங்குலம் அங்குலமாக முன்னேறியது இந்திய இராணுவம். ஆனைக்கோட்டை, தாவடி, தெல்லிப்பளை என இராணுவத்தை அஜித்தா எதிர்கொண்டார். தெல்லிப்பளையில் இவருக்கு மோசமான வயிற்றுளைவு, எழுந்து நடக்கவே முடியாது. திரும்பும் இடமெங்கும் ஆக்கிரமிபாளர்களின் துப்பாக்கிகள் குறிபார்த்தபடி. ஆனால் அவரின் உள்ளம் சோர்வடையவில்லை.

அஜித்தாவைப் பொறுத்தவரையில் வித்தியாசமான துன்பங்கள் நிறைந்த, ஆனால் மகிழ்ச்சியான ஒரு புதுவாழ்வை எதிர் கொண்டார். அதுதான் அந்தக் காட்டு வாழ்க்கை. அங்கே எங்களுக்கு எல்லாமே நாங்கள் தான். எமது தேவைகள் எல்லாவற்றையும் நாமே தான் நிறைவு செய்ய வேண்டும். உடை தைப்பதில் இருந்து வெடிபொருட்கள், கண்ணிகள் உற்பத்தி செய்வது வரைக்கும் அஜித்தாவின் கை பதிந்திருக்கும். இரவு பகல் என்ற எந்த வித்தியாசமும் அவருக்கு இல்லை. அவர் அடிக்கடி கூறுவார். "அறியாமல் கூட நான் தவறு செய்துவிடக்கூடாது. அப்படி தவறுவிட்டால் நான் தண்டனை பெறும்போது அது அண்ணாவுக்கு அவமானம்" என்று எந்தப் போராளியையும் அன்பாகத்தான் அணைப்பார். ஆனால் கூடவே கண்டிப்பும், தவறுகளுக்கான ஒறுப்புகளை வழங்கிவிட்டு, பின் கூப்பிட்டு ஆறுதலாக அந்தத் தவறுகள் இனிமேல் விடக்கூடாது என்றும், அதற்காகத்தான் ஒறுப்புத் தந்தேன் என்றும் மிக நீண்ட விரிவுரை- ஆம்! அவர் மகளிர் படைப்பிரிவை பொறுத்தவரையில் பேராசிரியர்.

அன்று எல்லாம் வழமையாகத்தான். ஆனால் அஜித்தா மட்டும் விம்முகின்றார். ஆற்ற முடியாத அழுகை. எவராலுமே கட்டுப்படுத்த முடியவில்லை. எல்லோரும் அப்படி அப்படியே உறைந்து போனார்கள். பாசறையிலுள்ள அத்தனை பேரும் ஒன்று கூடி, ஒரு கருத்துப்பரிமாற்றத்தின் பின் மெல்ல எல்லோரும் அதிர்ந்தவர்களாய்.... அஜித்தாவின் அண்ணாவுக்கு இயக்கக் கட்டுப்பாட்டு விதிகளை மீறியமைக்காய்... அதி உயர் ஒறுப்பு! எந்த அண்ணனுக்காகத் தான் அறியாத தவறு ஒன்றுக்



eelamhouse.com

காகக்கூட ஒறுப்புபெறக்கூடாது என்று இருந் தாரோ, அந்த அண்ணன் தெரிந்து விட்ட குற்றத் திற்காக ஒறுப்பு. அவர் அழுததெல்லாம் இயக் கத்தின் நம்பிக்கைக்குத் தமையன் துரோகம் செய்து விட்டார் என்ற ஆத்திரத்தாலும் அவ மானத்தினாலும்தான். அந்தத் ஒறுப்பைத் தான் வழங்கப்போவதாகக் கேட்கிறார். ஆனால் இயக்கம் மறுத்து விட்டது. அவரின் விசுவாசத் துக்கு முன்னால் நாங்கள் விக்கித்துப்போ னோம்.

அதற்குப் பின்னால் இருந்த துரோகத்தனத் தினால் உள்ளுக்குள் வெகுவாக பாதிக்கப்பட் டாலும் எதுவுமே நடக்காததுபோல் அமைதியா கிவிட்டார். தொடர்ந்து தனது குழுவும் தன் வேலைகளுமாக முன்னையைவிட இன்னும் தாய்மையைப் பேணுபவராக.....

மகளிர் படைப்பிரிவு புதிய போராளிகளை உள்வாங்கி விரிவடைந்தபோது ஒரு அணி நாட் டிற்கு, வர அதற்குள் அஜித்தாவும் ஒரு குழுத் தலைவியாக வந்தார்.

மூன்று வருடங்களுக்குப் பின்னால் பெற் றோரை இவர் சந்தித்தபோது இந்த நிகழ்வினை அவர் எப்படிச் சொன்னார் என்பதெல்லாம் எமக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட் டும் புரிகிறது தாய்ப்பாசத்திற்கு முன்னால் அண்ணனின் நிலையினை தங்கை சொல்லும் போது அவர் உள்ளம் பலவிதமான உணர்வு களைச் சந்தித்திருக்கும் என்பதுதான்.

நாட்டிற்கு வந்த கொஞ்சக் காலத்துக் குள்ளேயே சிறீலங்காப் படையுடன் மீண்டும் போரை நடத்தினோம். பலம் வாய்ந்த எதிரியி யையும் பலம் வாய்ந்த கோட்டை மதில்களைச் சுற்றியும் முற்றுகைப் போர் நடாத்திய ஒரு அணிக்கு அஜித்தா தலைமைப் பொறுப்பேற் றார்.

அப்போதெல்லாம் 'அவ்ரோ'வும் பொம்பர் விமானங்களும் குண்டுகளை வீச, இன்னொரு விமானம் உணவுகளைப் போடும். இவற்றுக்கு மத்தியில் வீரசிங்கம் மண்டபத்தில் மாடியில் அஜித்தா எல்.எம்.ஜி உடன் நிற்பார். கோட்டைக்



eelamhouse.com





eelamhouse.com



குள்ளே சில பொதிகள் விழ, அதை எடுக்க ஓடிவரும் இராணுவத்தினர் அந்த இடத்திலேயே விறைத்து விழுவார்கள். கோட்டை முகாமைத்தாக்கி அழிக்கும் முயற்சி ஒன்றிலும் அவர்தலைமை ஏற்று ஒரு குழுவுடன் சென்றார். முற்றுகைப் போருக்கு முகம் கொடுக்க முடியாத இராணுவம் பின்பக்கத்தால் ஓடியது. ஓய்வெடுக்க அவருக்கு வாய்ப்பு இல்லை. பலாலி இராணுவம்வெளியேறியபோது, குப்பிளான் கட்டுவன் பகுதியில் அவர் துப்பாக்கி முழங்கியது. கட்டுவனில் எதிரியை மறித்து நிலைகளை அமைத்து காவற் கடமையைத் தொடர்ந்தார்.

25 அல்லது 50 யார் தூரத்தில் இருக்கும் இராணுவ நிலைகளை அறியவேண்டும். அவர்களின் நடமாட்டங்களை அறிய வேண்டும். படைத்தளத்தை பலப்படுத்தும் அல்லது விரிவாக்கும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த வேலைகளின் போது அவர் முன்னால் சென்ற பின்பே அவரின் அணியினர் பின்னால் செல்ல வேண்டும். எமது நிலைக்களுக்கு முன்னால் சென்று, எதிரிகளின் நிலைகளுக்கு கிட்டநின்று அவர் துப்பாக்கி சத்தமிடும். எந்தப் போராளியும் அவருக்குத் தெரியாமல் முன்னால் போகமுடியாது. அவருக்குத் தெரிவித்து அவர் நிற்கையில் தான் முன்னால் போதல் வேண்டும். இது அவரின் இறுக்கமான கட்டளை.

## மேஜர் பாரதி

அஜித்தா என்றால் அனைவருக்கும் அன்பு நிறைந்த பயம். அவரின் நடத்தையில் அன்பும் கண்டிப்பும் நிறைந்திருக்கும். "நாங்கள் ஒரு விடுதலை அமைப்பு. அதிலும் மிக மோசமான சமூக அழுத்தங்களிலிருந்து புறப்பட்டவர்கள். அடுத்த பரம்பரை எம்மைப் பார்த்து எமக்கு பின்னால் வரவேண்டும். ஆனபடியால் நாங்கள் ஒழுக்க சீலர்களாக, பண்பாடுள்ளவர்களாக, வீரமுள்ளவர் களாக, மொத்தத்தில் தனித்துவமுள்ளவர்களாக வளரவேண்டும்" என்பன அவர் உதடுகள் அடிக்கடி உச்சரிக்கும் வசனங்கள்.

22.12.1990 அன்று கட்டுவன் பகுதியிலிருந்து இவரது பக்கமாக இராணுவம் முன்னேறுகிறது. ஒரு குழுவுடன் நின்ற இவருக்கு தகவல் வருகிறது மறுபக்கமாக எதிரிவெளியேறுகின்றான் என்று, ஓடிவந்து கட்டளைகளைப் பிறப்பித்து நிலை எடுத்து ஒவ்வொருவராக குறிபார்த்துச் சுடுகிறார். "இந்தா ஒருத்தன்... ம்... அடுத்தவன்..." எண்ணி எண்ணி அவதானமாகத்தான்...

"எந்த நிலையிலும் பதற்றப்படாது பரபரப்படையாது நிலைமையை விளங்கி ரவைகள் வீண் போகாது அடிக்கவேண்டும்" என்றவரின் துப்பாக்கி நிதானத்தை விட்டு மெல்லச்சரிகிறது. அந்தச் சண்டையில் பெண்போராளிகள் பல ஆயுதங்களை எடுத்தார்கள்.

அவர் அடிக்கடி சொல்லுவார். "சண்டையில் நாங்கள் ஆயுதங்கள் எடுக்கவேண்டும். அப்படி நல்லா அடிபட வேணும்" என்று. ஆனால் அந்த உணர்வினை ஊட்டியவர் அங்கே இல்லை. ஒரு உன்னதமான ஒரு போராளியை, ஒரு பேராசிரியரை மகளிர் படைப்பிரிவு இழந்தது. ஆனால் அவர் வளர்த்த போராளிகள் அவரின் உணர்வைச் சுமந்து இன்று பல களங்களில்....

eelamhouse.com



கப்டன் ஞானமதி
கெளசிகா சரணானந்தம்
கொக்குவில், யாழ்ப்பாணம்
பிறப்பு - 04.01.1979
வீரச்சாவு - 13.12.1999
ஓயாதஅலைகள் - 03
நடவடிக்கையில்
வெற்றிலைக்கேணியில்

# சமர்ப்பணம்

ஒரு தேசத்தின் இருளை
விடியலை நோக்கி அசைக்கும்
ஆயிரமாயிரம் பேருடனான
என் பயணம் ஒருநாள்
இலக்கை அடையும்.
இருள் என்பதே அர்த்தமிழந்து
எங்கும்
ஒளிப்பிரவாகம் நிறையும்-
இருளைச் சுமந்த மக்கள்
ஒளிதெறிக்க எங்கும் உலாவருவர் -
இந்த மண்ணின்
பிறப்பு ஒவ்வொன்றும்
வாழ்வின் அர்த்தத்தைக் காணும்.
அப்போது நான்
உயிருடன் இருந்துவிடக் கூடுமா?
இல்லை
அதற்காய் இன்றே என்னுயிர்
அர்ப்பணமாகுமா?

## கவிதை எழுதிய மாவீரர்

கப்டன் ஞானமதி :
1995இல் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்த இவர் 1979.01.04 இல் பிறந்தவர். 2ம்லெப் மாலதி படையணியின் தாக்குதலணிப் போராளியாக, களமுனை அறிக்கையாளராக படையணியின் நிர்வாகச் செயலக உறுப்பினராகப் பணியாற்றினார். 1999.12.13. அன்று ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணிப் பகுதியில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.


eelamhouse.com



# உயிரே எனக்காக!

கப்டன் ஞானமதி

உயிரே,
ஓர் நிமிடம் நிற்பாயா?
எங்கே என்னைப் பிரிந்து
தொலை தூரம் செல்கின்றாய்?
ஓ......
நீகூடவா எம்முடன் விளையாடுகிறாய்?
தமிழன் உடல் என்றதும்தான் - எமை
விட்டு ஓடவா நினைக்கிறாய்?
விடமாட்டேன்.
நில்.
தமிழன் உடலோடு உறவாடியதை
நீயுமா
குற்றமென்று எண்ணுகிறாய்?
இல்லை.
பொறுமை கொள்.
என் உடலுடன் நீ உறவாடியதால்
என் தேவைகள் முடியும்வரையும்
உனைச் செல்ல
அனுமதிக்க மாட்டேன்.
வீரப் பரம்பரை
வழித்தோன்றல்கள் நாங்கள்.
மானமுடன் வாழ்ந்த தமிழன்
எவருக்கும்
மண்டியிட்டு வாழ மாட்டோம்.
சூத்திரதாரி சந்திரிகாவின்
கைக்கூலிகளுடன் - சிறிது
கொடுக்கல் வாங்கல் உள்ளது -
அவர்களிடம் - எங்கள்
அம்மையாருக்குக்
கொடுக்க வேண்டிய பார்சல்கள்
சில உள்ளன.
கொடுத்து வழியனுப்பிவிட்டு - வந்து
விடுகிறேன்.
உயிரே!
அதுவரைக்கும் என்றாலும் - நீ
என்னுடன் இருந்தே ஆகவேண்டும்
ஆனால்
அத்துடன் என் வேலை
முடிந்ததென்று நினைக்காதே.
தமிழீழத்தின் விடிவிளக்காய்
தமிழ் மக்களின் நெஞ்சங்களில்
என்றும்
ஒளி! வீசிக் கொண்டிருக்கும்
எங்கள் அண்ணனின்
இலக்கை நாம் எட்டவேண்டும்.
ஆம்.
தொலை தூரத்தில் இல்லை
எங்கள் இலக்கு -
வெகு விரைவில் - எம் இலக்கை
சென்றடைவோம் உயிரே.
உயிரே
அதுவரைக்குமாவது
எனக்காகச் சில....

eelamhouse.com



மேஜர் கஜேந்தி
அகிலா பத்மநாதன்
யாழ்ப்பாணம்
பிறப்பு - 09.09.1975
வீரச்சாவு - 12.09.1999
பள்ளமடு பகுதி நோக்கி
முன்னேறி வந்த ரணகோஷ -05
நடவடிக்கைப் படையினருடனான
நேரடி மோதலில்

# யார்தான் அறிந்திராதார்

பள்ளமடுச்சந்தியை மையப்படுத்தி கஜேந்தியின் பிளட்டூன் நின்ற இடத்தில் மருந்துக்குத்தானும் ஒரு கிணறு இல்லை. இவர்களுக்கான குடிநீர் விநியோகம் மாட்டு வண்டியிலேயே நடைபெற்றது. ஒரே ஒரு பிளடூனுக்காக எரிபொருளைச் செலவழித்து இழுபொறியில் நீர்நிறைக்கும் நிலையில் நாம் அன்று இல்லை.

பெரும்பாலான நாட்களில் மாட்டு வண்டி ஓட்டும் அப்பாவை ஓய்வில் விட்டுவிட்டு மாடுகளை மேய்த்துக்கட்டி தண்ணீர் அள்ளும்பணியை கஜேந்தியே செய்து கொள்வார். ஒரு சாரத்தால் தலைப்பாகை கட்டி, இன்னொரு சாரத்தை நீண்ட காற்சட்டைக்கு மேலால் இடுப்பில் கட்டி கஜேந்தி மாட்டு வண்டியில் தண்ணீர் கொண்டு வரும் அழகே தனி அழகு. வருவது அப்பாவா, கஜேந்தியா என்று சட்டென இனங்காணமுடியாது. ஓரிடத்தில் நிற்கமாட்டாத சுறுசுறுப்பு நிறைந்த கடும் உழைப்பாளியான கஜேந்தி ஓய்வாக ஓரிடத்தில் அமர்ந்திருப்பதைக் காண்பது அரிது.

மாங்குளத்தில் மைதிலியுடன் கஜேந்தி நின்ற நாட்களில் இரு தடவைகள் படையினரை உள்நுழைந்து தாக்கியிருக்கிறார். தேர்ந்த வேவுப்புலியான மைதிலியும், கடும் சுறுசுறுப்பு நிறைந்த கஜேந்தியும் சேர்ந்து கொண்டால் கேட்கவா வேண்டும் ஒரு தாக்குதல், கஜேந்தி உள்நுழைந்து எடுத்த தரவுகளின்படி நடந்தது. படையினரின் முன்னரங்க நிலையொன்றின் மீது திடீர்தாக்குதல் செய்துவிட்டு போன வேகத்திலே திரும்பி வந்துவிட்டனர். இரண்டாவது அடி வித்தியாசமானது. கஜேந்தியின் அணி 1999.04.01 அன்று தாக்குதலுக்காக பதுங்கிப் பதுங்கி முன்னகர்ந்தது. மூன்று பக்கங்களையும் கவனமாக அவதானித்தபடி நகர்ந்து கொண்டிருந்த நம்மவர்கள் படையினரின் பதுங்கித்தாக்கும் அணியொன்று எமது காப்பரண்களை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதைக்



eelamhouse.com

கண்டுவிட்டு கஜேந்தியின் தோளைத் தொட்டனர். திட்டம் சடுதியில் மாற்றமடைந்தது.



படையினரின் பதுங்கித்தாக்கும் அணிக்கு விழுந்தது முதுகு அடி. அவர்கள் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. முன்னே இருந்த எமது அரண்களைத் தாக்கப் போனவர்கள் பின்னேயிருந்து விழுந்த அடிக்கு ஏற்ப தம்மை நிலைப்படுத்தி, எம்மை நோக்கித் தாக்குவதற்கு நாங்கள் வாய்ப்பைக் கொடுக்கவில்லை. அடியைத் தொடக்க முதலே மைதிலிக்கு கஜேந்தி விடயத்தை தெரியப்படுத்தி யிருந்தமையால், மைதிலியின் கட்டளையில் மேஜர் அமுதாவின் எறிகணை செலுத்தும் அணியினர் எறிகணைகளை வீசிக்கொண்டிருந்தனர்.

படையினரின் சுடுகலன்களை எடுத்துக்கொண்டு நாங்கள் எங்கள் பகுதிக்கு திரும்பினோம். கொல்லப்பட்ட படையினருள் ஒருவர் மேஜர் தர அதிகாரி என்பதை அன்றிரவே அலைவரிசைகளை ஒட்டுக் கேட்டு அறிந்து கொண்டோம்.

மரங்கள் குறைவான நீண்ட வெளி கொண்ட, ஆனால் இடையிடையே பற்றைத் தொகுதிகளுட னிருந்த அந்தப் பகுதியில் வெயில் கொழுத்தி எரிந்தது. ஆனால் கஜேந்தியில் எந்த வாட்டமும் தெரியவில்லை. மன்னாரின் பறட்டை வெளியை, முள்மரப் பற்றைகளை ஆராயும் வேலையை அவர் தொடங்கிவிட்டார்.

படையினரின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக அவர்களுக்கு மிக நெருருக்கமாகப் போய்வந்த கஜேந்தி ஒரு விடயத்தை கவனித்தார். தமது அடுத்த நகர்வுக்காக படையினர் பாதை களைத் தயார்படுத்தி வைத்திருந்தது கண்ணில் பட்டது. எம்மில் ஆட்தொகை குறைந்த காப்பரண் நோக்கி ஒரு பாதை எடுக்கப்பட்டிருந்தது. அந்தப் பாதை நோக்கி படையினரின் நிலைகளை நோக்கி நடந்து போன கஜேந்தி, இடையில் பாதை இரண்டாகப் பிரிந்து ஒன்று படை நிலைகளை நோக்கிப் போக, இன்னொன்று எமது பிறிதொரு காப்பரணை நோக்கிப் போவதை அவதானித்தார்.

இந்தப் பாதைகளில் எமது முன்னரங்க நிலைகளைச் சந்திக்கும் இடங்களில் எம்மால் புதைக் கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருந்தன. அப்படியெனில் இன்னும் இரண்டொரு நாட்க ளில் படையினர் வருகை தரவுள்ளனர்.

நீண்ட நேரமாக கஜேந்தியின் தொடர்பைக் காணவில்லை என்று மைதிலி யோசித்துக் கொண்டி ருந்தபோது அவர்வந்து சேர்ந்துவிட்டார். அவரின் முகபாவமும் களைப்பும் மைதிலிக்கு நிறைய விடயங்களை உணர்த்தின.

"என்னக்கா?" என்று ஆவலாகக் கேட்டார். கஜேந்தி தான் கண்டவற்றை எல்லாம் ஆதியோடந்த மாகச் சொல்ல, மைதிலியின் மூளை இரவிரவாகத் திட்டங்களைத் தீட்டியது.

அமெரிக்காவில் தனது படையியல் மேற்படிப்பை முடித்துக்கொண்டு அப்போது தான் நாடு திரும்பியிருந்த மேஜர் வசந்த பெரேரோவின் கட்டளைக்கமைய பள்ள மடுப்பகுதியில் முன்னேறிய சிறிலங்காவின் போர்முழக்கம் (ரணகோஷ)-05 நடவடிக்கைப்படையினரின் அடியோ சொல்லும் தரமற்றதாயிருந்தது. எமது இரண்டு காப்பரண்களிலும் அவற்றுக்கு பின்புறம் 100மீற்றர் வரையிலும் படையினர். அவர்களுக்கு வலமும் இடமும் உள்ள காப்பரண்களில் எம்மவர்கள்.

விடுபட்ட காப்பரண்களை மீளக்கைப்பற்றும் கடும் முயற்சியில் கஜேந்தி. அருகே எம்மவர்கள் நின்று சண்டை பிடித்துக் கொண்டிருக்கும் காப்பரணை நோக்கி பின்புறமாக ஓடி வந்து திரும்ப முனைய, பக்கவாட்டாக 15மீற்றர் தூரத்தில் பதுங்கியிருந்த படையினரின் சுடுகலன்கள் சீறின. கூட



eelamhouse.com

வந்தவரின் எல். எம். ஜி முழங்க எப்போதும் தன் இடைப்பட்டியிலே கையெறி குண்டுகளைக் கொழுவும் பழக்கமுடைய கஜேந்தி இரண்டு குண்டுகளைக் களற்றியெறிந்தார். படையினரைத் தாக்கியவாறே பின்னகர்ந்து மேவி, படையினர் நின்ற காப்பரண்களுக்கு அடுத்துள்ள மறுபக்கக் காப்பரணுக்குப் போய்ச் சேர்ந்தார்.

எப்படியாவது படையினரின் போக்குவரத்துப் பாதையை மூடியே ஆக வேண்டும். தாக்குதலைத் தொடுத்தவாறே இராணுவத்தினரை நோக்கிக் காப்பரண் பாதையால் முன்னேறத்தொடங்கிய கஜேந்தி, எமது காப்பரண்களை ஊடறுத்துப் போன நீரோடியுலர்ந்த அருவியின் மண்பிட்டிக்கு அப்புறம் நின்ற படையினரின் அடியில் வீரச்சாவடைந்து விழ,

லெப். கேணல் மைதிலியின் நேரடி வழிநடத்தலில் 2ம் லெப் மாலதி படையணி மிகக் கடுமையான எதிர்ப்புக்குமத்தியில் மிக மிகக் கடுமையாகத் தாக்கியபடி முன்னேற எம்மவரின் அடியின் வீச்சுத் தாங்காமல் படையினர் தமது சுடுகலன்களைக் கூட கைவிட்டுப் பின்னகர, எமது படையணி இழக்கப் பட்ட பகுதிகளை மீளக்கைப் பற்றி, காலையில் ஆரம்பித்த சண்டையை மாலையில் முடிவுக்கு கொண்டுவந்ததுடன் 'போர்முழக்கம்' என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கைகளையே அன்றைய சந்திரிகா அரசு கைவிட வழிகோலியது.

கஜேந்தி எங்களோடில்லை. காற்றலையில் வந்தது செய்தி.

எவருக்கும், எப்போதும் அஞ்சாத, எதற்கும் துணிந்த கஜேந்தி எங்களோடில்லையா? மனம் ஆழ ஆழ ஆழப் புதைந்து அமிழ்ந்து போயிருந்த நினைவுகளையெல்லாம் தேடத் தொடங்கியது.

யாருக்கு தெரியாது கஜேந்தியை 'வெற்றி உறுதி' படை நகர்வை மாங்குளத்தோடு தடுத்து நிறுத்தியிருந்த நாட்களில் முறிகண்டிச் சந்தியிலிருந்த அந்த மூலைத் தேநீர்க் கடைக்காரை,

மல்லாவியிலிருந்த இரும்புப் பட்டறைத் தொழிலாளிகளை, எமது படையணி வீராங்கனைகள் நிலை கொண்டிருந்த களங்களுக்கு அருகே இருந்த கிராமங்களின் முதன்மையானவர்களை, சந்திகளிலே குந்தியிருந்து பத்திரிகை வாசிக்கும் பெரியவர்களை,

புதுக்குடியிருப்பில், தண்ணீரூற்றில், விசுவமடுவில், கிளிநொச்சியில், மல்லாவியில், முறிகண்டியில் உந்துருளி சீர்களங்களையோ, மிதிவண்டித் திருத்தகங்களையோ, அந்நேரம் வைத்திருந்தவர்களை மாவட்ட நிலையிலான வைத்திய சாலைகளின் பொறுப்பதிகாரிகளை, தாதியர்களை மருந்துக் களஞ்சியக்காப்பாளர்களை, அங்கு சேவை புரிந்த வைத்தியர்களை.

யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள். யாருக்குத் தெரியாது கஜேந்தியை?

"அட, எங்கடை கஜேந்தியையோ கேக்கிறீங்கள். அது ஒரு அருமையான பிள்ளை..." என்று தொடங்கி, அவரை தாம் முதன் முதலாகச் சந்தித்ததை, தம்குடும்ப உறுப்பினர் போல் அவர் தம்மோடு பழகியதை, இன்னமும் மறக்க முடியாமலிருக்கும் நினைவுகளை மீட்கத்தொடங்கி விடுவார்கள். போராளிகளும்தான்.

எல்லோரும் ஏதோ காரணங்களுக்காகக் கஜேந்தியோடு தொடர்புபட்டிருப்போம். வேலை செய்திருப்போம். ஆகக் குறைந்தது கேள்விப்பட்டாவது இருப்போம். அந்தளவுக்கு அவர் ஒரு வி.ஐ.பி. வி.ஐ.பி. என்றால் எந்த விதத்தில்? இந்த விதத்தில், அந்த விதத்தில் என்று அந்தச் சூறாவளிக்கு எவரும் எந்த ஒருவரை முறைகளையும் போட முடியாது. அவருடைய திடீர், அதிரடி நடவடிக்கைகளை


eelamhouse.com

வைத்து 'மடார் பேர்வழி' என்று கணிப்பிடுவதா? வேண்டும் என்று கேட்கின்ற எவருக்குமே 'இல்லை' என்று சொல்லாமல் யாருடையதேனும் பொருளை உரியவரிடம் கேட்டுக் கேள்வியின்றித் தூக்கித் தானம் பண்ணுவதால்

'குழந்தை' என்பதா? 'குழப்படி' என்பதா?

வரையறைகளுக்குள் அடக்கி விட முடியாத ஆற்றல்மிக்க கஜேந்தி 1990 இலே எமது விடுதலை அமைப்பிலே இணைந்து 1990 இலேயே ஆரம்ப மருத்துவக் கல்வியைப் பயின்று, 1990 இலேயே மருத்துவப் பையுடன் கொக்காவில் சிறிலங்காப்படைத்தளத் தகர்ப்பு நடவடிக்கையில் பங்கேற்றார்.

அது 1990.07.10. தாயகத்திலிருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பின் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி பாரியளவில் பங்கேற்ற மிகப் பெரிய சண்டை இது. பெண் போராளிகளின் அணியொன்றுக்கு தனியானதொரு இலக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அணியோடு கஜேந்தி போயிருந்தார். அதுவே அவரின் முதற்களம். பதட்டமெதுவுமில்லை. களத்தை வழிநடத்திக் கொண்டிருந்த அந்த அணியின் பொறுப்பாளருக்கு நாடியில் சிறுகாயம் ஒன்று ஏற்பட, தலையையும் சேர்த்து பாரிய கட்டொன்று போட்டு விட்ட கஜேந்தி, மற்றவர்களைக் கவனிக்க போய்விட்டார். களத்தை தொடர்ந்து வழி நடத்திய அந்தப் பொறுப்பாளருக்கு மறுபடி பெரிய காயம் ஏற்பட, அதற்கும் ஒரு பலமான கட்டைப் போட்ட கஜேந்தி இரத்தம் அதிகளவு வெளியேறியதால் மயங்கிய அவரை படையினரின் சூடுகளுக்கு மத்தியில் ஊர்ந்தவாறு தூக்கி நகர்த்தி நகர்த்திப் பின்னரங்குக்குக் கொண்டு வந்தார். வரும் வழியெங்கும் "நான் காப்பாற்றுவன் நான் காப்பாற்றுவன்" என்று நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்த கஜேந்தி, காயமடைந்தவர் மயங்கிய பின்னும் கூட "நான் காப்பாற்றுவன்" என்று சொல்வதை நிறுத்தவில்லை.

அவரைப் பின்னரங்க மருத்துவத் தொகுதிக்குக் கொண்டு வந்தபோது, ஏனைய காயக்காரர்களுடன் மருத்துவர்கள் போராடிக் கொண்டிருந்

eelamhouse.com







eelamhouse.com



தகைக் கண்ணுற்ற கஜேந்தி, தன்னுடைய ஆளுக்குச் சிகிச்சை தாமதப்பட்டால் ஏற்படவிருக்கும் ஆபத்தை உணர்ந்து, தானே கை நரம்பைத் தட்டி நாளத்தைத் தேடி இனங்கண்டு திரவ ஊடகத்தை ஏற்றி விட்டார்.

எல்லாமே கஜேந்திக்கு முதற்தடவை. எந்த முன்னனுபவமுமில்லாத கஜேந்தி, பின் விளைவை நினைத்துப் பயந்து கொண்டிராமல் செயலில் துணிந்து இறங்கியது. காயமுற்றவரைச் சோர்வுற விடாமல், தான் காப்பாற்றுவேன் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது எல்லாமே புதிதுதான்.

அந்தச் சண்டையில் கஜேந்தி காயமடைந்தார். அது முதற்காயம். பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருந்த கஜேந்திக்கு நினைவு திரும்பிய அன்றே வைத்தியசாலை யின் அதிகாரிகள், பணியாளர்கள் எல்லோரும் நண்பர்களாகி விட்டார். எல்லோரையும் தன் கதை யால் வளைத்து வலையில் சுருட்டி விடுவது அவரின் இயல்பு. அங்கு சத்திர சிகிச்சை நிபுணராக இருந்த அந்தப் பிரெஞ்சு வைத்தியருக்கு இவரை நன்றாகப் பிடித்துவிட்டது. தனக்கு ஓய்வு கிடைக்கும் வேளைகளில் இவரோடு வந்து கதைத்துக்கொண்டிருக்கும் அவர், தன்னுடைய நாட்டுப்பெண்கள் முடியை நீளமாக வளர்க்காமல் கட்டையாக வெட்டுவது பற்றிக் குறிப்பிட்டார். மிக நீண்ட முடியையுடைய கஜேந்திக்கு தன்னுடைய முடியை வெட்டும் யோசனை உடனேயே வந்துவிட்டது.

அந்த நேரம் நாங்கள் யாருமே முடி வெட்டியிருக்கவில்லை. எல்லோரும் கூந்தலைப் பின்னி உயரத்தூக்கிக் கட்டியிருந்தோம். முடிவெட்ட ஒப்புதல் தரப்பட்டிருக்கவில்லை அப்போது.

நினைத்தவுடனே செயலில் இறங்கும் வேகம் கொண்ட கஜேந்திக்கு கத்தரிக்கோல் கிடைக்க வில்லை. எரிந்து கொண்டிருந்த நுளம்புத்திரி கண்ணில் பட்டது. அவ்வளவுதான். மறுநாள் காலையில் கஜேந்தியின் தலை இருந்த கோலத்தைக் கண்டவர்களுக்கு வயிறு எரிந்தது. அந்த நேரம் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்தவருக்கு கட்டுப்படுத்த முடியாத கோபம் தான் வந்தது. மாடு சப்பித்துப்பிய பனங்கொட்டையில் அங்கும் இங்கும் சில தும்புகள் நீட்டிக் கொண்டிருப்பது போன்று கிடந்த கஜேந்தியின் தலையை மொட்டையடிப்பதைத்தவிர வேறுவழி யிருக்கவில்லை. வழிக்கப்பட்ட தலையில் முடி வளர்ந்த போது உண்மையிலேயே ஒரு பாரிஸ் நகரத்து நாகரீக யுவதி போன்று கஜேந்தி அழகாகஇருந்தது வேறுவிடயம். அவரின் நிறமும் அப்படி.

நாகரீகத் தோற்றத்தில் அவரைக் கண்டவர்கள் எல்லோருமே "ஏன் கஜேந்தி முடியை வெட்டி னாய்" என்று கேட்ட போதெல்லாம், "வெட்டினா வடிவா இருக்கும் எண்டு பொறுப்பாளர்தான் வெட்டி விட்டவா" என்று மிக அழகான பொய்யொன்றை இந்தப் புளுகுனி சொல்லிக் கொண்டிருப்பதை அறிந்த பொறுப்பாளர் சிரித்தபடி அமைதி காத்தார்.

மகளிர் படையணியின் மருத்துவ ஓய்வகங்கள் அந்நேரம் கரவெட்டிப் பகுதியில் அமைந்தி ருந்தன. அவற்றிலே ஒன்று கஜேந்தியின் பொறுப்பில் இருந்தது. காயப்பட்டவர்கள் எல்லோருமே எந்தக் கவலையுமின்றி கஜேந்தியிடம் போய்விடுவார்கள். கவனிப்பு என்றால் அப்படியொரு கவனிப்பு. வயதுக்கு மீறிய தாய்மையுணர்வு கஜேந்தியிடம் இருந்தது. ஒவ்வொரு காயக்காரரையும் குளிப் பாட்டும்போது கால்நகங்களைகூட சுத்தப்படுத்தி விடுவார். காலை 5.30 மணிக்கு கஜேந்தி ஒரு பாடலுடன், அல்லது ஏதோ சில வசனங்களை தனக்குத் தெரிந்த மெட்டில் இசைத்தவாறு வந்தால், தேநீர் தயாராகிவிட்டது என்ற பொருள், முதலில் குரல் வரும். பிறகு கஜேந்தியோடு தேநீர்க் கேத்தலும் குவளைகளும் அறைக்குள் வரும். சூடாக சுவையாக இருக்கும் அவர் தரும் தேநீர். தாமதமாக யாரும் எழும்பினால், அவர் எழும்பும்நேரத்தில் உடனடியாகத்தயாரித்த தேநீரைத் தருவார். வீட்டில் அம்மா வோடு இருப்பது போன்ற உணர்வுதான் எல்லோருக்கும் வரும்.

eelamhouse.com

மூன்று நேரமும் வில்லைகள் கொடுப்பதற்காக கேத்திலும் கையுமாக வரும் போதும் பாட்டுத் தான் முதலில் வரும். பாட்டுச் சத்தம் கேட்டவுடனேயே எல்லோரும் போர்வையால் தலையை மூடியபடி "கொர் கொர்" என ஒலியை எழுப்ப, அந்த நடிப்புத் தூக்கக்காரர்களை மிகுந்த சிரமப்பட்டு எழுப்பி வில்லைகளை விழுங்க வைப்பது சின்ன விடயமல்ல. எனினும் அவர் சளைத்ததில்லை. வயதில் இளைய கஜேந்தியிடம் வயதிலும் அனுபவத்திலும் மூத்த அதிகாரிகள் தரப் போராளிகள் எல்லோரும் அடம்பிடித்துக் கொண்டிருப்பது சிரிப்பாக இருந்தாலும், அந்தத் தாயுணர்வின் முன் எல்லோருமே குழந்தைகளாகி விடுவது உண்மைதான்.

கஜேந்தியால் பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போராளிகளை பார்க்க வருகின்ற பெற்றோரும் உற்றோரும் கஜேந்தியின் சிரிப்பிலும் கதையிலும் மயங்கி விடுவார்கள். தமது பிள்ளைகள் காயம் மாறி களமுனைக்குப் போன பின்னரும்கூட அவர்கள் கஜேந்தியை பார்ப்பதற்கென வந்து போவது சாதாரண விடயம். கஜேந்தியோடு நிற்பவர்களுக்கு ஒரு போதும் சிற்றுண்டிகளுக்குப் பஞ்சமிராது. யாராவது கொண்டு வருவார்கள். இல்லாத நாட்களில் இவர்செய்து கொடுப்பார். கவனிப்பு என்றால் அப்படியொரு கவனிப்பு.

இதுமட்டுமல்ல. புளுகு என்றால் அப்படியொரு புளுகு. அவர் சொல்வது படு பச்சைப் புளுகு என்று எங்களுக்கும் தெரியும். தான் புளுகுகின்றேன் என்பது எங்களுக்குத் தெரியுமென்று அவருக்கும் தெரியும். ஆனாலும் அவர் புளுகிக் கொண்டிருப்பார். நாங்களும் விடாமல் பேந்து... பிறகு.... அப்படியா.... ஆ... என்று கொக்கி போட்டுக் கொழுவிக் கொண்டிருக்க, புளுகுப் புராணம் தொடரும்.

அறையிலிருக்கும் முதலாவது ஆளின் காயத்தை அவிழ்த்துத் துடைத்துக் கட்டும்போது இது ஆரம்பமாகும். இது புளுகு என்ற எங்களுடைய சுய அறிவை மீறி ஒரு கட்டத்தில் அவருடைய கதைகள் எங்களை மயக்கி விடும். ஏதோ ஆறேழு வருடம் அமெரிக்காவில் இருந்த ஒருவர் போன்று அவர் அளந்து கொண்டிருக்க, நாங்கள் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருப்போம். பிளந்திருக்கின்ற எங்கள் வாய்க்குள் ஈ நுழைந்து விளையாடிக்கொண்டிருக்க, கடைசி ஆளின் கட்டையும் அவிழ்த்துக் கட்டி வேலையை முடித்துக் கொண்டு, "மிச்சத்தை பிறகு சொல்லுறன்" என்றவாறு ஆள் போய்விடும். அதற்கு பிறகு தான் சுயநினைவு வந்து அவிழ்த்துக் கட்டப்பட்ட காயத்தின் வலியில் எல்லோரும் "ஆ....ஆ...." என்று கத்துவோம்.

அது ஒரு இனிமையான காலம்தான். யாரையுமே அவர் கோபித்து ஏசி, கடிந்து, குறை கூறி ஒரு நாளும் நாங்கள் அறியமாட்டோம். தாங்க முடியாத மனக் கவலை வந்தால் "இன்றில்லாவிட்டாலும், என்றோ ஒரு நாள் என்னை அவர்கள் புரிந்து கொள்வார்கள்" என்று வேதனையோடு சொல்லிவிட்டு, ஒன்றும் பேசாது இருப்பார். எல்லாம் ஐந்து நிமிடங்கள் தான். உடனேயே "நான் கேம்பிறிச்சில படிச்சுக் கொண்டிருந்த நேரம் இப்பிடித்தான் ஒரு நாள்..." என்று தொடங்கி விடுவார். பிறகென்ன சிரிக்கத் தொடங்க வேண்டியதுதான்.

சந்திரிகா அரசு தனது அமைதி முகமூடியைக் கிழித்து உண்மையான போர் முகத்தை காட்டத் தொடங்கியிருந்தது. முன்னேறிப்பாய்தல், சூரியகதிர்-01 என்று படையினர் முன்னேறிக் கொண்டிருந்தனர். நாங்கள் வழி மறித்துக் கொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னால் உப மருத்துவ சிகிச்சைத் தொகுதி ஒன்று எப்போதும் இருக்கும். நாங்கள் நகர நகர அதுவும் நகரும். எழுதுவதைப் போன்று அதைச் செய்வது அவ் வளவு இலகு அல்ல.

பத்துக் காயக்காரர்களைப் படுக்க விடக்கூடியவாறும், மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் வைக்கக்கூடியவாறுமான நிலக்கீழ் அறைகளை நாம் நகருமிடமெங்கும் அலுப்புச் சலிப்பில்லாது நகர்த்திக்கொண்டேயிருந்தார் கஜேந்தி.


eelamhouse.com



பின்னணி வேலை முடிந்த கையோடு கஜேந்தியின் குரல் முன்னரங்கில் ஒலிக்கும். அங்கே மேஜர் சந்திரிக்கா, லெப். கேணல் சூரியகலா, மேஜர் கனீபா, மேஜர் பமிலா போன்ற இவருடைய நண்பிகளே கொம்பனிகளின் பொறுப்பாளர்களாகவும் போர்வீரர்களாகவும் நின்றிருந்தனர். படையணிகளிலிருந்த பழைய போராளிகள் ஒவ்வொருவரினதும் ஒவ்வொரு காயங்களையும் இவர் நன்கறிவார். ஒவ்வொரு வரையும் சந்தித்து ஊட்டச்சத்துக்கான வில்லைகளைக் கொடுத்தும், தனது நகைச்சுவையாலும் புத்துணர்வூட்டிக் கொண்டிருந்தார்.

எறிகணைகளை மழையாகப் பொழிந்தபடி முன்னேறிய சூரியகதிர் -01 நடவடிக்கையின் போது பல போராளிகளின் உயிர்களையும், உறுப்புக்களையும் காப்பாற்றுவதில் பெரும் பங்காற்றிய கஜேந்தி, இப்போது சூரியகதிர்-02 நடவடிக்கையை எதிர்பார்த்தவாறு தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் நின்ற 2ம் லெப். மாலதி படையணியினருக்கான உப மருத்துவ சிகிச்சைத் தொகுதிகளை அமைத்துக் கொண்டிருந்தார். கிட்டத்தட்ட வேலை முடியும் தறுவாயில் ஒரு நாள், காயக்காரர்களை ஏற்றுவதற்கான இடங்களைப் பார்வையிட வந்த களமுனை ஊர்தி பின்புறமாகத் திரும்பம்போது கஜேந்தியைக் கவனிக்காமல் மோதியதில் அவரது கால் எலும்பு உடைந்து விட்டது.

முறிந்த எலும்பு அவரை நீண்ட நாட்களுக்குப் படுக்கையில் போட முயன்றாலும், ஒற்றைக்காலில் மருத்துவ விடுதியெங்கும் துள்ளித் திரிந்து ஏனைய காயக்காரர்களை அவர் நலம் விசாரித்த பொழுதுகளே அதிகம். சூரியகதிர் - 02 நடந்த மூன்று மாதங்களிலேயே ஓயாத அலைகள்- 01 முல்லை மீட்புச் சமர் நடந்ததில், மருத்துவ விடுதிகள் யாவும் நிறைந்து போயின. ஒற்றைக்கால் கஜேந்தி ஓடிஓடி எல்லோருக்கும் தன்னாலான யாவற்றையும் செய்துகொண்டிருந்தார்.

இப்போது கால் பரவாயில்லை. படையணியின் மருத்துவப் பொறுப்பாளரான கஜேந்திக்குச் சுமை கூடிவிட்டது. பொறுப்பெடுத்த புதிதிலேயே படையணிக்கான மருத்துவ ஓய்வகம் ஒன்றை அமைக்கும் பணி அவருக்கு. ஓடித் திரிந்து காணி ஒன்றைத் தேடி, ஒவ்வொருவரிடமும் கதைத்து ஒவ்வொரு பொருளாகச் சேகரித்து கட்டுமானப் பணியை ஆரம்பித்து விட்டார்.

அவருக்கென ஒரு எம். டி. 90 வகை உந்துருளி கொடுக்கப்பட்டிருந்தது. தன்னைப் போலவே தனது உந்துருளியையும் கடும் உழைப்பாளியாக்கி விட்டிருந்தார். கஜேந்தியோடு அவருக்கு முன்னும் பின்னுமாக எத்தனை பேரை ஏற்ற முடியுமோ, அத்தனை மூட்டை முடிச்சுக்களைக் கட்ட முடியுமோ, அத்தனையையும் சுமந்தது உந்துருளி.

ஓய்வில் இருப்பவர்களுக்கான பராமரிப்புப்பொருட்கள், களமுனையில் நிற்கும் மருத்துவப் போராளிகளுக்கான மருத்துவப்பைகள், திரவ ஊடகங்கள், கட்டுந்துணிகள், அது, இது என்று எல்லாவற்றையும் சுமந்து கொண்டு நெடுங்கேணி, அம்பகாமம், மாங்குளம், புளியங்குளம் என்று காடுமேடெல்லாம் கஜேந்தியோடு போகின்ற உந்துருளியில் சின்னச்சத்தம் மாறுபாடாக கேட்டாலும், அல்லது கேட்காவிட்டாலும் இடையிடையில் உந்துருளிச் சீர்க்களத்துக்குப் போய், "ஒருக்கா ஓடிப் பாருங்கோ" என்பார். அவர்கள் ஓடிப்பார்த்து ஆணி, நட்டு என்று தேவையானதைப் போட்டுவிடுவார்கள். சிறு பிழையும் அவரது உந்துருளியில் இருக்காது. ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு சீர்கள உரிமையாளர் கஜேந்தியின் நண்பராகவே இருந்தார்.

யார் என்ன பொருள் கேட்டாலும் இல்லை என்ற பதில் வராது அவரிடமிருந்து. அவர் பொறுப்பாக இருந்த காலத்தில் எங்களுடைய களஞ்சியத்தில் எந்த மருந்துக்குமே தட்டுப்பாடு இருக்கவில்லை. களமருத்துவ போராளியொருவர் தனக்கு ஒரு பொருள் வேண்டுமென இவருக்கு அறிவித்தால் எங்கு அலைந்தாவது அந்தப் பொருளை எடுத்துக் கொண்டு புறப்பட்டு விடுவார்.

eelamhouse.com

கஜேந்தி வந்து போனால் தளத்திலுள்ள சில பொருட்கள் தலைமறைவாகும். கத்தரிக்கோல், எழுதுகருவிகள், காகிதாகிகள், புதிய குறிப்பேடுகள், அலங்காரப் பூச்சாடிகள். எல்லாம் மாயமாகி விடும். பொருட்களை காணவில்லை, கஜேந்தி வந்துபோயிருந்தார் என்றால், இரண்டையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்க்க வேண்டியது தான். எல்லாவற்றையும் எடுத்துப்போய் களமருத்துவப் போராளிகளின் பாவனைக்கு கொடுத்திருப்பார். அல்லது தனது தளத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பவர்களின் பொழுது போக்குக்காக்கொடுத்திருப்பார். ஏதோ ஒன்று.

இப்போது 'வெற்றி உறுதி' படை நகர்வு தொடங்கிவிட்டது. நெடுங்கேணியிலும் மணலாற்றுப் பகுதியிலும் நின்ற எமது கொம்பனிகளை தலைவர் அவர்களின் பணிப்பின் பேரில் புளியங்குளத் துக்கு நகர்த்தினார். படையணியின் சிறப்புத் தளபதி. அதுவும் காடு, இதுவும் காடு. மேலதிக ரவைக்கட்டு அணியை நாங்கள் இரவிலோ பகலிலோ கழற்றுவதில்லை. வைகாசிமாத வெய்யிலில் காட்டோடு எங்களையும் எரித்தது. வெற்றி உறுதி எதிர் நடவடிக்கைக்களமுனையில் நின்ற எங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்குச் சரும நோய்கள் வந்து விட்டன. தக்க மருந்துகள் இல்லை.

மருத்துவப் பொறுப்பாளர் கஜேந்தி சிறப்புத் தளபதியோடு கதைத்து, நோய் கண்டவர்களை தன் பொறுப்பில் எடுத்தார். காப்பரண் பகுதிகளில் வைத்தும், கடுமையானவர்களை தனது பின்னணி மருத்துவ நிலைக்குமாக எடுத்து தேசிக்காய், மஞ்சள், வேப்பிலை அரைத்து தேய்த்துக்குளிப்பாட்டி முடித்தவரை எல்லோரையும் பழைய நிலைக்கு கொண்டு வந்து கொண்டிருந்த போதுதான் புளியங் குளத்தை நோக்கி சிறிலங்கா இராணுவம் காலையிலும் மாலையிலுமாக ஒரு நாளில் இரு தடவை முன்னேறும் முயற்சியை மேற்கொண்டு தோல்வியுடன் திரும்பியது. (1997-06-24) காலையில் படை நகர்வு ஆரம்பித்த குறிப்பிட்ட மணி நேரங்களிலேயே, பின்னணியில் சிகிச்சைக்கு என நின்றவர்களை கேணல் விதுசாவின் வேண்டுகோளின் பேரில் மிக வேகமாக முன்னரங்குக்கு அனுப்பி வைத்தார் கஜேந்தி. புளியங்குளத்தை ஒரு தளமாக அமைத்து நின்ற போராளிகளின் அரண்களுக்கு முன் புறமாகவும் பக்கவாட்டாகவும் விரிந்து மேலதிகப் பாதுகாப்புக்காக நிலை கொண்டிருந்த எமது படை யணி, முன்னேறி வர முயன்ற படையினரை மிகக் கடுமையாகத் தாக்கித் தடுத்து நிறுத்தியது. காலை யில் தொடர்ந்த சண்டை மதியம் ஓய்ந்து, பிற்பகலில் மறுபடியும் ஆரம்பமான போதும் எமது போராளி களின் வேகத்தாக்குதலால் தமது ராங்கிகளை இழந்தும், சேதத்துக்குள்ளாகியும் மாலையில் படையினர் பின்வாங்கினர்.

இந்த மிகக் கடுமையான சண்டையில் காயமடைந்தவர்களை மிகமிகக் கடுமையான எறிகணை வீச்சுக்கு மத்தியில் கஜேந்தியின் காவும் குழுவினர் சுமந்து பின்னகர்த்திக் கொண்டிருந்தனர்.

வருகின்ற காயக்காரர்களை அவசர முதலுதவிச் சிகிச்சைக்கு உட்படுத்தி களப்பகுதி ஊர்தி களில் ஏற்றிப் பின்னரங்குக்கு அனுப்பிக் கொண்டிருந்த கஜேந்தி சண்டை முடிகின்ற கடைசி நேரத் தில் களத்தின் ஒழுங்கமைப்பையும் கவனித்து, தனது தற்துணிவான செயற்பாடுகளால் அன்றைய வெற்றிக்குத் தன் பங்கையும் ஆற்றியிருந்தார்.

தனக்குத் தரப்பட்ட பணிக்கு அப்பாலும் செயற்படுகின்ற ஆற்றல் அவரிடம் எப்போதுமே இருந் தது. கொடுக்கப்பட்ட ஒரு பணிக்குள் மட்டும் கட்டுப்பட்டு நிற்கக் கூடியவரல்ல அவர்.

இப்போது கஜேந்தி ஒரு பிளாட்டுனின் கட்டளை அதிகாரி. இந்தப் பெரிய படையணியின் உறுப் பினர்களின் நலன்களைக் கவனித்த கஜேந்திக்கு ஒரு பிளாட்டுனைக்கையாள்வது மிகச் சிறிய விடயம். கொம்பனிக்கு கட்டளையதிகாரியாக நின்றது லெப். கேணல் மைதிலி இரு சுறுசுறுப் பாளர்கள் ஒன்று சேர்ந்தால் கேட்கவா வேண்டும்?


eelamhouse.com



ஒலுமடுவில் இருந்து வன்னி விளாங்குளம் வரை நீண்டிருந்தது மைதிலியின் கொம்பனி. வன்னி விளாங்குளத் தொங்கலில் நின்றது கஜேந்தியின் பிளாட்டுன். ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களுமே சிறிலங்கா அரசின் அதியுச்ச பொருளாதாரத் தடையை எதிர் கொண்டிருந்த நேரம் அது. கடும் வேலை எங்களுக்கு. வேலை செய்த களைப்பில் சாயத்தண்ணீர் தயாரிப்பதற்குச் சீனியுமின்றித் தண்ணீரை குடித்துக்கொண்டிருந்தநாட்கள் அவை.

கஜேந்தி ஒரு நாள் பொடிநடையாக மல்லாவியை நோக்கி கிளம்பினார். திரும்பி வந்தபோது யாரோ ஒருவருடைய மிதிவண்டியில் ஒரு சீனி மூட்டையைக்கட்டி வந்தார். கொம்பனி முழுமையுமே தேநீர் குடித்தது.

கஜேந்தி கேட்டால், செய்து கொடுப்பதற்கென்றே மக்கள் இருந்தனர். யாரையும் பாதிப்புக் குள்ளாக்காமல், நோகப்பண்ணாமல், அவர்களால் எது இயலுமோ, அந்த உதவியைப் பெற்றுக் கொள்வதில் கஜேந்தியை அடிப்பதற்கு எவருமே இல்லை.

அந்தக் காட்டுக்குள் நாளாந்தமும் எங்களுக்கு ஓயாத வேலைதான். காட்டை குறுக்கும் நெடுக்குமாக அறுத்துப் பலபாதைகளை எடுக்க வேண்டியிருந்தது. கொம்புகளை, புற்களை, மண் பிட்டிகளை, புற்றுக்களையெல்லாம் வெட்ட வேண்டியிருந்தது. கத்திகள் மொட்டையாகி, பிக்கான், மண்வெட்டி, கோடரி எல்லாம் கூர் மழுங்கிப் போயின. வேலைகள் தாமதமாகத் தொடங்கின. புறப்பட்டார் கஜேந்தி.

"கொண்டு வா எல்லா கத்தியையும், பிக்கானையும்" எல்லாவற்றையும் சுருட்டிக் கட்டிக் மல்லாவி வரை அவர் நடந்து போனதாக நினைத்துவிடவேண்டாம். இடையில் ஏதோ ஒரு வழியில் மல்லா விக்குப் போய்விடுவார்.

அங்கேயுள்ள அனைத்துப் பட்டறைகளுக்கும் வேலை பகிர்ந்து கொடுக்கப்படும். பட்டறை வைத்திருப்பவர்கள் ஏற்கனவே இவரை அறிந்தவர்களாயிருப்பார்கள். இல்லாவிட்டாலென்ன இதோ இப்போது அறிந்துவிடுவார்கள்.

"ஐயா வணக்கம். எப்படி இருக்கிறீங்கள். கடும் வேலை போல இருக்குது. வேலையோட வேலையா ரெண்டு கோடாலியைக் கூராக்கித் தருவீங்களோ, பெரிய உதவியா இருக்கும்" என்று கஜேந்தி கேட்ட பின்னும் யாராவது மாட்டன் என்பார்களோ மைதிலியின் கொம்பனி மிக வேகமாக வேலையை முடித்த இரகசியம் அந்த நேரம் பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.

இடைவெளியில் கஜேந்தியைக் காணும் அன்பர்களும் நண்பர்களும் தமது வீட்டுக்கோ, பணிமனைக்கோ அழைத்துச்சென்று விருந்தோம்புவதோடு நின்று விடாமல், போராளிகளுக்கு என எதையாவது கொடுத்துத்தான் விடுவார்கள். கஜேந்தி நிற்கும்வரை சிற்றுண்டிகளுக்கோ சத்து வில்லைகளுக்கோ பற்றாக்குறை இருக்கவில்லை. கஜேந்தியின் பிளாட்டுனுக்கு காய்ச்சலே வருவதில்லை. சருமப் பாதிப்புக்கள் எவருக்குமே ஏற்படவில்லை. கட்டளையதிகாரியான பின்பும்கூட தான் ஒரு மருத்துவப் போராளி என்ற நிலையிலிருந்து அவர் கீழிறங்கவில்லை.

யார் வரவில்லை விசுவமடு துயிலுமில்லத்துக்கு அன்று? யார் யாரோ எல்லாம் வந்தார்கள் மண் போட பல்வேறு பிரிவுகள், துறைகளைச் சேர்ந்த போராளிகள், தாதியர் ஒரேயொரு முறை மட்டுமே கஜேந்தியைக் கண்ட பலர், மிதிவண்டி திருத்துவோர், பேருந்து நடத்துனர்கள், போகும் வழியில் கஜேந்தியால் ஏற்றிச் செல்லப்பட்ட யார் யாரோ அம்மாக்கள், அக்காக்கள்....

யார் வரவில்லை அன்று
யாருக்குத் தெரியாது அவரை

மலைமகள்

eelamhouse.com



| |
|---|
| மேஜர் மாதுரி |
| துஸ்யந்தினி தங்கராசா |
| உரும்பிராய், யாழ்ப்பாணம் |
| பிறப்பு - 19.09.1972 |
| வீரச்சாவு - 19.04.1996 |
| கனகம்புளியடிப் பகுதியில் |
| சூரியக்கதிர் -2 |
| எதிர்நடவடிக்கையில் |

# எல்.எம்.ஜி.டெவில் மாயாவி

அவர் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பானது. தனது சோகங்களை எல்லாம் மனதில் ஆழத் துக்குள் அமுக்கி, மேலுக்குச் சிரிப்புடன் அவர் விடும் பகிடிகள் எல்லோரையும் சிரிக்க வைக்கும். ஆனால் எங்களை எந்நேரமும் சிரிக்க வைத்த மாதுரியின் கண்களில் குடிகொண்டிருந்த அந்த வெறுமைமட்டும் கடைசி வரையில் அகலவில்லை.

அவளுடன் நெருங்கிப் பழகாத, அவரை அறியாத யாருக்கும் அவரின் ஐந்துஅடி எட்டு அங்குல உயரமும் அந்த முழிக்கண்களும் பயப் பிராந்தியைத்தான் உண்டுபண்ணும். பழகியவர்களுக்கு அவர் தேன். அவருக்கு ராணி கொமிக்ஸ்சில் வரும் மாயாவி பாத்திரத்தில் நல்ல விருப்பம். மாயாவி யின் கதைகளை விழுந்து விழுந்து வாசிப்பார். "நான் தான் மாயாவி" என்று சொல்லிக்கொண்டு பாய்ந்து திரிவார். தெருவில் அநாதரவாகக் கிடந்த நாயொன்றைப்பிடித்து அதன் கழுத்திலே கயிற் றைக்கட்டி "இது தான் டெவில்" என்று இழுத்துக்கொண்டு திரிவார். எங்களின் கேலிகளை பொருட் படுத்தவே மாட்டார்.

இச்சம்பவத்தின் பின் இவரையும் அந்த நாயையும் மாயாவியும் டெவிலும் என்றே அழைக்கத் தொடங்கிவிட்டோம்.

மாதுரி எப்படிப்பட்டவர் என்று யாராலும் இனம் காண முடியாத அளவுக்கு அவர் வித்தியா சமானவர். எல்லோரும் யோசனையில் இருந்தாத்தான் அவர் சிரிப்பார். எல்லோரும் சிரிக்கும்போது அவர் யோசனையில் இருப்பார். தனக்கு கவலை வந்தால் அவர் தனியாகப் போயிருப்பார்.


eelamhouse.com

கவலைகளை, சிறியவயதுச் சோகங்களை யாரிடமுமே அவர் பகிர்ந்து கொள்ளவிரும்புவதில்லை.

சிறு வயதில் பிரிந்து போனதால் முகமே மறந்து போன தந்தையை, குடும்பத்தலைவனின்றி மூன்று பிள்ளைகளையும் தனித்து வளர்த்து பிள்ளைகளைப்போலவே புலிகள் இயக்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களையும் ஆதரித்ததால் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தாயை,

தன்னைத் தொடர்ந்து இயக்கத்தில் இணைந்து கொண்ட ஒரே தங்கையை, தாய் கொல்லப்பட்ட பின்னர் தங்கைகளின் வாழ்வுக்காய் தன் படிப்பை இடைநிறுத்தி, உடலை வருத்தி உழைத்து, 1990இல் தங்கைகள் இருவரும் இயக்கத்துக்குப்போக அவர்களைத் தொடர்ந்து தன்னையும் இணைத்துக்கொண்ட தமையனை.

எல்லோரையும் விட்டு வீட்டில் தனித்திருக்கும் அம்மம்மாவை, அடிக்கடி தன் மனத்திரையில் மீட்டுப்பார்த்துக் கொள்வார். வெளியே சொல்லமாட்டார்.

1994இல் இவரின் தங்கை கப்டன் சாமந்தி கடல் விபத்தொன்றில் சாவைத் தழுவியது இவரை உலுப்பிவிட்டது. எப்போதுமே தன்னை கல்லாக்கிக் கொள்ளும் மாதுரி அப்போது மட்டும் உடைந்து போய் தன் அண்ணனிடம் அழுதார். மீண்டும் பாறையாய் இறுகிவிட்டார். அதற்கு பின்னர் அவர் ஒரு போதும் இதுபோல் அழுதது கிடையாது. மாதுரிக்குள் இத்தனை சோகம் உண்டு என்று நாம் சொன்னாலும் யாருமே நம்ப முடியாத அளவுக்கு அவர் ஒரு கைதேர்ந்த நடிகையாக நடந்துகொண் டார்.

நடனம், நடிப்பு எல்லாமே அவரின் இயல்புடன் ஊறியவை. விடுதலைப் புலிகள் மகளிர் படைய ணியின் தயாரிப்புக்களான 'கொடியோரின் கொடுமை' நாட்டிய நாடகத்தில் சிறிலங்கா இராணு வத்தினனாகவும், 'தீக்குளிக்கோம் தீயிட்டெரிப்போம்'. நாடகத்தில் ஆணாதிக்கம் மேலோங்கிய சமூகப் பிரதிநிதியாகவும் முத்தமிழ் விழா மேடையில் 1991இலே மாதுரி தோன்றினார் அந்த நாட கத்தில் அடிக்கடி இவர் நின்ற படியே காலை உதறி உதறி ஆட்டுவார். முத்தமிழ் விழா முடிந்த பின்ன ரும் நாடகம் பார்த்த இளைஞர்கள் அவர்போலவே தம் கால்களை உதறி உதறி ஆட்டியவாறு திரிந்த தில் அவரது நடிப்பின் வெற்றி தெரிந்தது.

எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிடும் சமயங்களில், உணவில் மொய்க்கும் ஈக்களை கலைப் பது போன்ற பாவனையில் கையை வீசி சூய் சூய் என்பார். அவருக்கு முன்னால் இருந்து சாப்பிடுபவர் கொஞ்சம் அசந்தால் போதும் அவரது, தட்டிலிருந்த முட்டை உட்பட ஏதேனும் பொரியல் போன்றவை மாதுரியின் கைவீச்சுடன் காணாமற்போயிருக்கும். என்ன நடந்தது என்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்க்க முன்னர், கைப்பற்றிய உணவை தன் வாயுள் ஒருவாறு அடைத்து விழுங்கிவிட்டு எம்மைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரிப்பார். சிரிப்பார் என்பதைவிட இளிப்பார் என்பதுதான் சரி. தன் தட்டில் இருப்பதைச் சாப்பிடும் பழக்கம் மாதுரியிடம் ஒரு காலமும் இருந்தது கிடையாது. இயக்கத்தில் அவர் எந்த வேலையையும் செய்யக் கூடிய போராளியாகத் தன்னை வளர்த்திருந்தாள். அதிகாரிகள் பயிற் சிக்கல்லூரியில் படித்து முடித்தபின் குறிப்பிட்ட காலம் கனரக ஆயுதப்பிரிவின் பயிற்சி ஆசிரியராக இருந்தார். 1991இல் மணலாறு 'மின்னல்', 1992இல் தொண்டைமனாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரை யிலான நூற்றைம்பது காவலரண்களைத் தாக்கியழித்த தாக்குதல், 1993இல் பூநகரி மீதான 'தவ ளைத்தாக்குதல்' 1996இல் மணலாற்றிலுள்ள ஐந்து இராணுவத்தளங்கள் மீதான தாக்குதல் என்பன வற்றில் தன் சிறப்பான முத்திரைகளை பதித்தார். சண்டையென்றாலும் அவர் நிற்குமிடத்தில் சிரிப் புக்குப் பஞ்சமிராது.

1996.04.19 அன்று பிற்பகல் சூரியகதிர் -2 இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி சண்டை நடந்து

eelamhouse.com

கொண்டிருந்தது தனது எல். எம். ஜியுடன் எதிரியை எதிர்பார்த்து தன்நிலையில் காத்திருந்த மாதுரி "சண்டையிலே மாயாவி விழுந்திடும். டெவிலைக் கூப்பிட்டு எல்.எம்.ஜியிலே விடுங்கோ"

என்று அருகிலிருந்தவரிடம் சிரிக்காமல் கூறினாலும், கேட்டுக் கொண்டிருந்தவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

மாதுரியின் எல்.எம்.ஜி அடியுடன் சண்டை தீவிரமாக நடந்துகொண்டிருந்தபோது எதிரியின் ரவை அவரின் மார்பைத் துளைத்துச் சென்றதில், அந்த இடத்திலேயே அந்தக் கல் நெஞ்சக்காரியின் மூச்சடங்கியது. "நான் செத்துப்போனா எப்பிடியாவது என்ரை பொடியை எடுத்துக்கொண்டு போய் அண்ணைக்குக் காட்டுங்கோ. கடைசி நேரத்தில் கூட என்னைப் பார்காட்டா, அவர் மன வேதனைப்படுவார்"

என்று மாதுரி சொன்னவராம். மாதுரியைத் தூக்கி கொண்டுவந்தவர் சொல்லிவிட்டு அழுதார்.

எந்நேரமும் எங்களைச் சிரிக்க வைத்தவர் தான் இப்படி அழ வைத்துவிட்டுப் போனார் என்பதை எங்களால் இன்னமும்....

நாட்டுப்பற்றாளர் பாக்கியமக்காவையும் அவர் பெற்ற இரண்டு பெண்பிள்ளைகளையும் நினைக்கும் பொழுதுகளில் நெஞ்சம் சிலிர்ப்பதென்னவோ உண்மைதான்.

மலைமகள்





eelamhouse.com





மேஜர் அகிலா
சித்திரா அம்பிகைபாலன்
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்
பிறப்பு - 24.04.1979
வீரச்சாவு - 03.11.1999
ஓயாதஅலைகள் - 03
நடவடிக்கையின் போது

# காட்டுப்புலிகள்

எமது விடுதலைப் போராட்டத்தில் பல திருப்பங்கள் ஏற்படக் கால்கோளாக அமைந்த ஓயாத அலைகள்- 03 சமர் தொடங்கிய அடுத்த நாள்.

1999.11.04. மேஜர் அகிலாவுடன் மேஜர் சோதியா படையணியின் கொம்பனி யொன்று நெடுங் கேணிச்சந்தியிலிருந்து புறப்பட்டு, குளவிசுட்டான் காட்டை ஊடறுத்துக் காவல் நிலைகளை அமைத் துக்கொண்டுசென்றது.

முதல் நாள் அதிகாலை ஒட்டுசுட்டானிலிருந்து தலைதெறித்த ஓட்டத்தில் வந்த பெருந்தொகைப் படையினர் குளவிசுட்டான் காட்டுக்குள் பதுங்கியிருந்தனர். புளியங்குளத்துக்கு போவதுதான் அவர் களின் முடிவாக இருந்திருக்க வேண்டும். அதற்குள் குளவிசுட்டான் காட்டினுள்ளும் புலிகள் ஊடு ருவியதை அறியாத இராணுவம் காட்டினூடே நகர்ந்துவர, இடையில் இவர்கள் நிற்க, சண்டை தொடங்கிவிட்டது.

காவல் நிலைக்கான இடங்கள் முழுமையாகத் தெரிவுசெய்யப்பட்டு ஆட்கள் விடப்பட்டு முடிய வில்லை. அரண்களுக்கான இடத்தில் விடப்பட்டவர்கள் தமக்கான காப்பரன்களை அமைக்கத் தொடங்கவில்லை. காப்பாக காட்டு மரங்கள் நின்றன. எனவே இராணுவத்தைக் கண்டவர்கள் தமக்கு வாய்ப்பான காப்புக்களைத் தேடிக்கொண்டு சண்டையிட்டனர். முன்னுக்குச் சண்டை தொடங்கி விட்டது. தொங்கல் வரை முழுப்பேருமே விடப்பட்டு முடிவதற்கிடையில், நிலைமைக்கேற்ப முன் னுக்கு நோக்கி நெருங்கியும் இடம் மாறியும் நின்று அணிகள் சண்டையிட்டதில், தொங்கலிலே மேஜர் அகிலா உட்படப் பத்துப்பேர் தனித்துவிடப்பட்டார்கள்.

eelamhouse.com



தமக்கும் ஏனையவர்களுக்குமான இடைவெளியைக் கணக்கிடவும் முடியலில்லை. அதற்குள் அவர்களுக்கும் சண்டை தொடங்கிவிட்டது.

ஒரு கனரக ஆயுதம்கூட இல்லாத நிலைமையில் நின்ற பத்துப்பேரும், தப்பியோடும் நோக்கங்கொண்ட படையினரின் பாய்ச்சல் நகர்வை எதிர்கொண்டனர். கதைத்துப் பேசிச் சண்டையிடவும் வாய்ப்பிருக்கவில்லை. பத்துப்பேருமே ஒரே நேரத்தில் சுடுவதைத்தவிர மாற்று வழியேயில்லை. அப்படியிருந்தும் ஓரிருமுறை அகிலாவின் குரல் வானலையில் வந்தது.

"பி.கே. யை அனுப்புங்கோ"

அனுப்புகின்ற நிலையில் யாருமேயில்லை. கனரக ஆயுதங்கள் ஏற்கனவே படையினரை நோக்கித் தீக்கியபடிதான் இருந்தன. இருக்குமிடத்தை விட்டுப் புறப்பட்டு அகிலாவிடம் போக, முன்னே நின்று சண்டையிடும் எதிரி ஒப்புதலளிக்கவில்லை.

இருக்கும் ரவைகள் முடியும்வரை அவர்கள் சண்டையிட்டனர். அந்தப் பத்துப் போராளிகளது சண்டைத் திறமையைக் குருதி தேங்கிக்கிடந்த இராணுவத் தலைக்கவசங்கள் பறைசாற்றின. வீழ்ந்து கிடந்து ஒன்பது பேரும் தமது காயங்களுக்குக் கட்டுப்போட்டு விட்டுத் தொடர்ந்தும் சண்டையிட்டதை குருதி தோய்ந்த பஞ்சணைகள் சொல்லின. கடும் காயங்களுடன் தப்பிய எஞ்சிய போராளியும் சொன்னார்.

இருவர் தமது உடல்களின் கீழ் கையெறிகுண்டுகளின் பாதுகாப்பு ஊசியைக் கழற்றி விட்டு வைத்திருந்தார்கள். எல்லோரும் வீழ்ந்ததும் நெருங்கிவந்த இராணுவம் ஒரு போராளியின் உடலை இழுக்க முயற்சிக்க, குண்டு வெடித்தது. இழுத்த இராணுவமும் இறந்து வீழ்ந்தது.

இவை வெற்றுடம்புகளல்ல
வெடிமருந்துப் பொதிகள்

மலைமகள்


eelamhouse.com



மேஜர் ஜிகிர்தா/நித்தியா
விக்கினேஸ்வரி தேவசுந்தரம்
பொத்துவில், அம்பாறை
பிறப்பு - 27.04.1970
வீரச்சாவு - 11.11.1993
பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான
'தவளைப்பாய்ச்சல்'
நடவடிக்கையின் போது

# வெண்சங்கு

பூநகரி படைத்தளம் மீதான தவளை நடவடிக்கையில் அவர் விழி மூடி இப்போது பன்னிரண்டு ஆண்டுகள். ஆனால் இப்போதும் ஜிகிர்தாவை நினைவு படுத்தினால், மூத்த போராளிகளின் மன ஆழத்திலிருந்து அவரின் மேன்மை மேலெழுகின்றது.

சுட்டாலும் கெடாத வெண்சங்கு அவர். எத்தகையான நெருக்கடியான சூழலிலும் தன் பெருந் தன்மையில் குறையமாட்டார். அம்பாறையிலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலைக்காடுகள் வழி யாகக் கால்நடையாக நாட்கணக்கில் பயணம் செய்துதான் மணலாற்றுக் காட்டுக்கு வந்து படைய தொடக்கப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். அவர் பயிற்சி பெற்ற நாட்களிலோ, காட்டிலே நடந்த ஏனைய பயிற்சிப் பாசறைகளில் தொடர்ந்து நின்ற நாட்களிலோ யார்மீதாவது அவர் சினந்ததாகவோ. அவர் மீது யாரும் சினக்கும் படி நடந்து கொண்டதாகவோ நினைக்கவில்லை.

லெப். கேணல் ராஜன் தலைமையில் நடாத்தப்பட்ட மேஜர் பசீலன் கல்லூரியில் அதிகாரியாகத் தேறி வெளிவந்தார் ஜிகிர்தா என்றழைக்கப்பட்ட நித்தியா.

இப்போது பூநகரி மீதான இராணுவ நடவடிக்கைக்கு எமது அமைப்புத் தயாரானது. அந்த நேரம் பூநகரிச் சண்டைக்குப் போகாதவர்களை விரல்விட்டு எண்ணலாம். எனும் அளவுக்கு முழுப்பேருமே பங்குகொண்ட தாக்குதல் அது. விடுதலைப் புலிகள் மகளிர் படையணி யாழ்ப்பாணத்திலும் மண லாற்றுக் காட்டிலுமாக இரு பகுதிகளாகப் பயிற்சியில் இறங்கியது.

மணலாற்றுப் படையணியின் பெண்களணி இப்போது விடுதலைப்புலிகள் மகளிர் படையணி யோடு இணைந்துகொண்டது. பூநகரித் தாக்குதலுக்கென அணிகள் மீளமைக்கப்பட்டபோது தமது அணிகளிலே புதிய அணிகளைச் சேர்த்துக்கொள்ள விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் அணி முதல்வர்கள் தயங்கியபோது எல்லோருக்கும் முன்மாதிரியாக ஜிகிர்தா வந்தார்.

"என்னிடம் தாருங்கள். நான் அவர்களோடு சண்டைக்குப் போகின்றேன்" என்றார். யார் யார் எந்த வழிகளால் தாக்குவது என இலக்குகள் பிரிக்கப்பட்டே பயிற்சிகள் நடந்தது. காட்டிலே கடும் பயிற்சி.

eelamhouse.com

பாரமான முதுகுச் சுமைகளோடு நீரோடைகளைக் கடந்து போய்வந்து, நீண்ட தூரம் நகர்ந்து, இரவிரவாகப் பயிற்சிதான். அசையாத நேர்மையுடைய ஜிகிர்தா தன் அணியினரையும் அப்படியே பேணிவந்தார்.

ஆயிரத்துக்கும் மேலான பெண்போராளிகள் பங்கெடுத்த தாக்குதல் அது. முதன் முதலாக விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் வேவுப்பிரிவு, தான் தேர்ந்தெடுத்த பாதைகளூடே தாக்குதல் அணிகளை வழிநடத்திச் சென்றது. அதிகளவில் .50 கலிபர் துப்பாக்கிகளையும், முதன் முதலாக ரீ 56 ரக கவச வாகனமொன்றையும், ஐந்துநீருந்து விசைப்படகுகளையும் நாம்கைப்பற்றிய பெருமை மிகு சண்டை அது.

ஆயிரத்துக்கும் மேலான பெண் போராளிகள் ஆயுதம் தரித்து அணிவகுத்து நின்றார்கள். அனைவர் முகங்களையும் உற்றுநோக்கினார் தலைவர் அவர்கள். இவர்களில் பலரை எனக்கு நன்கு தெரியும்.

“சங்க காலத்துத் தாய் தன் மகளை “சென்றுவா மகளே வென்று வா” என்று கூறிப் போருக்கு அனுப்பினாள். உங்களை நான் சென்று வா மகளே வென்று வா” என்று வாழ்த்தி அனுப்புகின்றேன்”

சென்றார்கள். வென்றார்கள். வந்தார்கள். ஜிகிர்தாவை தோளேந்தி வந்தார்கள்.

## மலைமகள்





eelamhouse.com

| |
|---|
| கப்டன் திலகா |
| ரதீஸ்வரி ராசதுரை |
| சேனையூர், திருகோணமலை |
| பிறப்பு - 18.05.1970 |
| வீரச்சாவு - 03.08.1991 |
| ஆ.க.வெ நடவடிக்கையின்போது |
| கட்டைக்காடு நேரடி மோதலில் |





# சிட்டுக்குருவி

குள்ளமான சிறிய உருவம். சிரிக்கும் முகம். அமைதியான சுபாவம். எல்லோருடைய மனங்களையும் கவர்ந்த, பழகுவதற்கு இனிய போராளி. கற்பனை செய்து பாருங்கள்.

உங்கள் மனதில் ஒரு உருவம் தெரிகிறதல்லா? நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். அதோ, அந்த உருவம் ஓடுவதைப் பாருங்கள். பாதங்கள் தரையில் படாதது போல் தோன்றுகிறதல்லவா? உடற்பயிற்சி செய்வதைப் பாருங்கள். எப்படி இவ்வளவு வேகமாகவும், லாவகமாகவும் உடலை வளைக்க முடிகிறது என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அவர்தான் திலகா. சிட்டுக்குருவி போல் துருதுருவென்று இயல்புடன் எப்போதுமே உற்சாக மாகத்தான் ஓடித்திரிவார். திலகாவிடம் பயிற்சிபெற்ற பெண் புலிகள் "திலகாக்கா மாத்திரம் எப்படி சோர்வில்லாமல் இப்படி சுறுசுறுப்பாக இருக்கிறார்" என்று ஆச்சரியப்படுவார்கள். "பயிற்சிப் பாசறையில் நாம் பயிற்சி எடுக்கிறோமோ அல்லது திலகாக்கா பயிற்சி எடுக்கிறாரா என்று ஐயமாக இருக்கும். ஏனென்றால் அவர் எந்நேரமும் ஓடித் திரிந்துகொண்டே இருப்பார்" என்று அவர்கள் சொல்லுவார்கள்.

களத்தில் கூட அவரது உற்சாகம் சிறிதும் குறையவில்லை. 1989ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் அமைப்போடு தன்னை இணைத்துக் கொண்ட திலகா, இதுவரை காலமும் பயிற்சி கொடுத்து படையணிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால், களம் செல்லும் வாய்ப்பு அவருக்கு கிட்டவில்லை. ஆனையிறவு மோதலே அவரது அவாவை நிறைவேற்றியது. வழமைபோல் படு உற்சாகமாகவே தன்குழுவை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு மோதலில் கடைசிக் கட்டம். திலகா தனது அணியுடன் களம் புகுந்தார். அகிலன் வெட்டையில் நின்ற இராணுவம் ஆனையிறவை நோக்கி

eelamhouse.com



முன்னேறத் தொடங்கியது. புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் கடும் மோதல் வெடித்தது. இராணுவம் அங்குலம் அங்குலமாக முன்னேற முயன்றது. இராணுவத்தினரின் நகர்வுகளுக்கு ஏற்ற வகையில், திலகா தனது அணியின் வியூகங்களை மாற்றி மாற்றியமைத்துப் போரிட்டுக் கொண்டிருந்தார். இராணுவத் தரப்பில் பலரை நாம் வீழ்த்தியபோதும் எம் பக்கமும் இழப்புக்கள் அதிகமாகவே இருந்தன. களத்தில் நிற்கும் எம்மவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் இராணுவத்தினது நகர்வு தடுக்கப்பட வேண்டும். திலகா உடனேயே தொலைத் தொடர்பு சாதனமூலம் தனது குழுவின் அணித் தலைவர்களை அழைத்தார்.

"முன்னுக்குப் போங்கோ, சளைக்காமல் அடிபடுங்கோ, வீரச்சாவடைந்த ஒவ்வொரு போராளியையும் மனதில் நினைச்சுக்கொண்டு போங்கோ. போய் அடிபடுங்கோ" என்று திரும்பத் திரும்பச் சொல்லி தன் குழுவை உற்சாகப்படுத்திக் கொண்டு சண்டைக்குத் தலைமை தாங்கினார். சண்டையும் தீவிரமடைந்தது.

இராணுவத்தினரின் துப்பாக்கி ஒன்றிலிருந்து புறப்பட்ட ரவை, திலகாவைத் துளைத்துச் சென்றது. தரையில் படாமல் பறப்பது போல் ஓடுகின்ற திருமலை மண்பெற்ற தவப்புதல்வி, அந்தப் பெரும் மணல்வெளியிலே சாய்ந்தார். அரை மயக்கத்திலிருந்த போதும் அவர் வாய், "செத்த ஒவ்வொரு போராளியையும் நினையுங்கோ. போய் அடிபடுங்கோ" என்றே கட்டளையிட்டுக்கொண்டிருந்தது.

வைத்தியசாலைக்குக் அவர் கொண்டுவரப்பட்ட வழியிலும் ஏதோ சொல்ல விரும்புவது போல் அவரது வாய், திறந்து திறந்து மூடியது. ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை.

வைத்தியசாலைக்கு அவர் கொண்டுவரப்பட்ட பின்னரும் உயிர் பிரியும் இறுதி நேரத்தில் கூட அவர் வாய் எதையோ முணுமுணுத்தது. கடைசிநேரத்தில்கூட, "செத்த ஒவ்வொரு போராளியையும் நினைச்சுக் கொண்டு அடிபடுங்கோ" என்று சொல்லத்தான், அவர் விரும்பியிருப்பார்.

மலைமகள்



eelamhouse.com

கடந்து திரும்பிவந்த மைதிலி வரலாம். வரவேண்டும். என்று அவர்கள் வரும் வழியைப் பார்த்திருந்தார்.

தூரத்தே பற்றைகளுக்கிடையிலே சில உரு வங்கள் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டி ருப்பது தெரியத் தொடங்க மைதிலிதான் வந்து கொண்டிருக்கின்றார் என்பது எல்லோருக்குமே புரிந்துவிட சந்தோசத்தில் மனமெல்லாம் நிறைந்துபோகப் பார்த்துக் கொண்டே நின்றார் கள்.

தங்கள் வரவுக்காக சிறப்புத்தளபதி வந்து காத்து நின்றதில் மைதிலி சந்தோசத்தில் திக்கு முக்காடிப்போனார். அத்தனை நேரமும் தாம் பட்ட சிரமங்களெல்லாம் அந்த நிமிடத்தில் கரைந்து போயின.

* * *

பாதுகாப்பு ஊசியைக் கழற்றிவிட்டு குண்டை வைத்திருப்பது மைதிலிக்கு இதுதான் முதற்தடவையுமல்ல. இதுவே கடைசிமுறை யுமல்ல. முன்னர் யாழ், பலாலியைச் சூழவுள்ள காவலரண் பகுதியில் நடந்த சண்டையில் கால்முறிந்த போதும், பின்னர் சூரியகதிர்-02 நட வடிக்கையில் வாயில் காயமடைந்து கீழ்த் தாடைப் பற்களை இழந்த நிலையிலும் தான் தனித்துப் போனபோது தன் உடலின் கீழே பாதுகாப்பு ஊசி கழற்றப்பட்ட நிலையில் குண்டு களை வைத்திருந்தார். ஏதேனும் சிக்கல் கார ணமாக மைதிலியை மீட்க எம்மவர்கள் போக முன்னர் எதிரி நெருங்கியிருந்தால், நிச்சயம் அவன் தொலைத்திருப்பான்.

இரவு பகலென்றில்லாமல் எப்போதும் சண் டைக்குத் தயார் நிலையிலிருந்த போராளி என்று மைதிலியைக் குறிப்பிட்டால் அது மிகை யில்லை. தாக்குதலணியின் மேலாளராக அவர் பணியாற்றிய காலங்களில் காவற்கடமையை சோதிப்பதற்காக அவர் செல்லும் போது துப் பாக்கியின் தொங்குபட்டி அவரது கழுத்தைச் சுற்றி போடப்பட்டு, எந்த நிமிடமும் தோளுக்கு உயர்த்திக் குறி பார்க்கக் கூடிய நிலையில் துப்பாக்கி முன்புறமாகத் தொங்கும். துப்பாக்கி யின் தேர்வு நெம்பு தனிச்சூட்டு நிலையில் விடப்பட்டு வலது கை துப்பாக்கிக் கைபிடியைப் பிடித்திருக்க, வலது கை ஆட்காட்டி விரல் விசை



eelamhouse.com



eelamhouse.com

வில்லருகே இருக்கும்.

"ஆமியைக் கண்டால் உடனேயே சூடுதான். அவனைக் கண்டாப்பிறகு சேஃப்டி தட்டி எய்ம் பார்த்தெல்லாம் மினக்கெடக்கூடாது. எங்கடை ஒரு செக்கன் தாமதமும் எதிரிக்கு சாதமாகிவிடும்" என்பார். தன்னைப்போலவே எங்களையும் துப்பாக்கியைக் கழுத்தில் தொங்கவிடப்பழக்கினார்.

"தேவையெண்டால் உடனேயே உயர்த்திச் சுடலாம். இல்லாட்டா அப்பிடியே விட்டிட்டு ரெண்டு கையையும் வீசிக் கொண்டும் போகலாம்" என்றார். செய்தும் காட்டினார். ஒவ்வொரு விடயத்திலும் முன்யோசனையும் அவதானமும் மிக அதிகம். தன் துப்பாக்கி மழையில் நனையாமலிருக்க ஒரு உறை தைத்து வைத்திருப்பார். அதன் அமைப்பின் படி துப்பாக்கிமட்டும் மூடப்பட தொங்குபட்டி வெளியில் இருக்கும். அது பழுதடைந்த பின் இன்னொன்று புதிதாக தைத்தார். அது எப்படியென்றால் துப்பாக்கியின் தாழ்பாள் கைபிடி வெளியில் நிற்கக்கூடியவாறு ஒரு ஓட்டை. தொங்குபட்டி முன்புபோல வெளியே தொங்கும். புதிய உறையில் துப்பாக்கியை வைத்து 'ஸிப்' பை இழுத்து மூடியவாறே 'எப்படி செற் - அப்' மழை பெய்யிற நேரம் ஆமியைக் கண்டால் உறையைக் கழட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இப்படியே சுடலாம்" என்று சொன்னவர் உறையால் மூடப்பட்ட துப்பாக்கியை மெல்லத் தடவியவாறே ஆழமாகப் பார்த்தார். பின் மெதுவாக, "இன்னும் ஒரு சின்னவேலை செய் திருக்கலாம். ரவுன்ஸ் அடிக்கிற நேரம் கொக்கிங் காண்டில் பின்னுக்கு அசைகிறதுக்கு இடைவெளி விட்டுத் தைச்சிருக்கலாம். இப்பதான் யோசனை வருது. பரவாயில்லை. அடுத்தமுறை தைப்பம்" என்றார். "என்ன மைதிலி எல்லாப் பக்கத்தாலையும் ஒவ்வொரு ஓட்டை வைச்சு கடைசியாக ரைபிளே நனையப்போகுது" என்று சும்மா சிரித்தாலும் மைதிலியின் ஆழமான சிந்தனை பிரமிப்பைத் தந்தது. (அந்த இடைவெளி இல்லாவிட்டாலும் உறையைக் கிழித்தவாறு தாழ்ப்பாள் அசைந்து கொள்ளும். அதில் ஒரு சிக்கலுமிருக்கவில்லை) இந்தக் கூர்மையான பார்வையையும் ஆழமான சிந்தனையும் நீண்டகால வேவு அனுபவத்தில், தலைவன் வளர்ப்பில் மைதிலியிடம் வந்து சேர்ந்தவை.

எதிரி நிலைகளின் தூரங்களை கண்ணால் கணித்து தரவு எடுப்பதை அனுமதிக்கவே மாட்டார். அவரது அணியினர் கையோடு 5 மீற்றர் நீளமான கயிறு ஒன்றை எடுத்துச் செல்வர். எதிரியின் காவல ரண்களுக்கு முன்னால் அமைக்கபட்டிருக்கும் மண் அணையின் விளிம்பில் பிடித்து அளக்கத் தொடங்குவார்கள். அப்படியே எடுக்க வேண்டிய தூரங்களை எல்லாம் அந்தக் கயிற்றுத் துண்டை வைத்து வைத்தே அளப்பார்கள்.

எத்தனை அடுக்கு முள்வேலி என்பதைத் கைகளால் தொட்டுத்தான் எண்ண வேண்டும் தள்ளி நின்று கண்களால் எண்ணும் வேலையே கிடையாது. ஓரிடத்தில முள்வேலியைத் தொட்டு எண்ணி விட்டு, பின் வலப்புறமும் இடப்புறமும் கொஞ்சத்தூரம் இடைவெளி விட்டு விட்டு எண்ணிப் பார்த் துத்தான் எத்தனை அடுக்கு கம்பிவேலி என்பதை உறுதிப்படுத்தி, மைதிலி வரைபடம் வரையத் தொடங்குவார். தகவல்களை உறுதிப்படுத்தாமல் ஒரு நாளும் தரவுகளை தயாரித்ததில்லை.

எண்ணிலடங்காத இரவுகள் மைதிலி தன் அணிகளுடன் எதிரியின் நடவடிக்கைகளை அவ தானிப்பதற்காக பகைக் குகைக்குள் நுழைந்து அவதானித்துவிட்டு, வந்த சுவடு தெரியாமலே திரும்பியிருக்கிறார்.

காலன் அவரது காலடிவரை வந்தும், வேளை வரவில்லையென்று திரும்பிப்போன நாட்கள் அநேகம்.

"நான் இனிச் சாகமாட்டன். ஏனெண்டா சாவை நான் கனதரம் கடந்து வந்துட்டன்"

eelamhouse.com

என்று சொல்லிச் சிரிப்பார். ஒரு முறை எதிரிப் பிரதேசத்தைக் கண்காணிப்பதற்காக மைதிலி சரசரவென்று ஒரு மரத்தின் உச்சியில் ஏறி, நிமிர்ந்து பார்த்தபோது திகைத்துப் போனார். எமது பிரதேசத்தைக் கண்காணிப்பதற்காக பக்கத்து மரத்தில் ஏற்கனவே ஏறிநின்ற இராணுவ வேவுக்காரன் ஒருவன் தன்னையே வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்ததை மரத்தில் ஏறியபின்பே மைதிலி கண்டார். இருவருக்குமே கொஞ்சநேரம் என்ன செய்வதென்று தெரியவில்லை. முதலில் தன்னைத் திடப்படுத்திக் கொண்ட மைதிலிதான். எதிரி நின்று நிதானித்து, மேலதிக இராணுவத்தை வரவழைத்து சுற்றிவளைத்து... என்று நிலமை மோசமடையமுன் ஏறிய வேகத்திலேயே இறங்கத் தொடங்கினார். எதிரியும் வேகமாக இறங்கத் தொடங்க. அவனுக்கு முன்பே நிலத்தை தொட்ட மைதிலி புயலாக வெளியேறி விட்டார்.

மைதிலி தன்னுடைய ஆட்களுடன் பதுங்கிப் பதுங்கிப் போக, இவர்களைப் போலவே பதுங்கி பதுங்கி வந்து கொண்டிருக்கும் எதிரியின் வேவு அணியில் முட்டி முகத்துக்கு முகம் சந்தித்துவிட்டு, மின்னலாக இடம்மாறிய நாட்கள் அநேகம். கை குலுக்கவரும் காலனுக்கு பிறகு சந்திப்போம். என்று மைதிலி கைகாட்டிவிட்டு வருவது தான் வழமை.

முடியாது, இயலாது என்ற சொற்கள் மைதிலியின் அகராதியிலேயே இல்லை. யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் வெற்றிலைக்கேணி இராணுவத் தளத்தைத் தாக்கி மூன்று பாதை எடுக்குமாறு பத்துநாள் காலக்கெடு கொடுக்கப்பட்டது. வேலையை கொடுத்தது ஆண் போராளிகளின் பொறுப்பாளர். இவர்களால் இதைச் செய்ய முடியுமா என்ற நம்பிக்கையே இல்லாமல் அரைமனதுடன் அவர் வேலை தந்ததில் மைதிலிக்குச் சரியான கோபம்.

"எங்களைப்பற்றி எல்லோரும் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்?" என்று அணிகளைக் களமிறக்கிய மைதிலி மூன்றே நாளில் மூன்று பாதைகளையும் எடுத்துவிட்டு வரைபடத்தைக் கொடுத்தபோது அந்தப் பொறுப்பாளர் மலைத்துப் போனார். அதன் பின் எந்த வேவு நடவடிக்கையென்றாலும் அவர் மைதிலியின் அணியை கூப்பிடத் தவறியதேயில்லை.

வேவுப் புலிகளை தன் பிள்ளைகளாக நேசித்த மைதிலி, கரிய புலிகளாய் நடக்கும் அண்ணனின் தங்கையர் எல்லோரையும் ஒரு தாயாகவே நிர்வகித்தார். அந்த வேலைக்கென மைதிலியைத் தேர்ந்தெடுத்ததும் தலைவர்தான்.

கரும்புலிகளின் பயிற்சிகள் மிகக் கடினமானவை. குறிக்கப்படுகின்ற நேரத்திற்குள் ஒவ்வொரு பயிற்சியும் செய்து முடிக்கப்பட வேண்டும்.

"உங்களாலை முடியும். செய்யுங்கோ. நல்லாச் செய்யுங்கோ. நல்லாச் செய்யுங்கோ"

என்று உற்சாகப்படுத்தியவாறே நொண்டி நொண்டி அவர்களின் பின்னால் ஓடித்திரிவார். சண்டையொன்றில் முறிந்து பொருத்தப்பட்ட வலது கால் சற்று வெளிப்புறம் நோக்கி வளைந்தபடி கொஞ்சம் கட்டையாக இருக்கும். இந்தக் காலில் இரண்டு செருப்புக்களை ஒட்டி அணிந்து தன் உயரத்தைச் சமப்படுத்திக் கொள்வார். ஒட்டப்பட்ட செருப்புடனேயே ஓடித் திரிந்தார். இரண்டு செருப்புக்களின் பாரத்தாலும் அதிக நடையாலும் இரண்டு மாதங்களுக்கு மேல் செருப்புவார் அறமால் பாவித்ததாக சரித்திரம் இல்லை. சட்டை ஊசியைக் குத்தியும் செருப்பில்லாமலும் மைதிலி நடந்த நாட்கள்.

கரும்புலிகளுக்கு விடிய விடியப் பயிற்சி நடக்கும். எல்லாம் முடியும் வரையில் அவர்களுடனே மைதானத்தில் நின்று, இருப்பிடம் திரும்பி களைப்புடன் அவர்கள் உறங்கிவிட, தேநீர் தயாரித்து


eelamhouse.com



சிற்றுண்டியுடன் வந்து எழுப்பிக் கொடுத்து, அவர்களின் ஒவ்வொரு தேவையையும் உணர்ந்து கவனித்து, அவர்களின் ஒவ்வொரு திறமையையும் கண்டு ஊக்குவித்து, இலக்கு நோக்கி பகைக் குகைக்குள் அவர்கள் பயணிக்கும் போது எதிரியின் கடைசி முட்கம்பி தடைவேலி வரை போய் விடை கொடுத்து, நேற்று வரை தன் கையால் சோறு உண்டவர்கள் காற்றாகிப்போன பிரிவைத் தாங்கவேமாட்டாமல் கரும்புலியாகப்போகும் தனது விருப்பத்தைத் தலைவரிடம் தெரிவித்து...

* * *

ஓயாத அலைகள் -02 முடித்து அப்போது நாங்கள் கிளிநொச்சியில் நிலை கொண்டிருந்தோம். நல்ல மழைகாலம். அருவியெல்லாம் பெருகியோட, மரங்கள் அடிக்கடி தம் ஆடைகளை அலசிச் சுத்தம் செய்து கொண்டிருந்தன. மரங்களின் அருகே போனால், காற்றோடு கை கோர்த்து எம்மீது பன்னீர் தெளிக்கும். இந்த இயற்கை அழகில் லயித்துவிடும் மைதிலி.

“தமிழீழம் சரியான வடிவு எண்டு எப்ப உலகத்துக்குத் தெரியப்போகுதோ?” என்றவாறு நடப்பார். கார்த்திகைப் பூவைக் கண்டால் அப்படியே நின்றுவிடுவார். “கார்த்திகைப் பூவைப் பார்த்தால் கரும்புலி மேஜர் நிலவனின்ரை நினைவு தான் வரும். நிலவன் இப்படித்தான் இயற்கையை ரசிப்பான். “கார்த்திகைப் பூக்கள் பூத்திடும் மாதம் நடந்தீரே” எண்டு நிலவன் எழுதின பாட்டு எவ்வளவு உண்மையானது. கார்த்திகைப் பூவைக் கண்டால் நிலவனுக்கு மாவீரன்ரை நினைவு வரும். எனக்கு நிலவனின்ரை நினைவும் சேர்த்து வருது”

மைதிலியில் மிகவும் மதிப்பு வைத்திருந்த நிலவன் தான் எழுதும் ஆக்கங்களை ‘புலிகளின் குரல்’ வானொலிக்கு அனுப்ப முன் மைதிலியிடம் காட்டிச் சரி பார்பார். தான் வீரச்சாவடைந்த பின் தனக்கு கவிதை எழுதுமாறு மைதிலியிடம் அடிக்கடிசொன்னார். நிலவன் வீரச்சாவடைந்தபோது மைதிலி கிளிநொச்சியில் தாக்குதல் அணியுடன் நின்றதால் போக முடியவில்லை. ஆனால் நிலவனுக்காக மைதிலி எழுதி வானலையில் ஒலிபரப்பான கவிதை நிச்சயம் நிலவனின் ஆன்மாவுக்கு கேட்டிருக்கும்.

ரணகோஷ - 05 ஒரு சவாலான சண்டை. மன்னார் மாவட்டத்தில் தன்னை நிலை நிறுத்த ஜெனரல் வசந்த பெரேரோ எண்ணியபோது எம்மை நாம் நிலை நிறுத்திய சண்டை இது. அமெரிக்காவில் சிறப்புப் பயிற்சி பெற்று வந்திருந்த வசந்த பெரேரோ பள்ளமடு போன்ற பெரு மரங்கள் அதிகமற்ற, சிறுசிறு பற்றைகளைக் கொண்ட வெளியான நிலப்பகுதியில், இப்படி



eelamhouse.com

நகர்ந்து முன்னேறலாம் என்று தன் மூளையில் உதித்த திட்டத்தின்படி படைகளை நகர்த்தி வர, அவர்களின் மூக்கை உடைத்தவர்களில் மைதிலியும் ஒருவர்.

எதிரியணி முன்னேறப் போகின்றது என எதிர்பார்த்து, அதற்கான தயார்ப்படுத்தலில் முழுமையாக ஈடுபட்டு, மேஜர் கஜேந்தி, கப்டன் மனோ போன்ற ஆற்றலும் துணிவும் தன்னம்பிக்கையும் கொண்ட பொறுப்பாளர்களின் உதவியோடு எதிரியை எதிர்கொண்டு, பலத்த உயிரிழப்பையும் காயத்தையும் ஏற்படுத்தி, ரணகோஷ நடவடிக்கைக்கே முற்றுப்புள்ளி வைத்ததில் கணிசமான பங்கு மைதிலியுடையதே.

சிறுவயதிலிருந்தே தன்னில் மிகப் பாசம் வைத்திருக்கும் தம்பி இளம் வயதில் திடீரென இறந்ததும், பக்க வாத நோயால் படுக்கையிலிருந்த தாயை பராமரித்த தந்தை திடீரென இறந்ததும், அதைத் தொடர்ந்து தாயைப் பராமரிப்பதற்காகவும் வீட்டை நிர்வகிப்பதற்காகவும் பள்ளிப்படிப்பை சின்னத் தங்கை இடைநிறுத்தியதும் மைதிலியைப் பலமாகத் தாக்கியிருந்தன.

வன்னியிலே தங்கியிருந்த குடும்பம் ஊர் திரும்ப விரும்பிய போது அது தனக்கு விருப்பமில்லை என்றாலும் மைதிலி தடுக்கவில்லை. தாம் விரும்பிய இடத்தில் அவர்கள் நிம்மதியாக இருக்கட்டும் என்று விடை கொடுத்தார். அவர்களின் நினைவைச் சுமந்தவாறு களங்களில் நின்றார்.

"இந்த ஆனையிறவை நாங்கள் பிடிக்கவேணும். கனபேரை ஆனையிறவிலதான் குடுத்திருக்கிறம். நெடுக இப்படி குடுத்துக் கொண்டிருக்கேலாது. கெதியா அடிச்சுப் பிடிக்க வேணும்"

என்று எங்கள் முன்னணிக் காவலரன் ஒன்றில் நின்று பரந்தன் இரசாயனத்தொழிற்சாலைக் கட்டிடத்தைப் பார்த்து 1998 இல் கூறிய மைதிலியின் கனவு போலவே 1999இல் ஓயாத அலைகள்- 03 ஆக விரிந்த ஆனையிறவுக் களமுனையில், மைதிலியை நாங்கள் இழந்தோம்.

ஆள் விழுங்கிப் பூதமாய் பரந்து கிடந்த ஆனையிறவில் போய் முடிந்த மேஜர் மாதுரியின் உடலை மீட்டு வரவெனச் சென்ற மைதிலி. இனி எக்காலத்திலுமே நாம் மீட்கப் போக முடியாத தூரத்துக்குப் பயணம் போனார்.

ஆனையிறவு இராணுவ வலயம்!

எத்தனை முறை இதனுள் மைதிலியின் காற்தடங்கள் பதிந்திருக்கும். 1991இல் ஆகாய கடல் வெளிச் சமரில் எமக்கு அதிக இழப்பு, ஏற்பட்ட போது உருவான 'ஆனையிறவை அழித்தொழிக்கும் கனவு' தொடர்ந்து கிளாலிக் கடல்நீரேரியில் சிறிலங்கா கடற்படையால் எமது மக்கள் வெட்டப்பட்டு பிணங்களாய் மிதந்த வேளைகளில் அவரின் உயிர் மூச்சானது. 1998-02-01 இல் கிளிநொச்சி- பரந்தனில் நாம் ஊடுரவிச் சண்டை செய்த போது ஆனையிறவில் தமக்குரிய இலக்குகளைத் தேடிப்போய் வெடித்த கரும்புலிகள் மேஜர் ஆசா, மேஜர் மங்கை, கப்டன் இந்து, கப்டன் உமையாள், கப்டன் செங்கதிர், கப்டன் நளா ஆகியோரின் பிரிவுடன் வெறியாகியது. அதே ஆண்டிலேயே கரும்புலி மேஜர் நிலவனும் ஆனையிறவினுள் வீரச்சாவைத் தழுவிக்கொள்ள மைதிலியின் கோபம் கட்டுக்கடங்காமல் போனது. இனிமேலும் ஆனையிறவில் பகைத்தளம் இருப்பதை அனுமதிக்கமுடியாது என்ற மைதிலி ஆவேசப்பட்டது அப்போதுதான்.

எல்லோரது கனவுகளையும் சுமந்து களம் புகுந்த மைதிலி

"எங்களூர் புகுந்த பகைவரைக் கொன்றார்.
எங்கள் தலைவனின் இதயத்தை வென்றார்"

மலைமகள்



eelamhouse.com



லெப்.கேணல் சுதந்திரா
மரியமைந்திலி ஜேசுதாசன்
யாழ்ப்பாணம்
பிறப்பு - 24.12.1971
வீரச்சாவு - 25.04.2001
தீச்சுவாலை - 01 எதிர்நடவடிக்கையில்
முகமாலையில்

# எல்லோரதும் எடுகோளாய்

அது ஒரு சிறப்பு அணி. அதி சிறப்பு அணி. காட்டின் சருகுகள் காலில் மிதிபடும் ஓசைகூட எழும்
பாது பதுங்கி நகர்ந்து, பார்வையை கூர்மையாக்கி இரைதேடி, பொருத்தமான இலக்கை மட்டுமே
வேகப் பாய்ச்சலில் பாய்ந்து தாக்குகின்ற சிறுத்தை போன்றது அந்தச் சிறப்பு அணி. தேர்ந்
தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட அதன் உறுப்பினர்களும் சிறுத்தைகளை ஒத்தவர்களே. அடித்
தால் இலக்குத் தப்பாது. தப்ப விடக்கூடாது. மனிதர்களைச் சிறுத்தைகளாக்குகின்ற அந்த மாபெரும்
முயற்சியில் சுதந்திரா முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த நாட்கள் அவை. சிறப்பு அணிக்குரிய படைய
தொடக்கப் பயிற்சித் தளத்தின் பொறுப்பதிகாரி அவர்.

அப்போது தான் வீட்டிலிருந்து வந்த இளம் பெண்களை, 'உன்னால் முடியாது' என்று சமூகம்
சொல்வதை நம்பி கடினமானவை என்று கருதப்படுகின்ற பணிகளை அப்பாக்கள், அண்ணாக்களின்
உதவியோடு செய்தவர்களை, அவர்கள் கனவில் கூட கண்டிருக்க முடியாத வாழ்க்கைக்கு அழைத்
துப் போவது அவ்வளவு எளிதல்ல.

அந்தக் கடின பணியைச் சுதந்திரா செய்து முடித்தார். அவர்களுக்கு ஒவ்வொரு விடயமாகச்
சொல்லிக்கொடுத்தார். எது ஏன் செய்யப்படுகின்றது என்பதைப் புரிந்து கொண்டு அவர்கள் செய்த
தனால், தலைவர் அவர்களின் எதிர்பார்ப்புக்கமைய அவர்களால் செயலாற்ற முடிந்தது. அங்கே
எல்லாமே நேரக்கணக்குப்படிதான். குறிப்பிட்ட நேரத்தினுள் எல்லோரும் உணவறையில் ஒன்றாக
இருக்கையில் அமர்ந்து, பரிமாறப்படுகின்ற அதிகரித்த அளவிலான உணவை, கீழே சிந்தாமல்,
மிச்சம் மீதி விடாமல் சாப்பிட்டே ஆகவேண்டும். மேற்பார்வையாளரின் விழிகள் அனைவரையும்,
அனைத்தையும் கவனித்துக் கொண்டேயிருக்கும். நேரம் கடந்தும் சாப்பிடமுடியாமல் திணறுபவர்கள்
சுதந்திராவின் குடில் வாயிலில் நின்றவாறு சாப்பிட்டு முடிக்க நேரிடும்.

அவர்களின் அதிகரித்த பயிற்சியால் எப்படி சக்தி இழக்கப்படுகின்றது. என்றும், அதை ஈடுசெய்ய

eelamhouse.com

அவர்கள் அதிகம் சாப்பிடவேண்டிய தேவைபற்றியும் உள்ளிருந்து ஒலிக்கும் சுதந்திராவின் குரல் விளக்கம். ஒரு முறை நின்றவர்கள் மறுபடி குடில் வாயிலில் நிற்க வேண்டியிராது.

காலையில் ஓடு பாதைக்குப் போகுமுன் குடிக்கவேண்டிய அரை அவியல் முட்டை, வந்த புதிதில் பலருக்குச் சிக்கலாகவே இருக்கும். ஏன் முட்டை குடிக்க வேண்டும் என்று விளக்கியவாறே சுதந்திரா தன் கையாலேயே முட்டைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டிருப்பார்.

ஓட்டம் ஆரம்பமாகும் புள்ளியில் சுதந்திரா நிற்பார். இரண்டாவது, மூன்றாவது சுற்று ஓடும் போதும் அதிலேயே நிற்பார். அவர் அதிலேதான் நிற்பார் என்ற எண்ணத்தில் இடைவெளியில் எவரேனும் நடக்கமுனைந்து நாலு அடி எடுத்து வைத்துவிட்டு நிமிர்ந்தால், எதிரேயுள்ள மரத்தோடு சாய்ந்தபடி சுதந்திரா நிற்பார். எந்த இடைவெளிகளால் எப்படி வருகின்றார் என்பது ஒருவருக்கும் விளங்காது. திடீர் திடீரெனக் காட்சி தருகின்ற சுதந்திராவின் வருகையே எல்லோரையும் ஓடவைக்கப் போதுமானது.

பிழைகள் நடந்த வேளைகளில், கோபத்தை ஏற்படுத்தக் கூடியமாதிரி ஏசாமல், தாம் உணர்ந்து கொள்ளக்கூடியவாறு சுதந்திரா கதைத்ததாகவே அவரைப்பற்றி சிறப்பு அணியினர் இப்போதும் கூறுகின்றார்கள்.

போராளிகள் தவறுவிட்டால், அந்த அணித்தலைவர்களை கூப்பிட்டுக் கண்டிப்பார். கடுமை யானவர்களுக்குக் கடுமையாக, இலகுவானவர்களுக்கு எளிமையாக, அவரவர் இயல்புக்குகேற்ப ஒவ்வொருவரையும் அணுகுகின்ற சுதந்திரா, 1993ம் ஆண்டின் இறுதியில் சிறப்பு அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதிலிருந்து 1995ஆம் ஆண்டின் இறுதிவரை ஏழு அணிகளுக்கு சிறப்புப் பயிற்சியின் முன்னோடி படைய தொடக்கப் பயிற்சியை வழங்கியிருந்தார்.

கல்விப் பொதுத் தராதர (உ-த) கலைப்பிரிவு மாணவியாக இருந்த சுதந்திரா 1989ம் ஆண்டில் எமது அமைப்பில் இணைந்து கொண்டார். இந்திய வல்லாதிக்க இராணுவம் சூழ்ந்திருக்க, மணலாற்றுக் காட்டினுள்ளே தலைவர் அவர்களின் எதிர் பார்ப்புக்கேற்ற வகையில் மேஜர் சோதியா, மேஜர் சஞ்சிகா முதலானோர் பெண் போராளிகளுக்கென உருவாக்கிய 'விடியல்' பாசறையில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது அணியில் தனது படைய தொடக்கப் பயிற்சியை நிறைவு செய்த சுதந்திரா, 1990இன் ஆரம்ப நாட்களில் இந்தியப் படையினரின் வெளி யேற்றத்தோடு, மகளிர் படையணி காட்டுக்குள்ளிருந்து நாட்டுக்கு வருகை தந்தபோது, வெளி வந்திருந்தார்.

ஆரம்ப நாட்களில் படையணியின் களஞ்சியப் பொறுப்பாளராகவும், அறிக்கையாளராகவும் பணியாற்றியவர், 1990லேயே பலாலி - கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறு அணியொன்றின் வழிநடத்துனராகவும் செயற்பட்டார்.

1991இல் ஆனையிறவு மீதான ஆகாய கடல்வெளி நடவடிக்கையின் முடிவில், அதிகாரிகளுக்கான சிறப்புப் பயிற்சிக்கற்கை நெறிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லெப். கேணல் ராஜன் அவர்களால் நடாத்தப்பட்ட அந்த அதிகாரிகள் கல்லூரி ராஜனைப்போலவே ஒழுக்கமும் கண்டிப்பும் நிறைந்தது தான். கட்டாயம் சுட்டு ஆறிய நீர்தான் குடிக்கவேண்டும். குளிர்பானம் தயாரிப்பதாயினும் அதில்தான். எதைக் குடித்தாலும் நோயே வராத உயர் எதிர்ப்பு சக்தி வாய்ந்த சுடவைத்த நீர் எம்மவர்களுக்கு சுவை குறைந்திருப்பதாகத் தோன்றியது. ராஜனின் ஒப்புதலைப் பெறாமலேயே ஒரு நாள் சுடவைக்கப் படாத, அதாவது சுவையான நீரில்குளிர்பானத்தைத் தயாரித்து எல்லோருக்கும் கொடுக்க, வந்தது வில்லங்கம். வயிற்றோட்டத்தால் அவதியுற்ற சுதந்திராவால் எல்லோரும் அகப்படவேண்டிய ஏது

eelamhouse.com



நிலை தோன்றவே, அன்றோடு பச்சைத் தண்ணீரைக் கைவிட்டார்கள் சுதந்திராவைத் திட்டியவாறே.

எவருமே எதிர்பாராவண்ணம் பேரிடியாய் நிகழ்ந்த லெப். கேணல் ராஜனின் வீரச்சாவோடு தமது பயிற்சியை இடை நிறுத்திய அதிகாரிகளுக்கு உடனேயே பணி காத்திருந்து. 1992இல் தொண்டை மானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையான நூற்றைம்பது காவலரண் அழிப்பு நடவடிக்கையில் பங்கேற்ற விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் அணிகளின் நிர்வாகப் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது. அது தான் முதல் அனுபவம் என்றாலும், சிறப்பாகவே தன் பங்கை ஆற்றியிருந்தார் சுதந்திரா.

நடவடிக்கையின் பின்னும் தாக்குதல் அணிகளோடே பெரும் பொழுதைக் கழித்த லெப். கேணல் சுதந்திரா, 1993 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் வரலாற்றுப் பக்கங்களிலிருந்து மறைந்து போனார். முடியாதது என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கும் போதே அதை முடித்துக் காட்டுகின்ற எமது தலைவர் அவர்கள் மிகுந்த நம்பிக்கை யோடு பெண் போராளிகளை மட்டும் கொண்டதாக சிறுத்தைகளின் வேகங்கொண்ட ஒரு சிறப்பு அணியை 1992 இலே உருவாக்கினார். அது 1993 இன் கடைசிப் பகுதியில் சுதந்திராவை உள் வாங்கிக்கொண்டது.

1995 பிற்பகுதிவரை படைய தொடக்கப் பயிற்சியோடே நின்ற சுதந்திராவுக்கு. மறுவருடமே ஒரு புதிய பணி தரப்பட்டது. படைய தொடக்கப் பயிற்சியை முடித்திருந்த குறிப்பிட்ட தொகைப் போராளி

eelamhouse.com



களுக்கு மேலதிகப் பயிற்சி வழங்கி, சிறப்பு அணியினரின் இரண்டாவது தலைமுறையை உருவாக்கும் பொறுப்பு இப்போது சுதந்திராவிடம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி நோக்கிய மாபெரும் இடப்பெயர்வோடு சிறப்பு அணி வன்னியின் காடுகளுள் புகுந்துகொண்டது. பொருட்களை ஏற்றிவந்த ஊர்திகள் காட்டுக்கு வெளியே நின்றுகொள்ள, அத்தனை பொருட்களையும் போராளிகள் தலையிலும் தோளிலும் காவிச் சென்றனர். அதற்கிடையிலேயே காட்டுக்குள் சுதந்திராவின் அணியினர் காட்டுத்தடிகளால் குடில்கள் அமைத்து, புற்களால் கூரை மேய்ந்து களஞ்சிய அறைகளைத் தயார் செய்துவிட்டனர். பொருட்கள் வருவதும், சுமப்பதும், அடுக்குவதும் இரவுபகலாக நடந்து கொண்டிருந்தது. பெருந்தளங்களே இடம்மாறிய காலமல்லவா அது? சுதந்திரா தனது அணியினரை மூன்றாகப்பிரித்தார். ஒரு அணி குடில்களை அமைத்து கிணறு வெட்ட, ஒரு அணி பொருட்களைச் சுமக்க, ஒரு அணி தனது சிறப்பு பயிற்சியைச் செய்துகொண்டிருக்கும். இது மூன்று அணிகளுக்கும் சுழற்சி முறையில் வரும். இடப்பெயர்வு நடந்ததே தவிர, பயிற்சிகள் இடைநிறுத்தப்படவில்லை.

ஒரு பிஸ்கட் பேணியுடன் ஒரு அணி ஒருநாள் முழுவதும் பயிற்சி எடுத்த நாட்கள் அவை. சில நாட்கள் அதுவும் இருக்கவில்லை. அப்படியான நேரங்களில் பாகையையும் தூரத்தையும் கொடுத்து நீண்ட காவலுலாவுக்கு அணிகளை அனுப்பிவிடுவார் சுதந்திரா. பாகையும் தூரமும் தரப்பட்டால், அன்று பட்டினிதான் என்று அணிகளுக்குப் புரிந்துவிடும்.


eelamhouse.com

காட்டுக்குள் அமைக்கப்பட்ட களஞ்சியம் நிறையும்வரை இந்தக் கடின நாட்கள் தொடர்ந்தன. இப்போது எல்லாம் ஓரளவு சரி. நீர் வசதிதான் ஏற்படுத்தப்படவில்லை. தூரத்தேயுள்ள குளம் ஒன்று தான் கைகொடுத்தது. அன்றிரவு களஞ்சியத்தினுள் போத்தல் விளக்கொன்றைத் தூக்கிப் பிடித்தபடி பொருட்கள் எடுப்பதற்காக வந்த போராளி ஒருவர், திடீர் காற்றுக்கு நெருப்பு அலைபாய்ந்து சட்டென குறைந்து கூடி எரிய, அவரின் கைகள் தன்னிச்சையாகப் போத்தலை வீசிவிட்டன.

தூரத்தே நின்ற சுதந்திரா மரங்களின் உச்சியைத் தொட்டவாறு உயர்ந்த நெருப்பைக் கண்டு ஓடிவந்து, நெருப்புக்குள் நின்று பொருட்களை எடுக்க முயன்று கொண்டிருந்த எல்லோரையும் வெளியே தள்ளிவிட்டு, தனியாக தன்னை மறந்த நிலையில் கையில் அகப்பட்டவற்றை எடுத்து வெளியே எறிந்தார். போத்தல்கள் வெடித்து, பேணிகள் உருகி... ஒரு சிலவற்றைத்தவிர எல்லாம் நாசம்.

அமைப்புக்கு நாம் கடன்பட்டிருக்கின்றோம் என்று அந்த நிகழ்வு பற்றி அடிக்கடி அணியினரோடு கதைப்பார் அவர். அந்தச் சுடுகலன்கள் அப்போதுதான் அமைப்புக்குப் புதிதாகக் கிடைத்திருந்தன. அவற்றைத் தலைவர் அவர்கள் சிறப்பு அணியினருக்கு வழங்கியிருந்தார். வழங்கப்பட்ட ஆரம்ப நாட்களில் எல்லோரது சுடுகலன்களையும் துப்பரவு செய்வது சுதந்திராதான். ஒரு வாரமளவில் அணியினர் நன்கு பார்த்துப் பழகிய பின்பே, அவர்களைத் துப்பரவு செய்யவிட்டார். சுத்தத்தைச் சரிபார்க்கும் போது எப்படியோ எங்கேயோ ஒரு சிறு தூசு அவரின் கண்களில் பட்டுவிடும். நான்கு கரும்புலிகள் உட்பட பதினெட்டு கடற்புலிகள் தமது உயிர்களை விலையாகக் கொடுத்து தாய கத்துக்கு அனுப்பி வைத்த சுடுகலன்கள் அவை. அவற்றின் உயிர்ப்பெறுமதியை மீளவும் மீளவும் எல்லோருக்கும் நினைவுபடுத்துகின்ற சுதந்திரா, சுடுகலனைத் துப்பரவாக வைத்திருக்காதவர்களை உரிய ஒறுப்புக்குள்ளாக்குவார்.

சிறப்பு அணியின் இரண்டாவது அணி பயிற்சிகளை முடிக்கமுன்பே சுதந்திராவை 'வெற்றி உறுதி' எதிர் நடவடிக்கைக்களம் அழைத்தது. அதுவரை நாளும் புளியங்குளம் பகுதியில் சிறப்பு அணியின் தாக்குதலணியை வழிநடத்திக் கொண்டிருந்த லெப். கேணல் நந்தாவின் வெற்றிடத்தை நிரப்ப, சுதந்திரா புறப்பட்டார்.

நெருக்கடி மிகுந்த வன்னிச் சமர்முனையில் நின்றசிறப்பு அணியில் ஒரு அணியினருக்குப் புதியவகை விமான எதிர்ப்புப் பீரங்கியொன்றை இயக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. களமுனையில் நிற்கும் தனது அணியினரை மாறிமாறிப் பயிற்சிக்கு அனுப்பிவைப்பார். வேலை நெருக்கடியால் அவரால் தொடர்ச்சியாக அதில் ஈடுபட முடியவில்லை. காப்பரண்களிடையே காவல் உலா போகின்ற வேளைகளில் கூட வருபவரிடம் படித்த விடயங்களை கேட்டறிந்தார். நிலத்தில் படங்களை கீறிக் காட்டி, அவர்களிடம் சரிபார்த்துக் கொண்டார். வாய்ப்புக் கிடைத்த வேளைகளில் நேரடியாக போகத் தவறவில்லை. பயிற்சி நிறைவில் நடந்த சூட்டுப் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று, எல்லோ ரையும் ஆச்சரியப்பட வைக்கவும் தவறவில்லை அவர்.

அகல விரிந்த களமுனைகளெங்கும் சுதந்திராவின் கால்களும் நடந்தன. கரிப்பட்டமுறிப்பு, மூன்றுமுறிப்பு, ஒலுமடு, கிளிநொச்சி... இந்தக் காலப்பகுதியில் சிறப்பு அணி பங்கேற்ற ஊடுருவி உள்நுழையும் தாக்குதல்கள் சிலவற்றில் இவரும் இணைந்திருந்தார்.

1999இல் ஓயாத அலைகள் -03 சுழன்றடிக்கத் தொடங்கிய அன்று தன் அணியினரோடு ஒட்டு சுட்டான் பகுதியூடு உள்நுழைந்த சுதந்திரா, நெடுங்கேணி, மணலாறு வரையும் போனார் ஆண் டிறுதியில் இன்னுமொரு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அவரை உள்வாங்கிக் கொண்டது.

eelamhouse.com

2000-04-01 இல் இயக்கச்சி - முகாவில் பகுதியில் நடந்த முன்னேற்ற நடவடிக்கையில் ஏனைய அதிகாரிகளோடு அவரும் பங்கேற்றார். தொடர்ந்தும் நீண்டு விரிந்த களம் இவரைத் தன்னோடு அழைத்துக் கொண்டது.

அமைப்பு எந்த வேளையில் எமக்கு எந்தப் பணியைத் தந்தாலும் ஏற்றுச் செய்யத்தயாராக இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். "என்னை உடை தோய்க்குமாறு அமைப்பு வேலை தந்தால், உடைகளை எப்படி மிகச் சுத்தமாக தோய்க்கலாம் என்று பார்ப்பேனே தவிர, இந்த வேலையை நான் செய்வதா என்று கவலைப்படமாட்டேன்" என்ற கேணல் கிட்டு அவர்களின் எடுகோளைக் குறிப்பிடுவார். சொன்னது போலவே செய்தும் காட்டினார்.தம்மால் வளர்த்தெடுக்கப் பட்ட போராளியொருவர் தனக்கு மேலான பொறுப்பாளராக வந்தபோதும் அதை இயல்பாக ஏற்றுக் கொண்டு, அவரின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டார்.

"கெட்டாலும் மேன்மக்கள்
மேன்மக்களே - சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"

ஔவை சொல்லக் கேட்டதை, சுதந்திராவிடம் நேரே பார்த்தோம். அதனால்தான் சுதந்திராவின் இழப்புக்கு எல்லோருமே வருந்தினோம்.

ஒருவரின் இயல்பை அறிந்து பழகுவது, பழக்குவது அவரின் இயல்பு, சிறப்பு அணியினருக்கு காவலரண் வாழ்வு புதிது. அவர்கள் வெட்டிய காப்பரண்கள் இருந்த விதத்தைப் பார்த்த சுதந்திரா, மேலதிக ரவைக்கூட்டு அணியை அணிந்த நிலையில் அவர்களை அதற்குள் இறக்கி ஏற்றி, என்ன பிழை என்று அவர்களிடமே கேட்டு, திருத்துவித்து, காவலரண் வாழ்வுக்கு பழக்கினார்.

எப்போதும் எடுகோளாக இருப்பதும் அவரின் இயல்பு. புதிதாக விமான எதிர்ப்பு பீரங்கி ஒன்று வந்தபோது, பொதி உடைக்கப்படாமல் இவர்களின் கையில் அது கொடுக்கப்பட்டது. குழல்வாய் மூடி மிக இறுக்கமாக இருந்ததால், எல்லோரும் கைவிட்டு விட, நாற்பத்தைந்து நிமிடங்களுக்கும் மேலாக தொடர்ந்து முயன்று மூடியைக் கழற்றினார்.

தரப்படும் பணிக்கு மறுப்புச் சொல்வது அவரின் வரலாற்றிலேயே கிடையாது. அது இல்லை, இது இல்லை என்று தாமதிக்காமல், எது இருக்கின்றதோ அதை வைத்து வேலையைத் தொடங்கி விடுவார்.

ஓயாத அலைகள்-04 இல் பங்கேற்ற அவர், கட்டம் -02 மிகச் சிரமமான பாதைகளூடே நகர்ந்த போதும் நம்பிக்கையோடு அணிகளை வழிநடத்தினார்.

தன்னுடைய கடைசி நாட்களை மேஜர் சோதியா படையணியுடன் முகமாலைப் பகுதியில் கழித்தார் அவர். ஒரு பெரும்பலம் தமக்குக் கிடைத்ததற்காக அவர்கள் பெருமையுற முன்னரே, தீச்சுவாலை-1 எதிர் நடவடிக்கை அவரை அவர்களிடமிருந்து பறித்தது.

ஆனையிறவிலிருந்து பகைவரை நாம் துரத்தியபோது எங்களோடிருந்த சுதந்திரா, ஆனை யிறவை மீண்டும் பிடிக்கமுனைந்த படையினரைத் துரத்தியபோது பகைவர்களின் வரவுக்கு மட்டுமன்றி, தன் வரலாற்றுக்கும் முற்றுப் புள்ளியை வைத்துவிட்டார்.

மலைமகள்


eelamhouse.com



லெப்.கேணல் முகுந்தா
கெங்கேஸ்வரி முத்துக்குமாரு
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
பிறப்பு - 20.02.1974
வீரச்சாவு - 19.06.1997
ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கையின்
போது குறிசுட்டான் பகுதியில்
எறிகணை வீச்சில்

# பகை வாசலில் உலவும் புலி

எங்கள் விடுதலைக்கான பயணத்தில் அவரது இழப்பு எவராலும் ஈடுசெய்ய முடியாத ஒன்று. ஒரு தனி மனித பிறவி, போராளி என்பதை மீறி தன்னை அர்ப்பணித்து அவர் ஆற்றிய பணி அதிகம். எத்தனையோ போராளிகள் கூட்டிணைந்து நடாத்தும் தாக்குதல்களின் வெற்றியின்மேல் மூல வேர்களைத் தாங்கி நின்றவர் முகுந்தா. சாதாரண சம்பவங்களை அல்லாமல், தான் வாழ்ந்த கடைசி நிமிடம்வரை மறக்க முடியாத எத்தனையோ மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவங்களைச் சந்தித்து, அவற்றிலிருந்து விரிந்த புதிய சிந்தனைகளைக் கொண்டு மேலும் மேலும் கட்டியெழுப்பப்பட வேண்டிய எங்கள் படையணியைப்பற்றி அடிக்கடி கனவு கண்டவர்.

விடுதலை நெருப்பை கண்ணுள் எரியவிட்டு, கண்ணி வயல்களுக்குள்ளால் ஊர்ந்து, தவழ்ந்து, பனி, மழை, வெயில், பகல் இரவு பாராது அவர் எடுத்த வேவுத் தகவல்கள்தான் சமர்க்களங்களில் எமது தாக்குதலுக்கான மூலாதாரமாகியது.

தம்மால் செய்ய முடியாது என்று வேறு யாரும் கைவிட்ட வேலைகளை, என்னால் முடியும் நான் செய்கிறேன் என்று முன் வந்து செய்து முடித்தபோது அவளுள் ஒளிந்துக்கொண்டிருந்த ஆளுமையை எம்மால் நன்கு இனங்கான முடிந்தது. 1990இல் நடுப்பகுதியில் வல்வெட்டித்துறையில் இருந்து தனது குடும்பத்தைவிட்டு விடுதலைப் போராட்ட பாதையில் முகுந்தாவும் வந்து சேர்ந்தார். 1991இல் வேவுப் பயிற்சிக்கென விடுதலைப் புலிகள் மகளிர் படையணியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விபரத்தில் தனது பெயர் இல்லை என்பதை பார்த்து விட்டு ஆர்ப்பாட்டம் செய்து அடம் பிடித்து அந்தக் கடினமான பணியில் தன்னைச் சேர்த்துக்கொண்டார். அன்றிலிருந்து தொடங்கிய வேலை, அவர் இல்லாத சண்டைகளும் வேவுகளும் இல்லை என்று சொல்லுமளவுக்கு நீண்டிருந்தது. கட்டைக்காடு, பூநகரி, மண்டைதீவு, கொக்குத்தொடுவாய், வெற்றிலைக்கேணி, சூரியகதிர் 01, 02, 1996இல் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, முல்லைத்தீவு, சத்ஜெய என்று விரிந்து சென்ற சமர்க்களங்களில் எமது தாக்குதலுக்கு உயிர்நாடியாக அவரது வேவுத் தகவல்கள் இருந்தன. அவர்

eelamhouse.com

வேவு பார்த்த நடவடிக்கைகளில் சூரியக்கதிர் 02 சற்று வித்தியாசமானது. மக்களோடு மக்களாக யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் சென்றவர்களோடு சேலை கட்டி, தென்மராட்சி இராணுவ முகாமொன்றுக்குச் சென்று, இராணுவத்திடம் நீர் வாங்கி குடித்து அங்கிருந்த ஆயுதத் தளபாடங்கள், நிலைகள் பற்றிய தகவல்களை கொண்டுவந்து சேர்த்ததுவரை தனியாகச் சென்ற துணிவு, எத்தகைய வேலையையும் இந்த மண்ணுக்காய் ஏற்றுச் செய்து முடிப்பார் இவர் என்பதை நிரூபித்தது.

தானும் ஒரு கரும்புலியாகச் சென்று தனது தற்கொடை மூலம் நிறையச் சாதிக்க வேண்டும் என்ற கனவு முகுந்தாவுக்குள் விரிந்தது. 1994இல் அண்ணைக்குக் கடிதம் எழுதிய போது, வேவுப்பணியையும் தான் அவ்வாறுதான் நினைக்கிறேன். என்று அண்ணையிடமிருந்து பதில் கிடைக்க, தொடர்ந்தும் தனது பணியில் முழு மூச்சாக முகுந்தா ஈடு படத்தொடங்கிவிட்டார்.

தாக்குதலுக்கு முன் மாதக்கணக்காக வேவு பார்த்து சண்டைக்கு வழிகாட்டி, தாக்குதலில் பங்குபற்றி, விழுப்புண் ஏற்று, அவை குண மடைய மீண்டும் வேவுக்குச் சென்று... இப்படி ஒரு சுழற்சி முறையில் மீண்டும் எமக்கருகில் அவர் வந்து விடுவார். இவ்வளவுக்கும் நடுவில் அவர் ஒரு குசியான போர்வழி. தளத்தில்அவர் நின்றார் என்பது வாசலில் நிற்கும் போதே தெரிந்துவிடுமளவிற்கு பெரிய தொண்டை.

இதனால், 'தொண்டா' என்றே எல்லோரும் அவரைக் கூப்பிடத் தொடங்கி விட்டனர்.

சாவுப் பொறிக்குள் நின்றுகொண்டு எந்தவித நெருக்கடிக்குள்ளும் குறித்த வேலையை செய்து முடிக்கும் அவரது செயலாற்றலும் திறமை யுமே இறுதி நாட்களில் 2ம் லெப் மாலதி படையணியின் சிறப்பு படையணி ஒன்றுக்குப் பொறுப்பாளராக அவரை நியமிக்க வைத்தது. அந்தப் படையணியை திறம்பட வழி நடத்தி பெரிய பெரிய விடயங்களை யெல்லாம் பெண்போராளிகள் சாதிக்க வேண்டும் என்று தனது சின்னஞ் சிறிய இதயத்துக்குள் ஏராளமான கனவுகளைச் சுமந்து கொண்டிருந்தார்.

அவர் 1997.06.18 அன்று அவர் துடிப்பு அடங்கிப் போன வேளையில், அந்தக்கனவு மொட்டுக்கள் முகையவிழ்த்து பூக்களாயிருந்தன. அவற்றை அள்ளி எடுத்து எமது இதயங்களோடு இறுகத் தழுவிக் கொண்டு எம்மால் நிமிர்ந்து நிற்கமுடிந்ததேதவிர கண்ணீர் சொரிய முடியவில்லை. ஆம் அவருக்கும் அதுதான் விருப்பம். அவரது நினைவு களை மீட்டுப் பார்க்கும் இந்தச் சிறிய பக்கத்தில் மட்டும், நாம் எழுதிய மொழியில் மட்டும் அடங்கி விடாது.

நீண்டு பரந்து எம்மில் வியாபித்து.....
முகுந்தா மறந்துவிடமுடியாத ஒருவர்.

சுதாமதி





eelamhouse.com



லெப்.கேணல் அகிலா
சத்தியாதேவி சோமசுந்தரம்
கோப்பா, யாழ்ப்பாணம்
பிறப்பு - 25.02.1969
வீரச்சாவு - 30.10.1995
சூரியகதிர் -01 எதிர்நடவடிக்கையின்
போது உரும்பிராயில்

# அகிலா ஆளுமையின் வடிவம்

எங்கள் போராட்ட வரலாற்றில் அவர் ஒரு தனி அத்தியாயம். எங்கள் தலைவரின் சேனைக்குள் உருவான "அக்கினிக்குழந்தை" மெல்ல உயிர்ப்புப்பெற்ற போது அந்த உயிர்ப்புக்காக உழைத்தவர்களில் லெப். கேணல். அகிலாவின் பங்கும் அளப்பரியது.

அவளுள் இருந்த அந்த ஆளுமை, பல்துறை விற்பன்மை, எமது தேசத்தைக் கடந்து பரந்து போன பெருமை, அவரது தனித்துவமான இடம் நிரப்பிட முடியாதது தான்.

எப்போதுமே காற்சப்பாத்துக்களைக் கழற்றியறியாத கால்கள் நடந்துவரும் போது தனியானதொரு கம்பீரம் நடையிற் தெரியும். அந்த மெல்லிய உருவத்தின் வல்லமை அதைவிட அவரது உறுதியின் வலிமை. எல்லாவற்றிலுமே முன்னுதாரணமான போராளி.

அகிலாக்கா !

எல்லாப் போராளிகளையும் தொட்டுச்சென்ற அவரது நிலைகள் இழப்பை நெஞ்சம் ஏற்க மறுக்கும். பெயர் கூற முடியாத சாதனைகளுக்குள்ளும், இன்னும் ஓிரண்டு பேருக்குள்ளே உறங்கிப் போன உண்மைகளுக்குள்ளும், அவர் ஆற்றிய பங்கு, அவரது உழைப்பு, இவை அவரை இனங் காட்ட முடியாத பக்கங்கள் எழுத்திலே வடிக்க முடியாத வரலாற்று நிகழ்வுகள்.

அவர் இயக்கத்துக்கென சேவையாற்றப் புறப்பட்ட காலங்கள் மிகநெருக்கடியானவை. போராட்ட உத்வேகங்கொண்ட பெண்களணி ஒன்று. தங்கள் தங்கள் குடும்பங்களுக்குள்ளே போராட்டம் நடத்தி வெளியே வந்து, இந்தத் தேசத்துக்காய் தம்மை அர்ப்பணிக்கத் தொடங்கியது. லெப்.கேணல் திலீபனால் உருவாக்கப்பட்ட 'சுதந்திரப் பறவைகள்' அணிக்குள் அவர்கள் ஒன்று திரண்டனர். இருண்மைச் சக்திக்குள் உறங்கிக் கிடந்த மனங்களைத் தட்டியெழுப்ப அவர்கள் அல்லும்பகலும் பாடுபட்டனர். அந்த அணிக்குள் அகிலாவும் தன்னை இணைத்துக்கொண்டார். அன்று தொட்டு

eelamhouse.com

இன்று வரை தனது செயல்களினால் மட்டுமே தன்னை இனங்காட்டி வந்தார்.

அவரது துப்பாக்கியிலிருந்து புறப்படும் ரவைகள் எப்போதும் இலக்குத் தவறியதில்லை. பெயர் சொல்லக்கூடிய இலக்கானார். இலக்குத் தவறாத தன்மை அவரது போராட்ட வாழ்வின் எல்லாப் பக்கங்களிலும் ஊடுருவியிருந்தது. எந்த வேலையாயினும் செய்து முடிக்கின்ற வரையில் அவரது அயராத உழைப்பு, செய்து முடிக்க வேண்டும் என்ற ஓர்மம் அவரிடம் தனித்துவமாக விளங்கியது.

எல்லாவற்றையும் விட பிரச்சனைகளை அணுகுகின்ற அவரின் முறை வித்தியாசமானது. இந்த வேலையை எப்படிச் செய்வது? குறித்த நாட்களுக்குள் செய்து முடிக்க முடியுமா? யோசித்து யோசித்து மண்டையைப் போட்டுக் குழப்பிப் போய் அவர் முன்னால் நின்றால், இவ்வளவு நேரமும் இதற்கா போய் நின்றோம் என்றமாதிரி செய்கின்ற வேலை இலகு வானதாகிவிடும். ஒவ்வொரு போராளியையும் சுயமாக வளர்த்தெடுப்பதில் அவர்கொண்டிருந்த நம்பிக்கையும் செயலாற்றலும்.... எங்கள்நெஞ்சுக் கூட்டுக்குள் அவரை ஆழஇருத்தி விட்டது. எந்த வேலையாக ஓடி அலைந்து திரிந்தாலும், நித்திரையின்றிய இரவுகளைச் சந்தித்தாலும், தானே நேரம் ஒதுக்கி போராளிகளுக்கு கல்வியறிவூட்டிய அந்த நாட்கள்.... எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும் என்ற அவரது கொள்கை செயலுருப் பெற்றபோது, தளத்தில் அனேகமாக போராளிகள் இயந்திரகளைத் திருத்துவதிலிருந்து. சுவையாகச் சமைப்பது என்பது வரை கற்றிருந்தனர்.

அவருக்குரிய வரலாற்றின் முகவுரைக்கு எடுத்துக் கொண்ட சில வரிகள். இவை. இந்த அறிமுகத்துக்குரிய லெப். கேணல் அகிலாவின் கடைசி மூச்சு 30-10-1995 இல் சூரியகதிர் படர்ந்த காலைப் பொழுதோடு கலந்து போனது. வலிகாமத்தின் மிகப்பெரிய சமருக்குள், ஊரெழுவின் சிவப்பு மண்ணுக்குள் குருதி தோய எங்கள் அகிலாக்கா கலந்துபோனா.

■ சுதாமதி



eelamhouse.com



கப்டன் தேவகி/பாமா
சிவமேகலா சிவப்பிரகாசம்
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்
பிறப்பு - 10.09.1972
வீரச்சாவு - 17.10.1995
வலி கிழக்கு பகுதியில்
சூரியக்கதிர் -1
எதிர் நடவடிக்கையில்

# வேகப்புயல்

அது அவரது கடைசிநாள். வைகறைக் குவியலில் ஒரு செம்பருத்திப் பூவைப் போல மலர்ந்திருந்த முகத்தோடு எமது தேவகி..... கண்ணாடிக்கு முன்னால் நின்றபடி தனது ஒட்ட வெட்டிய தலை முடியை படிய வாரியபடி.... சிலும்பி நின்ற முடிகள் அவரது சீப்புக்குப் படிய மறுத்தன.

"அக்கா தலை படிஞ்சிட்டுதோ" அவரைப் பார்க்கச் சிரிப்பாக இருந்தது. சண்டைக்கு போகிறேன் என்ற மகிழ்ச்சி அவர் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

அன்று அவர் முகமெல்லாம் சிரிப்பாகச் சென்றார். அது அவரது கடைசிச்சண்டை. ஏன், அவரது கடைசிநாளும் கூட என்பதை நாங்கள் நினைக்கவில்லை. அவரும் நினைத்திருக்க மாட்டார் என்றுதான் நாம் எண்ணுகிறோம். "நிறையச் சண்டைக்கு போய்வர வேணும்" என்ற நீண்ட கனவு அவரிடம் இருந்ததை நாங்கள் அவர்வாயிலாக அடிக்கடி கேட்டோம். ஆனால் மாறாக அவரது உயிரற்ற உடல் அன்றே தலையின்றி வந்தபோது, காலை தலை படிய வாரியதேவகி, "தலை படிஞ்சிட்டுதோ அக்கா" என்று கேட்ட தேவகி நெஞ்சுக்குள் அதிர்வாய் வந்துபோனார்.

தேவகி!

எல்லாவற்றிலும் மேலோங்கி நின்ற அவரது இரக்ககுணம். அது அவரது போராட்ட வாழ்வில் எல்லாச் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் தலை தூக்கி நின்றது.

"நேற்றுப்போட்ட அந்தப் புதுச்சேட் எங்கை தேவகி" என்று கேட்ட போது,

தளத்தில் புதிதாக இணைந்த போராளியிடம் அதைக் கொடுத்துவிட்டு வந்து "நான் தான் குடுத்தனான் அக்கா" என்றபடி நிற்பார்.

eelamhouse.com



யாருக்காவது உதவி எனின் சட்டென்று உதவி செய்யத் தேடிச் செல்கின்ற அந்தப் பண்பினால்தான் தேவகி எல்லோருக்குள்ளும் நிறைந்திருந்தார். தளத்தில் எந்த உந்துருளியாவது அவரது கைபட்டதாகத்தான் நிற்கும். உந்துருளியில் ஏறியிருந்தால் அவரது வேகமும் கூடவே. எந்த நெருக்கடிக்குள்ளும் செல்கின்ற திறமையும் அந்த வேகமும் எல்லா விடங்களிலும் பளீரிட்டது. எப்போதுமே புயலைப்போன்ற வேகம் அவரிடம் இருந்தது. அது அவரது மறைவிலும் கூட.....

சுதாமதி



eelamhouse.com



| |
|---|
| கப்டன் தமிழினி |
| மலர்விழி இரத்தினம் |
| குளவிசுட்டான், நெடுங்கேணி |
| பிறப்பு - 21.08.1976 |
| வீரச்சாவு - 27.12.1995 |
| யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் |
| சூரியக்கதிர் - 01 |
| எதிர்நடவடிக்கையில் |

# எட்டாக மழயும் துவக்கு

தமிழினி,

இப்போதும்கூட குழந்தையாக அந்த உருண்டமுகம். அதே போல இன்னும் குழந்தைத் தனம் மாறாத உள்ளம். உன்னை நினைக்கும் போது கண்கள் பனித்துக்கொள்கின்றன. நீ குரங்கு போலத் தாவி ஏறிநின்ற வலிகாமத்தின் மாமரங்கள் இந்தத் தனிமையில் உன்னை நினைத்து அழுமே. மீண்டும் வலிகாமம் செல்லும் நாளில் நீ இல்லாத அந்த இடங்கள் நிரப்பப்பட முடியாதனவாகத்தான் இருக்கப் போகின்றன.

நேற்று அந்த ஏழாலை அம்மாவின் வீட்டுக்குச் சென்றதும் அம்மா முதற் கேள்வியாக,

"பிள்ளை அண்டைக்கு உங்களோடை வந்து கூழ் குடிச்சிட்டுப்போன பிள்ளை எங்கை" என்று கேட்டபோது நெஞ்சைத் துயரம் அடைத்துக்கொண்டது.

யாருடனும் சட்டெனப் பழகிவிடும் பண்பினாலோ, அல்லது நீ மக்களோடு வைத்திருந்த சரியான அணுகுமுறையினாலோ என்னவோ, குறுகிய காலத்தில் நீ அவர்களுள் ஒருத்தியானாய். எத்தகைய தன்மையுள்ள மக்களையும் நீ உன்வசப்படுத்தி நின்ற தன்மை எத்தனையோ தடவைகள் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

பின்தங்கிய கிராமப்புறங்களில் அந்தக் குடும்பங்களின் அங்கத்தவராய் நீ இருந்த அந்த நாட்கள். வீட்டினுள்ள குழந்தைகளெல்லாம் உன்னைச் சுற்றியிருக்க, நீயும் அந்தக் குழந்தைகளில் ஒருத்தியாய் சிரித்து நின்ற பொழுதுகள்... அரசியல் வேலை செய்யும் ஒரு போராளிக்குரிய மிக உயர்ந்த பொறுமையையும் சரியான அணுகுமுறைகளையும் நாம் கண்டோம். அநேகமாக ஒருமுறை நீ சென்ற வீடுகள், அடுத்த முறை அங்கு செல்கின்ற வேறொரு போராளியிடம் உன்னைச் சுகம் விசாரிக்கும். "கனகாலமா தமிழினியை இந்தப் பக்கம் காணேல்லை. தமிழினியை ஒருக்கா வந்திட்டுப்



eelamhouse.com



போகச் சொல்லுங்கோ". அந்த மக்களுக்கு நீ செல்லப்பிள்ளை. உடுவில் வட்டப் பொறுப்பாளராக நீ வேலை செய்தபோது நீ அந்தப் பிரதேச மக்கள் அனைவருக்கும் அறிமுகமானவளாக இருந்தாய். அந்த மக்களின் சாவீடு, திருமணநிகழ்வு எங்கேயாவது நீ முன்னுக்குநின்று பெரிய மனிதத் தோரணையுடன் எதையாவது செய்து கொண்டிருப்பாய். இப்போது எங்கேயாவது அந்த மக்கள் தங்கள் தமிழினியை நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார்கள். உன்னைச்சுற்றி கதை கேட்ட பிள்ளைகள் போராட்டத்துக்கு வந்திருப்பார்கள்.

நேரந்தவறாமல் உனக்குச் சாப்பாடு வேண்டும். ஒருபொழுதும் நீ பசி தாங்க மாட்டாய். எல்லோருக்கும் குளிர்களி என்றால் ஆர்வம். ஆனால் உனக்கு அதுதான் சாப்பாடாக வேண்டும். எந்த அகாலவேளையும் குளிர்களி என்றால் சப்புக் கொட்டுகின்ற உன்னோடு எப்போது சென்றாலும் குளிர்களி கிடைக்கும். அவை உனது கடைசிக் காலங்கள்

"என்னை சண்டைக்கு விடுங்கோ" என்று பொறுப்பாளரை நச்சரித்து உனது ஆசை நிறைவேறியபோது நீ எப்படிப் பூரித்துப் போனாய்.

1996 இன் ஆரம்பத்தில் வலிகாமச் சண்டைக்கு பாதைகாட்டியாய் போனாய். அந்தக்குச்சொழுங்கைகள், தார்படிந்த கறுப்புவீதிகள் உனது கால் பட்டவை. வெயிலிலும் மழையிலும் நீ நின்ற இடங்கள் உனக்குத் தண்ணி பட்டபாடு. நீ நின்ற இடங்களிலேயே உனக்கு சண்டைக்கான களங்கள் அமைந்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

....அன்றைய தினம்... நீ.... வேவு எடுப்பதற்கென முன்னே சென்றாய். சிறிது நாட்களுக்கு முன்னர் நீ மிதிவண்டியில் ஓடித்திரிந்த அந்த இடங்களில் எதிரியின் கண்படாதவாறு ஊர்ந்து செல்வது உன்னை நிச்சயம் வலிக்கச் செய்திருக்கும். அந்த வலியையேஆவேசமாக்கி நீ சென்றிருப்பாய் என்பது எங்களுக்கு தெரியும். உனது கடைசி மூச்சும் மிகுந்த உக்கிரத்தோடுதான் பிரிந்திருக்கும். அந்த உக்கிரமான நெருப்பு எம்மக்களைப் பற்றிக்கொள்ளும் என்ற எங்கள் நம்பிக்கையுடன் அவர்களிலிருந்து இன்னும் தமிழினிகள் வருவார்கள்.

யாழ்ப்பாணத்தில் அரசியல் வேலை செய்த நாட்களில், எல்லோரிடமும் சுடுகலன் இருக்கவேண்டும் என்ற நடைமுறைக்கேற்ப உனக்கும் ஒரு ரீ 56-2 தரப்பட்டிருந்தது. நீளமான அந்தச் சுடுகலனை முதுகில் கொழுவியபடி மிதிவண்டியில் வந்திறங்கியதுமே, அப்போதைய யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளராக இருந்த லெப். கேணல் தணிகைச்செல்வியிடம்

"எட்டாக மடிக்கக்கூடிய துவக்கொண்டு தரமாட்டியளோ"

எனக் கேட்கும் குறும்புக்காரத் தமிழினியை இப்போதும் தேடுகிறோம்.

■ சுதாமதி



eelamhouse.com



# நானூற்று ஐம்பத்து ஒன்பதாவது நட்சத்திரம்

பருத்துத்துறையிலுள்ள இன்பருட்டி கடற் கரை ஓரத்தில் சின்னக்குழந்தையாய் விளை யாடி சிற்பிகளும் கிழிஞ்சல்களும் பொறுக்கி... அவர் குழப்படிகாரியாகத்தான் இருந்தார். சண்முகசுந்தரஐயாவுக்கும் இரத்தினேஸ்வரி அம்மாவுக்கும் நாலாவது பிள்ளையான அவர் சியாமளாவாக வலம் வந்து அந்த வீட்டை நிறையவைத்தார். 1971.03.28 இல் அவர் பிறந்த போது அந்த வீடு நிறைந்துதான் போனது. சியாமளா சரியான துடிப்புக்காரி. அம்மாவுக்கு விளையாட்டுக் காட்டிவிட்டு, இன்பருட்டி கடற் கரை ஓரங்களில் கால்கள் மண்ணிற் புதைய, சின்னக் குழந்தையாய் தத்தித் தத்தி வருவார். தொடுவானைப் பார்த்தபடி, எறிகின்ற அலை களில் நனைந்தபடி நீண்ட நேரங்கள் நிற்பார். அம்மா அவரைக் காணாது தேடிவரும் வேளை களில் ஓடி ஒளித்து என்று அவரது குழந்தைக் காலகுழப்பங்கள் சொல்லிமாளாது.

அவர் தனது பள்ளிக்கூட வாழ்க்கையிலும் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தார். தனது உயர்தரக் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ் கல்லூரியில் கற்றபோது உயிரியல் விஞ்ஞா னத்தைத் தோந்தெடுத்தார். படிப்பிலும் சரி,

eelamhouse.com



லெப்.கேணல் பாமா
சியாமளா சண்முகசுந்தரம்
அல்வாய், யாழ்ப்பாணம்
பிறப்பு - 28.03.1971
வீரச்சாவு - 12.11.1993
பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான
'தவளைப் பாய்ச்சல்'
நடவடிக்கையில்

விளையாட்டிலும் சரி என்றுமே பின் தங்கியது இல்லை. விளையாட்டுப் போட்டிகளில் அவர் பெற்ற சான்றிதழ்கள் ஏராளம்.

இப்படி இருந்தவரின் வாழ்வின் அமைதியை இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் குலைத்தன. அவரது அண்ணன் கடற்புலி லெப்டினன்ட் வெங்கடேஷ் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போது படிப்பைவிட நாட்டுப்பணி மேலாகப்பட்டது. அண்ணன் கொண்ட இலட்சியப்பணியைத் தொடர சியாமளா இயக்கத்தில் இணைந்தார்.

1989ம் ஆண்டு பங்குனி மாதம் அவர் இயக்கத்துக்கு வந்த நேரம் தமிழீழத்தில் வழுக்கி விழுந்த இடமெல்லாம் இந்திய இராணுவம். புலிகளை இரவும் பகலும் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்த நேரம். புலிகளின் முக்கியமான நடவடிக்கைகள் யாவும் காட்டிலே மேற்கொள்ளப் பட்டன. அப்போதிருந்த சூழ்நிலையில் இயக்கத்தில் போராளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. அதுவும் பெண்போராளிகளின் எண்ணிக்கை ஒருசில நூறுக்குள் மட்டுமே. இத்தகைய சூழ்நிலையில் சியாமளா, பாமாவாக தன் பெயரை வைத்துக்கொண்டு நான்காவது பயிற்சிப் பாசறையில் பயிற்சியெடுத்தார். பயிற்சிகளில் அவர் காட்டிய திறமையும் உயர்ந்த திடமான உடலமைப்பும் அவரை 50 கலிபர் துப்பாக்கியின் உதவிச் சூட்டாளராகச் செயற்பட வைத்தது. தனது கனரக ஆயுதத்தைத் தோளிலே சுமந்தபடி ரவைச்சரங்களை தோளின் குறுக்காகப் போட்டபடி அவர் நடப்பது தனியான கம்பீரம். காட்டுக்குள் நீண்ட தூரம் நடந்து, காடு முறித்து, எமக்குத் தேவையான சாமான்களை நாம் சுமந்து வருவது வழக்கம். கனத்த சுமைகள் தோளை அழுத்த அந்த வேளையிலும் இவர் கலகலத்தபடியே வருவார். எங்களுக்கு பாரம் குறைந்ததுபோல் தோன்றும்.

1990ம் ஆண்டின் முற்பகுதியில் இந்திய இராணுவம் எம் நாட்டை விட்டு வெளியேறிய போது காட்டிலிருந்து நாட்டுக்கு வந்த முதலாவது பெண் போராளிகளின் குழுவில் பாமாவும் ஒருத்தியாக இருந்தார். அன்றிலிருந்து


eelamhouse.com

விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த அநேகமான சண்டைகளில் அவரது தடங்கள் பதிந்த வண்ணம் இருந்தன.

கோட்டை, பலாலி, காரைநகர், சிலாவத்துறை, பலவேகய ஒன்று, மணலாறு என்ற நீண்ட பட்டிய லில் அங்குள்ள காவலரண்களில் அவரது கால்கள் அகலப் பதிந்தன.

குறிப்பிட்ட சில காலப்பகுதியினுள்ளே இவரது வளர்ச்சி அபாரமானது. இவரின் உறுதியான செயற்பாடுகளும் நினைத்ததைச் சாதிக்கும் பண்பும் இவரைப் படிப்படியாக வளரச்செய்தன.

பலாலிக் காவலரண்களில் பாமா நின்றபோது அவரது செயற்பாடுகள் யாவும் மறக்கமுடியா தவை. எந்தவேலையும் எனக்குத் தெரியாது என்று இவர் தலையாட்டியதை நாங்கள் காணவில்லை.

"வீட்டிலிருந்து எல்லாம் தெரிஞ்சுகொண்டோ வந்தனாங்கள்" இயக்கத்தில் எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டோம். எல்லாம் முயற்சியாலைதான்" என்று அடிக்கடி கூறுவார். அவற்றை நாம் பலாலி யில் நேரில் கண்டோம்.

அது 1990ஆம் ஆண்டின் மழைக்காலப்பகுதி. பலாலியின் செம்பாட்டுமண், மழைஈரத்தில் பிசு பிசுத்தது. கால்கள் சேற்றில் புதைந்தன. சேற்றுக் குழம்புகளின் நடுவே இருந்த அந்தக் காவ லரண் அடிக்கடி எதிரியின் தாக்குதல்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்தது. ஓயாமல் எறிகணைகள் விழுந்ததால் நிலம் கரியாகிப்போனது. அடிக்கடி அவ்விடத்துக்கு முன்னேற இராணுவம் முயற்சிப்ப தும் நாம் அடித்துத் துரத்துவதும் வழக்கமான ஒரு நிகழ்வாகிப்போனது.

இத்தருணத்தில், முதல்நாள் நடந்த கடுமையான சண்டையில் பதினான்குபேர் காயம் அடைந் தனர். எதிரியின் முக்கிய இலக்கான அந்த இடத்தில் தொடர்ந்தும் எமது குழுவை நிலைநிறுத்து வதற்கு நாம் ஒரு பொறுப்பான ஆளைத் தேடிக் கொண்டிருந்தபோது பாமாவின் செயற்பாடு நம்பிக் கையூட்டுவதாய் அமைந்தது.

"நான் குறூப்பைக் கொண்டு போறன்"

அவர் எழுந்து சொன்னார். இதுவரையும் பெரிய களங்களை கண்டவர் அல்ல அவர். ஆனால் அவரிடம் ஒரு வித்தியாசமான திறமை இருக்கத்தான் செய்தது. அவருக்கு கொடுக்கப்பட்ட குழுவைத் திறமையாகச் செயற்படுத்திய விதம் எமக்கு நிறைவைத் தந்தது. அடிக்கடி இராணுவத்திற்கு தலை யிடி கொடுப்பதும் பாமாவின் வேலையாக இருந்தது. அந்தக் காலங்களில் பலாலியின் பனைவெளி களை ஊடறுத்தபடி எதிரியின் தேடொளி இரவைப் பகலாக்கும், மிகமிகக் கிட்டவாக தனது ஒளியைப் பாய்ச்சியபடி இருக்கும்போதெல்லாம் பாமா அதற்கு மிகமிகக் குறிவைப்பார். அவரது பிறண் எல். எம். ஜி குறி தவறியதாக நாங்கள் கேள்விப்படவேயில்லை. பயிற்சியிலும் சரி, சண்டைகளிலும் சரி அவர் நன்றாக குறிபார்த்துச் சுடும் திறமை பெற்றவராக இருந்தார்.

அப்படி ஒரு இடத்தில் தேடொளி உடைய மறு இடத்தில் எதிரி அதைப் பொருத்த மீண்டும் அதை உடைய வைத்து, உண்மையில் அவர்களை சலிப்படையவே வைத்துவிட்டார். அந்த நீண்ட பனை களில் நிலையெடுத்தபடி இராணுவக்காவலரண்களை நோக்கி

அடிக்கடி அருள் 89ஐ அடிப்பார். அது ஒரு விளையாட்டுப்போல ஆனால் குறி தப்பாத ஒன்றாக அவருக்கு இருக்கும்.

eelamhouse.com

இப்படி எத்தனை சம்பவங்கள் பாமாவின் துடிப்பான அந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் பலாலியின் புழுதிபடிந்த செம்பாட்டு மண் சொல்லும்: கனத்த காற்றுச் சொல்லும்.

பலாலிக்கு பிறகு பெரிய களமாக இவருக்கு ஆனையிறவுக் களம் அமைந்தபோது அதிலும் தன் திறமைகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆ.க.வெ நடவடிக்கையில் மகளிர் படையணியின் பக்கம் மும்முரமான சண்டையில் இவர் நின்றார். உக்கிரமான மோதல், மழைபோல் ரவைகள் காதை உரசுவதாக வரும். மயிரிழையில் தப்பித்த எறிகணை வீச்சுக்கள்.... பாமாவின் குழுவிலும் அநேகம்பேர் காயப்பட்டுத்தான் போனார்கள். எதிரி பின்வாங்கும் வரை பாமா மட்டும் தனித்து நின்று அடிபட்டதை நினைக்கின்றோம். கடைசியாக காலில் பலத்த காயமடைந்த ஒரு போராளியை அந்தக் கும்மிருட்டு நேரத்திலே கண்டுபிடித்து பின்னுக்கு கொண்டு வந்து இவர் மூச்சுவிட்ட போது, தனியொருவராக நின்று தடயங்கள் எல்லாவற்றையும் பொறுக்கியபோது...

ஆனையிறவுச் சண்டையில் இவர் தலையில் காயப்பட்டார். இவர் தப்பி வருவார். என்பதில் எங்களுக்கு ஒரு துளியளவு நம்பிக்கையே இருந்தது. ஆனால் பாமாவின் திடமான உடல் அமைப்பும் உறுதியுமே அவரைத் தப்பவைத்தது. மீண்டும் பழைய நிலைக்கு இயங்க வைத்தது.

நிறையக் களம் கண்ட ஒரு போராளியாக, ஒரு குறும்புக்காரியாக, எல்லோருக்கும் உதவுகின்ற இளகிய மனம்படைத்தவராக நாம் அவரைக் கண்டோம்.

அது லெப். கேணல் ராஜனின் வழிநடத்தலில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி. அதில் இவர் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தபோது, ஒருநாள் இவரது தளத்துக்கு ஒரு சிறுவனும் சிறுமியும் சாப்பாடு கேட்டு வந்தனர். அப்போது அங்கு உணவு ஏதும் இருக்கவில்லை. இதை அவதானித்த இவர், எல்லோருடமும் இருக்கும்காசு எல்லாவற்றையும் சேர்க்க ஐம்பது ரூபாய் வந்தது. அதை அவர்களிடம் கொடுக்கச் சென்ற போது, அச்சிறுமியிடம்,

"உங்களது பெயர் என்ன?"
என்றுகேட்க, அப்பிள்ளை வாய் திறக்க முடியாத நிலையில் இருப்பதைக் கண்டு இவர்.
"ஏன்" என்று விசாரித்தார். விமானக்குண்டு வீச்சின் போது சன்னமொன்று தாடைக்குள் தாக்கிய தால் வாய் திறக்கமுடியாது என்ற விபரத்தை அந்தச் சிறுமி சைகைமூலம் கூற, இவரது கண்கள் குளமாகின.

அந்தக் காசை கொடுத்தனுப்பிவிட்டு, "இந்த சின்னப்பிள்ளை என்ன பாவம் செய்தது" இதுக்கு இவங்களிற்கு முறையான பாடம் படிப்பிக்கவேணும்" என்று சொல்லியபோது இவரது குரல் தழு தழுத்தது. அடிக்கடி "இந்தக் கஸ்டமெல்லாம் எங்களோட முடிஞ்சிட வேணும். எங்கட சின்னதுகள் அனுபவிக்கக்கூடாது. அதுகள் சந்தோசமாக தங்கட தாய், தகப்பனோட வாழோணும்" என்று கூறி அவர் கண்கள் கலங்கித் தவித்ததை நினைக்கும் போது....

அன்று படைத்துறைக் கல்லூரியில் நடைபேசி பற்றிய வகுப்பு, புதிய ரகங்கள், புதிய தொழிற் பாடுகள் நுட்பமாக ஆராய்ந்து விளக்கப்பட்டது. இறுதியாக விரிவுரையாளர்

"இந்த (சிஐ25) வோக்கி புதிசு, இதின்ரை தொழிற்பாட்டை பற்றிநான் உங்களுக்கு சொல்லித் தரமாட்டன். நீங்களா இதை ஆராய்ந்து கண்டுபிடிக்கவேணும். குறிப்பிட்ட கால அவகாசம் தருவன்" என்றுகூறி முடித்தபோது பாமா முழுமூச்சாய் அதனோடு ஒன்றி அதன் தொழிற்பாட்டை அறிவதில் நேரங்காலம் இல்லாது கண்ணாய் இருந்ததை இப்போது நினைத்தாலும்... அந்த முயற்சியில் அவர்


eelamhouse.com

வெற்றி பெற்றார். அதன் தொழிற்பாட்டை, முதலில் கண்டு பிடித்து விளங்கப்படுத்தினார். அப்போது எல்லாப் போராளிகள் மத்தியிலும் இவரின் திறமை வெளிப்பட்டது. இவரின் விடா முயற்சியை நாம் எங்களுக்குள் சொல்லிச் சொல்லி வியந்து போனோம்.

சதுரங்கம் விளையாடுவது அவருக்கு பிடித்தமான ஒரு விளையாட்டு. நுட்பமாகவும் திறமையாகவும் அவர் விளையாடுவது யாவரையும் வியக்க வைக்கும். பார்ப்பவரை பார்த்துக் கொண்டே நிற்க வேண்டும்போல நினைக்கத் தூண்டும். அவரின் இராசாவும் இராணியும் தோற்றதாக வரலாறு இல்லை. அந்தளவுக்கு எதிரே விளையாடுபவரை விழுத்துவதில் குறியாக நிற்பார். அவரின் இன்னொரு விருப்பமான விளையாட்டு கரப்பந்தாட்டம். மாலை நேரத்தில் மைதானத்தில் அவர் விளையாட வந்துவிட்டார் என்றால், மைதானம் கலகலத்துப் போகும். துள்ளி எட்டி ஓடிஓடி அடிப்பது அவருக்கொரு கலையாகத்தான் இருந்தது.

இவரது குறும்புகளுக்கும் குறைச்சலில்லை. நேரங்காலம் பார்க்காமல் சுற்றி நிற்பவர்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்து விட்டு நழுவிவிடுவார்.

1992.03.01இல் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அத்திவாரமிடப்பட்டது. அன்று கடற்புலிகள் மகளிர் படையணி தோற்றம் பெற்ற நாள். எங்கள் தலைவரின் கனவுகளுக்கு அபார நம்பிக்கையூட்டும் படியாக கடற்புலிகளின் வளர்ச்சியில் பாமா வகித்த பங்கும் அளப்பரியது.

1992ம் ஆண்டின் பிற்பகுதியில் பாமா தன்னை கடற்புலிகளின் அணியில் இணைத்துக் கொண்டார். அன்றிலிருந்து கடற்புலிகள் மகளிர் படையணியை வளர்ப்பதில் அவர் தீவிர அக்கறை செலுத்தினார். சகபோராளிகளுக்கு அணிநடை பழக்குவதிலிருந்து முக்கியமான வகுப்புக்களை எடுப்பது வரை முக்கியமாகப் பங்கேற்றார். தலைமையேற்று நடத்தினார்.

கிளாலியில் மக்கள் பாதுகாப்புக்காக எம்

eelamhouse.com







eelamhouse.com

மால் நடாத்தப்படும் பாதுகாப்பு பணியில் இவருடன் ஒரு குழு பங்களித்துக்கொண்டிருந்தது. கிளாலிக் கடலில் கொட்டும் பனியிலும், மழையிலும், ஊசியாகக் குத்தும் உப்புக்காற்றின் மத்தியிலும் அவர் விடிய விடிய காத்திருந்த காலங்களை நினைக்கின்றோம். தூரத்தே புள்ளியாய் விசைப்படகுகள் தெரியும். கடற்பரப்பில் மக்களின் படகுகள் ஆடிச்செல்லும். நெஞ்சு நீரற்று வரண்டு போய், கண்கள் பீதியால் வழிய அவலப்படும் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய சண்டைகளில் பாமா பங்கேற்றதை நினைக்கிறோம்.

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல் திட்டமிடப்பட்டது. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி முக்கிய பங்கேற்றது. இச் சமரில் கடற்புலிகளின் பங்கு அளப்பரியது.

அந்த வகையில் நாகதேவன்துறையில் கடற்படைத் தளம்மீதான தாக்குதலுக்கு ஒரு படகுக்குப் பொறுப்பாளராக பாமா அனுப்பப்பட்டார். சண்டைக்குத் தனது படகைத்தயார்படுத்திக் கொண்டிருந்த பாமா கரையில் நின்ற போராளிகளிடம்ஆளை ஆள் தெரியாத இருளில், நம்பிக்கை தொனிக்க, "இந்தச் சண்டையிலை நாங்கள் வோட்டஜெட் ஒண்டைக் கொண்டு வருவம்" என்று சொல்லிவிட்டு போனார். சொன்னபடி நாகதேவன்துறைக் கடற்படைத்தளத்தைத் தகர்த்துவிட்டு ஒரு நீருந்து விசைப்படகோடு முகமெல்லாம் சிரிப்பாக வெற்றிப்பூரிப்போடு கரைக்கு வந்தார்.

அதிகாலை திரும்பவும் அவரை வருமாறு நடைபேசி கூப்பிட்டது. எல்லா ஆயுதங்களுடனும் அவரது படகு ஒரு குருவியைப்போல புறப்பட்டு புள்ளியாய் மறைந்து போனது. ஏதோ ஒன்று அவரிடம் வித்தியாசமாகத் தென்பட்டது. வழமைக்கு மாறாக நிறைய எதையோ கூறநினைப்பதுபோல..... அவரது கையசைப்பு அந்த இருளில் மங்கலாகத் தெரிந்தது. காற்றைக் கிழித்தபடி ஓயாத ரவைகள், காதை உரசுவதான அவற்றின் சத்தங்கள். அவைகளின் மத்தியில் அவரது படகு தூரத்தே மறைவதைப் பார்த்துக்கொண்டிருந்தோம். கடலலைகள் ஆர்த்தெழுந்து படகை மறைத்தன. நிலவை விழுங்கிய வானத்தில் ஒளிப்பொட்டாய் நட்சத்திரங்கள். வானம் அமைதியாகத் தான் இருந்தது. கனதியான குண்டுச் சத்தங்கள். கண்ணிமைக்கும் இடைவெளியில், அதற்கும் இடைவிடாத கணத்துளிகளில் ஓசைகள் கேட்டுக்கொண்டேயிருந்தன.

"பப்பா.... பப்பா..." நடைபேசி கூப்பிட்டது. அவசரமாக தொடர்பெடுக்க முயன்று தோற்றுப்போய்.

ஒரு ரவை அவரது காலை ஆழமாகப் பிய்த்துச் சென்றது. பீறிட்ட இரத்தக்குவியலில் பாமா வீழ்ந்த போது...

மீண்டும் மீண்டும் மங்கலான குரலில் அவர்கட்டளை பிறப்பித்துக்கொண்டுதான் இருந்தார். மெல்ல மெல்ல குரல் மங்கி, துடிப்படங்கி....

"காலில் தான் காயம்... பிரச்சனையில்லை". என்ற எங்கள் எல்லோரினதும் நம்பிக்கைகளையும் பொய்யாக்கிக்கொண்டு மெல்ல மௌனித்துப் போனார் அந்தப்பிடிவாதக்காரி. உப்புக் கரிக்கும் கடனீரேரியோடு கலந்துபோனார். கிளாலிக்கடல் உதிரத்தில் தோய்ந்தபடி, மீண்டும் மீண்டும் பொங்கியெழுந்தது.

நானூற்று ஐம்பத்தெட்டு மாவீரர்களோடு எங்கள் பாமா விடுதலையின் பெருநெருப்பாய் சுவாசித்தபடி... வெற்றியின் வேராய் உறங்கட்டும் அமைதியாய்.....

■ சுதாமதி



eelamhouse.com



லெப்.கேணல் மதனா
கருணாதேவி நாகேந்திரம்
வாகரை, மட்டக்களப்பு
பிறப்பு - 06.06.1975
வீரச்சாவு - 06.03.1997
வவுணதீவு இராணுவத்தளம் மீதான
தாக்குதலின் போது

# படை வளர்த்த இளைய தளபதி

மட்டக்களப்பில் போராட்டத்திற்கு மேன் மேலும் ஆளணி சேர்ப்பதில் ஈடுபட்டு, பயிற்சி வழங்கி, படையணியைக்கட்டி வளர்த்ததில் இவர் பங்கு குறிப்பிடத்தக்கது. இக்கால கட்டம் இவர்களுக்கு மிகவும் வேதனையும் சோதனையும் நிறைந்த காலமாகவே இருந்தது. மட்டுநகர் காடுகளை சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுமுழுதாக ஆக்கிரமித்து இருந்த காலமது. அடிப்படை வசதிகள்கூட இன்றிய நிலையில் நம்பிக்கையும் மனவுறுதியும் பலமாக கொண்ட தருணங்களில் மதனா ஒருபோதும் சோர்வடைந்ததில்லை. தனது தோழிகளுக்கு தெம்பூட்டி உற்சாகப்படுத்துவார்.

இதன் பின்னர் படையணியைத்திரட்டி, அப்படையணிகள் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களில் பங்குபற்ற வகைசெய்தார்.

கட்டுமுறிவு இராணுவத்தளத் தகர்ப்பு, தரவைக்குள இராணுவத்தளத் தகர்ப்பு, 4ம் முச்சந்தி இராணுவத்தளத் தகர்ப்பு போன்ற பாரியதாக்குதல்களிலும் அனைத்து பதுங்கித்தாக்குதல்களிலும் திறம்பட செயலாற்றினார். 4ம் முச்சந்தி இராணுவத்தளத் தகர்ப்பின்போது கப்டன் அன்பரசி வீரச் சாவடைந்தார். அன்பரசி ஒரு சுறுசுறுப்பான விவேகமான போராளி. இவரும் மதனாவுடன் சேர்ந்து மகளிர் படையணியின் வளர்ச்சிக்கு தோளோடு தோள் கொடுத்து உதவியவர். அவரது ஞாபகமாகவே மட்டு அம்பாறை மகளிர் படையணிக்கு அன்பரசி படையணி என்று பெயர் சூட்டப்பட்டது. மதனாவின் சுறுசுறுப்பையும், துணிவையும், புரிந்துணர்வையும் களங்களில் படை நடத்தும் திறமையையும் கண்ணுற்ற தலைமைப்பீடம் மதனாவை அன்பரசி படையணியின் சிறப்புத்தளபதியாக நியமித்து.

மதனா அன்போடும் அரவணைப்போடும் தன்தோழிகளுடன் ஆடிப்பாடி மகிழ்வார். தளத்தில் தாயாகவும், கடமையில் கண்ணியமாகவும் களதத்தில் படைநடத்தும் தளபதியாகவும் நின்று போராளிகளை வழிநடத்திக்கொண்டிருந்தார். இவருக்கு சகதோழியருடன் சேர்ந்து விளையாடுவ தென்றாலே பெருவிருப்பம். பின்னேரம் நான்கு மணியாகிவிட்டால் தன் படையணியினரை தளத்தில் தங்க விடமாட்டார். கால்பந்து, கைப்பந்து, கிரிக்கெட், வட்டக்காவடி, எனப்பல்வேறு விளையாட்டுக் காக சக தோழியர் அனைவரையுமே விளையாடுவதற்கு ஊக்கப்படுத்தி தானும் சேர்ந்து விளையாடு


eelamhouse.com



வார். இதனால் ஒவ்வொரு போராளியின் மனநிலையும் சமநிலைப்படுகின்றது என்பது அவரின் எண்ணம்.

மதனா பங்கு பற்றிய தாக்குதல்களில் மக்கள் நிறைந்து வாழும் சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை, மாவடிவேம்பு ஆகிய இடங்களில் காவலுலா சென்ற சிங்கள இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் மக்கள் மனதில் இடம் பிடித்தன. இதில் பெருமளவு எதிரிகளும் இராணுவ தளபாடங்களும் அழிக்கப்பட்டன. மதனாவின் வழிநடத்தலில் பெண்புலிகளின் வீரங்கண்டு எதிரி அதிர்ந்தான். மக்கள் அதிசயித்தனர். புளுகுணாவ வெற்றிச் சமரிலும் மதனா தனது படையணியினருடன் பெரும் பங்காற்றினார். மட்டக்களப்பில் இவரின் பாதம் படாத மண்ணே இல்லையெனலாம். கிழக்குக்காடுகளின் காட்டு மரங்கள், மலைகள், அருவிகள் அத்தனையும் இவரை அறியும்.

1997.03.05 இல் கஜபாகு சிறப்புப் படையணினர் நிலை கொண்டிருந்த வவுணதீவு ஆக்கிரமிப்பு இராணுவத்தளம் மீதான தாக்குதலில் இவரது அணிக்கு ஒரு இலக்கு கொடுக்கப்பட்டது. அதிகாலை 1.05 மணிக்கு சண்டை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து எட்டு மணிநேர உக்கிர மோதல் தொடர்ந்தது. நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் எஞ்சிய எதிரிகள் திகில் அடைந்து ஓடத் தொடங்கினர். தனக்குக் கொடுக்கப்பட்ட பகுதியை வெற்றிகரமாகக் கைப்பற்றிய மதனாவின் குரல் ஆர்வத்துடன் தொலைத்தொடர்பு சாதனத்தில் ஒலித்தது.

“நாங்கள் எங்கள் பகுதியை முற்றாகப் பிடித்து கிளியர் பண்ணிவிட்டோம்”

களத்தில் அவரது பணி முடிந்த பின்னர் கூவிச் சென்ற எறிகணை ஒன்று இவரது உயிரைப் பறித்துக்கொண்டது. காயம்பட்ட தோழியொருத்தி மதனாவின் உடலைச் சுமந்தபடி வந்துகொண்டிருந்தார்.

மதனா... மகளிர் படைநடத்திய இளைய தளபதி அவர். அவரது பெயர் சொல்ல இன்று நீண்ட அணியாய் அவர்கள்.

■ சுதாமதி



eelamhouse.com



மேஜர் வளர்மதி
சாந்தி செல்லத்துரை
வாழைச்சேனை, மட்டக்களப்பு
பிறப்பு - 01.06.1970
வீரச்சாவு - 16.04.1992
மட்டு மாவட்டத்தில்
சுகயீனம் காரணமாக

# தென்திசையில் முத்துகள் விளைகின்றன

பொன் கொழிக்கும் வயல் நிலங்களும், அதனுடன் மலைகளும், அருவிகளும் என தன்னகத்தே செழிப்புக் கொண்டது தென்தமிழீழம். அடர்ந்த காடு, சில்வண்டின் இரைச்சலை இடையிடையே தடுக்கும் முகமாக ஓசையிடும் வனவிலங்குகள், அவற்றையும் மீறி எதிரியின் எறிகணைகள், துப்பாக்கிச் சன்னங்கள்.

இவற்றுக்கு மத்தியில் தற்காலிகமாக அமைக்கப் பெற்ற பாசறை ஒன்றில் வளர்மதி. அவர் கையில் ஒரு கடிதம். கடிதத்திற்குரிய போராளி அவர் முன்.

“இந்தாம்மா, உன்ர அப்பர் செத்துப்போச்சி எண்டு காகிதம் வந்து இரிக்கு” என்றபடி கொடுக்க, பெற்றுக் கொண்ட போராளி மௌனமாக கண்ணீர் விடுகிறார். காரணம் அவர் மட்டுமல்ல, அவரைப் போல அனைத்துப் போராளிகளுமே இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் பெற்றோரின் நிலையைச் சிறிதளவுகூட அறியாத நிலையிலேயே இருந்தனர்.

அழுதவாறு தம் முன் நிற்கும் அப்பிள்ளையைப் பார்த்து “படிச்சிட்டுக் கத்து” என்று முகத்தில் சிறிதளவுகூட மாறுதலிலாமல் கடுமையாகவே பதிலளிக்கின்றார் வளர்மதி.

கடிதம் பிரிக்கப்பட, அதில் பலமாதங்களின் பின்னர் தந்தையின் சுகச்செய்தியே தனக்கு கிடைக்கப்பெற்றது என்பதைக் கண்டவுடன் சிரிப்பும் அழுகையுமாகக் காட்சி தருகின்றார் அப் போராளி.

வளர்மதியின் இதழிலும் சிரிப்பு வருகின்றது. “பாசத்தைப் பார். ஒழுகுது. வந்திட்டினம் போராட,


eelamhouse.com

உன்னைச் சோதிக்கத்தான் இப்படிச் சொன்னான். என்னதான் இடைஞ்சல் வந்தாலும் நாங்கள் கலங்கக்கூடாது. கவலைப்படறதுக்காம்மா நாங்க இயக்கத்தில சேர்ந்தனாங்க" என்றவாறு எழுந்து கொள்கின்றார்.

மேஜர் வளர்மதியின் இயற்பெயர் சாந்தி. பெயருக்கும் அவளுக்கும் தான் என்ன பொருத்தம்! அமைதியின் உருவம். கண்களில் ஒருவித ஒளி. உறுதியான உடல், மனமும் கூட, கலகலப்பான சுபாவம் கொண்டவர்தான். ஆனாலும் அதற்குக் கூட ஒரு வரையறையை வகுத்துக் கொண்டவர். மக்களுடன் மக்களாக, பெரியவர்களுடன் பணிவாக, சிறியவர்களுடன் அன்பாகப் பழகுவதற்கு ஏற்ப தன்னை மாற்றியமைத்துக் கொண்டவர்.

இராணுவ ஆக்கிரமிப்பினால் அழிவுற்று சாம்பல் பூத்த மேடாகக் காட்சியளிக்கும் பல ஊர்களில் ஒன்றான கண்ணகிபுரம் - தியாவட்டவான் பகுதியைத் தனது பிறப்பிடமாகக் கொண்டவர். காகிதச் தொழிற்சாலைக்கு சமீபமாகவே அவ்வூர் அமைந்திருந்தது. ஒரு புறம் தமிழர்களின் குடியிருப்புக்கள், மறுபுறம் முஸ்லிம் குடியிருப்புக்கள் என அமையப் பெற்றிருந்தது.

முத்துப்பிள்ளை செல்லத்துரையின் கடைசிப் பெண் இவர். 1970.06.01 இல் பிறந்தார். ஒரு வயது நடக்கும் போது கொடிய நோயிடம் தந்தையைப் பறிகொடுத்தார். இவர் தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது கல்வியைப் பெற்றுக்கொண்டார்.

நான்கு சகோதரிகளினதும் ஆறு ஆண் சகோதரர்களினதும் அணைப்பில் மிகவும் செல்லாமாக வளர்ந்து வந்தார் வளர்மதி. இவரின் குடும்பமே இயக்கத்துக்கென தம்மை முழுமையாக அர்ப் பணித்துக் கொண்டது.

இராணுவத்தினரால் புலிகளுடன் மோத முடியாத சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தான் அவர்களுடைய பலிக்கடாக்கள் ஆயினர். நாள்தோறும் வெட்டுக்களும், சூடுகளும் கைதுகளும். தமது வெறி தீர்த்த பின்னர் விலகுவார்கள்.

இவரின் குடும்பமும் பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. சொந்தமான ஐந்து வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. துன்பங்களின் படிகளில்தான் விடுதலையின் வேகம் உயரும் என்பதை சிங்கள ஆதிக்கம் உணர்ந்து கொள்ளாதது எவ்வளவு வேடிக்கையானது! ஒரு சகோதரன் முழு நேரமும் காட்டினுள் புலிகளுடனேயே இருந்து உதவி செய்தார். இரு ஆண் சகோதரர்கள் போராளியாக மாறினர். விடுதலையின் வேகத்தினைத் தாங்க முடியாத இராணுவம், காட்டிக் கொடுக்கும் கயவரின் துணையுடன் 1988இல் ஒரு அண்ணனை வெட்டிக்கொன்றது. 1990இல், திருமணமான ஒருஅண்ணனைச் சிறையில் அடைத்தது. பெண் பிள்ளைகளின் நிலையை எண்ணிக் கலங்கிய தாய், இறகுனுள் குஞ்சுகளை பொத்தி வைக்கும் தாய்க்கோழியைப் போல தன் பெண் குழந்தைகளுடன் காட்டுக்குள் ஓடி ஒளித்த நாட்கள் அனேகம். ஆனாலும் வளர்மதியின் போராட்டம் தொடர்பான செயற்பாடுகளை அத்தாய் கூட அறிந்திருக்கவில்லை. அவர் போராளியாக மாறிய பின்னரே அனைத்தையும் புரிந்து கொண்டார். அடிக்கடி நிகழும் கலவரங்களினால் ஒன்பதாம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்திய சாந்தி. தையல் கலையிலும், பாய் அடிப்பதிலும் தேர்ச்சி பெற்றார். இவற்றின் நடுவிலும் அவர் பணி தொடர்ந்தது. போராளியாக இணைவதைவிட போராட் டத்திற்கு ஆதரவாக ஊருக்குள்ளே உலாவுவது தான் அங்கே மிகவும் கடினமான காரியம். காட்டிக் கொடுக்கும் கயவர் கூட்டம் கழுகுக்கண்களுடனும் கையில் வாளுடனும் அலைந்து திரிந்து கொண்டிருந்தது. இவற்றின் நடுவிலும் அவர் பணியைத் தொடர்ந்தார்.

1998.08.08 அன்று சாந்தி வீட்டிலே இருந்த நேரம், துரோகக் கும்பலுடன் நுழைந்த சிங்களப்படை

eelamhouse.com

அவரை அடித்து நொருக்கியது. "உண்ட கொண்ணன் எங்க" எனக் கேட்டுக் கேட்டு அடித்தனர். எவ்வளவோ அடிகள் விழுந்தும் கூட அவர்களுக்குச் சாதகமான பதில் ஒன்று கூட அவரின் வாயில் இருந்து வரவில்லை. அக்கொடிய படைபோகும் போது "மறுகா வருவம்" என்றபடி போனது.

செய்தி அறிந்து வீட்டுக்கு ஓடிவந்த தாய், வீங்கிய முகத்துடன் இருந்த தனது மகளை வாரி எடுத்து அணைத்துக் கொண்டார். ஆனால் வளர்மதியின் உதடுகளோ, "நான் இயக்கத்துக்குப் போப் போறன்" என்ற சொல்லையே திரும்பத் திரும்பக் கூறியது. தனது நகைகளைக் கழற்றி தமக்கையின் குழந்தைகளுக்கு போட்டவாறு "எனக்கிது தேவை இல்ல" என்று கூறியவரை மறுநாளிலிருந்து காணவில்லை.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்துக் கொண்டவர், 1990ம் ஆண்டில் தனது ஒரு சிறுகுழுவுடன் தான் பிறந்த மண்ணில் ஒரு முழுமையான போராளியாகக் காலைப் பதித்தார். அந்நேரத்தில் புதிய பெண் புலிகளும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். பயிற்சி முடிவடைந்தது. பிள்ளைகளுடன் பிள்ளையாகவும் அதேவேளை குழுக் களை வழிநடத்திச் செல்லும் தலைவியாகவும் செயற்பட்டார்.

சில காலங்களின்பின் சக போராளி ஒருத்தியுடன் ஊருக்குள் இறங்கி, தனது பரப்புரை வேலை களை இரகசியமாக முடுக்கி விட்டார். அதன் பின், பல பெண்கள் இயக்கத்தில் இணைந்தனர்.

மீண்டும் சிங்கள வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. அவ்வேளையிலும் கூட மக்களின் எண்ணத்தினை அறியும் பொருட்டு ஊருக்குள் தனது பணியைச் சிலகாலம் தொடர்ந்தார் வளர்மதி.

சண்டைகளின் போது இவர் பெரும்பாலும் குழுத் தலைவியாகவே சென்றார். அடிக்கடி போராளிகளை அழைத்து இயக்க நிலைப்பாட்டை விளக்கி, உறுதியாகச் செயற்பட வேண்டும் என்று ஒரு தாயைப் போல புத்திமதி கூறுவார்.

"நான் எடுத்த பயிற்சியைப் போல சகல பயிற்சியும் தரணும் எண்டு ஆசை. நல்லா வளக்கணும் எண்டுநிறைய எண்ணி வைச்சிரிக்கன். கொஞ்சக்காலம் போகட்டும். வாகனம் ஓட்டக்கூடக் பழக்கித் தருவன்" என்று கூறுவார். பொறுப்பாளராக இருந்த போதிலும், போராளிகளுடன் போராளியாக கரப்பந்து விளையாடுவதிலும், நீச்சலடிப்பதிலும், நகைச்சுவைத் துணுக்குகள் கூறுவதிலும் இணைந்தே நிற்பார். அவரின் அத்தகைய குணமே போராளிகள் மத்தியில் பெரும்மதிப்பினை வளர்த் தது. எள் எனும் முன்பு எண்ணெயாக வந்து நிற்கும் அளவுக்கு அவரிடம் பாசமும் பணிவும் கொண்டி ருந்தனர்.

வளர்மதியின் உயிர் நண்பியாக விளங்கியவர் 2ம் லெப் நிலா. இருவரின் உரையாடலிலும் நகைச்சுவை இழையோடும். சிந்தனைவயமான வரிகளும் இணைந்து காணப்படும்.

"நிலா, கொழுத்தித்தான் என்னை எரிச்சாலும் என்ர கொள்கையில இருந்து ஒரு நாளும் விலகமாட்டன். அது போலத்தான் எல்லாப் புள்ளைகளும் இருக்க வேணுமெண்டு விருப்பப்படுகிறன். எங்கட காலடி பதிஞ்ச இடத்தில எங்கட ரத்தமும் உறைய, நாங்கள் குடுத்து வெச்சவங்க" என்று ஆழ்ந்த உணர்வுடன் கூறுவார்.

நிலாவோ "வளர்மதியக்கா, நான்தான் முதல்ல சாவன். என்னைப்பத்தி எழுதுங்கோ" என்பார்.


eelamhouse.com



eelamhouse.com



"போடி. நான்தான் சாவன்" என்பார் வளர் மதி. ஆனால் நடந்ததோ... கள்ளிச்சையிலிருந்து வெலிக்கந்தை நோக்கிக் காவல் உலாச் செல்லும் சிறீலங்கா இராணுவ அணி மீதுதாக்குதல் நடத்தவேண்டும் என்று திட்டம் தீட்டப் பட்டது. சில போராளிகளைக் கொண்ட குழுவுக்கு தலைவியாக வளர்மதி. அவர்களுள் ஒருத்தியாக நிலா.

சண்டைக்கெனச் செல்லும்போது தேவையான உணவுப் பொருட்களையும் கொண்டுதான் பயணம் தொடரும். கற்களும், முட்களும் நிறைந்த பகுதிகளையும், அருவிகளையும் மலைகளையும் கடந்து பயணம் தொடர்ந்து செல்லும். இத்தனை சிரமங்களின் மத்தியிலே தான் எதிரியின் மனோபலத்தைச் சிதைத்து புலிகள் போரிடுகின்றனர். நிலை எடுத்து இருக்கும் போது உடல்மேல் புழுக்கள் ஊரும். பாம்புகள் நெளியும். தொண்டை வரண்டு இருமல் வரும். அனைத்தையும் பொறுத்துக் கொண்டுதான் தயார் நிலையில் காத்திருப்பார்கள் புலிகள்.

இராணுவ அணி தாக்கப்பட்டது. இருபது நிமிட இடைவெளியில் எதிரியின் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அதில் எல். எம். ஜியும் அடங்கும். சிதறிய இராணுவம் ஓடுகின்றது. இறுதியில் விழுகின்றது. ஜீப்புடன் ட்ராக்டர் ஒன்றும் கைப்பற்றப்பட்டுச் சேதமாக்கப்பட்டன. இதில் நிலா வீரச்சாவினை அணைத்துக்கொண்டார். நிலாவின் மார்பில் ரவையினால் ஏற்பட்ட காயத்தை வளர்மதியின் கை ஆறுதலாகத் தடவிக் கொண்டிருக்கிறது. இறுதி வணக்கம் நடைபெற, பயணம் தொடர்கின்றது.

தற்காலிகத் தளம் மீண்டும் அமைக்கப் பட்டது. வளர்மதி போராளிகளுடன் மட்டுமல்ல, வனத்து ஜீவராசிகளுடனும் அன்பாகவே தனது பொழுதினைக் கழித்தார். ஒரு முறை காவல் உலாவுக்குச் சென்ற சமயம் தாய்க் குரங்கு ஒன்று தனது குட்டியை அணைத்தவாறு இவரைப் பார்த்தது. அக்குட்டியை எப்படியும் தான் எடுத்து வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு.



eelamhouse.com

"தாயுடன் இரிக்கிறதை எப்படிப் பிரிக்கிறது? பேசாம வாங்க போவம்" எனத் தோழிகள் அழைத்தும்கூட, "திரத்திப் பாப்போம். அப்ப தாய் குட்டியை போட்டுத்து ஓடும். எடுப்பம்" என்றார். அவர் சொன்னபடியே நடக்க, குட்டி வளர்மதியின் கையில். அருமையாக அதை வளர்த்தார். ஒரு நாள் திடீரென பெரிய மழை பிடித்துக் கொண்டது. பொலித்தீனாலான சிறு குடிசையில் நிறையப் பேர் நிற்க வேண்டிய நிலை. அங்கு வளர்மதியும். சாக்கின் கீழே வெகு நிம்மதியாக உறங்கியபடி குட்டி. வளர்மதி அதை கவனிக்காமல் சாக்கின் மேல் ஏறி மிதித்ததில் குட்டி இறந்துவிட்டது. "ஐயோ உங்கட புள்ளையை நீங்களே சாகவச்சிப் போட்டிங்களே" என சக போராளிகள் அனுதாபம் நிறைந்த குரலில் கூற, அவரால் எதுவுமே செய்ய முடியவில்லை. தன் துக்கத்தை வெளியில் காட்டாது மௌனமாக நின்றார்.

அதன் பின்னர் குட்டிக் குரங்குகளைக் காணும் போதெல்லாம் "வளர்மதியாக்காவோட புள்ளை போகுது" எனும் போராளிகளின் கிண்டல்களை, இதழின் ஓரத்தே ஒரு சிறு புன்னகையுடன் சமா ளித்துக் கொள்வார்.

மாதத்தின் பாதி நாட்களில் எதிரியின் வரவை வேவு பார்த்து, மிகுதி நாட்களில் திட்டம் தயாரித்து தாக்குதல் நடாத்தி ஆயுதங்களை அள்ளியபடி, வெற்றியுடன் திரும்புவர். இவ்வாறே மாதம் ஒருமுறை சண்டை எனக் கணக்கிட்டுத் தாக்குதல்கள் தொடரும். வேவுப் பிரிவு வந்துவிட்டது என அறிந்ததுமே வளர்மதியுடன் சில போராளிகள் பொறுப்பாளரின் முன் நின்று "நாங்களும்" என்பர். ஒப்புதல் கிடைத் ததும் துள்ளியபடி சண்டைக்குரிய விடயங்களைக் கலந்துரையாடச் சென்று விடுவர்.

போரில் வெற்றியுடன் திரும்பியபின், கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். வளர்மதி போராளிகளுடன் இணைந்து தேவையான உதவிகளைச் செய்து, மேடை ஏறுவதில் போராளிகளுடன் போராளியாக நின்று சிரமப்படுவார். இம்மாத நிகழ்ச்சியில் பங்குபெறும் போராளிகள் சிலர் மறுமுறை நடைபெறும் நிகழ்ச்சிகளில் இருக்கமாட்டார்கள். இப்படித்தான் சோகங்களினூடு கலை நிகழ்வுகளும் கலந்திருந்தன.

1992 சித்திரை மாதம் பொங்கல் விழா. தமிழரின் பூர்வீக விழா. அன்று போராளிகளுக்கு வழங்க வென 'கேக்' வந்திருந்தது. அங்கு இவையெல்லாம் வருவது மிகவும் அபூர்வம். பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு வளர்மதியிடம் ஒப்படைக்கப்பட, பெரிய பெரிய துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு போராளி யாக அழைத்துக் கொடுத்த வண்ணம் "சாப்புட்டுத்து மிச்சத்தை வையுங்க சண்டைக்குப் போற நேரம் பசிச்சா தின்னலாம்" என்று கூறினார்.

குரங்குக்குட்டிக்கு பின்னர் அவரிடம் லக்கி எனும் பெயருடைய ஒரு கிளி இருந்தது. சில நேரங்களில் அதனுடன் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிப்பார். சண்டைக்குழுவுக்குப் பொறுப்பாக இருந்தவர். காட்டிலுள்ள அனைத்துப் பெண் போராளிகட்கும் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அந்த வேளையில்தான் கள்ளிச்சைப் பகுதியில் இருந்து காவல் உலா வரும் இராணுவ அணி மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆயத்தங்கள் நடை பெற்றுக் கொண்டிருந்தன.

இதற்கிடையில் அவர் ஆசையாக வளர்த்த கிளி இறந்துவிட்டது. அது இவருக்கு மிகவும் வேதனையை உண்டாக்கினாலும் அதனை வெளிக்காட்டாதவாறு தனது பணிகளைச் செய்த வண்ணம் இருந்தார். மூன்று மணிக்கு பயணம் ஆரம்பமானது. பதினான்காம் திகதி நிலை எடுக்கப்பட்டது. சிறிது தூரத்தில் சமையல் வேலை நடைபெற, இரவு உணவு உண்ட பின்னர் பதினைந்தாம் திகதி மதியம் இரண்டு மணிவரை எதிர்பார்த்த எதிரியின் அணிவராததையடுத்து முன்னைய இடத்துக்கு மீள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனது உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதை

eelamhouse.com

அறிந்து கொண்ட வளர்மதி. அதனை பெரிதுபடுத்தாமல் புறப்பட ஆயத்தமானார். குழுவின் தலைவியல்லவா அவர். அவர்சோர்ந்தால், போராளிகளை யார் வழிநடத்துவது? அவர் முன்னே நடக்க, பின்னே போராளிகளும் ஒற்றை வரிசையாகத் தொடர்ந்தனர். அவர்களுக்கு முன்னே ஆண் போராளிகளும் அதேபோலச் சென்று கொண்டிருந்தனர்.

திடீரெனத் துப்பாக்கி வேட்டொலிகள். அனைவரும் ஒரு கணம் நின்று தமது நிலைகளை சரி செய்து கொண்டனர். ஒலிக்குரிய காரணம் ஒரு கரடி என்பதை அறிந்ததும் அதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எல்லோருக்கும் எழ, "அக்கா கரடி" என்றவாறு மிகுதியை முடிக்காது நின்ற போராளிகளின் மனதை அறிந்து "சரிபோய்ப் பார்த்தித்து வாங்க. நான் இதில இரிக்கன்" என்றவாறு ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டார்.

என்னதான் மறைத்திருந்தாலும் உடல்நிலையை இவரின் முகம் தெளிவாக எடுத்துக் காட்டியதை அவதானித்த மருத்துவப் பிரிவு பெண்போராளி, "அக்கா வருத்தமாக்கா" எனக் கேட்கவும், "காச்சல்தான், கஸ்ரம் இல்ல" என்று மொட்டையாக பதிலளித்தார். பனடோல் ஒன்று கொடுக்கப்பட்டது. கரடி பார்த்து திரும்பினர் போராளிகள். பயணம் தொடர்ந்தது. பதினைந்தாம் திகதி இரவு ஒரு மலை அடிவாரத்தில் உணவருந்தி ஓய்வெடுத்துக் கொள்கின்றனர். சிறிதளவு உணவு உண்ட பின்னர் வளர்மதியும் உறங்கினார். மறுநாள் காலை உணவை முடித்தபின்னர் பயணம் தொடர்ந்தது. போராளிகளுக்கு முன்னே வழிகாட்டி நடந்த வளர்மதி, சிறிது சிறிதாகப் பின் தங்கி, கடைசியாக வந்து கொண்டிருந்தார். அப்போது தான் அவர் "எனக்கு இயலாமக்கிடக்குது. தலை எல்லாம் கிறுகுது" எனக் கூறினார். சில மணித்தியாலங்களுக்கு அனைவருக்கும் ஓய்வு வழங்கப்பட்டது. ஒரு மரத்தின் கீழ் அமர்ந்துவிட்டார் வளர்மதி.

வாந்தி எடுத்து களைப்படைந்ததால் திரவஊடகம் ஏற்றப்பட்டது. மீண்டும் ஒன்றரை மைல் நடைப்பயணம். அவளால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அவரின் ஒப்புதலின்றியே போராளிகள் அவரை காவுவண்டியில் ஏற்றினர். அவரை மாறி மாறி சுமந்த வண்ணம் போராளிகள் நடந்தனர். இரவு ஒரு இடத்தில தங்கினர். வேறு இடத்துக்கு வருமாறு அழைப்புவர, மீண்டும் பயணம் ஆரம்பமானது. வளர்மதி காவுவண்டியில் ஆடாமல் அசையாமல் கிடந்தார். களைப்பு மிகுந்ததால் பானம் கொடுக்கப்பட்டது. அவரது உதடுகள் நிறையப் பேசத் துடித்தன. ஆனால் அவை தொண்டையினுள்ளேயே சிக்கிகுண்டு போயின. "சாயம் தாங்க" இறுதியாக மிகவும் சிரமப்பட்டு வந்த சொற்கள் தான் அவை. அதைக் குடித்த சில நிமிடங்களில் எல்லோரிடமிருந்தும் அவர் விடை பெற்றுக்கொண்டார்.

வளர்மதி! அவர் சந்தித்த களங்கள் ஏராளம். கள்ளிச்சை வாகனேரி, சிங்கபுர, கொழும்புவீதி, மண்முனை, மகிழடித்தீவு, உன்னிச்சை பாலையடிவெட்டை, சித்தாண்டி சிங்களக் காவல் நிலையம் எனப் பல களங்கள். ஒவ்வொன்றிலுமே பலமாகச் செயற்பட்டு, எதிரிக்குத் தக்க பதிலடி கொடுதவர். ஒரு வேங்கை விழ பல வேங்கை எழுவர் என்பதற்கு அவர் நல்ல எடுகோள். அவர் விட்ட பணியைத் தொடரவெனப் பல பெண்புலிகள் தென் தமிழீழத்திலிருந்து எழுந்து தயாராகி வருகின்றார்கள்.

நிலா, கல்யாணி, வளர்மதி, விவேகா, நிரந்தரி, என பல உடல்கள் அக்கானகத்திடையே விதைக்கப்பட்டன. ஆயினும் பணி தொடர்கின்றது. சோதனைகளையே சொந்தமாக்கியபடி இலட்சியம் ஒன்றை வென்றெடுப்பதற்காகப் பயணம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது.

■ பொன்னிலா


eelamhouse.com

மேஜர் தாரணி
மதிவதனி சுப்பிரமணியம்
அத்தாய், பூநகரி
பிறப்பு - 20.02.1968
வீரச்சாவு - 23.01.1991
குப்பிளான் கட்டுவனில்
சிறீலங்கா இராணுவத்துடனான
நேரடி மோதலின் பின்னான
எறிகணை வீச்சில்



# தனித்த இலக்கு

சட... சட... என்ற துப்பாக்கி வேட்டொலிகளாலும் டும்.... டும்.... என்ற குண்டுச் சத்தங்களாலும் பொன்னாலைக் கிராமமே அதிர்ந்த வண்ணம் இருந்தது.

பொன்னாலையில் இருந்த கைவிடப்பட்ட இராணுவத் தளத்தை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் கடற்படையினரின் படகின் மூலம் பொன்னாலைக் கடற்கரையில் இறக்கப்பட்ட இந்திய பராத் துருப்புக்களுக்கும் எமது அணியினருக்கும் இடையே உக்கிரமான சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கடற்கரைக்கு அருகே அமைந்திருந்த கோயிலில் நிலைகொண்டிருந்த இராணுவத்திரை நோக்கி பாதுகாப்பான இடமொன்றில் நிலை எடுத்திருந்த தாரணியின் துப்பாக்கி மிகவேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. ஆறுமணி நேரங்களாக நடைபெற்ற அந்த மோதலில் ஆண் போராளிகளில் குட்டி உட்பட மூவர் வீரமரணத்தைத் தழுவிக் கொள்கின்றனர். பெண் போராளிகளில் விஜி காயமடைகின்றார். அத்தோடு இராணுவமும் பின்வாங்கிச் செல்கிறது.

எம்மவர்கள் எல்லோருடைய முகங்களிலும் மூன்று போராளிகளை, உயிர்நண்பர்களை இழந்த துயர் காணப்பட்டாலும் இந்தியஇராணுவத்தை வெற்றி கொன்றுவிட்டோம் என்ற பெருமிதமும் காணப்பட்டது. அந்தப் பெருமிதத்தோடு தாரணி தோழிகளைப் பார்த்துச் சொல்கிறார். "இது மட்டுமல்ல வெற்றி. இனி நமக்கு எல்லாமே வெற்றிதான். இதைவிட இனி நாங்கள் அண்ணாக்களின் துணையில்லாது தனித்து நின்று இராணுவத்தை தாக்கி வெற்றி பெறவேண்டும்" நம்பிக்கையோடு அவரது வார்த்தைகள் வெளிவருகின்றது.

சிறிலங்கா இராணுவ வெறியாட்டங்களும் வன்செயல்களும் இந்த மண்ணில் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட முன்னர் நெல் விளையும் பூமியான மொட்டைக்கறுப்பன் அரிசிக்கு பெயர்போன பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தாரணி.

அந்த மண்ணிலே தனது கல்வியை மேற்கொண்ட இவர் மனதில், வளமான பசுமையான தனது கிராமம் கொஞ்சங் கொஞ்சமாக பசுமை இழந்து வயல் வெளிகளெல்லாம் வெறிச்சோடிப்போன

eelamhouse.com

நிகழ்வுகள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தின. கண்முன்னே நடந்த சம்பவங்களும் காது வழியே கேட்ட இராணுவ வெறியாட்டங்களும் இவரை இந்தப் போராட்டத்திலே இணைய வைத்தன.

1985ம் ஆண்டு எமதியக்கத்திலே தன்னை இணைத்துக் கொண்ட இவர் மதிவதனி என்ற தனது இயற்பெயரை தனது பயிற்சியின் போது தாரணி என மாற்றம் செய்து கொண்டார்.

பயிற்சிப்பாசறையில் இவர் மிகவும் துடிப்பானவர். வெடிமருந்து சம்பந்தமான வேலைகளில் மிகவும் விருப்பமானவராகவும் கெட்டிக்காரியாகவும் விளங்கினார். பயிற்சிப் பாசறையில் இருந்து புறப்பட்ட உடனே போர்க்களத்தில் எதிரியைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது.

1986ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்துக்கும் எமக்குமிடையே அடம்பனில் நடந்த மோதலில் தாரணி பங்கேற்கிறார். இதுஇவரது முதற்களம். அவளுக்கு மட்டுமல்ல, பெண்கள் அணியினரின் முதற் களமும் அதுதான். இதில் தாரணி கையில் காயமடைகிறார். இந்தத் தாக்குதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. புகழ் பெற்றது. முதல் முதலில் இரு இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கப்பட்டதும் இத்தாக்குதலில் தான்.

அதன் பின் காயம் ஆறியதும் கோட்டையில் காவல் பணியில் ஈடுபடுகிறார். அத்தோடு யாழ் தொலைத் தொடர்பு நிலைய இராணுவத்தின் மீதான தாக்குதலிலும் பங்கேற்கிறார்.

1987இல் இந்திய இராணுவம் எமது மண்ணில் காலடி வைக்கிறது. ஒப்பந்தம் நிறை வேற்றப்படாததைத் தொடர்ந்து எமக்கும் இந்தியப் படைகளுக்குமிடையே மோதல்கள் ஆரம்பமாகின்றன.




eelamhouse.com

இந்திய இராணுவத்துக்கும் எமக்கும் இடையே சகல இடங்களிலும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம்....

வட்டுக்கோட்டையைக் கைப்பற்றும் நோக்குடன் அராலித்துறையிலிருந்து கல்லுண்டாய் வெளியூடாக முன்னேற முயன்ற இராணுவத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக எமதணி புறப்பட்ட வேளையில் திடீரென தாரணி "எடியேய் நாங்கள் போற இடத்தில வயித்துக்குப் போட என்னவெண்டாலும் இருக்குமே" என்கிறார். எல்லோரும் ஒரு நிமிடம் தன்னிலை மறந்து சிரிக்கின்றார்கள். ஒரு தோழி இவரைப் பார்த்து "உன்னை ஒரு பத்து நாளாவது சாப்பாடு இல்லாமல் பட்டினி போட வேணுமடி" என்றபடி இராணுவத்தை எதிர் கொள்கின்றனர்.

சண்டை என்று தொடங்கிவிட்டால், அதை மட்டுமே குறியாகக் கொண்டு எதிரியைத் தாக்கும் இயல்பு கொண்ட தாரணி, இடையிடையே இப்படி ஏதாவது சொல்லி எல்லோரையும் சிரிக்க வைப்பார். இந்த மோதலிலும், இரண்டாம்நாள் இராணுவம் இழப்புக்களுடன் பின்வாங்குகிறது.

இப்படிப்பல இந்திய இராணுவ மோதல்களில் பங்கேற்ற இவள், காட்டில் எமது தலைவரால் தயாரிக்கப்பட்ட 'ஜொனி' மிதிவெடித் தயாரிப்பின்போது அதில் ஈடுபட்ட பெண்கள் குழுவுக்குத் தலைமைதாங்கினார். காட்டிலிருந்த பெண்களது பயிற்சி தளத்தில் இவர் வெடிமருந்து பற்றிய பயிற்சி வகுப்புக்களைத் திறமையாக நடத்தினார். மிதிவெடிகள் புதைப்பதில் மிகவும் கெட்டிக்காரி.

1990இல் இந்திய இராணுவம் இம்மண்ணை விட்டகன்றதும் மீண்டும் எமக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையே சண்டை ஆரம்பமாகியது.

பலாலி இராணுவத் தளத்தைச் சூழ நின்ற எமது பெண்கள் அணிக்குத் தாரணி தலைமையேற்றுச் செயற்படுகின்றார். போராளிகளோடு அன்பாகவும் அதே நேரம் கண்டிப்பாகவும் பழகும் தன்மை கொண்டவர். தான் இல்லாது யாரும் காவல் அரண்களுக்கு முன்பக்கம் போகக் கூடாது என்பார். தன் தோழிகளுடன் உரையாடும் போது, "என்ர கண்ணுக்கு முன்னாலை என்னுடைய எந்தப் பிள்ளையும் இராணுவத் தாக்குதலுக்குப் பலியாகக்கூடாது. எனக்கு ஏதாவது நடந்தாலும், என்ர பிள்ளையள் காப்பாற்றப்பட வேணும்" என்பார். யாராவது, போராளிகள் காயமடைந்து விட்டால், அவர்களை வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கிடையில் தவித்துப் போவார். உடனடியாக வைத்தியசாலைக்கு காயமடைந்தவரை அனுப்பி, அவருடன் சென்றவர்கள் திரும்பி வந்து "பிள்ளை சுகமாய் இருக்குது" என்ற பிறகு தான் நிம்மதி அடைவார்.

இறுதியாக 1991.01.23 அன்று பலாலி இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தாரணி, அதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் கூட தனது சகபோராளிகளுடன் அமர்ந்து, யாரோ அனுப்பிய உணவை எல்லோருக்கும் பரிமாறிக்கொண்டே சொல்கிறார். "நான் இப்ப எல்லோருக்கும் சாப்பாடு போடுறன். தற்செயலாக நான் செத்திட்டா எல்லோரும் சேர்ந்து எனக்குப் படையுங்கோ என்ன" என்று கேட்டுவிட்டுச் சிரிக்கிறார். அவருடன் சேர்ந்து எல்லோருமே சிரிக்கின்றனர்.

அவருடன் நின்ற போராளிகள் அந்த நேரம் சொன்னார்கள் "தாரணியக்கா செத்திட்டா ஆனா அவ நினைச்சது மாதிரி அவ அடிக்கடி சொல்லுறது மாதிரி, நாங்கள் ஒரு நாளைக்கு தனியா ஒரு படைத்தளத்தைத் தாக்குவம் எண்ட நம்பிக்கை எமக்கிருக்கின்றது" என்கிறார்கள்.

தாரணி மறைந்துவிட்டார். அவரின் இலட்சியங்களும் கனவுகளும் இன்னும் மறையவில்லை.

eelamhouse.com



2ம் லெப் மரியா
புவனேந்திரஜோதி புவனேந்திரன்
சித்தன்கேணி, யாழ்ப்பாணம்
பிறப்பு - 05.09.1965
வீரச்சாவு - 03.07.1988
முல்லைத்தீவு வீதி,
விசுவமடுவில் காவலுலாச் சென்ற
இந்தியப் படைகள் மீதான
பதுங்கித் தாக்குதலில்

# சுதந்திரத்தைத் தேடி

தமிழர்களின் தேசிய விடுதலைப் போர் படிப்படியாக வளர்ந்த போது தமிழ்ப்பெண்களும் தமக்கெதிரான இன சமூக ஒடுக்கு முறைகளுக்கெதிராக விழிப்படையத் தொடங்கினார்கள். இந்த வகையில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த புவனேந்திரஜோதியும் சிந்தித்தார்.

நாம் தேசிய இனரீதியில் மட்டுமல்ல, சமூகரீதியிலும் ஒடுக்கப்படுவதனைக் கண்டார். தொடர்ந்து நடந்த இனக்கலவரங்களால் பெண்களது கல்வி பெருமளவு பாதிப்பிற்குள்ளாகி இருந்தது. இராணுவக் கொடுமைகள் பெண்கள் மீது அளவிற்கதிகமாயிற்று. தான் எந்த வகையிலாவது எம் இனத்தின் பூரண விடிவிற்காய் பங்காற்ற வேண்டும் என அவர் முடிவு எடுத்தார்.

1984இல் தமிழீழத்திற்காக பல விடுதலை அமைப்புக்கள் போராடுவதாக பறைசாற்றிக் கொண்டிரு வேளை, நிதானமாகச் சிந்தித்து தன் பாதையைத் தேர்ந்தெடுத்தார். தனது விடுதலை வேட்கையினை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தார்.

1985ம் ஆரம்பத்தில் ஆங்காங்கே தனித்தனியே தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் பங்கேற்றுக்கொண்டிருந்த மகளிர் அனைவரும் ஒரு அமைப்பாக ஒன்று சேர்ந்தனர். அன்று முதல் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு இரகசியமாக இயங்க ஆரம்பித்தது. அதில் 'ஜான்சி' ஆக தன் பங்களிப்பை மேற்கொள்ள ஆரம்பித்தார். தினமும் மக்களின் போராட்டப் பங்களிப்புக்களை வளர்க்க அரும்பாடுபட்டார். புதிதாக போராளிகளை உருவாக்குதல், மக்களுக்கு அரசியற் தெளிவூட்டல், வருங்கால சந்ததியினை முற்போக்கு சிந்தனையும் விடுதலை உணர்வும் மிக்கவர்களாக வளர்க்கவென பாலர் பாடசாலைகளை உருவாக்குதல், வீட்டில் முடங்கி இருந்து 'தம்மை' மட்டும் சிந்தித்த சிறுவட்டத்திற்குள்ளிருந்த பெண்களை கூட்டுமுயற்சிகளான சிறுகைத்தொழில்,


eelamhouse.com



eelamhouse.com



தையல், முதலுதவி நிலையம் பன்னவேலைகள் ஆகியவற்றில் ஈடுபட வைத்து அவர்களை திறம்பட வழிநடத்தினார்.

பேச்சினால் மட்டுமல்ல எழுத்துக்கள் மூலமும் மக்களை சிந்திக்க வைக்க 'சுதந்திரப் பறவைகள்' என்னும் நூலில் தனது கருத்துக்களை மக்களுக்கு புரியும்படியாக எளிமையாக எழுதினார். மக்கள் போராட்டங்களான ஊர்வலங்கள், மறியல் போராட்டம், வழமைமறுப்பு போன்றவற்றில் மக்களை பங்களிக்க வைப்பதில் இவர் பெரும் பங்கேற்றார்.

1987ம் ஆண்டு ஆயுதப் பயிற்சி எடுக்க முன்பு சிறிலங்கா அரசின் கூலிப்படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினை மீறி வெளிவர முற்பட்டபோது இராணுவ தளத்தைச் சுற்றி காவல் நிற்க இவர் தவறவில்லை.

ஆயுதங்கள் மூலம் அப்பாவித் தமிழ்மக்களை அழிக்கும் இராணுவத்தை எதிர்க்க ஆயுதம் ஏந்தத் துடித்தார். ஆயுதப் பயிற்சியில் 1987இல் தன்னை ஈடுபடுத்தினார். பயிற்சிப் பாசறையில் முதன் முதல் துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடும்போதே முதலிடத்தினை பெற்றார். கையில் ஆயுதம் தவழ்ந்து விளையாடியது. எதிரிகளை ஆயுதத்தால் அழிக்கத் துடித்தவர் பயிற்சியின் பின்பு மீண்டும் 'மரியா' வாக மக்களை அணிதிரட்டுவதிலும் பங்கேற்றார். வட்டுக்கோட்டை மகளிர் அமைப்புப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய இவர் மக்களுக்காகத் தன்னையே ஈகம் செய்த தியாகி லெப். கேணல் திலீபனின் உண்ணாவிரதத்தில் தனது பகுதி மக்களது பங்களிப்பினை முழுமைபெறச் செய்தார்.

10.10.1987 அன்று வல்லரசான இந்தியாவின் கூலிப்படைகளுடன் போரிட ஆரம்பித்தபோது விடுதலைப் புலிகளுள் மரியாவும் முன்நின்றார். தொழில் நுட்பக்கல்லூரி, மானிப்பாய், வட்டுக்கோட்டை, அளவெட்டி ஆகிய இடங்களில் இவர் வீரப்பாதங்கள் சளைக்காது தடங்கள் பதிந்தன. அவரது தடங்கள் பதிந்த இடமெங்கும் அவரது குறியில் ஆக்கிரமிப்பாளர்களின் உடல்கள் விழுந்தன.

இவர் மக்களுடன் மட்டும் இனிமையாகப் பழகவில்லை. சக போராளிகளுடனும் அன்பாகப் பழகினார். குழு ஒன்றின் பொறுப்பாள ராக இருந்து சக போராளிகளின் தேவைகளை தாயாகவும், தலைவி யாகவும் பூர்த்தி செய்தார். நன்கு கைவேலைகள் செய்யும் இவர் சகபோராளிகளின் வேடிக்கைப் பேச்சுக்களுக்கு நகைச்சுவையாகப் பதிலளித்து அனைவரையும் சிரிக்க வைப்பார்.

விசுவமடுவில் 1988ம் ஆண்டு ஆடி 3ம் நாள் எம்மவர்கள் திட்டமிட்டு இந்திய இராணுவத்திற்கெதிராக மேற் கொண்ட, பெண்களே தலைமை தாங்கி நடத்திய ஒரு தாக்குதலில் இவரும் பங்கேற்றார். எதிரியுடன் நடந்த மோதலில் இவர் மண்ணின் மகளானார்.

■ தமிழவள்



eelamhouse.com



| |
|---|
| வீரவேங்கை சதா |
| செல்வராணி சிதம்பரப்பிள்ளை |
| முள்ளியவளை, முல்லைத்தீவு |
| பிறப்பு - 23.05.1964 |
| வீரச்சாவு - 23.12.1987 |
| 'பவான்' நடவடிக்கையில் ஈடுபட்ட |
| இந்திய இராணுவச் சுற்றிவளைப்பின் |
| போது உரும்பிராயில் |
| ஏற்பட்ட நேரடிமோதலில் |

# வல்லரசையும் வெல்லுவோம்...

இழப்புக்கள் எமக்கு புதியவையல்ல எனினும் மறைந்த போராளிகளது வாழ்வும் அவர்கள் நிலை நாட்டிய சாதனைகளும் எம் மனக்கண் முன் எழத்தான் செய்யும். இந்த வகையில் எமதன்புச் சதாக்கா....

முள்ளியவளைக்கிராமத்தின் ஒரு மூலையில் அமைந்த சிறு குடிசையில்தான் சதாக்காவின் குடும்பம் வாழ்ந்து வந்தது. பெயரும் வாழ்வும் சில வேளைகளில் தொடர்பில்லாததாக அமைவ துண்டு. சதாக்காவின் பெற்றோர் அவருக்கு இட்டபெயர் செல்வராணி. ஆனால் பிறந்ததிலிருந்து அவர் வறுமையின் நிழலில்தான் வாழ்ந்து வந்தார். அவருக்கு அடுத்ததாக அடுக்கடுக்காய் பன்னிருவர் பிறந்ததால், அவரது குடும்பம் வறுமையுடன் போராட வேண்டிய கட்டத்தில் இருந்தது. குடும்பப் பொறுப்பு முழுவதும் சதாக்காவின் தலையில்தான் விழுந்தது. காலையில் கண்விழித்தால் தனது சகோதரங்களின் தேவைகளைக் கவனிப்பதே அவரது நாளாந்த வேலையாகும். இதைவிட அன்றைய பொழுதிற்கு தேவையான குடும்ப வருமானத்தைத் தேடிக்கொள்ள வேண்டிய பெரும் சுமையும் சதாக்காவிற்கே இருந்தது.

அந்தக் குடிசையில் அதிகாலையின் கடும் பனிக் குளிரையும் பாராது கைத்தறி இயந்திரம் மிக வேகமாக இயங்கிக்கொண்டிருக்கும். வறுமையாலும் சமூக ஒடுக்குமுறையாலும் பந்தாடப்பட்ட குடிசையில் பிறந்த செல்வராணிக்கு ஒரு வீரவரலாறு இருக்கப்போவதை எவரும் உணர்ந்திருக்க வில்லை. சிறுவயது முதல் குடும்பப்பாராத்தை ஏற்று நடத்தியதால் அவரிடம் பொறுமை. விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை எல்லாம் குடிகொண்டிருந்தன.

இந்த வகையில் காலங்காலமாக அமைதியாக இருந்த மண்ணில் அடிக்கடி நடைபெறத் தொடங்கிய சிங்கள இனவெறி அரசபடைகளின் நுழைவும், மனிதவேட்டைகளும் நிம்மதியில்லாத ஒரு வாழ்வை ஏற்படுத்தியது. அரசின் படைகளால் தாக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களின் வேத னைகளும், துன்பங்களும், அலைவுற்ற அவர்களின் வாழ்வும் அவரிடம் வேதனையை ஏற்படுத்திய

eelamhouse.com

போதுதான் அரசிற்கு எதிராக மண்மீட்புப் போரில் ஈடுபட்டிருந்த போராளிகள் பற்றிய உணர்வு ஏற்பட்டது. நாட்டு மக்களின் இழிநிலையையும், அவர்கள் அழிந்துகொண்டிருப்பதையும் உணர்ந்த அவர் வீட்டு நிலைமையைவிட நாட்டு நிலைமைக்கே முன்னுரிமை கொடுத்து தன்னை இணைத்தார்.

அவரது அனுபவ அறிவு அளவிடக்கரியதாய் இருந்தது. எதையும் சிந்தித்துச் செயலாற்றும் சிந்தனை நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் அவரை ஈடுபட வைத்தது. அந்த ஈடுபாடுதான் அவர் விடுதலைப்புலிகள் மகளிர் படைப்பிரிவின் முதலாவது பாசறையில் 'சதா' என்ற பெயருடன் பயிற்சி பெறக் காரணமாயிருந்தது. பெண்கள் இந்த வேலைகள் தான் செய்யலாம், குறிப்பிட்ட அளவுதான் செய்யலாம் என்ற கருத்தினை உடைத்தெறியும் வகையில் இந்தப் பாசறை அமைந்தது.

பயிற்சித் தளத்தில் சதாக்கா எல்லோராலும் விரும்பப்படும் ஒருத்தியானார். அவரது விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும், அனைவரையும் தாய் போல் கவனிக்கும் திறனும், சகபோராளிகளிடத்தில் அவரை ஒரு இனிய நண்பியாக்கியது.





eelamhouse.com



வந்த சுதந்திரப்பறவைகள் மகளிர் அமைப்பினர் மக்களின் மத்தியில் இறங்கி அவர்களுக்கு சமூக, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் தமது வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த வேலைகளில் பிரபாவும் தன் பங்களிப்பைச் செய்து வந்தார். மக்கள் தாம் ஒடுக்கப்படுவதை புரிந்து கொண்டு, தாமே அதற்காகப் போராட முன்வர வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த வேளையில், ஆயுதப்பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பு பிரபாவுக்கு கிடைத்தது. உற்சாகத்துடன் பயிற்சிக்குச் சென்ற பிரபா, உறுதியான போராளியாக வெளியே வந்தார்.

பயிற்சி முடித்து சிறிது காலத்தினுள்ளேயே அவரின் ஆயுதம் பற்றிய கரங்களுக்கு வேலை வந்துவிட்டது. அமைதி காக்க வந்து எம்மண்ணை அலங்கோலப்படுத்த முனைந்த இந்திய இராணுவத்திற்கு எதிரான தாக்குதலில் பங்குபற்றினார். கொக்குவிலில் இடம் பெற்ற தாக்குதலைத் தொடர்ந்துகல்வயல் பெருங்குளஞ் சந்தியில் இடம்பெற்ற மோதல், விசுவமடுச் சந்தியில் இந்திய இராணுவத்திற்கெதிரான "பதுங்கித் தாக்குதல்" ஆகியவற்றிலும் பங்கு கொண்டார்.

எப்போதுமே மனம்விட்டுக் கலகலப்பாகச் சிரிக்கும் அவர், காட்டுக்குள் எங்கள் போராட்ட வாழ்க்கை தொடர்ந்தபோது காட்டினையும் தன் சிரிப்பால் கலகலப்பாக்கினார். காட்டின் கடுமையான வாழ்க்கையும் போராளிகளுக்கு இனியதாக இருந்தது. இலகுவானதாக இருந்தது. உற்சாகத்துடன் எல்லாரும் தத்தமக்குரிய பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். பிரபாவும்



eelamhouse.com

சிரித்துக் கதைத்து வேலைகளை இலகுவாக்கிக் கொண்டிருந்தார்.

குடில்கள், பாதுகாப்பரண்கள் எனப்பல வேலைகளுக்கு பாரிய மரங்கள் தேவைப்பட்டன. தொலைதூரத்திலிருந்தெல்லாம் மரங்கள் வெட்டிச் சுமந்து வரவேண்டி இருந்தது. அப்படி வெட்டிக் கொண்டு வரும்போதுகருங்காலி மரமொன்று தவறி விழுந்ததால் பிரபாவின் முள்ளந்தண்டுப்பகுதி பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வைத்திய வசதிக்காக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். வைத்தியத்தின் பின் அங்குள்ள வைத்தியர்கள் அவரைப் பாரமான வேலைகள் செய்ய வேண்டா மென்றும், நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ளக்கூடாதென்றும், குறைந்தது ஒரு வருடமேனும் ஓய் வில் இருக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்கள்.

எமது விடுதலைப் போராளிகள் ஓய்வெடுக்க ஒருபோதும் விரும்புவதில்லை. அப்படி ஓய்வெடுக் கச் சொல்வது தம்மைக் கொல்வதற்கொப்பாகும் என்றுதான் சொல்வார்கள். அதேபோன்றுதான் பிரபாவும் தொடந்து வேலைகளை செய்யவே விரும்பினார். ஓய்வாக இருக்க மனம் இடம் தரவில்லை என்றும், தாய் நாட்டுக்கு வந்து தன்னால் இயலுமான வேலைகளைச் செய்ய விரும்புவதாகவும் தலைவருக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து அவரின் ஒப்புதலுடன் நாட்டிற்கு வந்தார். காட்டிற்குள் மீண்டும் அவர் போராட்ட வாழ்வை மகிழ்ச்சியுடன் தொடர்ந்தார்.

விடுதலைப் போரின் வெற்றிக்கு அரசியல் செயற்பாடுகளும் இராணுவ நடவடிக்கைகளும் இரண்டு முக்கிய கண்கள் என்பதைச் சரியாகப் புரிந்து கொண்ட பிரபா, 1990ம் ஆண்டு நடுப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது, அதனைத் தெளிந்த சிந்தனையுடன் ஏற்றுக் கொண்டார். கம்பியில் நடக்க வேண்டிய கடினமாக வேலைகள் மக்கள் மத்தியில் செயலாற்றுவது என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட அவர், தனக்கு தரப்பட்ட பணியைச் சரியாகச் செய்து முடிப்பேன் என்ற உறுதியுடன் செயற்பட்டார்.

அரசியல், சமூக அடக்கு முறைகளின் அழுத்தங்களால் நாளும் நாளும் நசுக்கப்பட்டு, நிம்மதி யற்ற வாழ்வுக்குச் சொந்தக்காரர்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் மனங்களில் விழிப்பு ணர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில், அவரது அரசியல் வேலைத் திட்டங்கள் அமைந்திருந்தன. இலக்கை நோக்கிய மக்களின் நகர்வுக்கு வழி அமைக்கும்விதத்தில் தனது வேலைகளைச் செய்தார் பிரபா. ஒவ்வொரு மனிதனும் தனது வயிற்றுப் பசியைத் தீர்க்க தானே தான் உழைக்கின்றான். அதே போன்று எமது மண்ணிலுள்ள ஒவ்வொரு மனிதரும் தமக்குமேல் திணிக்கப்பட்டுள்ள அரசியல், சமூக அழுத்தங்களிலிருந்து விடுபட்டு, அவதியுறும் வாழ்க்கைக்கு ஒரு முடிவுகட்டி, விடிவுகாண வேண்டுமென்றால், தாமேதான் போராட முன் வரவேண்டும். அனைத்து அழுத்தங்களிருந்தும் விடு படவேண்டுமானால் முதலில் எமது மண் விடுதலை பெறவேண்டும். அதற்கு எல்லா மக்களும் ஒன் றாகச் சேர்ந்து போராட வேண்டும் என்பதையெல்லாம் இலகுவான முறையில் படிப்படியாக மக்கள் விளங்கிக்கொள்ளும் விதத்தில் அரசியல் வேலைகளைச் செய்து வந்தார்.

1990ம் ஆண்டு ஆனிமாதம் 22ந் திகதி பரந்தனுக்கு அண்மையிலுள்ள முரசுமோட்டைப் பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினரின் படைப்பிரிவுகள் நகர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அவர் களுக்கு எதிராக எமது போராளிகள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியிருந்த சிங்களப் படையினரை மீட்கவென, ஆனையிறவுப் படையினர் செய்த அந்த பாரிய நடவடிக்கையின் மீதான எதிர்நடவடிக் கையில் பிரபா மண்ணுக்காக வீழ்ந்தார்.

தமிழவள்


eelamhouse.com



வரம் கேட்காமலேயே

வரம் தந்த அற்புதங்கள்!

நம் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்த

தம் இனிய வாழ்வை உவந்தளித்தவர்கள்!

துன்பமும் துயரமும் அணுகாமல்

எமைச்சுற்றி உயிர்ச்சங்கிலி பிளந்து

நிற்கும் வெள்ளை மனங்கள்!!

eelamhouse.com



eelamhouse.com



# கேணல் சங்கர் நினைவாக....

இருள் முகம் போக்கும்
விடுதலை ஒளியின்
உயிர் அகம் அவரே!
உணர்வின் உருவே!!

நிரந்தரம் காக்கும்
கருணைக் கடலின்
அலைமுகம் அவரே!
உறையா வரமே!!

நினைவுநாள்:
செப்ரெம்பர் - 26

eelamhouse.com

# தியாகி லெப் கேணல் திலீபன் நினைவாக....

விடுதலைப் பாதையின் குறுக்கே
வழி மறித்து நின்ற மாய உருவத்தின்
உயிர் கருக்கிய கரும்புலி !
இருள் மூடிக் கிடந்த பொழுதில்
உயிர்ஒளி பாய்ச்சி இனம் மீட்ட பெரும்புலி!!





நினைவுநாள்:
செப்ரெம்பர் - 26



eelamhouse.com



eelamhouse.com





eelamhouse.com







# கேணல் கிட்டு உட்பட பன்னிரு வேங்கைகள் நினைவாக....

நினைவு நாள்: ஜனவரி - 16







பொங்குமாகடலில் ஓயாது
எழுகின்ற அலைகள் போல்....
நெஞ்சமெல்லாம் நினைவுகளின் ஓசை
வங்கக்கடல் பிளந்து...
எங்கள், சூரியரைப் புதைத்த கொடுமையின்
ஆறாத ரணத்தை வருடி... வருடி...
ஆற்றவைக்க முடியவில்லை.
நெஞ்சத்தை பிழிகின்ற நினைவுகளுக்கூடே
இறுதியாய் அவர் உரைத்த
விடுதலையின் மந்திரம்...

eelamhouse.com

## நினைவுநாள்:
## ஒக்ரோபர்-05


கப்டன் கரன்


கப்டன் பழனி


கப்டன் மிரேஷ்


கப்டன் நளன்


லெப்.தவக்குமார்


கப்டன் ரகு

**க**ண்களில் ஆயிரம் கனவு சுமந்து
நெஞ்சினில் ஆயிரம் கடமை சுமந்து
வாழ்ந்தவர் வாழ்க ! - வாழ்ந்து
விடுதலை நெஞ்சில் தாங்கி வீழ்ந்தவர் வாழ்க ! வாழ்க !!



லெப்.அன்பழகன்


மேஜர் அப்துல்லா


2வது லெப்.ஆனந்தகும


லெப்.கேணல் குமரப்பா


2வது லெப்.றெஜினோல்ட்


லெப்.கேணல் புலேந்திரன்

# பன்னிரு வேங்கைகள் நினைவாக...

eelamhouse.com

# உலகெங்கும் மாவீரர் நாள் நிகழ்கள்-2005



தமிழீழம்



டென்மார்க்




பின்லாந்து

eelamhouse.com



பிரான்ஸ்



ஜேர்மனி



இத்தாலி



நெதர்லாந்து



eelamhouse.com

# உலகெங்கும் மாவீரர் நாள் நிகழ்கள்-2005


நோர்வே


தென்னாபிரிக்கா


அவுஸ்திரேலியா


கனடா

eelamhouse.com







பிரித்தானியா



ஐக்கிய அமெரிக்கா



சுவீடன்




சுவிற்சலாந்து





eelamhouse.com





முதற் பெண் மாவீரர்

# 2ம் லெப் மாலதி நினைவாக....

**வீ**ட்டுக்கு விளக்கேற்றும் பழம் கதைமாற்றி - தாய்
நாட்டுக்கு உயிரேற்றினாள்!
ஆணுக்கு நிகராக களமாட பெண்ணாலும்
ஆகும் விதி தன்னை புதிதாக நிலைநாட்டினாள்!

நினைவு நாள்:
ஒக்ரோபர் -10

eelamhouse.com





# அன்னை பூபதி நினைவாக....


உதிரும் வயதிலும் உனக்குள்ளே உயிர்ப்பு!
துயிலும் பொழுதில் உன்னுள்ளே விழிப்பு!
தாயாகி வாழ்ந்தாய்! - தமிழ்
தாயாக வாழ்வாய்!!

நினைவு நாள்: ஏப்ரல் - 19


eelamhouse.com

# கேணல் ராஜு நினைவாக....

நினைவு நாள்:
ஓகஸ்ட் 25



eelamhouse.com

# கேணல் ரமணன் நினைவாக....

நினைவு நாள்:
மே 21







eelamhouse.com

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27.11.1982 தொடக்கம் 05.10.2006 வரை வீரச்சாவடைந்த மாவீரர்கள் விரிப்பு

| ஆண்டு | ஆண் மாவீரர் | பெண் மாவீரர் | மொத்த மாவீரர் |
|---|---|---|---|
| 1982 | 1 | 0 | 1 |
| 1983 | 5 | 0 | 5 |
| 1984 | 36 | 0 | 36 |
| 1985 | 123 | 0 | 123 |
| 1986 | 260 | 0 | 260 |
| 1987 | 439 | 14 | 453 |
| 1988 | 355 | 11 | 366 |
| 1989 | 372 | 1 | 373 |
| 1990 | 892 | 72 | 964 |
| 1991 | 1413 | 209 | 1622 |
| 1992 | 718 | 74 | 792 |
| 1993 | 804 | 124 | 928 |
| 1994 | 366 | 12 | 378 |
| 1995 | 1220 | 288 | 1508 |
| 1996 | 1095 | 285 | 1380 |
| 1997 | 1605 | 507 | 2112 |
| 1998 | 1155 | 648 | 1803 |
| 1999 | 1053 | 496 | 1549 |
| 2000 | 1240 | 743 | 1983 |
| 2001 | 491 | 270 | 761 |
| 2002 | 29 | 16 | 45 |
| 2003 | 61 | 11 | 72 |
| 2004 | 62 | 17 | 79 |
| 2005 | 40 | 15 | 55 |
| 2006 | 410 | 176 | 586 |
| ஈரோஸ் | 264 | 2 | 266 |
| தனிக்குழு | 10 | 0 | 10 |
| மொத்தம் | 14519 | 3991 | 18510 |

eelamhouse.com

## முக்கிய முகாம் தகர்ப்புக்கள், படை நடவடிக்கைகளில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விரிப்பு

| | |
|---|---|
| ஆ. க. வெளி சமர் | 604 |
| மணலாறு | 233 |
| தவளை நடவடிக்கை | 460 |
| கொக்குத்தொடுவாய் | 175 |
| இடிமுழக்கம் | 181 |
| சூரியக்கதிர்கள் (ரிவிரச) | 438 |
| ஓயாத அலைகள் 01 | 315 |
| சத்யஜெய 2 நடவடிக்கையும் அதன் மீதான எதிர்தாக்குதல்களும் | 100 |
| சத்யஜெய 3 நடவடிக்கையும் அதன் மீதான எதிர்தாக்குதல்களும் | 133 |
| பரந்தன் ஆனையிறவு | 193 |
| வவுணைதீவு | 103 |
| கிளி, பரந்தன் மீதான ஊடுருவித் தாக்குதல் | 300 |
| ஓயாத அலைகள் 02 | 403 |
| ஜெயசிக்குறு படைநடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களும் | 2146 |
| ஓயாத அலைகள் 03 | 1336 |
| ஓயாத அலைகள் 04 | 181 |
| தீச்சுவாலை முறியடிப்புச்சமர் (அக்கினிச்சுவாலை) | 141 |

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27.11.1982 தொடக்கம் 05.10.2006 வரை வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலி மாவீரர்களின் விரிப்பு

| யாழ்ப்பாணம் | தரைக்கரும்புலிகள் | | | கடற்கரும்புலிகள் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொ | ஆண் | பெண் | மொ | |
| யாழ்ப்பாணம் | 18 | 11 | 29 | 73 | 46 | 119 | 148 |
| மட்டக்களப்பு | 22 | 1 | 23 | 18 | 0 | 18 | 41 |
| அம்பாறை | 4 | 1 | 5 | 1 | 0 | 1 | 6 |
| திருமலை | 5 | 0 | 5 | 11 | 3 | 14 | 19 |
| வவுனியா | 3 | 0 | 3 | 9 | 1 | 10 | 13 |
| முல்லைத்தீவு | 0 | 3 | 3 | 7 | 3 | 10 | 13 |
| கிளிநொச்சி | 3 | 1 | 4 | 14 | 3 | 17 | 21 |
| மன்னார் | 4 | 1 | 5 | 4 | 1 | 5 | 10 |
| வெளி | 2 | 0 | 2 | 7 | 1 | 8 | 10 |
| மொத்தம் | 61 | 18 | 79 | 144 | 58 | 202 | 281 |
| மு.மொத்தம் | 79 | | | 202 | | | 281 |

## 05.10.2006 வரை வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கரும்புலிகள், எல்லைப்படை மாவீரர்களின் தொகுப்பு

| விளக்கம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| தரைக்கரும்புலிகள் | 61 | 18 | 79 |
| கடற்கரும்புலிகள் | 144 | 58 | 202 |
| மொத்தக்கரும்புலிகள் | 196 | 69 | 281 |
| எல்லைப்படை மாவீரர் | 274 | 5 | 279 |

## 05.10.2006 வரை சாவடைந்த நாட்டுப்பற்றாளர்கள்

| நாட்டுப்பற்றாளர்கள் | |
|---|---|
| ஆண்கள் | 427 |
| பெண்கள் | 25 |
| மொத்தம் | 452 |

eelamhouse.com

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27.11.1982 தொடக்கம் 05.10.2006 வரை மாவட்ட வாரியாக வீரச்சாவடைந்த மாவீரர்கள் விரிப்பு

| மாவட்டம் ► / ஆண்டு ▼ | யாழ் | | மட்டு-அம்பாறை | | வன்னி | | திருமலை | | முல்லை | | மன்னார் | | வெளி | | மொத்தம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1982 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 00 | 01 |
| 1983 | 11 | - | - | - | - | - | 04 | - | - | - | - | - | - | - | 15 | 00 | 15 |
| 1984 | 20 | - | 07 | - | 03 | - | 08 | - | 06 | - | 06 | - | - | - | 50 | 00 | 50 |
| 1985 | 46 | - | 60 | - | 14 | - | 41 | - | 08 | - | 14 | - | 05 | - | 188 | 00 | 188 |
| 1986 | 91 | - | 94 | - | 20 | - | 48 | - | 21 | - | 36 | - | 09 | 01 | 319 | 01 | 320 |
| 1987 | 247 | 05 | 76 | - | 46 | 03 | 55 | - | 17 | 01 | 48 | 05 | 15 | - | 503 | 14 | 517 |
| 1988 | 127 | 07 | 114 | 01 | 39 | 01 | 39 | - | 18 | 01 | 18 | 01 | 16 | - | 370 | 11 | 381 |
| 1989 | 147 | 02 | 86 | - | 55 | - | 47 | - | 37 | - | 27 | - | 18 | - | 416 | 02 | 418 |
| 1990 | 277 | 41 | 181 | 04 | 140 | 11 | 124 | 02 | 73 | 11 | 64 | 01 | 33 | 02 | 889 | 72 | 961 |
| 1991 | 511 | 104 | 312 | 19 | 180 | 33 | 173 | 18 | 114 | 19 | 101 | 15 | 22 | 01 | 1412 | 209 | 1621 |
| 1992 | 224 | 45 | 243 | 09 | 83 | 06 | 67 | 01 | 40 | 07 | 48 | 06 | 13 | - | 715 | 74 | 789 |
| 1993 | 215 | 49 | 280 | 18 | 110 | 28 | 78 | 06 | 55 | 11 | 61 | 12 | 05 | - | 803 | 124 | 927 |
| 1994 | 90 | 11 | 162 | - | 30 | - | 42 | - | 18 | 01 | 22 | - | 02 | - | 365 | 12 | 377 |
| 1995 | 420 | 177 | 433 | 15 | 150 | 43 | 83 | 06 | 60 | 25 | 64 | 19 | 10 | 03 | 1220 | 288 | 1508 |
| 1996 | 448 | 142 | 320 | 33 | 129 | 53 | 85 | 13 | 54 | 26 | 55 | 14 | 04 | 04 | 1095 | 285 | 1380 |
| 1997 | 522 | 227 | 643 | 65 | 168 | 92 | 120 | 19 | 91 | 52 | 46 | 44 | 15 | 08 | 1605 | 507 | 2112 |
| 1998 | 363 | 270 | 429 | 94 | 133 | 141 | 101 | 36 | 58 | 69 | 54 | 22 | 17 | 16 | 1155 | 648 | 1803 |
| 1999 | 362 | 203 | 323 | 71 | 144 | 118 | 80 | 19 | 86 | 57 | 51 | 23 | 07 | 05 | 1053 | 496 | 1549 |
| 2000 | 475 | 318 | 228 | 79 | 234 | 179 | 100 | 27 | 106 | 78 | 62 | 45 | 35 | 17 | 1240 | 743 | 1983 |
| 2001 | 171 | 117 | 121 | 28 | 74 | 58 | 45 | 12 | 41 | 27 | 31 | 22 | 08 | 06 | 491 | 270 | 761 |
| 2002 | 10 | 05 | 05 | 05 | 06 | 01 | 06 | - | 02 | 03 | - | 01 | - | 01 | 29 | 16 | 45 |
| 2003 | 30 | 05 | 10 | 01 | 06 | 02 | 06 | 01 | 04 | 01 | 03 | 01 | 01 | - | 60 | 11 | 71 |
| 2004 | 09 | 04 | 40 | 10 | 05 | 01 | 05 | - | 03 | 02 | - | - | - | - | 62 | 17 | 79 |
| 2005 | 09 | 04 | 18 | 10 | - | - | 11 | - | 01 | 01 | 01 | - | - | - | 40 | 15 | 55 |
| 2006 | 109 | 85 | 93 | 04 | 89 | 54 | 65 | 17 | 21 | 08 | 22 | 06 | 11 | 2 | 410 | 176 | 586 |
| ஆ.பெ.மொ | 4936 | 1821 | 4278 | 466 | 1858 | 824 | 1433 | 177 | 934 | 400 | 834 | 237 | 246 | 66 | 14519 | 3991 | 18510 |
| மொத்தம் | 6757 | | 4744 | | 2682 | | 1610 | | 1334 | | 1071 | | 312 | | 18510 | | 18510 |

eelamhouse.com

# நினைவுப்பகிர்வு.....



லெப்.கேணல் நாதன்




கப்டன் கஜன்

பாலைவனத்திடையும்
பனிவெளிப் புலத்திலும்
நீர்வற்றிப் போகாமல்
வேர்விட்ட விருட்சங்கள்




மேஜர் கபிரந்தி



நாட்டுப்பற்றாளர்
திரு. [illegible] விமலேஸ்வரன்




நாட்டுப்பற்றாளர்
திரு. சீனியப்பா பத்மநாதன்



நாட்டுப்பற்றாளர்
திரு. கனேஸ்வரன் [illegible]




eelamhouse.com



eelamhouse.com


eelamhouse.com

# சூரியப் புதல்வர்கள்



அக இருள் விரட்டி
புற இருள் போக்கும்
சூரியப் புதல்விகள்!
தம்மாலும் முடியும்! பகை வெல்லமுடியும்!
என்று பறைசாற்றும் எரிமலைக் குன்றுகள்!
சத்திய வாழ்க்கையில் இயல்பாய் இணைந்தும்
உயர்வாய் எழுந்தும்
ஆற்றிய பணிகள் அளவிடமுடியா!
அருமைத் தங்கையர் புரிகின்ற தியாகம் சொல்லிட முடியா!

2006

TAMIL EELAM

வெளியீடு:
வெளியீட்டுப்பிரிவு,
அனைத்துலகத்தொடர்பகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

eelamhouse.com